உ

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைத்

தருமபுரவாதீனத்தைச்சார்ந்த

திருப்பனந்தாள் காசிமடாலயம்

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்த

பிரபந்தத்திரட்டு.

இஃது,

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

இராமலிங்கசுவாமிகளால்

இராயபஹதூர் ம-ா-ா-ஸ்ரீ

பூண்டி. அரங்கநாதமுதலியாரவர்கள்

முதலியோர்கள் வேண்டுகோளின்படி,

பலபிரதிருபங்களைக்கொண்டுபரிசோதித்து

அருஞ்செய்யுளுரைக்குறிப்போடு,

சென்னை:

கலாரத்நாகரஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

சுபகிருது௵ தைமீ.

(Registered Copy right.)

உ

சிவமயம்.

பிரகடனம்.

—:o:—

இப் பிரபந்தத்திரட்டு முழுமைக்கும் உரையெழுதுவதினும் அருஞ்செய்யுள்களுள்ளே மிகக்கடினமானவைகட்கு விரிவாகவும் அத்தகையவல்லாதவைகட்குச் சுருக்கமாகவும் ஓர் குறிப்புரையிருப்பின் நலமெனப் பலரும்வேண்டலின் அவ்வாறே முற்பதிப்பினும் நான்குபாரம் அதிகப்பட எழுதிப்பதிக்கப்பட்டிருக்கின்றது; இதுகொண்டே பிரபந்தமுழுமைக்கும் ஒருவாறு பொருள்துணியலாமென்பது அறிஞராய்ந்துணர்வாராக.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள்.

க. திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா.
உ. மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.
௩. மீனாக்ஷியம்மை குறம்.
௪. மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை.
௫. மதுரைக் கலம்பகம்.
௬. நீதிநெறி விளக்கம்.
௭. திருவாரூர் நான்மணிமாலை.
௮. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.
௯. சிதம்பர மும்மணிக்கோவை.
௧0. சிதம்பரச் செய்யுட்கோவை.
௧௧. சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை.
௧௨. பண்டார மும்மணிக்கோவை.
௧௩. காசிக் கலம்பகம்.
௧௪. சகலகலாவல்லி மாலை.

சிவமயம்.

நூலாசிரியர் சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருமக ளகலாப் பரமவை குந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசி
லைந்தெனும் பருவம் வந்துறு மளவு
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளா
லோதா துணர்ந்த போதனுய் முன்னர்க்
கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கலக்
குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ ருகச் சால்பமை பிரபந்த
முந்நான் கியற்றித் தன்னுஞ் சமய
நிலையையுங் காட்டி யுலைவிலா தியாருந்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலு
மியற்றின னில்லறந் தியக்குறு நிலையென
விளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே.

இது முற்காலத்தது; இயற்றினோர்பெயர் காணப்படவில்லை.
குகன்றிருவடிதனக் கென்றும் பாடம்.

சிவசண்முகன்றுணை.

குமரகுருபரசுவாமிகள்
சரித்திரசாரபஞ்சகம்.

பதினறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருந்தமிழ்ப் பாண்டி நாட்டில்வண் புகழ்க்கை லாசமா புரத்தில்வே ளாள, ரரியசண் முகசி காமணிக் கவிரா யருஞ்சிவ காமியம் மையுஞ்செய்,—பெருந்தவ மதனற் செந்தில்வேற் குகன்றன் பேரரு ளாலுதித் தொருவர், பேசுத லிலாதைந் தாண்டுகா றமரப் பெற்றவர் பெரிதுள மயர்ந்தே,—திருந்துமக் குகன்சந் நிதியினி லொருமண் டலத்தினிச் சேயுறு மூகைத், திறமகன் றிலதேன் மடிவமென் றுறையச் சிறுவர்சொப் பனத்தினிற் கடைநாட்,—பொருந்திவேள் குமர குருபர னெனப்பேர் புனைந்துநா வதனிலா றெழுத்தும், பொறித்தலு முடன்வாக் குடையராய்க் கந்தர் கலிவெண்பாப் புகன்று போற் றினரே. (க)

போற்றியோர் குருவை யருள்கென வேண்டப் புகலுரை தடைப்படும் யாங்கப், புங்கவன் றனையே கொள்கென வசரீரியிற்பகர் தலும்புற விடைகொண், — டாற்றல்சான் மதுரைக் கயற்கண யகிபிள் ளைத்தமி ழியற்றுபு கைக்கொண், டடைதலும் பரங்குன் றதுதிரு மலைநா யகர்க்கம்மை கனவினி லருளத்,—தேற்றியவாறே யெதிர்கொடு பணிந்தன் னவர்திரு முறையொடு மவரைத், திறல்கயத் தேற்றிச் சந்நிதி சேர்க்கத் திகழ்ந்தரங் கேற்றுழி வருகை,—சாற்றுறு பருவத் துமையிளங் கோலந் தயங்கநா யகர்மடி யமர்ந்து, தானுவந் தருளிமணிவடந் தரிக்குந் தகைபெறீஇ முற்றுவித் தனரே. (உ)

முற்றுவித் ததன்பின் கனகமா திகளா லாட்டிமொய் கழல்பதத் தணிந்து, முதிர்ந்தபல் விருதும் வைத்தர சிறைஞ்ச முழுதுமேற் றம்பிகை குறமும்,—மற்றிரட் டைமணி மாலையு மதுரைப் பிரான்கலம் பகமுமம் மன்னர், வாஞ்சையி னிதி

நெறிவிளக் கமுமே வனைந்தாரூர் நான்மணி மாலை,—தெற்றெ ன விளம்பித் தருமைசார்ந் தொளிர்மா சிலாமணித் தேசிகர் கடாவச், செப்பிறுக் குங்காற் றிருத்தொண்டர் புராணத் தினி லைந்து பேரறி வென்ன,—வுற்றவவ் விருத்தத் தனுபவம் விஞ் வ வுறுவிடை தடைப்படு தலுமுன், னுயர்குகன் பணித்த துண ர்ந்துட னிருக்கை யொருவியே பணிந்தனர் மாதோ. (௩)

பணிந்தெதிர் நின்றென் பிழைபொறுத் தாட்கொண் டருள் கெனப் பரவலுங் காசிப், பதியினி லன்றேற் றில்லையம் பதி யிற் பரிந்தொர்மன் டலம்வசித் தெய்திற், — றிணிந்தபே ரருளீ குவமெனப் பணிக்கச் சென்றுவே ளூர்தொழு தொரு வுஞ், செவ்வியிற் செவ்வே ளருச்சகர் போலச் சேர்ந்துவெண் ணீறளித் தெமக்கு,—மணிந்துணை யொருபிள் ளைக்கவி யென ச்சொற் றகன்றுபொன் பூத்தவென் மொழிவா, னளிக்கவங் ஙனமே துதித்துநற் றில்லை யணுகிமும் மணிக்கோவை யோ டு,—தணிந்தொரு புலவர் பணிந்திடுஞ் செய்யுட் கோவையுந் தரித்திறைக் குமைக்குத், தகவிரட் டைமணி மாலையு மிலைந்து தங்கியே தருமையெய்ந் தனரால். (௪)

ஏய்ந்துமும் மணிக்கோ வைத்துதி யியம்பி யேற்றுப தேச மும் விடைபெற், றேகுழிப் பிள்ளைப் பெருமானை யங்கா ரா திய ரிகல்காஞ்சி யினில்வென், — றுய்ந்துகா சியிற்கே தார முன் விளக்கிக் கலம்பக மறைந்தகி லேசர்க், கருட்கலா வல்லி மாலைசொற் றிந்துஸ் தானபா ஷையில்விற லமைந்தே, — பாய்ந்தெழு மரிமேல் டில்லிபா ஷாவின் பானுறீஇப் பலபிர சங்கம், பண்ணியுந் தீத்தம் பந்தமு வியுமுன் பலவுண வாக் கியும் வேட்கை,—வாய்ந்துறச் செய்தன் னவர்புரி மடத்தில் வளர்த்தறம் பலவும்வை காசி, மதிகுறை பக்கத் திருதிகைத் திதியிற் சிவனருட் கழலின்மன் னினரோ. (௫)

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரசுவாமிகள்

சரித்திரச்சுருக்கம்.

பாண்டிவளநாட்டிலே, தாமிரபர்ணிநதிதீரத்திலே, ஸ்ரீவைகுண்டமென்றும் வழங்குகின்ற கைலாச புரத்திலே, வேளாளர் குலத்திலே, ஏறக்குறைய முந்நூறு வருடங்கட்குமுன்னே சிவபத்தியிற் சிறந்தவரும், இல்லற வொழுக்கத்திலே வழுவாதவருமாகிய சண்முகசிகாமணிக் கவிராயரென்பவர் ஒருவரிருந்தார். அவர் தமக்குப் புத்திரப்பேறின்மையால் தமது மனைவியாராகிய கற்பிற்சிறந்த சிவகாமசுந்தரியாரோடு மிகக் கவலையடைந்து, அதுகாரணமாகத் திருச்செந்தூர் முருகக்கடவுளை உபாசித்து வந்தனர். அக்கடவுளுடைய திருவருளினாலே ஒருபுத்திரர் அவதரிக்க; பிதாமாதாக்களிருவரும் பேருவகையுற்று, அவருக்குச் சாதகன்மமுதலியவற்றை உரியபருவங்களிலே மிகுந்த சிறப்போடு செய்வித்து, அருமைபாராட்டி வளர்த்துவருநாளில், ஐந்துவயதாகியும் அவர் பேசாமைகண்டு, ஊமையெனத்தெளிந்து, புத்திரப்பேறின்மையினும் மிகவருந்தி, முருகக்கடவுளைக்குறித்துப் பல அரியவிரதங்களை அநுட்டித்துவந்தார்கள்.

அந்நாளிலே, ஒருநாள் சண்முகசிகாமணிக்கவிராயர் மனைவியாரோடு புத்திரரையும் உடன்கொண்டு, திருச்செந்தூரையடைந்து, முருகக்கடவுளைத்தரிசித்துத் துதித்து, "எம்பெருமானே! இப்புத்திரனை ஊமைதீர்த்து ஆட்கொண்டருளவேண்டும்." எனப்பிரார்த்தித்து, சந்நிதிமுன்னுள்ள சண்முக

விலாசத்திற்றுனே வசித்துக்கொண்டு, இப்புத்திரனுக்கு ஒரு மண்டலத்திற்குள் ஊமைத்தன்மை நீங்காதொழியுமேல் மனைவியோடு பிராணத்தியாகஞ் செய்துகொள்ளக்கடவேனென உறுதிகொண்டு, நியமமாகத் தினந்தோறும் * வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து, முருகக்கடவுளைத் திரிகாலங்களிலும் தரிசித்து, வழிபட்டுவந்தனர். தயாநிதியாகிய முருகக்கடவுள், அவர் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி குறித்துள்ள அந்நாளிலே, சூரியனுதிக்க ஒருயாமமிருக்குமளவில் சண்முகவிலாசத்திலே நித்திரைசெய்கின்ற அவர்புத்திரரிடத்தில் அருச்சகர்வடிவங்கொண்டு எழுந்தருளி, † "குமரகுருபரா!" என்று தட்டியெழுப்பி, அவருடையநாவிலே தம்முடையசடாக்ஷரத்தையெழுதி, அவரைநோக்கி, "குழந்தாய்! விரைவிலே நமது விசுவரூபதரிசனத்திற்கு வருவாயாக." என்று ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினர். உடனே குமரகுருபரசுவாமிகள் தமது மாதாபிதாக்களை "அம்மே, அப்பா" என்று தட்டியெழுப்பி, நடந்தவிடயங்களை யறிவிக்க; அதுகேட்டமாதாபிதாக்களிருவரும் முருகக்கடவுள் தங்கள்புத்திரருக்கருளிய பெருங்கருணைத்திறத்தை வியந்து புகழ்ந்து, அப்புத்திரரோடு வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து, நியதிமுடித்து, சந்நிதியையடைந்து, விசுவரூபதரிசனஞ்செய்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது குமரகுருபரசுவாமிகள் முருகக்கடவுளுடைய திருவருளினாலே தமிழ்ச்செய்யுள்பாடுஞ் சத்தியுண்டாகப்பெற்று, **கந்தர்கலிவெண்பா** என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

மற்றைநாட் பிராதக்காலத்திலே, குமரகுருபரசுவாமிகள் சிவசின்னமாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத்தரித்துத் திருக்கோயிலையடைந்து, சுவாமியைத்தரிசித்து, இனி ஞானாசாரிய

---

* வதனாரம்பம் - சமுத்திரத்திலுள்ளதொரு ஸ்நானகட்டம்.
† குமரகுருபரனெனுந்திருநாமம் அன்றுமுதலுண்டாயிற்று.

ரைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளுடைய திருவடிகளைத்தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ்செய்யும்போது, அக்கடவுளுடைய திருவருளினால் ஆகாயத்திலே, "அன்பனே! நீ இவ்விடத்தைவிட்டுப்புறப்பட்டு உத்தரயாத்திரைசெய்யுங்கால் எவ்விடத்திலே உன்வாக்குத் தடைப்படுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவை." என்று ஓரசரீரிவாக்கு அங்கே சமஸ்தருங்கேட்க எழுந்தது. அதுகேட்டுக் குமரகுருபரசுவாமிகள் திருவுளமகிழ்ந்து, திருவருளைப்புகழ்ந்து, நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, தம்மை ஆண்டருளிய அக்கடவுளிடத்தில் அநுமதிபெற்றுத் திருச்செந்தூரை அரிதினகன்று, மாதாபிதாக்களோடு தமது ஜன்மஸ்தலமாகிய கைலாசபுரத்திற்சென்று, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு சிலகாலம்வசித்திருந்தார். * பின்பு, ஒருநாள் மதுரைக்குப்போகவிரும்பி, தமது தாய்தந்தையர்களுடைய பிரிவாற்றாமையைத்தேற்றி, விடைபெற்றுத் தம்பியாராகிய குமாரகவிகளும் உடன்வரப் புறப்பட்டுவரும்போது, வழியிலே **மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்** என்னும் ஒரு அருமைப்பிரபந்தத்தைப் பாடிமுடித்துக்கொண்டு, திருப்பரங்குன்றத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருந்தார்.

அன்றிரவு மீனாக்ஷியம்மையார், மதுரையையாளும் அரசராகிய திருமலைநாயகர்சொப்பனத்திலே தோன்றி, "நமது குமாரனாகிய சுப்பிரமணியனுடைய கிருபையைப்பெற்றவொருவன் நம்மைக்குறித்து ஓர்பிள்ளைத்தமிழ்பாடிமுடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றான்; நீ பரிவாரங்க

---

* இங்குவசிக்குநாளிலே இத்தலத்தைச்சுட்டிக் கைலைக்கலம்பகம் எனவொருபிரபந்தம் அருளிச்செய்ததாகவும் சரித்திரமுண்டு; அப்பிரபந்தம் கிடைக்கவில்லை.

ளோடுசென்று அழைத்துவந்து அப்பிள்ளைத்தமிழை நமதுசந்நிதியில் அரங்கேற்றக்கடவாய்." என்று ஆஞ்ஞாபித்துமறைந்தருளினர். உடனே திருமலைநாயகர் விழித்தெழுந்து, குதூகலமடைந்து, தாங்கண்டசொப்பனத்தைச் சமஸ்தருக்கும் மற்றைநாட்காலையிலறிவித்து, மிகுந்தமனமகிழ்ச்சியோடும் கைகளைச் சிரசிலேயஞ்சலிசெய்துகொண்டு, தமது பரிவாரங்களோடு திருப்பரங்குன்றத்திற்சென்று, சுவாமிகளைத்தரிசித்து வணங்கி, "யாவராலும் பெறுதற்கரியதிருவருளைப்பெற்ற சுவாமீ! தேவரீரை அடியேன் பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினால் தரிசிக்கப்பெற்றேன்." என்று துதித்து, மீனாக்ஷியம்மையாருடைய ஆஞ்ஞையைத்தெரிவித்து, அவரையும், அவரருளிச்செய்த பிள்ளைத்தமிழையும் யானைமீதேற்றிக்கொண்டு, மதுரையையடைந்து நகர்வலஞ்செய்வித்தார். பின்பு குமரகுருபரசுவாமிகள் திருக்கோயிலையடைந்து, சித்திவிநாயகக்கடவுளையும், சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்து, துதித்துத்தொழுது மீண்டு, மீனாக்ஷியம்மையாருடைய சந்நிதியிற்சேர்ந்து, நமஸ்கரித்து, எழுந்துநின்றார். அப்பொழுது, சர்வலோகங்களையும் பெற்றும் குமரியாகவே விளங்காநின்ற மீனாக்ஷியம்மையார், தெய்வத்தன்மைபொருந்திய தமது இளந்திருக்கோலத்தைக் காட்டியருள; சுவாமிகள் தரிசித்து, அடியேன்செய்தபிள்ளைத்தமிழுக்கு இது பரிசுபோலுமென்றுநினைந்து, அத்தியந்த ஆச்சரியமுற்று, தாமியற்றியபிள்ளைத்தமிழைச் சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினர்.

அத்தருணத்தே ஆங்குள்ள சிவனடியார்களிலொருவர் பிள்ளைத்தமிழ்த் திருமுறையைப் பீடத்திலெழுந்தருளுவித்து விதிப்படிபூசித்து வணங்கித்துதிக்க, குமாரகவிகள் அரசருடைய வேண்டுகோளின்படியே அதனைவாசிக்க, சுவாமிகள் அதன்பொருளை யாவருங்கேட்டு இன்புறும்படி விரித்துப்பிரசங்கித்தார். அத்தினத்திலே காப்புப்பருவம் ஒன்றே நடந்தது.

சுவாமிகள் இவ்வாறே, தினமும் ஒவ்வொருபருவமாகப் பிரசங்கிக்கும்போது, வருகைப்பருவத்தில், மீனாக்ஷியம்மையார் அருச்சகரது பெண்குழந்தைபோன்று இளந்திருக்கோலத்தோடு திருமலைநாயகர்மடியின்மீது எழுந்தருளியிருந்து, "தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்,—தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமைய, விமையப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்க,—முடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்,—மடுக்குங் குழற்காடேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே." என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்குந்தருணத்தில், "இன்னுமொருமுறை இச்செய்யுளைவாசிப்பித்துப் பொருளுரைக்க." என யாவருமகிழவினாவி,கேட்டுவியந்து, இறுதிச்செய்யுளைவாசித்து நிறுத்துந்தருணத்தில் * மறைந்தருளினார். அவ்

* வருகைப்பருவத்திலன்றி முத்தப்பருவத்திலே, "காலத் தொடுகற் பனைகடந்த கருகூ லத்துப் பழம்பாடற், கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயிராலவ,—வாலத் துணர்வு நீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த, மலர்க்கற் பகமே யெழுதாச்சொன் மழலை ததும்பு பசுங்குதலைச்,—சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றுத் துணைக்கோர் துணையாகித், துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத,—மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தருகவே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய் முத்தந் தருகவே." என்னும் முதற்செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்குங்கால் மீனாக்ஷியம்மையார் இளந்திருக் கோலமாகக் காட்சியளித்து, ஒரு முத்துவடம் சுவாமிகள்கழுத்தி லணிந்து மறைந்தருளியதாகவும் சரித்திரம் உண்டு.

வமையத்தில், திருமலைநாயகர் அருச்சகரது பெண்குழந்தை யென்று அதுகாறும் தாம் எண்ணிக்கொண்டிருந்த எண்ணத் தையொழித்து, இங்ஙனமெழுந்தருளியிருந்தவர் சர்வஜீவதயா பராராகிய மீனாக்ஷியம்மையாரேயென்று தெளிந்து சுவாமிகளுக்கு அம்மையாரருளிய திருவருளின்திறத்தைப் புகழ்ந்துகொண்டாடினார். சபையாரும்அளவிறந்த ஆச்சரியமடைந்தார்கள். இவ்வண்ணமே பிள்ளைத்தமிழை அரங்கேற்றியபின்பு, திருமலைநாயகர் சுவாமிகளை சிங்காதனத்தி லெழுந்தருளுவித்து, திருவடிகளில் வீரகண்டாமணியைத்தரித்து, பொன்னினாலும் அரதனத்தினாலும் அபிஷேகஞ்செய்து, யானை, குதிரை, சிவிகைகளையும், குடைகொடிமுதலிய விருதுகளையுங் கொடுத்தார்.

அதன்பின்னரும் சுவாமிகள், திருமலைநாயகர் முதலியோர் வேண்டுகோளின்படி **மீனாக்ஷியம்மைகுறம். மீனாக்ஷியம்மையிரட்டைமணிமாலை** என்னும் இரண்டுபிரபந்தங்களையும், சோமசுந்தரக்கடவுளைத்துதித்து **மதுரைக்கலம்பகம்** என்னும் ஒருபிரபந்தத்தையும் அருளிச்செய்தனர். பின்பு ஒருநாள், திருமலைநாயகர் வெகுநேரம்வரையில் போசனஞ் செய்யாதிருந்தமைகண்டு, சுவாமிகள், "*வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி - தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." என்னுந் திருக்குறளையெடுத்தோத; அரசருவந்து, "அரிய திருக்குறளெனப்படும் தமிழ்வேதத்தை முற்றும் ஆராய்ந்துதெளிதற்குக் காலமில்லையாதலால், அதிலுள்ள நீதிகளைவிளக்கிச் சுருக்கமாக அடியேன்பொருட்டு ஒருநீதிநூல் செய்துதரவேண்டும்." என்றுபிரார்த்தித்தனர். சுவாமிகள் அவ்வாறே **நீதிநெறிவிளக்கம்** என்னும் ஒருநூலை அருளிச்செய்துதந்து, அவ்வரசர்வேண்டுகோளின்படியே மீனாக்ஷியம்மையையும் சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்துக்கொண்டு, அத்தலத்திலே வசித்தருளினார்.

* திருக்குறள் ௩௮ - ம் அதிகாரம்; ௰ழ். எ.

சிலநாட்சென்றபின்பு தமதுசகோதரராகிய குமாரகவிகளை யழைத்து, மாதாபிதாக்களனுமதியின்படியே, தாமவதரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில் வழுவாது நிற்கும்படி பணித்து, விடையளித்தனுப்பிவிட்டு, தாம் நானாவிதவாத்தி யங்கள்முழங்க, விருதுகள்புடைசூழ, தமக்கபிஷேகித்த திர வியங்களை அரசர்வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின்மீ தேற்றிக்கொண்டு, மதுரையையகன்று, தம்மைப் பிரிவாற்ரு துதொடர்ந்துவரும் அரசரையும், மந்திரிமார்களையும், பிறரை யும் மீண்டுசெல்லும்படி வற்புறுத்தி, தாம் சிவிகைமேற்கொ ண்டு, பாண்டிநாட்டைக் கடந்து, சோழநாட்டையடைந்து, அங்குள்ள திரிசிராப்பள்ளி, திருவானைக்காமுதலிய தலங்களி லுள்ள அடியார்கள் எதிர்வந்துபணிய சுவாமிதரிசனஞ்செய் துகொண்டு, அவ்வத்தலங்களிலே சிலநாள்வசித்து, திருவா ரூரைச்சேர்ந்து, தியாகேசப்பெருமானைத்தரிசித்து, **திருவாரூர் நான்மணிமாலை** என்னும் ஒருபிரபந்தத்தை அருளிச்செய்த னர். ஆண்டுவசிக்குநாளில், திருக்கைலாசபரம்பரையாகிய * தருமபுரவாதீனத்திலே நான்காவது குருமூர்த்திகளாய் எழுந் தருளியிருந்த ஸ்ரீமாசிலாமணித்தேசிகசுவாமிகளுடைய திரு வருட்சிறப்பைக்கேள்வியுற்று, அவரைக்காணவிரும்பிப் புறப் பட்டு, இடையிலுள்ள பலதலங்களையும் வணங்கிக்கொண்டு தருமபுரத்தையடைந்தார்.

அத்தினத்திலே, சைவசித்தாந்தசாஸ்திரங்களையும், அவற் றிற்குரிய அங்கங்களாயுள்ளநூல்களையும், ஐயந்திரிபற ஓதியு ணர்ந்து, அவற்றிற்கூறப்படும் சரியை, கிரியை, யோக, ஞானா னுசந்தானங்களை மேற்கொண்டு, குருபத்தியிற்சிறந்து விளங்

---

* இத்தருமபுரவாதீனத்தின் பிரதமகுருமூர்த்திகள் ஸ்ரீஞான சம்பந்ததேசிகர்; இரண்டாவதுகுருமூர்த்திகள் ஸ்ரீஆனந்தபர வசதேசிகர்; மூன்றுவதுகுருமூர்த்திகள் ஸ்ரீசச்சிதானந்ததேசிகர்.

கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேதசிவாகமவிற்பன்னர்களும், சைவாசாரியர்களும், இலக்கணவிலக்கியங்களில் வல்லவித்துவான்களும் புடைசூழும்படி, ஞானசூரியனைப்போல, ஸ்ரீமாசிலாமணித்தேசிகர் தக்ஷிணாபிமுகமாய் எழுந்தருளியிருந்தார். அச்சமயத்திலே, சுவாமிகள் பரிசனங்கள் பின்னே வர, விருதுகளோடும் அத்திருமடத்தினுள்ளேசென்று, அவருடையசந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தின் மீதிருந்துகொண்டு, மாசிலாமணித்தேசிகரால் வினவப்பட்ட வினாக்களெல்லவற்றிற்கும் உத்தரஞ்சொல்லிக்கொண்டுவந்தார். மாசிலாமணித்தேசிகர் திருப்புன்முறுவல்செய்து, இறுதியிலே திருத்தொண்டர்பெரியபுராணத்தில், * "ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ் - சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக - விந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின் - வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்." என்னுந்திருவிருத்தத்தின் அனுபவப்பயனைவினவ; வாக்குத் தடைப்பட்டது. உடனே சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து, முருகக்கடவுளுடைய ஆஞ்ஞையை நினைந்து, மனங்கலங்கி, ஆசனத்தையெடுத் தெறிந்துவிட்டு, உத்தரீயத்தை இடையிலேகட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்துநின்று, அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே! ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமையாற்செய்த பெருங்குற்றத்தைமன்னித்து, அடிமைகொண்டருள வேண்டும்." என்றுபிரார்த்தித்து வணங்கினார். அது திருச்செவியேற்ற ஞானாசாரியராகிய மாசிலாமணித்தேசிகர் அவரைநோக்கி, "நீ, காசியாத்திரை முடித்து மீள்வையேல், அநுக்கிரகம்புரிவோம்." என்று வலியுறுத்த; சுவாமிகள் பின்னும் பலமுறைவணங்கி, "கருணாநிதி

* தடுத்தாட்கொண்ட புராணம். (௧0௬)

யே! சிறியேன் தேவரீருடைய கட்டளையின்படி, பசியினு லும், பிணிமுதலியவற்றினாலும்வருந்திக் காசியாத்திரையை முடித்துக்கொண்டு வருமளவும் தேகநிற்பதோ நிலையில்லை; அன்றி இறக்கினும், பின்னரும் இம்மானுடப்பிறவியேவாய்த் துத் தேவரீர்திருவருட்பேற்றிற்குப் பாத்திரனாதலும் நிச்சய மில்லை: ஆதலால், அடியேனுடையகுற்றத்தைச் சிறிதும் திரு வுள்ளத்திற் கொள்ளாது, திருவருள்பாலித்தல் வேண்டும்." என்று பிரார்த்தித்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய மாசி லாமணித்தேசிகர் திருவுளமிரங்கி, "அன்பனே; அது இயலா தாயின், சிதம்பரஸ்தலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய் துகொண்டு ஒருமண்டலம் வசித்துவருவாயாக." என்று ஆஞ் ஞாபித்தருளினர்.

சுவாமிகள், அவ்வாஞ்ஞையைச் சிரமேல்வகித்து, அநுமதி பெற்று, சிவிகையிலாரோகணித்துத் திருப்புள்ளிருக்குவேளூ ரையடைந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வைத்தி யநாதசுவாமியையும் தையனாயகியம்மையையும் முத்துக்கு மாரசுவாமியையுந் தரிசித்து, வந்தித்துத்துதித்து, அத்தலத் தின் எல்லையைக்கடந்து புறத்திற்செல்லும்போது; முத்துக் குமாரக்கடவுள், சுவாமிகளிடத்தில் அருச்சகர்வடிவமாக எழு ந்தருளி விபூதிகொடுத்து, "நம்மைக்குறித்தும் ஒரு பிள்ளை த்தமிழ் பாடுவாயாக." என்று கட்டளையிட்டு, அந்தர்த்தான மாயினர். உடனே சுவாமிகள் இங்ஙனம் எழுந்தருளினவர் நம்மையாண்டருளிய முருகக்கடவுளேயென்றுதேறி நிலத்தி லேவிழுந்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்தெழுந்து, மீண்டும் அத்திருப்பதியையெய்தி எவ்வாறுபாடுவேனென்று திகைக் குங்கால், அக்கடவுளுடைய திருவருளினால் "பொன்பூத்த குடுமி" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. சுவாமிகள் அத னையே முதலாகக்கொண்டு, **முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ்** என்னும் பிரபந்தத்தைப் பாட ஆரம்பித்து, செங்

கிரைப்பருவம் பாடும்போது, "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண்மணவாளன்" எனவும், தேனூறுகிளவிக்கு என்றுதொடங்குங்கால் "வாயூறிநின்றவன்" எனவும் இன்னனவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பானிகழ்ந்தசொற்களையும், இவையும் திருவருட்டிறம்போலும் என்று விடாதமைத்துப் பாடிமுடித்து, அக்கடவுளுடைய சந்நிதியிலே பலருந்துதிக்கும்படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலேவசித்தார்.

பின்பு, சீர்காழியைப்பணிந்து, சிதம்பரத்தைச்சார்ந்து, திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அமருநாளில், **சிதம்பரமும்மணிக்கோவை** என்னும் ஓர்பிரபந்தமியற்றியருளினர். அந்நாளிலே, சுவாமிதரிசனத்துக்குப் பரிசனங்களோடு செல்லுந்தருணத்தில் வழியிலே தினந்தோறும் புராணப்பிரசங்கஞ்செய்துகொண்டிருந்த சைவாசாரியரொருவர் தவிர, அதுகேட்பவர்யாவரும் எழுந்து, மரியாதைசெய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரைநோக்கி, "ஐயா! புலவர்திலகராயும், சிவாநுபூதிப்பெருவாழ்வினாயும் விளங்காநின்ற சுவாமிகளைக்கண்டு தாங்கள்மாத்திரம்மரியாதைசெய்யாதது என்னை?" என்றுவினவ; அதுகேட்டபுராணிகர் "அவர் இலக்கணகவியா? வரகவிதானே!" என்றார். அதுபொறாத ஒருவர் சுவாமிகளுக்குத் திருச்செவிசாத்த; சுவாமிகள் திருப்புன்முறுவல்செய்து, "மிகமுயன்று அரிதிற்பெறுவது இலக்கணகவியும், அவ்வாறன்றி எளிதிற்பெறுவது வரகவியுமன்றோ? இதையுணராதுரைப்பினும், அவர் சொல்லளவில் நம்மைத்துதித்தவரேயாயினர்; ஆயினும், அவர்சந்தேகத்தையும் நிவிர்த்திசெய்வோம்." என்று **சிதம்பரச்செய்யுட்கோவை** என்னும் ஓர் சிறந்தபிரபந்தத்தை அருளிச்செய்தனர். புராணிகர் அந்நூலிலமைந்துள்ள அரிய இலக்கணங்களையும், சொற்சுவை பொருட்சுவைகளையும்நோக்கி, சுவாமிகளையடைந்துவணங்கி வேண்டிக்கொள்ள; சுவாமிகள் திருவுளமகிழ்ந்து,

அளவளாவியபின்பு, **சிவகாமியம்மையிரட்டைமணிமாலை** என்னும் ஓர் பிரபந்தத்தையும் செய்தருளினார்.

இவ்வாறு நியதிபூண்டு ஒருமண்டலம்வசித்து, அத்தலத்தை அருமையாகநீங்கி, தருமபுரத்தைச்சார்ந்து, ஞானசாரியரைத்தரிசித்து வணங்கி, அவரைத்துதித்தியற்றிய **பண்டாரமும்மணிக்கோவை** என்னும்பிரபந்தத்தை அவர்சந்நிதானத்திலே அரங்கேற்றினார். உடனே ஞானசாரியர் திருவுளமிகமகிழ்ந்து சுவாமிகளைநோக்கி, "நீ இயல்பாகவே துறவியாயினும் நமது வரன்முறைப்படியே அத்துறவிற்குரிய காஷாயவஸ்திர முதலிய முக்கிய சின்னங்களையும் தரித்துக்கொள்ளுக." எனப்பணித்து, அவரையடிமைகொண்டு, அச்சின்னங்களையளித்து, ஞானோபதேசமும்பாலித்தருளினார். சுவாமிகள் * அணுக்கத்தொண்டராகி அவ்வுழிவசிக்குநாளிலே ஒருநாள், தமக்கு முன்னே பரிசாகக்கிடைத்த திரவியங்களை அந்த ஞானசாரியர்சந்நிதியில்வைத்து ஏற்றருளும்படி பிரார்த்திக்க; அவர் முன்னர்ப்பணித்தவாறே "நீ, காசியையடைந்து இவற்றைக்கொண்டு தருமமியற்றுக." என்று திருவாய்மலர்ந்தருளினார்.

சுவாமிகள், அவ்வரியபணியை மேற்கொண்டு, அநுமதிபெற்று, அத்திரவியங்களை ஒட்டகங்களின்மீதேற்றிக்கொண்டு, பரிசனங்களோடு புறப்பட்டுத் தருமபுரத்தினெல்லையைக்கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச்சென்று, சிதம்பரமுதலியதலங்களைவணங்கிக் காஞ்சீபுரத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு வீற்றிருக்குநாளிலே, தம்மிடத்தில் அநேக

---

* அணுக்கத்தொண்டராகி வசிக்குநாளிலே அவ்வவ்வமையங்களில் "பூதங் கடந்த புகழக்கூடற் சம்பந்தன் போதித்த சொல், வாதங் கடந்து மனோலய மாயிந்து மண்டலம்போய், நாதங் கடந்து நடுவெளி தாண்டி நலஞ்சிறந்த, போதங் கடந்தின்ப பூரண மாகிப் பொலிந்ததுவே." என்னும் இச்செய்யுண்முதலிய சிலசெய்யுள்கள் அருளியதாகவும் கூறுவதுண்டு.

வைஷ்ணவர்களோடுவந்து சமயக்கோட்பாட்டைப்பற்றிவாதித்த பிள்ளைப்பெருமாளையங்கார்முதலியோரைப் பல பிரபல நியாயங்கொண்டு வாதித்து, அவர்களைவென்று, அவ்விடத்தினின்றும் நீங்கி, இடையிலுள்ள திருக்காளத்திமுதலிய ஸ்தலங்களையிறைஞ்சிக் காசியென்னுந்திவ்வியதலத்தினெல்லையையணுகினார். அணுகியவுடன் சிவிகையினின்றுமிறங்கிக் கங்கையைவந்தித்து, அதிலேஸ்நானஞ்செய்து தமதுநியதி முடித்துநோக்குங்கால், அக்கங்கையின் இருபுறத்தினுங் காடுகளடர்ந்து துருக்கர்களுடையபள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக்கண்டு மனநொந்து, அன்றிரவு அருநித்திரைசெய்தார். அப்போது அக்காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்திலெழுந்தருளிய சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, "நம்மைப்பூசிப்பாயாக." என்று ஆஞ்ஞாபிக்க; சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராமமுகூர்த்தத்திலே கேதாரத்தையடைந்து, காடுகளை அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத்துதித்து, பின்னர் விசுவநாதரை விசாலாக்ஷியம்மையாரோடும் அருச்சித்து வணங்கி, **காசிக்கலம்பகம்** என்னும் ஓர்பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்குநாளிலே, அந்நகரத்தையாண்டுகொண்டு ஆங்கிருந்த டில்லிபாக்ஷாவைக் கண்டுவசனித்துத் தருமமியற்றுதற்குத்தக்க இடம்பெறவிரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தானபாஷையைத் தெரிவித்தருளும்படி சகலபாஷைகளிலும்வல்ல சரஸ்வதிதேவியைப்பிரார்த்தித்து, **சகலகலாவல்லிமாலை** என்னும் பிரபந்தத்திலே ஒன்பதுபாடலருளியும், திருவருள் செய்யாமைகண்டு, "மண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னருமென் - பண்கண் டளவிற் பணியச்செய்வாய்" என்னும் பத்தாவதுபாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியார் திருவருள்சுரந்து அப்பாஷையை விளக்கியருள; சுவாமிகள் களிகூர்ந்து, அவ்வரசன்சமுகத்திற் கெ

ழுந்தருளினுர். அவன் சுவாமிகளுடைய அருமைபெருமைகளைச் சிறிதும் அறியாதவனுகையால் சிங்காதனத்திலிருந்துகொண்டே வரலாற்றைவினுவ; சுவாமிகள் அதனுலே தமக்கு யாதொருகுறைவும் இல்லையாயினும், அவனுக்குநேரிடும் கெடுதியை யோசித்துக் கருணைகூர்ந்து, "மஹாராஜாவே, உம்மை ஆசீர்வதிக்கவந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினுவுவது தருமமல்ல." என்று உரைத்தருளினுர். அதுகேட்டஅரசன் "உம்மிடத்திலே தெய்வீகங்கண்டாலன்றி உமதுசரீரத்தோற்றத்திற்கு நான்மரியாதைசெய்யேன்" என்றுசொல்ல; சுவாமிகள் "அப்படியாயின் அதனைநாளைக்குக்காட்டுவோம்" என்று சொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினுடைய அநுக்கிரகத்தால்வந்த ஒருசிங்கத்தின்மேலேறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையிற்புகுந்து, அரசனைநோக்கி, "நீர் இருப்பது உயிரற்றசிங்கம்; நாமிருப்பது உயிருற்றசிங்கம் ; ஆயினும் நீர் அஞ்சவேண்டுவதில்லை: உமக்குமாத்திரம் இது பசுவாகத்தோன்றும்." என்றுசொல்லி, அதிலிருந்தபடியே அவன் வினுக்களுக்கு உத்தரங்கொடுத்து அவன்வணங்கும்படிச்செய்து அங்கே வீற்றிருந்தருளிஞர்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படிநடாத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக்குறித்துச்செய்யும் பிரசங்கத்தைக்கேட்டு, துறவிகளாய் விருத்தப்பருவமடைந்துள்ள அரசனுடைய குருமுதலியோர்களும் விரகத்திஞலேமயங்கிப் பூமியிலேவிழுவார்கள். யுத்தவிஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக்கேட்டு, வயோதிகர்களும் கண்சிவந்து பற்களைக்கடித்து, ஆயுதங்களையெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும்பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களினும் தாங்கள் அந்தந்தமயமாதலையடைந்தும், சிலதுருக்கர்கள் மற்றவைகளைப்பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக்குறித்துச்செய்த பிரசங்கத்தில்மாத்திரம்

சந்தேகமுடையராய், இவருக்கு அநுபவமில்லாமலே சாஸ்திரத்தால் இவ்விஷயத்தில் இவ்வளவுபேசமுடியுமாவென்று சுவாமிகளைநோக்கி, "இவர் பகற்சந்நியாசிபோலும்" என்பதுமுதலாகப் பலவாறு பிதற்றுவாராயினார்கள். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப்பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறுபிதற்றிய துருக்கர்களைநோக்கி, "நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னுக்குதலாகிய ஒரு இரசவாதம்செய்வோம்." என்றுசொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலேபுதைப்பித்தார்.

மறுநாள் அரசன்முதலிய பலரும்வந்து கூடியபின்பு, அப்பாத்திரத்தையெடுப்பித்துச் சுத்திசெய்வித்துப் பொன்னென எதிரேவைக்கக்கண்டு, முதனாள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட் சிலர், "இது இரசவாதத்தாலன்று; மலம்புளிப்பாதலால் இப்படிப்பிரகாசிக்கின்றது." என்ன; உடனே சுவாமிகள் அவர்களைநோக்கி, "நீவிர், மலம்புளிப்பென்றீர்களே, அதையும்புசித்து அநுபவித்தீர்கள்போலும்" என்றார். அவர்கள் அதுகேட்டு மிகவும் கோபங்கொண்டுசூழ; சுவாமிகள் அவர்களைநோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்குமே?" என்றுசொல்லினர். அப்பொழுது விவேகிகளாகிய அரசன்முதலாயினோர் அவர்களையடக்கி, சுவாமிகளுடைய புத்தியைவியந்து புகழ்ந்தார்கள். மூடர்களாகிய அத்துருக்கர்கள் முன்னையினும் மிக்க பொறாமையுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலேவந்து, "உமதுநண்பராகிய குமரகுருபரசுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும் அவர்கைக்கொண்டதெய்வமோ பொய்:" என்றார்கள். அதுகேட்ட அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய; சுவாமிகள், உண்மையை யாவருக்கும் வெளிப்படுத்த விரும்பி, அத்துருக்கர்களுடைய உத்தேசப்படியே காய்ச்சப்பட்ட இரும்பைக்கொணர்வித்து, சைவசமயமே மெய்ச்சமயமானால், அச்சமயத்திற்

குரிய சிவபெருமானுக்குப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுமே திருவுருவமானுல், அவ்வெட்டனுள்ளும் அக்கினியே பிரதானமானுல், இது சுடமாட்டாதென்னுங் கருத்தோடு அவ்விரும்பைத் தமது திருக்கரத்திலே ஏந்தியருளினுர். அதுகண்டயாவரும் அதியற்புதமடைந்து சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்து, சுவாமிகளைத்துதித்தார்கள். பொருமையதிகரித்துள்ள துருக்கர்களோ தங்கள்கருத்து முற்ருமையால் முகம்புலர்ந்து, தலைகவிழ்ந்துநிற்க; சுவாமிகள் யாதொருசலனமுமின்றி அரசனுடைய வேண்டுகோளின்படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந்தருளினுர்.

பின்னெருநாள் அத்துருக்கர்கள் அரசனையடைந்து, "துறவிகளுக்குச் சாதிபேதங்கூடாது என்று சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருத்தலால் துறவியாகிய குமரகுருபரசுவாமிகளுக்கு நமது கிருகத்திலே போசனஞ்செய்விக்கவேண்டும்." எனக்கூறக்கேட்டு, அரசனும் அதற்குடன்பட்டவனுய்ச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய; அதற்குமிசைந்து, தமது வேலைக்காரனெருவனை ஒருதட்டிலே சில செவ்வரத்தம்பூவைவைத்து ஒரு வெள்ளைப்பரிவட்டத்திலே மறைத்துக்கொண்டுவரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று, அங்கே தமக்காகப் படைக்கப்பட்டிருந்த மாமிசங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியேவினுவி, "பன்றிமாமிசம் ஒன்றுமாத்திரம் தவறியது போலும்; ஆனுல் அது நம்மிடத்திலிருக்கின்றது." என்று சொல்லி, வேலைக்காரன் கொண்டுவந்த தட்டைவாங்கும்படி கைநீட்ட; அம்மிருகத்தின்பெயரையுஞ் சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதனைத்தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தம்வயமாக்கவிரும்பி, அங்கேபடைத்துள்ள மாமிசங்களனைத்தையும் உற்றுநோக்க; அவைகளெல்லாம், காய், கனி, முதலிய பல அரிய தின்பண்டங்களாயின. அதுகண்ட

அரசன் சுவாமிகளைவணங்கித் தனதுகுறையையிரந்து, "இனி அடியேன்செய்யவேண்டிய பணியாது?" என்று வினவ; சுவாமிகள், "உமது ஆளுகையிலுள்ள இக்காசிமாநகரத்தில் நாம் எண்ணிவந்த தருமத்தைநடாத்துதற்கு ஓரிடம்வேண்டும்." என்றார். அரசனும் "தேவரீருக்குப் பிரீதியான இடந்தருவேன்." என்று உடன்பட்டான். அன்றிரவு நித்திரைசெய்யும்பொழுது கேதாரேஸ்வரர் சுவாமிகளுடைய சொப்பனத்திலேதோன்றி, "அன்பனே! நீ அரசனிடத்திலே உபயகருடன் வட்டமிடுமிடத்தைக் கேள்." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத்துதித்து, மற்றைநாள் உஷஸ்காலத்திலே கேதாரேஸ்வரரைத் தரிசித்துக்கொண்டு வெளியிலேவந்தபோது, அந்தக் கேதாரகட்டத்தின் அருகில் அரசனுடைய பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்படி உபயகருடன்வட்டமிடக்கண்டு, திருவுளமகிழ்ந்து, அரசனிடத்திற் சென்று தெரிவித்தார். உடனே அரசன் யாதொருதடையுஞ் சொல்லாமல் அந்த இடத்தில் ஒரு பெரியதிருமடங்கட்டி, அதிலே தனதுமுகரும்வைத்து தத்தஞ்செய்து, அவருக்கு வேண்டியசிறப்புக்களையும் கொடுத்தான். இதுவே குமாரசாமிமடம் என்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் அத்திருமடத்திலே எழுந்தருளியிருந்துகொண்டு, திருமலைநாயகர்கொடுத்த திரவியங்களைக்கொண்டு அவர் பெயரினுல் ஒரு சத்திரங்கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையேயன்றி, கேதாரநாதருக்கும் ஆலயமமைத்து, விதிப்படி நித்தியநைமித்திகங்களை ஏற்படுத்தி, காலந்தோறும் தரிசனஞ்செய்துகொண்டு அத்தலத்திலேயே வசித்திருந்தனர். ஒருநாள் தமது ஞானசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும் விசுவநாதரையும் தரிசித்து விடைபெற்று பிரஸ்தானமாகி, இடையிலுள்ளதலங்களை இறைஞ்சி, தருமபுரத்தின் எல்லையையடைந்து, சிவிகையினி

ன்றுமிறங்கி, திருமடத்தினுள்ளேசென்று, ஞானாசாரியரைத் தரிசித்து வணங்கித்துதித்து, திருவருள்பெற்றுச் சிலநாள் உடன்வசித்து, காசியையடைந்தனர். இங்ஙனம் மூன்றுமுறை வந்து தரிசித்துச்சென்றபின்பு நாலாவதுமுறையிலே ஞானாசாரியருடைய சந்நிதியிலேநின்று, "இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தைவிட்டு நீங்கிக் காசியிலிருக்கமனமில்லை." என்று விண்ணப்பஞ்செய்தனர். அப்போது ஞானாசாரியர் பிரிவாற்றாமையால்வருந்தும் சுவாமிகளைநோக்கி,

"காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னும் கட்டளைக்கலித்துறையை அருளிச்செய்து, சொக்கலிங்கமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் கிரியாபூசையாக எழுந்தருளப்பண்ணிக்கொடுத்து, திருவருள்பாலித்து விடையளித்தனர். சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, அங்கே எழுந்தருளிவிளங்கும் சொக்கலிங்கமூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து அரிதினீங்கிக் காசியையடைந்து, அரிய சிவதருமங்களை இயற்றிக்கொண்டு சிவாநுபூதிச்செல்வராய்ச் சிலகாலம்வீற்றிருந்து, வைகாசிமாதத்திலே, கிருஷ்ணபக்ஷதிருதியையிலே, சிவபெருமான் திருவடிநீழலிற் கலந்தருளினார்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரசுவாமிகள்திருவடிவாழ்க.

கடவுள் துணை.

புத்தகவிளம்பரம்.

திருவிளையாடற் புராணம் முக்கிய குறிப்புடன் திக்குக்காயிதப்புத்தகம்...	உ	அ	0
ஷை தின்காயிதப்புத்தகம் ...	உ	0	0
சைவபுராணம் வாயுசங்கிதை முக்கியகுறிப்புடன்	க	0	0
குமரகுருபரசுவாமிகள் (கச) பிரபந்தத்திரட்டு	க	0	0
சிவப்பிரகாசசுவாமிகள் தோத்திரப் பிரபந்தத்திரட்டு சோணசைலமாலைமுதல்(உஉ) நூல்...	க	0	0
சீகாளத்திபுராணம் பாடலும் வசனமும் ...	0	கஉ	0
திருக்கூவப்புராணம்	0	க0	0
நால்வர்நான்மணிமாலை விருத்தியுரை காலிகோ	0	அ	0
ஷை ஆப்பைண்டு	0	சு	0
வைத்தீசுரர்கோயிற்புராணம்...	0	சு	0
மகாசிவராத்திரிகற்பமுதலிய ஏழுநூலடங்கியது	0	ச	0
முருகேசர்முதுநெறிவெண்பாவுரையோடு ..	0	௩	0
சிவபுராணநிதோத்திரமஞ்சரிகாலிகோபைண்டு	0	க௩	0
ஷை ஆப்பைண்டு	0	கஉ	0
சோணசைலமாலையுரை காலிகோபைண்டு ...	0	சு	சு
ஷை ஆப்பைண்டு	0	ரு	0
குசேலோபாக்கியானம்விசேடக்குறிப்புடன்காலிகோ		அ	0

இவைவேண்டியவா சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளிடத்திலும், சிதம்பரம் மேலக்கோபுரவாயில் புஸ்தப்புக்கடை மா. கந்தசுவாமிமுதலியாரிடத்திலும், சென்னை முத்தியாலுப்பேட்டை கலாரத்நாகரம் பிரசிலும், ஷை பேட்டை ரிப்பன் பிரசிலும், நம்மிடத்திலும் விலைக்குப்பெறலாம். வெளியூரார் ரிஜிஸ்டர்செய்தேனும் வி. பி. போஸ்டிலேனும் அழைத்துக்கொள்ளல்வேண்டும். தபாற்கூலி பிரத்யேகம்.

இங்ஙனம்,

க. வ. திருவேங்கடநாயடு.
பச்சையப்பமுதலியார் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.
பெத்துநாய்க்கன்பேட்டை தாதாமுத்தியப்பன் தெரு-23.
சென்னை.

உ

கணபதிதுணை.

திருச்செந்தூர்க்
கந்தர்கலிவெண்பா.

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமா—யாதிநடு
வந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமா—யறிவுக்
கநாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனதருளின்
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளா—யெஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியி
லிந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோன்—முந்துங்
கருவின்றி நின்ற கருவா யருளே
யுருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரண
மாகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகவதி காரப் பொருளாகி—யேகத்

(ரு) நித்தியம் போதம் ஆனந்தம் - சத்து சித்து ஆனந்தம்.
(௧௦) இயற்றல் - கிரியை.

துருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவா—யிருண்மலத்துண்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுத
லாறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரு
௧௫ மீரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
னூரவந்த நான்குநூ றாயிரத்துட்—டீர்வரிய
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடம்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தா
னற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு
௨௦ சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாஞ்

---

(௧௨) மோகமுறும் பல்லுயிரென்றது ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலமுடைய சகலரை. சகலரென்பதற்குக் கலையோடுங் கூடினவரென்பது பொருள். கலையென்றது கலாதி தத்துவங்களை; இக்கலைநீங்கும் பருவத்தில் இவர் மலநீங்கப் பெறுபவர்.

(௧௫) விந்து - சுத்தமாயை. மோகினி - அசுத்தமாயை. மான் - பிரகிருதிமாயை.

(௨௦) நால்வகையாஞ் சத்திநிபாதம் - மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிதரம். என்பன. சத்தி+நிபாதம் - சிற்சத்தி பதிதல்.

சத்திநி பாதந் தருதற் கிருவினையு
மொத்துவருங் கால முளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னு
ளலமருதல் கண்ணுற் றருளி—யுலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கா
உரு லூழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநிலை
மேழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
வாணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணு
மடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கு
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலு
மிரவுங் கடந்துலவா வின்ப—மருவுவித்துக்
௩௦ கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன்—மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு

(உஎ) பொருள் - பதி. (௩௦) கன்மமலத்தாரென்றது மூல மலமாகிய ஆணவமலத்தோடு கன்மமலமுமுடைய பிரளயா கலரை. பிரளயாகலர் - பிரளயகாலத்திற் கலையையகல்பவர். (௩உ) ஒருமலத்தாரென்றது ஆணவமலமொன்றேயுடைய விஞ் ஞானகலரை. விஞ்ஞானகலர்-ஞானத்தாற் கலையையகல்பவர்.

மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
யான்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானந்
திருவுருவா விச்சை செயலறிவு கண்ணு
வருளதுவே செங்கை யலரா—விருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவந்
தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந்—தேய்ந்தபிறைத்
துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பரிதி
பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையு—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சு ரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமு—மெவ்வுயிர்க்கு
மூழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமுஞ்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைக ளாகமங்க ளியாவு
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச விருடேந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமு—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கு
மோக மளிக்கு முகமதியுந்—தாகமுடன்

வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டு—மாரமுதந்
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமு—மோவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமு—மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமு
முய்த்த குறங்கி லொருகரமு—மொய்த்த
சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுந்—தெறுபோ
ரதிர்கே டகஞ்சுழற்று மங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமு—முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
வம்பொன் மணிப்பூ ணகன்மார்பும்—பைம்பொற்
புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையு
மரைஞாணுங் கச்சை யழகுந்—திருவரையு
நாதக் கழலு நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்—சோதி
யிளம்பரிதி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவு—முளந்தனிற்கண்
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே—யோதியவைந்
தோங்கா ரத்துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்தொழி
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய [ற்கு

---

(௫௬) ஐந்தோங்காரம் - அகரம் உகரம் மகரம் விந்து நாத மென்னும் ஐந்துறுப்புக்களையுடைய பிரணவம்; ஐவகையோங் காரமெனலும் உண்டு.

மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையா
லொத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவி
னிலையே வடிவமா நின்றோய்—பலகோடி
யண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடு
மாவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலு
மேவித் தனிநடத்து மெங்கோவே—மேவ
வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே—பருவத்
தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்புஞ்—சுகலளிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்ப
மெல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகருந்—தொல்லுலகி
லீறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமு—மேறுமதந்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்—காரணத்து
ளைந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்—சந்ததமு
நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவன
மாக்கி யசைத்தருளு மாணையுந்—தேக்கமழ்ந்து

வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்
பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
யைந்து முகத்தோ டதோமுகமுந்—தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு
மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவன
மெங்கும் பரக்க விமையோர்க ளஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தா—லங்க [மாண்
ணெடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ—யடுத்ததொரு
பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்—முன்ன
ராறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலு
மன்னவள்கண் டவ்வுருவ மாறினையுந்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யா றொன்றாக மேவுவித்துச்—செய்ய
முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பா
லகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி

(அஉ) விளையாடி உயர்ந்தோனே எனமுடிக்க.

மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்கு முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்
தங்கட் புவன மனைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்
விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கு
நடத்தி விளையாடு நாதா—படைப்போ
னகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற்
றாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனுஞ்
சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே—காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளுற்படையுஞ் சங்கரித்துப்—பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன

ஙங்கமிரு கூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட ஞர்த்தெழுந்து தோன்றுதலு—மங்கவற்றுட்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
வேறி நடாத்து மிளையோனே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடிவாஞ்
சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு
காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
கானக்குறவர் களிகூரப் பூங்குயில்போ
லேனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—யுள்ளமுவந்
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்
கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்—தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையு
மெவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலு—மவ்விடத்திற்

(க0சு) கலைமுனிவன் - சிவமுனிவர். (க0கூ) ஆறுதிருப்பதி - திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்சோலை.

பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளு
மச்ச மகற்று மயில்வேலுங்—கச்சைத்
கசுரு திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறு
மேந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்க
ணெல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பல்விதமா
மாசுமுத னாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையு—மோசை
யெழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுட
கஉ0 னிம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்—தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

திருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பா
முற்றிற்று.

குமரகுருபரசுவாமிகள் ஐந்துவயதுவரையும் ஊமையாய் இருந்து ஐந்தாம்வயதிலே திருச்செந்தூர் முருகக்கடவுளது திருவருளினால் இக்கலிவெண்பாவை அருளிச்செய்தார். வித்தையில் விருப்பமுடையவர்கள் இக்கலிவெண்பாவைத் தினந்தோறும் நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணக்கடவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மதுரை

மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள்.

கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட் கடைக் கடைக் கனலுமெல்லை, கடவாது தடவுக் குழைச்செவி மூசுந் தெறி கடைக்கா றிரட்டவெங்கோன்,—போர்கொண்ட வெண் கோட் பொலன்குவடு பொதியும்வெண் பொடிதுடி யடித்து வைத்துப், புழுதியாட் டயராவொ ரயிராவ ணத்துலவுபோர்க் களிற் றைத்துதிப்பார், — தார்கொண்ட மதிமுடி யொருத்தன் றிருக்கண்மலர் சாத்தக் கிளர்ந்து பொங்கித், தவழுமிள வெயி லிலுமழ நிலவுமள வளவலாற் றண்ணென்று வெச்சென்று பொன், — வார்கொண் டணிந்தமுலை மலைவல்லி கர்ப்பூர வல் லியபி ராமவல்லி, மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக வல் லிசொற் றமிழ்தழையவே.

காப்புப்பருவம்.

திருமால்.

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று மாசுணச் சூட்டு மோட்டு, மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமா

காப்புப்பருவம் - பாட்டுடைத்தலைவரைத் திருமால்முதலி யோராற் காவல்புரிவிக்கும் பருவம்.

னத்து வாலுளை மடங்கருங்கு,— மணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவைத்தெ மையனொடு வீற்றிருந்த, வங்க யற் கண்ணமுதை மங்கையர்க் கரசியையெ மம்மனையை யினி துகாக்க,— கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங் கலுழிபாய்ந் தளறுசெய்யக், கழனிபடு நடவையிற் கமலத் துணங்கரசொர் கையணை முகந்துசெல்லப்,— பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப் பணைத்தோ ளொருத்தலைப்பப், பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே. (க)

சிவபெருமான்.

வே று.

சிகர வடவரை குனிய நிமிர்தரு செருவி லொருபொரு வில்லெனக் கோட்டினர், செடிகொள் பறிதலை யமண ரெதி ரெதிர் செலவொர் மதலைசொல் வவைகையிற் கூட்டினர், திருவு மிமையவர் தருவு மரவொலி செயவ லவர்கொள நல்குகைத் தீட்டினர், சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ் தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்,— பகரு மிசைதிசை பரவ விருவர்கள் பயிலு மியறெரி வெள்வளைத் தோட்டினர், பசிய வறுகொடு வெளிய நிலவிரி பவள வனமடர் பல்சடைக் காட்டி னர், பதும முதல்வனு மெழுத வரியதொர் பனுவ லெழுதிய வைதிகப் பாட்டினர், பரசு மிரசித சபையி னடமிடு பரத பத யுக முள்ளம்வைத் தேத்துதும்,— தகர மொழுகிய குழலு நில வுமிழ் தரள நகையுமெ மையனைப் பார்த்தெதிர், சருவி யமர் பொரு விழியு மறுகிடை தளர வளர்வதொர் செவ்விமுற் றுக் கன, தனமு மனனுற வெழுதி யெழுதரு தமது வடிவையு

(க) கணி - கண்ணி. (உ) வேகவதியென்பது வைகையெனத் தற்பவமாதலன்றி வையையெனவும் மரீஇவழங்கும். யுகம் - இரண்டு. சருவல் - சைகைசெய்தல்.

மெள்ளிமட் டேற்றிய, தவள மலர்வரு மிளமி னெனுசத தளமின்
வழிபடு தையலைத் தாத்திரை, — மகர மெறிகட லமுதை யமு
துகு மழலை பழகிய கிள்ளையைப் பேட்டன, மடவ நடைபயில்
பிடியை விரைசெறி வரைசெய் புயமிசை வையம்வைத் தாற்
றிய, வழுதி யுடையகண் மணியொ டுலவுபெண் மணியை யணி
திகழ் செல்வியைத் தேக்கமழ், மதுர மொழுகிய தமிழி னியல்
பயின் மதுரை மரகத வல்லியைக் காக்கவே. (உ)

சித்திவிநாயகக்கடவுள்.

வே று.

கைத்தல மோடிரு கரடக் களைத்திரை, கக்குக டாமுடைக்
கடலிற் குளித்தெமர், — சித்தம தாமொரு தறியிற் றுவக்குறு,
சித்திவி நாயக னிசையைப் பழிச்சுதும், — புத்தமு தோவரு
டழையத் தழைத்ததொர், பொற்கொடி யோவென மதுரித்
துவட்டெழு, — முத்தமிழ்தேர் தரு மதுரைத் தலத்துறை, முத்
தன மேவுபெ ணரசைப் புரக்கவே. (௩)

முருகக்கடவுள்.

வே று.

பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமொர் பகடு நடத்திப்
புலோமசைச் சூர்ப்புயல், பருகி யிடக்கற் பகாடவிப் பாற்
பொலி பரவை யிடைப்பத் மமாதெனத் தோற்றிய, — குமரி
பிருக்கக் கலாமயிற் கூத்தயர் குளிர்புன மொய்த்திட் டசார
லிற் போய்ச்சிறு, குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு கும
ரனை முத்துக் குமாரனைப் போற்றுது, — மிமிழ்திரை முற்றத்
துமேருமத் தார்த்துமுள், ளெயிறுகு நச்சுப் பணாடவித் தாப்பி
சைத், திறுக விறுக்கித் துழாய்முடித் தீர்த்தனொ டெவரு மதி

(உ) மடவம் - இளமை. (௪) பமரம் - ப்ரமரமென்னும் வட
சொற்றிரிபு. பரவை யென்றது இந்திரனை. கலாபமென்பது
கலாமெனக்குறைந்தது.

த்துப் பராபவத் திச்சுட,— வமுதுசெய் வித்திட் டபோனகத் தூற்சுட ரடரு மிருட்டுக் கிரீவமட் டாக்கிய, வழகிய சொக்கற் குமால்செயத் தோட்டிக லமர்செய் கயற்கட் குமாரியைக் காக்கவே. (௪)

பிரமதேவர்.

வேறு.

மேகப் பசுங்குழவி வாய்மடுத் துண்ணவும் விட்புலம் விருந்தயரவும், வெள்ளமுதம் வீசுங் கருந்திரைப் பைந்துகில் விரித்துடுத் துத்திவிரியு,— நாகத்து மீச்சுடிகை நடுவட் கிடந்தமட நங்கையைப் பெற்றுமற்றந், நாகணைத் துஞ்சுதன் றந்தைக்கு வந்துதவு நளினக் குழந்தைகாக்க,— பாகத்து மரகதக் குன்றொன்றொர் தபனியக் குன்றொடு கிளைத்துநின்ற, பவளத் தடங்குன் றுளக்கண்ண தென்றப் பரஞ்சுடர் முடிக்குமுடிமூன்,— றாகத் தமைத்துப்பி னொருமுடிதன் முடிவைத் தணங்கரசு வீற்றிருக்கு, மபிடேக வல்லியை யளிக்குல முழக்குகுழ லங்கயற் கண்ணமுதையே. (௫)

தேவேந்திரன்.

வேறு.

சூழியுங் கருங்கட் குண்டகழி சுவற்றுஞ் சுடர்வேற் கிரிதித்த, தோன்றற் களித்துச் சுறவுயர்த்த சொக்கப் பெருமான் செக்கர்முடி,— பொழியுந் தரங்கக் கங்கைவிளைப் புனல்கால் பாய்ச்சத் தழைந்துவிரி, புவனந் தனிப்பூத் தருள்பழுத்த பொன்னங் கொடியைப் புரக்கவழிந்,— திழியுந் துணர்க்கற் பகத்திணற விதழத்தேன் குடித்துக் குமட்டியெதி, ரெடுக்குஞ் சிறை

(௪) பராபவம் - அவமதிப்பு. சொக்கன் - சுந்தரன், சுயம்புமூர்த்தியுமாம். சொக்கு - சுந்தரம். சொக்கம் - சுயம்பு என்க.

(௫) உத்தி - படப்பொறி. பாகத்து மரகதக்குன்றொன்று ஒர் தபனியக்குன்றொடு கிளைத்துநின்ற பவளத்தடங்குன்று - விஷ்ணுமூர்த்தியையும் பிரமதேவரையும் இருபக்கத்துமுடைய ஏகபாதமூர்த்தி.

வண் டேவட்டுறவுண் டிளைக்கக் களைக்கு மதக்கலுழிக், — குழி
யுஞ் சிறுக ணேற்றுருமுக் குரல்வெண் புயலுங் கரும்புயலுங்,
குன்றங் குலைய வுகைத்தேறுங் குலிசத் தடக்கைப் புத்தேளே.

திருமகள்.

வேறு.

வெஞ்சுட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயன் மீமிசைத்
துஞ்சுநீல, மேகத்தி னகத்து விடுசுடர்ப் படலைமணி மென்பர
லுறுத்தநொந்து, — பஞ்சுட்டு சீரடி பதைத்துமதன் வெங்க
திர்ப் படுமிள வெயிற்குடைந்தும், பைந்துழாய்க் காடுவிரி தண்
ணிழ லொதுங்குமொர் பசுங்கொடியை யஞ்சலிப்பா, — மஞ்
சுட் டகட்டுநெடு வான்முகடு துருவுமொரு மறைமோதி மஞ்ச
லிக்க, மறிதிரைச் சிறைவிரியு மாயிர முகக்கடவுண் மந்தா கினி
ப்பெயர்த்த, — செஞ்சுட்டு வெள்ளோ திமங்குடி யிருக்கும்
வளர் செஞ்சடைக் கருமிடற்றுத், தேவுக்கு முன்னின்ற தெய்
வத்தை மும்முலைத் திருவைப் புரக்கவென்றே. (எ)

கலைமகள்.

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை விரும்புஞ்
சுரும்பர்பாட, விளைநறவு கக்கும் பொலன்பொகுட் டலர்கமல
வீட்டுக் கொழித்தெடுத்துத், — தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்க
டலி னன்பினைந் திணையென வெடுத்தவிறைநூற், றெள்ளமுது

(அ) "அன்பினைந்திணை" என இறையெடுத்த நூலென்றது ஆலவாயில் அவிர்சடைக்கடவுளால் பாண்டியன் பொருட்டு "அன்பினைந்திணை" என்பதுமுதலிய அறுபதுசூத்திரங்களான் அருளிச்செய்யப்பட்ட இறையனாரகப்பொருளென்னும் நூலை. இதற்குக் கடைச்சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் தனித்தனிகண் டருளிய உரைகளுள் நக்கிரதேவநாயனார் கண்டருளிய உரையேசிறந்ததென உருத்திரசன்மரால் அங்கிகரிக்கப்பட்டு வழங்குகின்றது.

கூட்டுணுமொர் வெள்ளோதி மத்திணிரு சிறடிமு டிப்பம்வளர் பைங், — கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுதீங் கிளவி யுங் களிமயிற்குச், கிளரிளஞ் சாயலு நவ்விக்கு நோக்கும்விரி கிஞ்சுகச் சூட்டரசனப், — பிள்ளைக்கு மடநடையு முடனுடு மகளிர்க்கொர் பேதைமையு முதவிமுதிராப், பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப் பிராட்டியைக் காக்க வென்றே. (அ)

துர்க்கை.

வடிபட்ட முக்குடுமி வடிவே றிரித்திட்டு வளைகருங் கோட்டு மோட்டு, மகிடங் கவிழ்த்துக் கடாங்கவிழ்க் குஞ்சிறுகண் மால்யானை வீங்கவாங்குந், — துடிபட்ட கொடிநுண் ணுசுப்பிற் குடைந்தெனச் சுடுகடைக் கனலிதுண்டுஞ், சுழல்கண் முடங்குளை மடங்கலை யுகைத்தேறு சூரரிப் பிணவுகாக்க, — பிடிபட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற் பிடிக்குழாஞ் சுற்றவொற்றைப், பிறைமருப் புடையதொர் களிற்றினைப் பெற்றெந்தை பிட்டுண்டு கட்டுண்டுநின், — றடிபட்ட திருமேனி குழையக் குழைத்திட்ட வணிமணிக் கிம்புரிக்கோ, டாகத்த தாகக் கடம்பாடவிக்குள்விளை யாடுமொர் மடப்பிடியையே. (கூ)

சத்தமாதர்கள்.

வேறு.

கடகளி றுதவுக பாய்மிசைப் போர்த்தவள் கவிகுவி துறுகலின் வாரியைத் தூர்த்தவள், கடல்வயி றெரியவொள் வேலினைப் பார்த்தவள் கடிகமழ் தருமலர் தார்முடிச் சேர்த்தவ,— ளிடியுக வடலரி யேறுகைத் தார்த்தவ ளெழுதரு முழுமறை

(கூ) மால்யானை - இங்கே தனம். உடைந்ததென வென்பது உடைந்தெனவெனத் தொகுத்தலாயிற்று.

(கய) கபாய் - நிலையங்கி. சத்தமாதர்கள் - மாகேசுவரி நாராயணி கௌமாரி இந்திராணி காளி அபிராமி வராகி என்பவர். இவர்களை இச்செய்யுளில் முறையேகொள்க.

னாலினிற் கூர்த்தவ, ளெயிறுகொ டுழுதெழு பாரினைப் பேர்த்தவ ளெனுமிவ ரெழுவர்க டாண்முடிச் சூட்டுதும்,—சூடமொடு சூடவியர் பாணிகைக் கோத்திடு குரவையு மலதொர்ப ணுமுடிச் சூட்டருள், குதிகொள நடமிடு பாடலுக் கேற்பவொர் குழலிசை பழகளி பாடிடக் கேட்டுடை,—மடலவிழ் துளபந றுவெடுத் தூற்றிட மழகளி றெனவெழு கார்முகச் சூற்புயல், வரவருமிளையகு மாரியைக் கோட்டெயின் மதுரையில் வளர்கவு மாரியைக் காக்கவே. (கo)

முப்பத்துமூவர்.
வேறு.

அமரில் வெந்கிடும வுதியர் பின்னிடுமொ ரபயர் முன்னிடுவனத்தொக்க வோடவு, மளவு மெம்முடைய திறையி தென்னமுடி யரச ரெண்ணிலரொர் முற்றத்து வாடவு, மகில மன்னரவர் திசையின் மன்னரிவ ரமர ரென்னுமுரை திக்கெட்டுமூடவு, மமுத வெண்மதியின் மரபை யுன்னியுனி யலரியண்ணன்முழு வெப்பத்து மூழ்கவு,—குமரி பொன்னி வைகைபொருநை நன்னதிகள் குதிகொள் விண்ணதியின் மிக்குக்குலாவவும், குவடு தென்மலையி னிகர தின்மைசுரர் குடிகொள்பொன்மலைது தித்துப்ப ராவவும், குமரர் முன்னிருவ ரமரான்னையிவள் குமரி யின்னமுமெ னச்சித்தர் பாடவும், குரவைவிம்மவர மகளிர் மண்ணிலெழில் குலவு கன்னியர்கள் கைக்கொக்க வாடவும்,—கமலன் முன்னிவிடு மரச வன்னமெழுகடலி லன்னமுட னட்புக்கை கூடவும், கரிய செம்மலொடுமிளைய செம்மல்விடு கருடன் மஞ்ஞையொடொர் கட்சிக்குநாடவும், கடவி விண்ணரசு நடவும் வெம்முனைய களிறு கைம்மலைசெல் கொப்பத்து வீழவும், கனக மன்னுதட நளினி துன்னிதிரு கமல மின்னுமொரு பத்மத்துண் மேவவு,—மிமைய மென்

(கக) கட்சி - பறவைக்கூடு. கனகநளினி - பொற்றாமரைத் தீர்த்தம். நளினி - நளினத்தை யுடையது.

ணமனு முறைகொ டென்னருமெ மிறையை நன்மருகெ னப்பெற்று வாழவு, மெவர்கொல் பண்ணவர்க ளெவர்கொன் மண்ணவர்க ளேதுகொல் பொன்னுலகெ னத்தட்டு மாறவு, மெழில்செய் தென்மதுரை தழைய மும்முலையொ டெழுமெ னம்மனைவ னப்புக்கொர் காவல, ரிருவ ரெண்மர்பதி னொருவர் பன்னிருவ ரெனும விண்ணவர்கண் முப்பத்து மூவரே. (கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

நீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி நெற்றியிற் றொட்டிட்டவெண், ணீற்றினொடு புண்டரக் கீற்றுக்கு மேற்றிடவொர் நித்திலச் சுட்டிசாத்தித்,— தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத் தலைப்பணி திருத்திமுத்தின், றண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கொர் தபனியக் கொப்புமிட்டுப்,—பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப் பாலமுதமூட்டியொருகின், பானுறு குமுதங் கனிந்தூறு தேறறன் பட்டாடை மடிநனைப்பச்,—சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடியருளே. (க)

(கக) முப்பத்து மூவராவார் - மருத்துவர் இருவர்; வசுக்கள் எண்மர்; உருத்திரர் பதினொருவர்; ஆதித்தர் பன்னிருவர்; இவர் தத்தங்கூற்றினில் தனித்தனி கோடியராய்விரிந்த முப்பத்து முக்கோடி தேவரையும் புரப்பவராய்த் தத்தமக்குரிய அவ்வவ் [illegible] வினத்தவர்கட்குத் தலைமைபெற்றுள்ளவர்.

செங்கிரையாடும்பருவம் - செவ்விய மதலைச்சொற்களைப் பேசும்பருவம். கிர் - சொல். இப்பருவத்தின்க ணிகழுஞ்செயல், ஒருகாலைமடக்கி ஒருகாலைநீட்டி இருகைகளையும் நிலத்தினூன்றித் தலைநிமிர்த்து முகமசைய ஆடுதல்.

உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின் றுன்றிருத் தாதைநின்னை, யொருமுறை கரம்பொத்தி வருகென வழைத் திடுமு னோடித் தவழ்ந்துசென்று,—தண்ணுலா மழலைப் பசுங் குதலை யமுதினிய தாய்வயிறு குளிரவூட்டித், தடமார்ப நிறை குங் குமச்சே றளைந்துபொற் றுடோய் தடக்கைபற்றிப்,— பண்ணுலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும் பணைத்தோ ளொருத்தமேறிப், பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப் பசுங் கதிர் ததும்பமணிவாய்த்,—தெண்ணிலா விரியநின் றாடும் பசுந் தோகை செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடியருளே. . (உ)

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச் சுவர்க்கா னிறுத் திமேருத், தூணொன்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு சுடர் விளக் கிட்டுமுற்ற,—வெற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல மெடுத்தடுக் கிப்புதுக்கூ, மின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை யிழைத்திட வழித்தழித்தோர்,—முற்றவெளி யிற் றிரியு மத்தப் பெரும்பித்தன் முன்னின்று தொந்தமிடவு, முனி யாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய மூதண்ட கூடமூடுஞ்,— சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொரு செல்வி செங்கீரை யாடியருளே. (ங)

மங்குல்படு கந்தரச் சுந்தரக் கடவுட்கு மழகதிர்க் கற்றை சுற்றும், வாணயன மூன்றுங் குளிர்ந்தமுத கலைதலை மடுப்பக் கடைக்க ணோக்கும்,—பொங்குமதர் நோக்கிற் பிறந்தவா னந் தப் புதுப்புணரி நீத்தமையன், புந்தித் தடத்தினை நிரப்பவழி யடியர்பாற் போகசா கரமடுப்ப,—வங்கணெடு ஞாலத்து வித்

(ங) எட்டுச்சுவர்க்கால் - இங்கே அட்டகுல பருப்பதங்கள்.
எற்றுபுனல் - பிரளயநீர். முனியாமை - வெறுமை.

தின்றி வித்திய வனைத்துயிர்க ளுந்தளிர்ப்ப, வருண்மடை திறந்துகடை வெள்ளம் பெருக்கெடுத் தலையெறிந் துகளவுகளுஞ்,— செங்கயல் கிடக்குங் கருங்கட் பசுந்தோகை செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடியருளே. (ச)

பண்ணறு வரிமிடற் றறுகான் மடுப்பப் பசுந்தேற லாறலைக்கும், பதுமபீ டிகையுமுது பழமறை விரிந்தொளி பழுத்தசெந் நாவுமிமையாக்,— கண்ணறு மரகதக் கற்றைக் கலாமஞ்ஞை கணமுகி றதும்ப வேங்குங், கார்வரையும் வெள்ளெனவொர் கன்னிமா டத்துவளர் கர்ப்பூர வல்லிகதிர்கால், — விண்ணறு மதிமுயற் கலைகிழிந் திழியமுத வெள்ளருவி பாயவெடிபோய், மீனுந் தகட்டகட் டிளவாளை மோதமுகை விண்டொழுகு முண்டகப்பூந், — தெண்ணறு வருவிபாய் மதுரைமர கதவல்லி செங்கீரை யாடியருளே, தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி செங்கீரை யாடியருளே. (ரு)

வே று.

முகமதி யூடெழு நகைநில வாட முடிச்சூ ழியமாட, முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி முரிப்பொ டசைந்தாட,— விகல்விழி மகரமு மம்மக ரம்பொரு மிருமக ரமுமாட, விடுநூ புரவடி பெயரக் கிண்கி ணெனுங்கிண் கிணியாடத், — துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்கு றுவண்டு துவண்டாடத், தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர் சூலுடை யாலிடைமற்,—

(ச) செங்கயல் கடக்குமென்பதும்பாடம். (ரு) வரி - இசை. திருமகளும் கலைமகளும் தோழியராகத் தேவியார் அங்கயற்கணம்மையா யவதரித்தமையால் இம்மூவர்க்குமுரிய பதுமபீடிகை முதலியமூன்றும் விருப்பமிலவாயினவென்பார் வெள்ளௌனவென்றார். விருப்பமில்பொருளை வெள்ளையெனல் உலகவழக்கு. வெடிபோதல் - தாவுதல். (சா) முரிவு - வளைவு.

றகில சராசர நிகிலமொ டாடிட வாடுக செங்கீரை, யவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. (சு)

தசைந்திடு கொங்கை யிரண்டல வெனவுரை தருதிரு மார்பாடத், தாய்வரு கென்பவர் பேதைமை கண்டு ததும்புபு னகையாடப், — பசைந்திடு ஞால மலர்ந்தமை வெளிறியொர் பச்சுடல் சொல்லவுமோர், பைங்கொடி யொல்கவு மொல்கி நுடங்கிய பண்டி சரிந்தாட, — விசைந்திடு தேவை நினைந்தன வென்ன விரங்கிடு மேகலையோ, டிடுகிடை யாட வியற்கை மணம்பொதி யிதழ்வழி தேறலினே, — டசைந்தொசி கின்ற பசுங்கொடி யெனவினி தாடுக செங்கீரை, யவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. (எ)

பரிமள மூறிய வுச்சியின் முச்சி பதிந்தா டச்சுடர்பொற், பட்டமு டன்சிறு சுட்டியும் வெயிலொடு பனிவெண் ணிலவாடத், — திருநுதன் மீதெழு குறுவெயர் வாடத் தெய்வம ணங்கமழுந், திருமே னியின்முழு மரகத வொளியெண் டிக்கும்விரிந்தாடக், — கருவிளை நாறு குதம்பை ததும்பிய காது தழைந்தாடக், கதிர்வெண் முறுவ லரும்ப மலர்ந்திடு கமலத் திருமுகநின், — னருள்விழி யொடும்வளர் கருணை பொழிந்திட வாடுக செங்கீரை, யவனி தழைந்திட மவுலி புனைந்தவ ளாடுக செங்கீரை. (அ)

வேறு.

குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றே நின்றாதுங், குழலிசை பழகிய மழைமுகி லெழவெழு கொம்பே வெம்பாச, — மருவிய பிணிகெட மலைதரு மருமைம ருந்தே சந்தானம், வளர்புவ னமுமுணர் வருமரு மறையின்வ ரம்பே செம்போதிற், — கருணையின் முழுகிய கயறிரி பசியக ரும்பே வெண்சோதிக், கலைமதி மரபிலொ ரிளமதி யெனவளர் கன்றே

(எ) பசைதல் - செழித்தல். பைங்கொடியென்றது இடையை.

யென்றோதுர், — திருமகள் கலைமக டலைமகண் மலைமகள் செங்கோ செங்கீரை, தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில் செங்கோ செங்கீரை. (கூ)

சங்குகி டந்தத டங்கைநெ டும்புய றங்காய் பங்காயோர், தபனிய மலைபடர் கொடியென வடிவுத ழைந்தா யெந்தா யென், — றங்கணெ டும்புவ னங்கடொ ழுந்தொறு மஞ்சே லென்றோது, மபயமும் வரதமு முபயமு முடையவ ணங்கே வெங்கோபக், — கங்குன்ம தங்கய மங்குல டங்கவி டுங்கா மன்சேமக், கயல்குடி புகுமொரு துகிலிகை யெனநின கண்போ லுஞ்சாயற், — செங்கய றங்குபொ லன்கொடி மின்கொடி செங்கோ செங்கீரை, தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில் செங்கோ செங்கீரை. (கO)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

தென்னன் றமிழி னுடன்பிறந்த சிறுகா லரும்பத் தீயரும்புந், தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்கட் கயவாய்ப் புனிற்றெருமை, — யின்னம் பசும்புற் கறிக்கல்லா விளங்கன் றுள்ளி

(கO) கங்குல் மதங்கயம் மங்குல் அடங்கவிடும் - இருளாகிய மதயானையை இரவுமுற்றும்செலுத்தும். மதகயம் மதங்கயமென இனவெழுத்துமிக்கது.

தாலப்பருவம்-தாலாட்டைக்கவனிக்கும்பருவம். தாலாட்டு - ஓர்வகை நாவசைப்பு; அது ஆகுபெயராய் அச்செயலோடு உடனிகழும் பாட்டையும் உணர்த்திற்று. தாலாட்டையேல் தாலாட்டையேல் என்னும் அடுக்கு தாலோ தாலேலோவென இணைந்தும் தாலெனத்தனித்தும் மரீஇயிற்று; செங்கிரையாடியருளென்னும் அடுக்கு செங்கோசெங்கிரையென இணைந்தும் செங்கிரையெனத்தனித்தும் மரீஇநின்றாற்போல.

மடித்தலவின், றிழிபாலருவி யுவட்டெறிய வெறியுந் திரைத்தீம் புனற்பொய்கைப், — பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற் றூ தாடிக் கற்றைநிலாப், பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த பொன்போற் றெடுதோ லடிப்பொலன்சூட், — டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (க)

வீக்குஞ் சிறுபைந் துகிற்றோகை விரியுங் கலாப மருங் கலைப்ப, விளையாட் டயரு மணற்சிற்றில் வீட்டுக் குடிபுக் கோட் டியிருள், — சீக்குஞ் சுடர்தூங் கழன்மணியின் செந்தீ மடுத்த சூட்டடுப்பிற், செழுந்தாட் பவளத் துவரடுக்கித் தெளிக்கு நறுந்தண் டேறலுலை,—வாக்குங் குடக்கூன் குழிசியிலம் மது வார்த் தரித்த நித்திலத்தின், வல்சி புகட்டி வடித்தெடுத்து வயன்மா மகளிர் குழாஞ்சிறுசோ,—றுக்கும் பெருந்தண் பணை மதுரைக் கரசே தாலோ தாலேலோ, வருள்சூற் கொண்ட வங் கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (உ)

ஓடும் படலை முகிற்படல முவர்நீத் துவரி மேய்ந்துகரு; ஆறுங் கமஞ்சூல் வயிறுடைய வுகைத்துக் கடவுட் கற்பகப் பூங்,—காடுந் தரங்கக் கங்கைநெடுங் கழியு நீந்தி யமுதிறைக் குங், கலைவெண் மதியின் முயறடவிக் கதிர்மீன் கற்றை திரைத் துதறி,—மூடுங் ககன வெளிக்கூட முகடு திறந்து புறங்கோத்த, முந்நீ ருழக்கிச் சினவாளை மூரிச் சுறவி னோடும்விளை,—யாடும் பழனத் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (௩)

ஊறுங் கரடக் கடத்துமுகந் தூற்று மதமா மடவியர்நின், றுதறுங் குழற்பூந் துகளடங்க வோட விடுத்த குங்குமச்செஞ்,—

(உ) தோகை - கொய்சகம். தாட்பவளம் - நீட்சிப்பவளம், கூன் சங்கின்மேற்று. (௩) முகிற்படலவயிறு என இயையும்.

(ச) மதமாவென்புழி-மதமாவையென ஐயுருபுவிரிக்க.

சேறு வழுக்கி யோட்டறுக்குந் திருமா மறுகி லரசர்பெருந், திண்டே ரோதுங்கக் கொடிஞ்சிநெடுஞ் சிறுதே ருருட்டுஞ் செங் கண்மழ,—வேறு பொருவே லிளைஞர்கட மிவுளி கடைவாய் குதட்டவழிந், திழியும் விலாழி குமிழியெறிந் திரைத்துத் திரைத்து நுரைத்தொருபே,—ராறு மடுக்குந் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (ச)

வார்க்குன் றிரண்டு சுமந்தொசியு மலர்க்கொம் பனையார் குழற்றுஞ்சு, மழலைச் சுரும்பர் புகுந்துழக்க மலர்த்தா துகுத்து வானதியைத்,—தூர்க்கும் பொதும்பின் முயற்கலைமேற் றுள்ளி யுகளு முசுக்கலையின், றழனிக் கொதுங்கிக் கழனியினெற் சூட்டிப் படப்பை மேய்ந்துகதிர்ப்,—போர்க்குன் றேறுங் கருமுகிலை வெள்வாய் மள்ளர் பிணையலிடும், பொருகோட் டெருமைப் போத்தினொடும் பூட்டி யடிக்க விடிக்குரல்விட்,—டார்க்கும் பழனத் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலேலோ, வருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி கழியிற் சிறுகுழியிற், கரையிற் கரைபொரு திரையிற் றலைவிரி கண்டலில் வண்டலினெற்,—போரிற் களமிறை சேரிற் குளமிறை புனலிற் பொருகயலிற், பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர் குழையிற் பொருகயல்போய்த், தேரிற் குமரர்கண் மார்பிற் பொலிதருதிருவிற் பொருவில்வரிச்,—சிலையிற் றிரள்புய மலையிற் புலவர் திருத்திட வூழ்த்தமுடித்,—தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள் தாலோ தாலேலோ, சங்கம் வளர்த்திட நின்ற பொலன்கொடி தாலோ தாலேலோ. (சு)

(ச) ஒட்டறுத்தல் - ஒட்டமறச்செய்தல். (ரு) முயற்கலை - சந்திரன். (சு) ஊழ்த்தல் - மலர்ந்துதிர்தல்.

சேனைத் தலைவர்க டிசையிற் றலைவர்கள் செருவிற் றலைவர் களாற், சிலையிற் றடமுடி தேரிற் கொடியொடு சிந்தச் சிந்தியி டுஞ்,—சோனைக் கணைமழை சொரியப் பெருகிய குருதிக் கடலி டையே, தொந்த மிடும்பல் கவந்த நிவந்தொரு சுழியிற் பவுரி கொள,--வானைத் திரளொடு குதிரைத் திரளையு மப்பெயர் மீனை முகந், தம்மனை யாடு கடற்றிரை போல வடற்றிரை மோதவெ ழுந்,—தானைக் கடலொடு பொலியுந் திருமகள் தாலோ தாலே லோ, சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி தாலோ தா லேலோ. (எ)

அமரர்க் கதிபதி வெளிறக் களிறெதிர் பிளிறக் குளிறியி டா, வண்ட மிசைப்பொலி கொண்ட லுகைத்திடு மமரிற் றமரி னுடுங்,—கமரிற் கவிழ்தரு திசையிற் றலைவர்கண் மலையிற் சிற கரியுங், கடவுட் படையொடு பிறகிட் டுடைவது கண்டு முகங் குளிராப்,—பமரத் தருமலர் மிலையப் படுமுடி தொலையக் கொ டுமுடிதாழ், பைம்பொற் றடவரை திரியக் கடல்வயி றெரியப் படைதிரியாச்,—சமரிற் பொருதிரு மகனைத் தருமயில் தாலோ தாலேலோ, சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி தாலோ தாலேலோ. (அ)

மூதுசொற் புலவர் தெளித்த பசுந்தமிழ் நூல்பாழ் போகா மே, முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை கீழ்மே லாகாமே,— யதிரப் பொருது கலிப்பகை ஞன்றமிழ் நீர்நா டாளாமே, யகி லத் துயிர்க ளயர்த்து மறங்கடை நீணீர் தோயாமே,—சிதை வுற் றரசிய னற்றரு மங்குடி போய்மாய் வாகாமே, செழியர்க் கபயரு மொப்பென நின்றுண ராதா ரோதாமே,—மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி தாலோ தாலேலோ, மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி தாலோ தாலேலோ. (கூ)

(அ) தாழ்தல் - தங்கல். அதிபதி உகைத்திடுமமரிற் கண்டு முகங்குளிராப் பொருதிருமகனென இயையும்.

நகரக் கரிய குழற்சிறு பெண்பிளை நீயோ தூயோன்வாழ், சயிலத் தெயிலை வளைப்பவ ளென்றெதிர் சீறு வீரேதா,—நிக ரிட் டமர்செய் கணத்தவர் நந்திபி ரானோ டேயோடா, நிலை கெட் டுலைய வுடற்றவு டைந்தொ ரானே ருகாமே,—சிகரப் பொதிய மிசைத்தவ முஞ்சிறு தேர்மே லேபோயோர், சிவனைப் பொருத சமர்த்த னுகந்தருள் சேல்போன் மாயாமே,—மகரத் துவச முயர்த்த பொலன்கொடி தாலோ தாலேலோ, மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி தாலோ தாலேலோ. (கO)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

நாளவட் டத்தளிம நளினத் தொடுந்துத்தி நாகணையும் விட்டொரெட்டு, நாட்டத்த னும்பரம வீட்டத்த னுந்துஞ்சு நள் ளிருளி னுப்பணண்ட,—கோளவட் டம்பழைய நேமிவட் டத் தினொடு குப்புற்று வெற்பெட்டுமேழ், குட்டத்தி னிற்கவிழ மூதண்ட வேதண்ட கோதண்ட மோடுசக்ர,—வாளவட் டஞ் சுழல மட்டித்து நட்டமிடு மதுமத்தர் சுத்தநிர்த்த, வட்டத்தி னுக்கிசைய வொற்றிக்க ணத்ததன வட்டத்தை யொத்திட்ட தோர்,—தாளவட் டங்கொட்டு கைப்பாணி யொப்பவொரு சப்பாணி கொட்டியருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே. (க)

பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடிஞ்சிப் பொலந் தேரொ டமரகத்துப், பொன்மேரு வில்லியை யெதிர்ப்பட்ட

(கO) எதிர்சீறல் - அறைகூவல். சப்பாணிப்பருவம் - இரு கர ங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட்டும்பருவம். (க) தளிமம் - தவிசு. நேமிவட்டம் - பூமண்டலம். வட்ட நிர்த்தம் - பவுரிக் கூத்து. ஒற்றிக்கொட்டுகைப்பாணி எனவியையும்.

ளான்றம்மை பொம்மன்முலை மூன்றிலொன்று,—கைவந்த கொ ழுநரொடு முள்ளப் புணர்ச்சிக் கருத்தா னகத்தொடுங்கக், கவிழ் தலை வணக்கொடு முலைக்கண்வைத் திடுமொரு கடைக்கணேக் கமுதமூற்ற,—மெய்வந்த நாணினொடு நுதல்வந் தெழுங்குறு வெயர்ப்பினொ டுயிர்ப்புவீங்கும், விம்மிதமு மாய்நின்ற வுயி ரோவ மெனவூன்று விற்கடை விரற்கடைதழீஇத்,—தைவந்த நாணினொடு தவழ்தந்த செங்கைகொடு சப்பாணி கொட்டிய ருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப் பாணி கொட்டியருளே. (உ)

பூமரு வெடிப்பமுகை விண்டதண் டலையீன்ற புனைநறுந் தளிர்கள்கொய்தும், பொய்தற் பிணாக்களொடு வண்டற் கலம் பெய்து புழுதிவிளை யாட்டயர்ந்தும்,—காமரு மயிற்குஞ்சு மட வனப் பார்ப்பினொடு புறவுபிற வும்வளர்த்தும், காந்தள்செங் கமலத்த கழுநீர் மணந்தெனக் கண்பொத்தி விளையாடியும்,— தேமரு பசுங்கிள்ளை வைத்துமுத் தாடியுந் திரள்பொற் கழங் காடியுஞ், செயற்கையா னன்றியு மியற்கைச் சிவப்பூறு சேயி தழ் விரிந்ததெய்வத்,— தாமரை பழுத்தகைத் தளிரொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே, தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே.(௩)

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத வெளியிற் றுவாதசாந்த, வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை விரிந்த தமிழ் நாடுநெற்றிக்,—கண்ணளிக் குஞ்சுந் தரக்கடவுள் பொலி யுமறு காற்பீட மும்மெம்பிரான், காமர்பரி யங்கக் கவின்றங்கு பள்ளியங் கட்டிலுந் தொட்டிலாகப்,—பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப் பசுந்தேற லூறலாடும், பைங்குழவி பெ

(உ) மெய்வந்தநாண் - இயற்கைநாண். (௩) வெடித்தல் - வெளிப்படல். கலத்திற்புழுதிபெய்து வண்டல்விளையாட் டயர் ந்து மெனக்கூட்டுக.

ருவிரல் சுவைத்துநீ பருகிடப் பைந்தேற லூறுவண்கைத்,— தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு சப்பாணி கொட்டியருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே. (௪)

சேலாட்டு வாட்கட் கருங்கடற் கடைமடை திறந்தமுத மூற்றுகருணை, தெண்டிரை கொழித்தெறிய வெண்டிரை நெருப்பூட்டு தெய்வக் குழந்தையைச்செங்,—கோலாட்டு நின்சிறு கணைக்காற் கிடத்திக் குளிப்பாட்டி யுச்சிமுச்சிக், குஞ்சிக்கு நெய்போற்றி வெண்காப்பு மிட்டுவளர் கொங்கையிற் சங்குவாக்கும்,—பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற் பசுஞ்சுண்ணமூழ்ந்திமிர்ந்து, பைம்பொற் குறங்கினிற் கண்வளர்த் திச்சிறு பருஉமணித் தொட்டிலேற்றித்,—தாலாட்டி யாட்டுகைத் தாமரை முகிழ்த்தம்மை சப்பாணி கொட்டியருளே, தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே. (௫)

வேறு.

வானத் துருமொ டுடுத்திரள் சிந்த மலைந்த பறந்தலையின், மண்ணவர் பண்ணவர் வாளின் மறிந்தவர் மற்றவர் பொற்றொடியார்,—பானற் கணையு முலைக்குவ டும்பொரு படையிற் படவிமையோர், பைங்குடர் மூளையொ டும்புதி துண்டு பசுந்தடி சுவைகாணுச்,—சேனப் பந்தரி னலகைத் திரள்பல குரவை பிணைத்தாடத், திசையிற் றலைவர்கள் பெருநா ணெய்தச் சிறுநாணொலிசெய்யாக்,—கூனற் சிலையி னெடுங்கணை தொட்டவள் கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள் கொட்டுக சப்பாணி. (௬)

சமரிற் பிறகிடு முதியரு மபயரு மெதிரிட் டமராடத், தண்டதரன்செல் கரும்பக டிந்திரன் வெண்பக டோடுடையாத்,—

(௫) ஊற்றுகருணையமுதம் எனக்கூட்டுக. பாலாட்டி - பாலைக்குளுக்கி. தாலாட்டி - நாவையசைத்துக்கொண்டு.

திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற வருணன் விடுங்கடவுட், டேரி னுகண்டெழ வார்வில் வழங்கு கொடுங்கோல் செங்கோலா,—விமையத் தொடும்வளர் குலவெற் பெட்டையு மெல்லைக் கல்லினிறீஇ, யெண்டிசை யுந்தனி கொண்டு புரந்து வடாது கடற்றுறைதென்,—குமரித் துறையென வாடு மடப்பிடி கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளைவளர்த்தவள் கொட்டுக சப்பாணி. (எ)

சென்றிடு வாளிகள் கூளிகள் காளிகள் ஞாளியி லாளியெனச், செருமலை செம்மலை முதலியர் சிந்தச் சிந்திட நந்திபிரா, — னின்றில னேடலு முன்னமு கும்மவன் பின்னமு குங்காணு, நிலவுவி ரிந்திடு குறுநகை கொண்டு நெடுங்கயி லைக்கிரியின்,—முன்றிலி னுடன் மறந்தம ராடியொர் மூரிச்சிலைகுனியா, மூரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில முளரிக் கணைதொட்டுக்,—குன்றவி லாளியை வென்ற தடாதகை கொட்டுக சப்பாணி, குடைநிழ லிற்புவி மகளைவ ளர்த்தவள் கொட்டுக சப்பாணி.()

வேறு.

ஒழுகிய கருணையு வட்டெழ வைத்தவ ருட்பார்வைக், குளநெகி ழடியர்ப வக்கடல் வற்றவ லைத்தோடிக்,—குழையொடு பொருதுகொ லைக்கணை யைப்பிணை யைச்சீறிக், குமிழொடு பழகிம தர்த்தக யற்கண்ம டப்பாவாய்,—தழைகெழு பொழிலின்மு சுக்கலை மைப்புய லிற்பாயத், தவழிள மதிகலை நெக்குகுபுத்தமு தத்தோடே,—மழைபொழி யிமயம யிற்பெடை கொட்டுக சப்பாணி, மதுரையில்வளருமடப்பிடி கொட்டுக சப்பாணி.

செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே, திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்,—கழுமல மத

(எ) ஒன்றுரையொறுத்துச் செங்கோலைச்செலுத்துவித்தற்கேதுவாதல்பற்றிக் கொடுங்கோலையே செங்கோலாக உபசரித்தார். (கo) மறை - ஈண்டு மறைகளின் பொருள்கள்.

லைவ யிற்றைறி ரப்பிம யிற்சேயைக், களிறொடும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே,—குழலிசை பழகிமு ழுப்பிர சத்திர சத்தோடே, குதிகொளு மறியக னிச்சுவை நெக்கபெ ருக்கேபோன்,—மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி, மதுரையில் வளருமட டப்பிடிகொட்டுக சப்பாணி. (க0)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

காலத் தொடுகற் பனைகடந்த கருகூ லத்துப் பழம்பாடற், கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயிராலவா,—லத் துணர்வு நீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த, மலர்க்கற் பகமே யெழுதாச்சொன் மழலை ததும்பு பசுங்குதலைச்,—சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றாத் துணைக்கோர் துணையாகித், துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத,— மூலத் தலத்து முளைத்தெழுமு முதலே முத்தந் தருகவே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமு முலையாய் முத்தந் தருகவே. (க)

உருகி யுருகி நெக்குநெக்கு ளுடைந்து கசிந்திட் டசும்பூறு, முழுவ லன்பிற் பழவடியா ருள்ளத் தடத்தி லூற்றெடுத்துப்,—பெருகு பரமா னந்தவெள்ளப் பெருக்கே சிறியேம் பெற்றபெரும், பேறே யூறு நறைக்கூந்தற் பிடியே கொடிநுண் ணுசுப்பொசிய,—வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்ப்பூங் கொம்பே தீஞ்சுழலின், மதுரங் கனிந்த பசுங்குதலை மழலை யரும்பச்

(க0) குதிகொளல் - பெருகல். முத்தப்பருவம் - முத்தங் கொள்ளும்பருவம். (க) கருகூலம் - மூலபண்டாரம். ஆலவாலம் - பாத்தி. துரியம் - சிந்தனை. பரநாதமூலத்தலத்து முளைத்தெழுமுதல் - பரவிந்து. (உ) வருதல் - வளர்தல்.

சேதாம்பன், — முருகு விரியுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே. (௨)

கொழுதி மதர்வண் டுழக்குகுழற் கோதைக் குடைந்த கொண்டலுமின், குதலைக் கிளிமென் மொழிக்குடைந்த குறுங் கட் கரும்புங் கூன்பிறைக்கோ, — டுழுத பொலன்சீ றடிக்கு டைந்த செந்தா மரையும் பசுங்கழுத்துக், குடைந்த கமஞ்சூற் சங்குமொழு கொளிய கமுகு மழகுதொய்யி, — லெழுது தடந் தோட் குடைந்ததடம் பணையும் பணைமென் முலைக்குடைந்த விணையா மருப்புந் தருமுத்துன் றிருமுத் தொவ்வா விகபரங் கண், — முழுதுந் தருவாய் நின்கனிவாய் முத்தந் தருக முத்த மே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தரு கவே. (௩)

மத்த மதமாக் கவுட்டொருநான் மருப்புப் பொருப்பு மிசைப் பொலிந்த, வானத் தரசு கோயில்வளர் சிந்தா மணியும் வடபு லத்தார், — நத்தம் வளர வளகையர்கோ னகரில் வளரும் வான் மணியு, நளினப் பொகுட்டில் வீற்றிருக்கு நங்கை மனைக்கோர் விளக்கமெனப், — பைத்த சுடிகைப் படப்பாயற் பதும நாபன் மார்பில்வளர், பரிதி மணியு மெமக்கம்மை பணியல் வாழி வே யீன்ற, — முத்த முகந்த நின்கனிவாய் முத்தந் தருக முத்த மே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தரு கவே. (௪)

கோடுங் குவடும் பொருதரங்கக் குமரித் துறையிற் படு முத்துங், கொற்கைத் துறையிற் றுறைவாணர் குளிக்குஞ் சலா பக் குவான்முத்து, — மாடும் பெருந்தண் டுறைப்பொருநை

(௪) நத்தம் என்றது இயக்கர் நகரங்களை. வான்மணி - தே வமணி. வேயீன்றமுத்தம் - சிவபெருமான்.

(௫) கொற்கை - தாமிரபர்ணி நதிதீரத்திலுள்ள ஓர் நகரம்.

யாற்றிற் படுதெண் ணிலாமுத்து, மந்தண் பொதியத் தடஞ்சார லருவி சொரியுங் குளிர்முத்தும், — வாடுங் கொடிநுண்ணுசுப்பொசிய மடவ மகளி ருடனாடும், வண்டற் றுறைக்குவைத்துநெய்த்து மணந்தாழ் நறுமென் புகைப்படல, — மூடுங்குழலாய் நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே, முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய் முத்தந் தருகவே. (௫)

வே று.

பைவைத்த துத்திப் பருஉச்சுடிகை முன்றிற் பசுங்கொடியுடுக்கைகிழியப், பாயிருட் படலங் கிழித்தெழு சுடர்ப்பரிதி பரிதிக் கொடிஞ்சி மான்றேர்,—மொய்வைத்த கொய்யுளை வயப்புரவி வாய்ச்செல்ல முட்கோல் பிடித்துநெடுவான், முற்றத்தையிருள்பட விழுங்குந் துகிற்கொடி முனைக்கணை வடிம்புநக்கா,— மைவைத்த செஞ்சிலையு மம்புலியு மோடநெடு வான்மீன் மணந்துகந்த, வடவரை முகந்தநின் வயக்கொடி யெனப்பொலியுமஞ்சிவர் வளாக நொச்சித், — தெய்வத் தமிழ்க்கூட றழையத்தழைத்தவ டிருப்பவள முத்தமருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்தமருளே. (௬)

பின்னற் றிரைக்கடன் மதுக்குட மறத்தேக்கு பெய்முகிற்காருடலம்வெண், பிறைமதிக் கூன்குயக் கைக்கடைஞ ரொடுபுடை பெயர்ந்திடை நுடங்கவொல்கு, — மின்னற் றடித்துக்கரும்பொற் றொடிக்கடைசி மெல்லியர் வெரீஇப்பெயரவான், மீன்கணம் வெருக்கொள்ள வெடிவரால் குதிகொள்ளும் விட்புலம் விளைபுலமெனக், — கன்னற் பெருங்காடு கற்பகக் காட்டுவளர் கடவுண்மா கவளங்கொளக், காமதே னுவுநின்று கடைவாய் குதட்டக் கதிர்க்குலை முதிர்ந்துவிளையுஞ், — செந்நெற்படப்பைமது ரைப்பதி புரப்பவ டிருப்பவள முத்தமருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்தமருளே. (௭)

சங்கோ லிடுங்கடற் றானைக்கு வெங்கிடு தராபதிகண் முன்றி ழார்த்த, தபனியக் குப்பையுந் திசைமுதல்வர் தடமுடித் தாம முந் தலைமயங்கக், — கொங்கோ லிடுங்கைக் கொடுங்கோ லொடுந்திரி குறும்பன் கொடிச்சுறவுகின், கொற்றப் பதாகைக் குழாத் தினொடு மிரசதக் குன்றினுஞ் சென்றுலாவப், — பொங்கோல வேலைப் புறத்தினொ டகத்தினிமிர் போராழி பரிதியிரதப், பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி புலம்பப் புலம்புசெய்யச், — செங்கோ றிருத்திய முடிச்செழியர் கோமக டிருப்பவள முத்தமருளே, சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி திருப்பவள முத்தமருளே. (அ)

வேறு.

பருவரை முதுபல வடியினி னெடுகில நெக்கக டக்கனியிற் படுநறை படுநிறை கடமுடை படுவக டுப்பவு வட்டெழவும், — விரிதலை முதலொடு விளைபுல முலையவு ழக்கிய முட்சுறவின், விசையினின் வழிநறை மிடறொடி கமுகின்வி ழுக்குலை நெக்குகவுங், — கரையெறி புணரியி னிருமடி பெருகுத டத்தும டுத்தகடக், களிறொடு பிளிறிட விகலிய முகிலினி ரட்டியி ரட்டியமும், — முரசதிர் கடிநகர் மதுரையில் வளர்கிளி முத்தம ளித்தருளே, முழுதுல குடையதோர் கவுரியர் குலமணி முத்தமளித்தருளே. (௯)

புதையிருள் கிழிதர வெழுதரு பரிதிவ ளைத்தக டற்புவியிற், பொதுவற வடிமைசெய் திடுவழி யடியர்பொ ருட்டலர் வட்டணையிற், — றதைமலர் பொதுளிய களியளி குமிறுகு ழற்றிரு வைத்தவளச், சததள முளரியின் வனிதையை யுதவுமடைக்கண்ம டப்பிடியே, — பதுமமொ டொழுகொளி வளையுகி னளினமு கத்துமி டற்றுமுறப், பனிமதி யொடுசுவை யமுதமு

(௯) படுநிறைகடம் - கட்குடம். மும்முரசு - கொடைமுரசு மங்கலமுரசு வெற்றிமுரசு. (௧0) நளினம் - இதமொழி.

றுதலொடு சொற்குத லைக்கணிறீஇ, — முதுதமி ழுததியில் வருமொரு திருமகண் முத்தம ளித்தருளே, முழுதுல குடைய தொர் கவுரியர் குலமணி முத்தம ளித்தருளே. (௧௦)

முத்தப்பருவம் முற்றிற்று.

வருகைப்பருவம்.

அஞ்சிலம் போலிட வரிக்குரற் கிண்கிணி யரற்றுசெஞ் சீறடிபெயர்த், தடியிடுந் தொறுநின் னலத்தகச் சுவடுபட் டம்புவி யரம்பையர்கட, — மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறையு மெச் சைமுடி வளரிளம் பிறையு நாற,மணிநூ புரத்தவிழு மென்குரற் கோவசையு மடநடைக் கோதொடர்ந்துன், — செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு சிறையோதி மம்பின் செலச், சிற்றிடைக் கொல்கிமணி மேகலை யிரங்கத் திருக்கோயி லெனவெணெஞ்சக், — கஞ்சமுஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட காமர்பூங் கொடிவருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி கயற்கண யகிவருகவே. (௧)

சூண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங் கோதையும் மதுரமொழுகும், கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக் கூந்தலம் பிடியுமறுகால்,—வண்டுபடு முண்டக மனைக் குடி புகச்சிவ மணங்கமழ விண்டதொண்டர், மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்க வல்லிவில் வே,—டுண்டுபடு மதிநுதற் றேரைகையொடு மளவில்பல தொல்லுரு வெடுத்தமர்செயுந், தொடுசிலை யெனக்கன முகடுமுட் டிப்பூந் துணர்த்தலை வணங்கிநிற்கும், — கண்டுபடு கன்னல்

வருகைப்பருவம் - வருகையைவிரும்பியபருவம். (௧) நாறல்-தோன்றல். (௨) மாணிக்கவல்லி விளிப்பெயர்.

பைங் காடுபடு கூடம் கலாபமா மயில்வருகவே, கற்பகா டவி யிற் கடம்பா டவிப்பொலி கயற்கணா யகிவருகவே. (௨)

முயல்பாய் மதிக்குழவி தவழ்கு லடிப்பலவின் முட்பொதி குடக்கனியொடு, முடவுத் தடந்தாழை முப்புடைக் கனிசிந்த மோதிரீ ருண்டிருண்ட, — புயல்பாய் படப்பைத் தடம்பொ ழில்க ளன்றியேழ் பொழிலையு மொருங்கலைத்துப், புறமூடு மண்டச் சுவர்த்தல மிடித்தப் புறக்கடன் மடுத்துழக்கிச், — செயல்பாய் கடற்றானை செங்களங் கொளவம்மை திக்குவிசயங் கொண்டநா, — டெய்வக் கயற்கொடிக டிசைதிசை யெடுத்தெ ணத் திக்கெட்டு முட்டவெடிபோய்க், — கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை காவலன் மகள்வருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி கயற்கணா யகிவருகவே. (௩)

வடம்பட்ட மின்றுணைக் கொங்கைக் குடங்கொட்டு மதுர வமு துண்டுகடைவாய், வழியும்வெள் ளருவியென நிலவுபொழி கிம்புரி மருப்பிற் பொருப்பிடித்துத், — தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத் தலத்தணிவ தொப்பவப்பிச், சலராசி யேழுந் தடக்கையின் முகந்துபின் றானநீ ராணிரப்பி, — முடம்பட்ட மதியங் குசப்படை யெனக்ககன முகடுகை தடவியுமீன், முத் தம் பதித்திட்ட முகபடா மெனவெழு முகிற்படா நெற்றிசுற் றுங், — கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங் களி றீன்ற பிடிவருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி கயற்கணா யகிவருகவே. (௪)

தேனொழுகு கஞ்சப் பொலஞ்சி றடிக்கூட்டு செம்பஞ்சி யின்குழம்பாற், றெள்ளமு திறைக்கும் பசுங்குழவி வெண்டிங்

(௩) முயலென்பது முயல்போல்வதொருகளங்கம். இது மானையும் ஒப்பதுநோக்கி மானெனவும் வழங்குவர். பாய்தல் - பரவல் - ஏழ்பொழில் - மேலேழுலோகம்.

கள் செக்கர்மதி யாக்கரைபொரும், — வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை வாணிநதி யாச்சிவபிரான், மகுடகோ டீரத் தடிச்சுவ டழுத்தியிடு மரகதக் கொம்புகதிர்கான்,— மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள் வேழத்தின் மத்த கத்து, வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு வெண்கவரி வீசும்வாசக்,—கானொழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர் கவுரியன் மகள்வருகவே, கற்பகா டவியிற் கடம்பா டவிப் பொலி கயற்கண யகிவருகவே. (௫)

வே று.

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும் வண்டன் மகளிர் சிறு முற்றில், வாரிக் குவித்த மணிக்குப்பை வானு றடைப்ப வழி பிழைத்து, நடக்குங் கதிர்பொற் பரிசிலா நகுவெண் பிறைகைத் தோணியதா, நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்,—கடக்குஞ் சரத்தின் மதநதியுங் கங்கா நதியு மெதிர்கொள்ளக், ககன வெளியுங் கற்பகப்பூங் காடுங் கடந்து கடல்சுருங்க,—மடுக்குந் திரைத்தண் டுறைவைகை வளநாட் டரசே வருகவே, மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (௬)

சுண்ணந் திமிர்ந்து தேனருவி துளைந்தா டறுகாற் றும்பி பசுந், தோட்டுக் கதவந் திறப்பமலர்த் தோகை குடிபுக் கோகை செயுந்,—தண்ணங் கமலக் கோயில்பல சமைத்த மருதத் தச் சன்முழு, தாற்றுக் கமுகு நாற்றியிடுந் தடங்கா வணப்பந் தரில் வீக்கும்,—விண்ணம் பொதிந்த மேகபடா மிசைத்தூக் கியபன் மணிக்கொத்து, விரிந்தா லெனக்கா ணிமிர்ந்துதலை விரியுங் குலை நெற் கற்றைபல,—வண்ணம் பொலியும் பண்ணைவயன் மது ரைக் கரசே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே (எ)

(௫) வாணிநதி - ஈண்டுச் சோணநதி. மரகதக்கொம்பு விளிப்பெயர்.

திகரக் குழலி னறையுநறை தருதீம் புகையுந் திசைக்களிற்றின், றடக்கை நாசிப் புழைமடுப்பத் தளருஞ் சிறுநுண் மருங்குல்பெருஞ்,—சிகரக் களபப் பொம்மன்முலைத் தெய்வ மகளீர் புடையிரட்டுஞ், செங்கைக் கவரி முகந்தெறியுஞ் சிறுகாற் கொசிந்து குடிவாங்க,— முகரக் களிவண் டடைகிடக்கு முளரிக்கொடிக்குங் கலைக்கொடிக்கு, முருந்து முறுவல் விருந்திடுபுன்மூர னெடுவெண் ணிலவெறிப்ப,— மகரக் கருங்கட் செங்கனிவாய் மடமான் கன்று வருகவே, மலயத் துவசன் பெற்றபெருவாழ்வே வருக வருகவே, (அ)

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்,—தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமய, விமயப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்க,—முடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்,— மடுக்குங் குழற்காடேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (௯)

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியே வருக முழுஞானப், பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்,—விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி, விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே வருக பழமறையின்,—குருந்தே வருக வருள்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்கண், கொழித்த கருணைப் பெருவெள்ளங் குடைவார்

(அ) நறை - ஈண்டு இயற்கைமணம். அகிற்புகைநறை - செயற்கை மணம். மருங்குல்குடிவாங்கவென இயையும். முகரம் - ஒலி. (௧0) மறையின்குருந்து - வேதமுடிவு.

பிறவிப் பெரும்பிணிக்கோர்,—மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே. (௧0)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு கலாபேத மென்னநின்னைக், கலைமறைகண் முறையிடுவ கண்டோ வலாதொண் கலாநிதி யெனத்தெரிந்தோ,— வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின் வழிமுதலெனக்குறித்தோ, வளர்சடைமுடிக்கெந்தை தண்ணறுங் கண்ணியா வைத்தது கடைப்பிடித்தோ,—குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு கூடப்பிறந்ததோர்ந்தோ, கோமாட்டி யிவணின்னை வம்மெனக் கொம்மெனக் கூவிடப் பெற்றாயுனக்,— கண்டுபடு சீரிதன் றுதலாலிவளுட னம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (௧)

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக் குடித்துச் சுவைத்துமிழ்ந்த, கோதென்று மழல்விடங் கொப்பளிக் கின்றவிரு கோளினுச் சிட்டமென்றுங்,—கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட கயரோகி யென்றுமொருநாள், கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவுங் கடற்புவி யெடுத்திகழவிட்,— புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுநின் போல்வார்க்கு மாபாதகம், போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப் பொங்குபுனல் கற்பகக்கா,—டலைத்தோடு வைகைத் துறைப்

அம்புலிப்பருவம் - சந்திரனை விளையாட அழைக்கும்பருவம்.

(௧) கொம்மென வம்மெனவென மாற்றுக.

(௨) கலைத்தோடு - கலைகளாகிய போர்வை. பார்க்கவுங்கடவதன்றென்பதைக் கந்தபுராணம் சந்திரசாபப்படலத்துணர்க.

டிடி மடப்பிடியொ டம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லி புணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (௨)

கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி கிளர் நுதற் செவ்விவவ்விக், கெண்டைத் தடங்கணு ரெருவிட் டிறைஞ்சக் கிடந்தது முடைந்தமுதம்விண்,—டேற்றுபுது வெண் கலை யுடுத்துமுழு மதியென வுதித்தவமை யத்துமம்மை, யொண்முகத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்துகொண் டோடி னது நிற்கமற்றை,— மாற்றவ ளொடுங்கேள்வர் மௌலியி லுறைந்தது மறந்துனை யழைத்தபொழுதே, மற்றிவள் பெருங் கருணை சொற்றிடக் கடவதோ மண்முழுதும் விம்முபுயம் வைத்,— தாற்றுமுடி யரசுதவு மரசிளங் குமரியுட னம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (௩)

விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேனுனது வெம் டணிப் பகைவிழுங்கி, விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதி வெயில் விரியுஞ் சுடர்ப்பரிதியின்,—மண்டலம் புக்கனை யிருத்தி யெனி னுள்ளொளி மழுங்கிட வழுங்கிடுதிபொன், வளர் சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேன் மாசுணஞ் சுற்றவச்சம்,— கொண்டுகண் டுஞ்சாதிருப்பது மருப்பொங்கு கோதையிவள் சீறடிகணின், குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெங் கோமாட்டி பாலடைந்தா,—லண்டபகி ரண்டமு மகண்டமும் பெறுதியா லம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியிட னம்புலீ யாடவாவே. (௪)

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி யிவள்பெ ரும் புகழ்நெடுநிலா, வெங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மென்

(௩) எருவிட்டிறைஞ்சல் - தமக்கு விரைவில் மணமுடிப்பிக் குமாறு நிலாச்சோறு சமைத்துப் படைக்குங்காற் செய்வது. இதனை மதுரைக்கலம்பகம் (அ௫) வது செய்யுளினு முணர்க.

ளநீ யெள்ளளவு மொண்டுகொண்டு,—வெண்ணிலவு பொழி
வது கிடைத்தனை மடுத்திவள் விழிக்கடை கொழித்த கருணை,
வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி விளைப்பதும் பெற்
றனைகொலா,—மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்
தம்மை வைத்திடுஞ் சத்தியேகாண், மற்றொரு சுதந்தர னெனக்
கென விலக்கலை மதிக்கடவு ணீயுமுணர்வா,—யண்ணலங் களி
யானை யரசர்கோ மகளுட னம்புலீ யாடவாவே, யாணிப்பொன்
வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (ரு)

முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ முங்கோப மூரிமாத்
தொடர்சாபமு, மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு கொ
டுங்கூனு மோசித்த வித்தலத்தின்,— றன்பெருந் தன்மையை
யுணர்ந்திலைகொல் சிவராச தானியாய்ச் சீவன்முத்தித், தலமு
மாய்த் துவாதசாந் தத்தலமு மானதித் தலமித்த லத்தடைதி
யேன்,—மன்பெருங் குரவற்பிழைத்தபா வமுமற்றை மாமடிக
ளிடுசாபமும், வளரிளம் பருவத்து நரைதிரையு முதிர்கூனு
மாற்றிடப் பெறுதிகண்டா,— யன்பரென் புருகக் கசிந்திடு
பசுந்தேனொ டம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர்
மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (சு)

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங் கொடுங்களிறிடும்
போர்வையான், குடிலகோ டீரத் திருந்துகொண் டங்கலார்
கொய்தளிர்க் கைவருடவுஞ்,—செம்பஞ் சுறுத்தவும் பதைப
தைத் தாரழற் சிகையெனக் கொப்பளிக்குஞ், சீறடிகள் கன்
றிச் சிவந்திடச் செய்வதுந் திருவுளத் தடையாதுபொற்,—றம்
பஞ் சுமந்தீன்ற மானுட விலங்கின் றனிப்புதல்வ னுக்குவட்டத்,
தண்குடை நிழற்றுநினை வம்மென வழைத்தன டழைத்திடு

(சு) மாமடிகள் - மாமனாராகிய அடிகள் (தக்கன்.)

(எ) குடிலகோடீரம் - வட்டமாக வளைத்துக்கட்டப்பட்ட சடாமகுடம்.

கழைக்கரும்பொன்,—றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக் கொடியொ டம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (எ)

துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின் றொன் மரபு தழையவந்து, தோன்றிடுங் கௌரியர் குலக்கொழுந் தைக் கண்டு துணைவிழியு மனமுநின்று,—களிதூங்க வளவளாய் வாழாம லுண்ணமுது கலையொடு மிழந்து வெறுமட், கலத் திடு புதுக்கூ ழினுக்கிரவு பூண்டொரு களங்கம்வைத் தாயிது வலா,—லொளிதூங்கு தெளிவிசும் பினினின்னொ டொத்தவ னொருத்தன் கரத்தின்வாரி, யுண்டொதுக் கியமிச்சி னள் ளிருளி லள்ளியுண் டோடுகின் றுயென்செய்தா,— யளிதூங்கு குமிறெழூந் தார்க்குங் குழற்றிருவொ டம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாட வாவே. (அ)

மழைக்கொந் தளக்கோதை வம்மினென் றளவினீ வந்திலை யெனக்கடுகலும், வாண்முகச் செவ்விக் குடைந்தொதுங் கினவ னெதிர் வரவொல்கி யோபணிகள்கோ,— விழைக்குங்கொல் பின்றொடர்ந் தெனவஞ்சி யோதாழ்த் திருந்தனன் போலுமெ னயா, மித்துணையு மொருவாறு தப்புவித் தோம்வெகுளி லினி யொரு பிழைப்பில்லைகாண்,—டழைக்குந் துகிற்கொடி முகிற் கொடி திரைத்துமேற் றலம்வளர் நகிற்கொடிகளைத், தாழ்குழலு நீவிநுதல் வெயர்வுந் துடைத்தம்மை சமயமிது வென்றலுவ லிட்,— டழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுட னம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல் லியுட னம்புலீ யாடவாவே. (கூ)

(கூ) ஒருபிழைப்பில்லையென்பது தப்புவித்தற்கேதுவாகிய வகையொன்றுமில்லையென அப்பொருண்மேனின்றது. திரைத்தல் - ஈண்டு ஒதுக்கலென்னும் பொருட்டு.

ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர சிருக்குமிவள் சீறடிக ணின், னிதயத் தடத்தும் பொலிந்தவா திருவுளத் தெண்ணி யன் றேகபடமா,— நாடகத் தைந்தொழி னடிக்கும் பிரான் றெய்வ நதியொடு முடித்தல்பெற்றாய், நங்கையிவ டிருவுள மகிழ்ச்சிபெறி லிதுபோலொர் நற்றவப் பேறில்லைகாண்,— மாடகக் கடைதிரித் தின்னரம் பார்த்துகிர் வடிம்புதை வருமங் கலார், மகரயாழ் மழலைக்கு மரவங்க ணுண்டுகில் வழங்கக் கொழுங்கோங்குதூங்,—காடகப் பொற்கிழி யவிழ்க்குமது ரைத் திருவொ டம்புலீ யாடவாவே, யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட னம்புலீ யாடவாவே. (௭0)

அம்புலிப்பருவ முற்றிற்று.

அம்மானைப் பருவம்.

கரைக்குங் கடாமிரு கவுட்குட முடைந்தூற்று களிறுபெரு வயிறுதூர்ப்பக், கவளந் திரட்டிக் கொடுப்பதென வுஞ்சூழ்ந் தொர் கலைமதிக் கலசவமுதுக்,—கிரைக்கும் பெருந்தேவர் புன் கண் டுடைத்திட வெடுத்தமுத கலசம் வெவ்வே, றீந்திடுவ தெனவுமுழு முத்திட் டிழைத்திட்ட வெறிபந்தி னிரையென்ன வும்,—விரைக்குந் தளிர்க்கைக் கொழுந்தா மரைத்துஞ்சி மீதெ ழூந் தார்த்தபிள்ளை, வெள்ளோ திமத்திரளி தெனவுங் கரும்

அம்மானைப்பருவம் - அம்மானையாடும்பருவம். இது பெண் பாற் பிள்ளைத்தமிழாதலின் அம்மானை நீராடல் ஊசலென்னும் பருவங்கள் கூறப்பட்டன. ஆண்பாற்பிள்ளைத்தமிழேல் சிற்றி லழித்தல் சிறுபறைகொட்டல் சிறுதேருருட்டலென்னும் பருவ ங்கள் முறையே கூறப்படும். (க) களிறு - ஈண்டு ஐராவதம். முழுமுத்து - துளைக்கப்படாத முத்து. பந்தரென்னும் பாடங் கொள்ளின் பந்தர் இறுதிப்போலியென்க.

பாறை மீமிசைச் செஞ்சாந்துவைத், — தரைக்கும் திரைக்கை வெள் ளருவிவை கைத்துறைவி யம்மானை யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே.

திங்கட் கொழுந்தைக் கொழுந்துபடு படர்சடைச் செருகு திரு மணவாளன்மேற், செழுமணப் பந்தரி லெடுத்தெறியு மமுதவெண் டிரளையிற் புரளுமறுகாற், — பைங்கட் சுரும்பெண விசும்பிற் படர்ந்தெழும் பனிமதி மிசைத்தாவிடும், பருவமட மானெனவெ னம்மனைநி னம்மனை படைவிழிக் கயல்பாய்ந் தெழ,—வெங்கட் கடுங்கொலைய வேழக்கு ழாமிதென மேகக் குழாத்தைமுட்டி, விளையாடு மழகளிறு கடைவாய் குதட்ட முகை விண்டவம் பைந்துகோத்த,—வங்கட் கரும்பேந்து மபிடேக வல்லிதிரு வம்மானை யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே. (உ)

கள்ளூறு கஞ்சக் கரத்தூறு சேயொளி கலப்பச் சிவப்பூறியுங், கருணைப் பெருக்கூற வமுதூறு பார்வைக் கடைக்கட் கறுப்பூறியு, — நள்ளூறு மறுவூ றகற்றுமுக மதியில்வெண் ணகையூறு நிலவூறியு, நற்றரள வம்மனையொர் சிற்குணத் தினை மூன்று நற்குணங் கதுவல்காட்ட, — வுள்ளூறு களிதுளும் பக் குரவ ரிருவீரு முற்றிடு துவாதசாந்தத், தொருபெரு வெளிக் கே விழித்துறங் குந்தொண்ட ருழுவலன் பென்புருகநெக்,— கள்ளூற வுள்ளே கசிந்தூறு பைந்தேற லம்மானை யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே. (௩)

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி குயின்றவம் மனைநித்திலங், கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்

(உ) மழகளிறு - விநாயகக்கடவுள். (௩) விழித்துறங்கல் - நனவிற்சுழுத்தி. (ச) காந்தட்டளிர்க்கை - காந்தண்மலரினுரு வமைந்த தளிரொத்தகை.

மை கோகனக மனையாட்டிபாற், — கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது கண்டுகொண் டேபுழுங்கும், காய் கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக் கறங்கருவி தூங்க வோங்கு,—மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா மாமணித் திரளைவாரி, மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு மதகளிறு பிளிறியோடு,—மலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை யம்மானை யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே. (ச)

தமரான நின்றுணைச் சேடியரி லொருசிலர் தடக்கையி னெடுத்தாடுநின், றரளவம் மனைபிடித் தெதிர்வீசி வீசியிட சாரிவல சாரிதிரியா, — நிமிராமு னம்மனையொ ராயிர மெடுத் தெறிய நிரைநிரைய தாய்க்ககனமேல், நிற்கின்ற தம்மைநீ பெற்றவகி லாண்டமு நிரைத்துவைத் ததுகடுப்ப, — விமிரா வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ டெழுந்தபைந் தாதலகெலா, மிருள்செயச் செய்துநின் சேனா பராகமெனு மேக்கமள காபு ரிக்கு,—மமரா வதிக்குஞ்செய் மதுரா புரித்தலைவி யம்மானை யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே. (ரு)

உயிரா யிருக்கின்ற சேடியரின் மலர்மீ துதித்தவ ளெதிர்த் துநின்றே, டொட்டியெட் டிப்பிடித் திட்டவம் மனைதேடி யோடியா டித்திரியநீ,—பெயரா திருந்துவிளை யாடுவது கண் டெர்ழுந்தை பிறைமுடி துளக்கமுடிமேற், பெருகுசுர கங்கைநுரை பொங்கலம் மானையப் பெண்கொடியு மாடன்மான,—வெயரா மகம்புழுங் கிடுமமரர் தச்சனும் வியப்பச் செயுந்தவளமா, மேடையுந் தண்டரள மாடமுந் தெண்ணிலா வீசத் திசைக்களி றெலா,—மயிரா வதத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி யம்மானை

(ரு) இமிர்தல் - மொய்த்தல். (சூ) ஒட்டல் - சபதஞ்செய் தல். இட்டவம்மனை - கைதவறவிட்டவம்மனை. ஆடல்-சுழலல்.

யாடியருளே, யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண் ணம்மானை யாடியருளே. (கூ)

வேறு.

மூத்தம ழூத்திய வம்மனை கைம்மலர் முளரிம ணங்கமழ, மொய்குழல் வண்டினின் மைவிழி வண்டின் முயங்கி மயங்கியி டக்,—கொத்து மணித்திர ளிற்செயு மம்மனை குயிலின்மி ழற்றி யநின், குழலினி சைக்குரு கிப்பனி தூங்கு குறுந்துளி சிந்தி யிட,—வித்துரு மத்திலி ழைத்தவு நின்கை விரற்பவ ளத்தளி ரின், விளைதரு மொள்ளொளி திருடப் போவது மீள்வது மாய்த் திரிய,—வத்தன் மனத்தெழு தியவுயி ரோவிய மாடுக வம்மனை யே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரியாடுக வம்மனையே. (எ)

விளரிமி ழற்றளி குமிறுகு ழற்கொடி வீசிய வம்மனை போய், விண்ணி னிரைத்தெழு வதுகக னந்திரு மேனிய தானவருக்,— கிளநில வுமிழ்பரு முத்தின் கோவை யெடுத்தவர் திருமார்புக், கிடுவ கடுப்பவு மப்பரி சேபல மணியி னியற்றியிடும்,—வள ரொளி விம்மிய வம்மனை செல்வது வானவி லொத்திடவு, மன னெக் குருகப் பரமா னந்த மடுத்த திருத்தொண்டர்க்,—கனி கனி யத்திரு வருள்கனி யுங்கனி யாடுக வம்மனையே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. (அ)

கைம்மல ரிற்பொலி கதிர்முத் தம்மனை நகைமுத் தொளி தோயக், கண்டவர் நிற்கப் பிறர்சிலர் செங்கைக் கமலச் சுடர் கதுவச்,—செம்மணி யிற்செய் திழைத்தன வெனவுஞ் சிற்சிலர் கட்கடையின், செவ்வியை வவ்விய பின்கரு மணியிற் செய்தன கொல்லெனவுந்,— தம்மன மொப்ப வுரைப்பன மற்றைச் சம யத் தலைவபெறுர், தத்தமி னின்று பிதற்றுவ பொருவத் தனி முதல் யாமென்பார்க்,— கம்மனை யாயவர் தம்மனை யானவ ளாடுக வம்மனையே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. (கூ)

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமு மொண்டர ளத்திரளு, மொழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை யொருமூன் றடைவி லெடாச்,— கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ கண்ணுதல் பாற்செலவின், கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர் காமர் கருங்குயிலும்,— பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற் பெருகிய காதலைமேற், பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு பெடையோ டரசவன,— மள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமக ளாடுக வம்மனையே, யழகு தழைந்தகல் யாண சவுந்தரி யாடுக வம்மனையே. (கo)

அம்மானைப்பருவம் முற்றிற்று.

நீராட்டற்பருவம்.

வளையாடு வண்கைப் பொலன்சங் கொடும்பொங்கு மறிதிரைச் சங்கோலிட, மதராரிக் கட்கயல் வரிக்கய லொடும்புரள மகரந்த முண்டுவண் டின்,—கிளையாடு நின்றிருக் கேசபா சத்தினொடு கிளர்சைவ லக்கொத்தெழக், கிடையாத புதுவிருந் தெதிர்கொண்டு தத்தமிற் கேளிர்க டழீஇக்கொண்டெனத்,— தளையாடு கறையடிச் சிறுகட் பெருங்கைத் தடக்களி றெடுத்தூ மற்றத், தவளக் களிற்றினொடு முட்டவிட் டெட்டுமத தந்தியும் பந்தடித்து,—விளையாடும் வைகைத் தடந்துறை குடைந்துபுது வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடியருளே. (க)

நிரைபொங் கிடுஞ்செங்கை வெள்வளை கலிப்பநகை நிலவுவிரி பவளம்வெளிற, நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவற னெறிகுழற் கற்றைசரியத்,—திரைபொங்கு தண்ணந் துறைக்

நீராடற்பருவம் - நீர்விளையாடற்பருவம். (க) தளையாடல் - தளைசெய்தல்.

குடைந் தாடவெ செழுந்தரங் கக்கங்கைநுண், சிறுதிவலை யாட்பொங்கு மானந்த மாக்கட றிளைத்தாடு கின்றதேய்ப்பக், கரைபொங்கு மறிதிரைக் கையாற் றடம்பணைக் கழனியிற் கன்னியர்முலைக், களபக் குழம்பைக் கரைத்துவிட் டள்ளற் கருஞ்சேறு செஞ்சேறதாய்,—விரைபொங் கிடத்துங்க வேகவதி பொங்குபுது வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடியருளே. (உ)

பண்ணூறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி பாசொளி விரிப்பவந்தண், பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப் பருமுத்த மரகதமதாய்த்,—தண்ணூறு மல்லற் றுறைச்சிறை யனங்களி தழைக்குங் கலாமஞ்ஞையாய்ச், சகலமுந் நின்றிருச் சொருபமென் றேலிடுஞ் சதுர்மறைப் பொருள்வெளியிடக்,—கண்ணூறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங் களபமுங் கத்தூரியுங், கர்ப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியுங் காளிந்தி யுங்கங்கையாம்,—விண்ணூறு மளவலாய் விளையாடு வைகைபுது வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடியருளே. (௩)

தூங்குசிறை யறுகா லுறங்குகுழ னின்றுணைத் தோழியர் கண் மேற்குங்குமந், தோயும் பனித்துறைச் சிவிறிவீ சக்குறுந் துளியெம் மருங்குமோடி,—வாங்குமலை வில்லியார் விண்ணுருநனைத்தவர் வனைந்திடு திகம்பரஞ்செவ், வண்ணமாச் செய்வதச் செவ்வான வண்ணரொடு மஞ்சள்விளை யாடலேய்ப்பத், தேங்குமலை யருவிநெடு நீத்தத்து மாசுணத் திரள்புறஞ் சுற்றி

---

(௩) அளவலாய் என்பதில் ஆய் உவமவுருபுப் பொருள்பட நின்றது. "ஆள்வாரிலிமாடாவேனோ" என்னுந் திருவாசகத்திற் போல. (௪) பனித்து உறை - குளிர்ச்சியை யுடைத்தாகிய திவலை. பெயரொச்சத்தகரம் தொக்கதெனக்கொண்டு பனித்த திவலையெனலும் ஒன்று.

யீர்ப்பச், சினவேழ மொன்றொரு சுழிச்சுழல்வு மந்தரந் திரை கடன் மதித்தன்மானும்,—வீங்குபுனல் வைகைத் தடந்துறை குடைந்துபுது வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி யவர்க் கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள்ளநீ ராடியருளே. ()

துளிக்கும் பனித்திவலை சிதறக் குடைந்தாடு துறையிற் றுறைத்தமிழொடுந், தொன்மறை தெளிக்குங் கலைக்கொடி யெ னுந்துணைத் தோழிமூழ் கிப்புனன்மடுத்,—தொளிக்கும் பதத் துமற் றவளென வனப்பேடை யோடிப் பிடிப்பதம்மை, யொண்பரி புரத்தொனியு மடநடையும் வெளவின துணர்ந்து பின் றொடர்வதேய்ப்ப,—நெளிக்குந் தரங்கத் தடங்கங்கை யுடனெட்டி நித்திலப் பந்தாடவு, நிரைமணித் திரளின் கழங் காட வுந்தன் னெடுந்திரைக் கையெடுத்து,—விளிக்கும் பெருந் தண் டுறைக்கடவுள் வைகைநெடு வெள்ளநீ ராடியருளே, விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி வெள் ளநீ ராடியருளே. (ரு)

வே று.

துங்க முலைப்பொற் குடங்கொண்டு தூநீர் நீந்தி விளை யாடுந், துணைச்சே டியர்கண் மேற்பசும்பொற் சுண்ணம் மெறிய வறச்சேந்த,— வங்கண் விசும்பி னின்குழற்காட் டறுகாற் சுரும்ப ரெழுந்தார்ப்ப, தையன் றிருமே னியிலம்மை யருட் கட் சுரும்பார்த் தெழன்மானச்,— செங்க ணிளைஞர் களிக் காமத் தீமூண் டிடக்கண் டிளமகளிர், செழுமென் குழற்கூட் டகிற்புகையாற் றிரள்காய்க் கதலி பழுத்துகுறை,— பொங்கு மதுரைப் பெருமாட்டி புதுநீ ராடி யருளுகவே, பொருநைத் துறைவன் பொற்பாவாய் புதுநீ ராடி யருளுகவே. (சு)

(ரு) அம்மை ஒடி அனப்பெடைபிடிப்பது தொடர்வதேய் ப்ப நீராடியருளென்க.

இழியும் புனற்றண் டுறைமுன்றி லிறைவெம் பெருமான் மண்சுமந்த, விடமென் றலர்வெண் கமலப்பெண் ணிசைப்பக் கசிந்துள் ளுருகியிரு,—விழியுஞ் சிவப்ப வானந்த வெள்ளம் பொழிந்து நின்றனையான், மீண்டும் பெருக விடுத்தவர்க்கோர் வேலை யிடுதன் மிகையன்றே, — பிழியு நறைக்கற் பகமலர்ந்த பிரச மலர்ப்பூந் துகண்மூழ்கும், பிறைக்கோட் டயிரா வதங் கூந்தற் பிடியோ டாடத் தேனருவி,—பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய் புதுநீ ராடி யருளுகவே, பொருநைத் துறை வன் பொற்பாவாய் புதுநீ ராடி யருளுகவே. (எ)

மறிக்குந் திரைத்தண் புனல்வைகை வண்ட லிடுமண் கூடை கட்டி, வாரிச் சுமந்தோர்க் கம்மைதுணை மணிப்பொற் குடத் திற் கரைத்தூற்றும்,—வெறிக்குங் குமச்சே றெக்கரிடும் விரைப் பூந் துறைமண் போலொருத்தி, வெண்பிட் டடவு மடித்தொரு வன் வேலை கொளவும் வேண்டுமெனக்,—குறிக்கு மிடத்திற் றடந்தூநீர் குடையப் பெறினக் கங்கைதிருக், கோடீ ரத்துக் குடியிருப்புங் கூடா போலும் பொலன்குவட்டுப்,—பொறிக் குஞ் சுறவக் கொடியுயர்த்தாய் புதுநீ ராடி யருளுகவே, பொரு நைத்துறைவன் பொற்பாவாய் புதுநீ ராடி யருளுகவே. (அ)

வே று.

சொற்கொடி யோடு மலர்க்கொடி கொய்து தொடுத்த விரைத்தொடையுஞ், சுந்தரி தீட்டிய சிந்தூர மும்மிரு துங்கக் கொங்கைகளின், — விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை வெள்ளங் கொள்ளைகொள, வெளியே கண்டுமின் வடிவழகை

(எ) ஆனந்தவெள்ளம் பெருக்கி அப்பெருக்கை யடைத்தற் பொருட்டு மண்சுமக்கும்வேலையை இறைவர்க்கு நீயுமிடுதல் மி கையாகலின் அத்தொழிலகன்று புதுநீராடியருளுக என்றவாறு.

(கூ) சுந்தரி - இந்திராணி. கண்டு - காணப்பட்டு. இதில் படுவிகுதி தொக்குநின்றது.

யன் விழிக்கு விருந்துசெய,—விற்கொடி யோடு கயற்கொடி வீர னெடுத்த கருப்புவிலு, மிந்திர தனுவும் வணங்க வணங்கு மிணைப்புரு வக்கொடிசேர்,—பொற்கொடி யிமைய மடக்கொடி வைகைப் புதுநீ ராடுகவே, பொருநைத் துறையொடு குமரித் துறையவள் புதுநீ ராடுகவே. (கூ)

கொள்ளைவெ ளருவி படிந்திடு மிமையக் கூந்தன் மடப்பிடிபோற், கொற்கைத் துறையிற் சிறைவிரி யப்புனல் குடையு மனப்பெடைபோ,—றெள்ளமு தக்கட னடுவிற் றோன்று செழுங்கம லக்குயில்போற், றெய்வக் கங்கைத் திரையூ டெழுமொரு செம்பவ ளக்கொடிபோற்,— கள்ளவிழ் கோதையர் குழலிற் குழலிசை கற்றுப் பொற்றருவிற், களிநற வுண்ட மடப்பெடை யோடு கலந்து முயங்கிவரிப்,—புள்ளுறை பூம்பொழின் மதுரைத் துரைமகள் புதுநீ ராடுகவே, பொருநைத் துறையொடு குமரித் துறையவள் புதுநீ ராடுகவே. (க०)

நீராடற்பருவம் முற்றிற்று.

ஊசற்பருவம்.

ஒள்ளொளிய பவளக் கொழுங்கான் மிசைப்பொங்கு மொழுகொளிய வயிரவிட்டத், தூற்றுஞ் செழுந்தண் ணிலாக்கால் விழுந்தனைய வொண்டரள வடம்வீக்கியே,— யள்ளிட வழிந்து செற் றொளிதுளும் புங்கிரண வருணரத் நப்பலகையுக், காடு நின் றோற்றமப் பரிதிமண் டலம்வள ரரும்பெருஞ் சுடரையேய்ப்பத்,—தெள்ளுசுவை யமுதங் கனிந்தவா னந்தத் திரைக்கடன் மடுத்துழக்குஞ், செல்வச் செருக்கர்கண் மனக்கமல நெக்கபூஞ் சேக்கையிற் பழையபாடற், — புள்ளொலி யெழக்

ஊசற்பருவம் - ஊசலாடும்பருவம். (க) செற்றல் - செறிதல். மடுத்துழக்கல் - படிந்து திளைத்தல். பழையபாடல் - வேதம்.

குடி புகுந்தசுந் தரவல்லி பொன்னூச லாடியருளே, புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (க)

விற்பொலிய நிலவுபொழி வெண்ணித் திலம்பூண்டு விழுது பட மழகதிர்விடும், வெண்டரள வூசலின் மிசைப்பொலிவ புண்டரிக வீட்டிற் பொலிந்துமதுரச், — சொற்பொலி பழம் பாடல் சொல்லுகின் றவளுநின் சொருபமென் பதுமிளநிலாத்; தூற்றுமதி மண்டலத் தமுதமா யம்மைநீ தோன்றுகின் றதும் விரிப்ப,—வெற்பொலிய வொழுகுபுழு மாணிக்க மணிமுகப் பேறிமழை முகிறவழ்வதவ், வெறிசுடர்க் கடவுடிரு மடியி லவன் மடமக ளிருந்துவிளை யாடலேய்க்கும், — பொற்புரிசை மதுரா புரிப்பொலி திருப்பாவை பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (உ)

உருகிய பசும்பொன் னசும்பவெயில் வீசுபொன் னூசலை யுதைந்தாடலு, மொண்டளி ரடிச்சுவ டுறப்பெறு மசோகுநற வொழுகுமலர் பூத்துதிர்வதன், — திருமுனூரு வங்கரந் தெந் தையார் நிற்பது தெரிந்திட நமக்கிதுவெனச், செஞ்சிலைக் கள் வனொரு வன்றொடை மடக்காது தெரிகணைகள் சொரிவதே ய்ப்ப,—வெரிமணி குயின்றபொற் செய்குன்று மழகதி ரெறிப் பவெழு செஞ்சோதியூ, டிளமதி யிமைப்பதுன் திருமுகச் செவ்விவேட் டெழுநாத் தலைத்தவமவன்,— புரிவது கடுக்கு மது ராபுரி மடக்கிள்ளை பொன்னூச லாடியருளே, புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (ங)

(உ) புண்டரீகம்-வெண்டாமரை. சுடர்க்கடவுள்மகள் - காளிந்தி. (ங) எழுநா-ஏழுநாக்களையுடைய அக்கினி; ஏழு நாக்களாவன:— இரணியை கனகை இரத்தை கிருஷ்ணை சுப்பிரபை அதிரத்தை வெகுரூபை என்பனவாம். தலை - ஏழனுருபு.

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக் கலந்தாடு பொன்னூசலக், கடவுளுரு நோக்கத்து நெக்குருகி யிடநின் கடைக்கணோக் கத்துமற்றச், — செங்கண்விடை யவர்மனமு மொக்கக் கரைந்துருகு செய்கையவர் சித்தமேபொற், றிருவூச லாவிருந் தாடுகின் றுயெனுஞ் செய்தியை யெடுத்துரைப்ப,— வங்கநெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவே ரடியிற் பழுத்த பலவின், னளிபொற் சுளைக்குடக் கனியுடைந் தூற்றுதே னருவி பில மேழுமுட்டிப், — பொங்கிவழி பொழின்மதுர மதுரைநா யகிதிருப் பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (ச)

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகுபொற் றிரு வூசல் பாடி யாடச், சிவபிரான் றிருமுடி யசைப்பமுடி மேற் பொங்கு செங்கணா வரசகிலம்வைத், — தார்க்கும் பணாடவி யசைப்பச் சராசரமு மசைகின்ற தம்மனையசைந், தாடலா லண்டமு மகண்டபகி ரண்டமு மசைந்தாடு கின்றதேய்ப்பக், — கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு கமழ்நறும் புகைவிண்மிசைக், கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலங் கைக்கொள விருட்படலம்வான், — போர்க்கின்ற தொக்குமது ரா புரி மடக்கிள்ளை பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக் கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (ரு)

தேர்க்கோல மொடுநின் றிருக்கோல முங்கண்டு சிந்தனை புழுங்குகோபத், தீயவிய மூண்டெழுங் காமா னலங்கான்ற சிகையென வெழுந்துபொங்குந், — தார்க்கோல வேணியர்த முள் ளமென வேபொற் றடஞ்சிலையு முருகியோடத், தண்மதி முடித்

(ரு) இனிதொழுகும் திருப்பொன்னூசற்பாடல்களைச் சுவை யமுதொழுகப் பாடிக்கொண்டு விளையாடக்கண்டு சிவபிரான் றிருமுடியசைத்தலும் என்க. ரவிமண்டலமென்பதுமுதற்கண் இகரம்பெறுது நின்றது.

ததும் வெள்விடைக் கொண்மணி தரித்ததும் விருத்தமாகக்,— கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர் செங்களத் தேற்றலமரக், கட்கணை தூக்குங் கரும்புருவ வில்லொடொரு கைவிற் குனித்துநின்ற,— போர்க்கோல மேதிரு மணக்கோல மான பெண் பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (சு)

சூழியும் பசுங்கண் முசுக்கலை வெரீஇச்சிறு குறும்பலவி னெடியபாரக், கொம்பொடி படத்தூங்கு முட்புறக் கனியின் குடங்கொண்டு நீந்தமடைவாய்,—வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்காவின் வள்ளுகிர்க் கருவிரற்கூன், மந்திக ளிருந்தேகும் விசையினில்விசைந்தெழு மரக்கோடு பாயவயிறு,—கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ கிளைத்துவண் டுழுபைந்துழாய்க், கேசவன் கால்வீச வண்டகோ ளகைமுகடு கீண்டு வெள் ளருவிபொங்கிப்,—பொழியுந் திறத்தினை நிகர்க்குமதுரைத்தலைவி பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர் திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (எ)

ஒல்குங் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல் லோதிவண் டார்த்தெழப்பொன், னூசலை யுதைந்தாடு மளவின்மலர் மகளம்மை யுள்ளடிக் கூன்பிறைதழீஇ,—மல்குஞ் சுவட்டினை வலம்புரிக் கிற்றிதுகொல் வாணியென் றசதியாடி, மணிமுறுவல் கோட்டநின் வணங்கா முடிக்கொரு வணக்கநெடு நாண்வழங்கப்,—பில்குங் குறும்பனிக் கூதிர்க் குடைந்தெனப் பிரசநாறைம்பாற்கிளம், பேதையர்க ளூட்டுங் கொழும்புகை மடுத்து மென் பெடையொடு வரிச்சுரும்பர்,—புல்குந் தடம்பணை யுடுத்

(எ) இரிந்தேகும் என்பதும்பாடம், விசைந்து - விசைகொண்டு. (அ) கூதிர்க்குடைந்தெனப் புகைமடுத்துப்புல்கும் என வினையும். ஐம்பால்-ஐந்துபகுப்பாகிய மயிர்முடி; அவ்வைந்துள், மயிரை உச்சியின்முடிப்பது முடி; பக்கலில் முடிப்பது கொண்டை; பின்னேசெருகுவது சுருள்; சுருட்டிமுடிப்பது குழல்; பின்னிவிடுவது பனிச்சையாம்.

தமது ரைத்தலைவி பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே.

கொன்செய்த செழுமணித் திருவூச லரமகளிர் கொண்டாட வாடுந்தொறுங், குறுமுறுவ னெடுநில வருந்துஞ் சகோரமாய்க் கூந்தலங் கற்றைசுற்றுந்,—தென்செய்த மழலைச் சுரும்பராய் மங்கைநின் செங்கைப் பசுங்கிள்ளையாய்த், தேவதேவன் பொலிவ தெவ்வுருவு மாமவன் றிருவுருவின் முறைதெரிப்ப,—மின்செய்த சாயலவர் மேற்றலத் தாடிய விரைப்புனலி னருவிகுடையும், வெள்ளானை குங்குமச் செஞ்சேறு நாறமட மென்பிடியை யஞ்சிசிற்கும்,—பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல்வி பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (௯)

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட் டிரைத்திடுமரிச்சிலம்பு, மிறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொனெழுதுசெம் பட்டுவீக்குந்,—திருவிடையு முடைதார மும்மொட் டியாணமுஞ் செங்கைப் பசுங்கிள்ளையுந், திருமுலைத் தாளவுத் தரியமும் மங்கலத் திருநாணு மழகொழுகநின்,—றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில வரும்புகுறு நகையுஞான, வானந்த மாக்கடல் குடைந்துகுழை மகரத்தொ டமராடுமோடரிக்கட்,—பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி பொன்னூச லாடியருளே, புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே. (௧௦)

ஊசற்பருவம் முற்றிற்று.

மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

---

(௧௦) பொன்னெழுதுபட்டு - பொன்னாற் சித்திரித்தபட்டு. உடைதாரம் - ஓர்வகை உடைவிசேடம். ஞானனந்தக்கடல் - ஈண்டு சிவம். இருபதமுதலியன வடிவில் அழகாகமலரப்பெற்ற சுந்தரவல்லி என்றபடி.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மதுரை

மீனாக்ஷியம்மைகுறம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கார்கொண்ட பொழின்மதுரைக் கர்ப்பூர வல்லிமணங் கமழுந் தெய்வத், தார்கொண்ட கருங்குழலங் கயற்கணா யகிகுறஞ் செந் தமிழாற் பாட, வார்கொண்ட புகர்முகத்தைங் கரத்தொரு கோட் டிருசெவிமும் மதத்து நால்வாய்ப், போர்கொண்ட கவுட் சிறுகட் சித்திவிநா யகன்றுணைத்தாள் போற்று வாமே.

சிந்து.

பூமருவிய பொழிறிகழ்மதுரா
புரிமருவிய வங்கயற்கணம்மை
தேமருவிய மதிதவழ்குடுமித்
தென்பொதியக் குறத்திநானம்மே. (க)

செந்நென்முத்துங் கன்னன்முத்துமொளி
திகழ்மதுரை யங்கயற்கணம்மை
பொன்னுமுத்துஞ் சொரியும்வெள்ளருவிப்
பொதியமலைக் குறத்திநானம்மே. (உ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செண்டிருக்கும் வடவரையிற் சேலிருக்கு மாசிருக்குந் தென்ன ரீன்ற, கண்டிருக்கு மதுரமொழிக் கனிவிருக்குந் துவரிதழங் கயற்கட் பாவை, வண்டிருக்கு நறைக்கமல மலரிருக்கும்

பரிபுரத்தாண் மனத்துள் வைத்துக், கொண்டிருக்குந் தமிழ்
முனிவன் குடியிருக்கும் பொதியமலைக் குறத்தி நானே. (௩)

சிந்து.

மங்கைகுங்குமக் கொங்கைபங்கயச்
செங்கையங்கயற் கண்ணினாள் மறைபண்ணினாள்
பங்கனைக்கழ லங்கனைச்சொக்க
லிங்கனைக்கூடி மேவுவாய் கொல்லிப்பாவையே. (௪)

மேற்படி வேறு.

வஞ்சியேயப ரஞ்சியேமட மயிலேவரிக் குயிலே
கொஞ்சியேபழி யஞ்சியாருனைக் கூடுவாரினி யம்மே. (௫)

மேற்படி வேறு.

புழுகாலே தரைமெழுகு பிள்ளையார்வை
பொற்கோல மிட்டுநிறை நாழிவையாய். (௬)

மேற்படி வேறு.

ஆழிகைதா வழகாருமங் கயற்கணம்மை பங்க
ரழகியசொக்க ரருள்புரிவருன் பான்மருவி யம்மே. (எ)

மேற்படி வேறு.

பேசு மென்குறி மோச மென்றிடி
லார்சொ லும்பரி யாசமே
வாச மென்குழ லாய் சவுந்தர
மாறர் வந்தணை வாரம்மே. (அ)

மேற்படி வேறு.

நங்கை நீகரு துங்குறி சொல்லவுன்
செங்கை தனைக்கொடு வாவெங்க
ளங்க யற்கண்ணி பங்க ரருட்சொக்க
லிங்க ரினியணை வாரம்மே. (௯)

(எ) இது இங்ஙனமே பிரதிகளிற் பாடம்பிறழ்ந்திருக்கின்றது.

மேற்படிவேறு.

தூசுமொரு காசும்வையுண் ணேசம்வரவே சொல்லநா
னீசர்கயி லாசர்மது ரேசருனைச்சேர் வாரம்மே. (௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கைக்குறியின் முகக்குறிநன் றிடத்தெழுந்த கவுளிநன்று கன்னி மார்வந், திக்குறிநன் றென்கின்ற ரிடக்கண்ணுந் துடிக்கின்ற திதன்மே லுண்டோ, பொய்க்குறிய சிறுமருங்குற் பூங்கொடிநீ யங்கயற்கட் பூவை மாதின், மெய்க்குறியும் வளைக்குறியு முலைக்குறியு மணிந்தவர்தோண் மேவு வாயே. (௧௧)

சிந்து.

கடமலைக்கும் வெம்மலையாங் கைம்மலையு மாயிரவாய்ப்
படமலைக்கு மரவரசும் பரித்தருளும் பார்மடந்தை
குடமலைக்குந் தடமுலையாங் குலமலைக ளிரண்டெனவும்
வடமலைக்குந் தென்பொதியு மலயமலை யென்மலையே. (௧௨)

திங்கண்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
யங்கயற்க ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே. (௧௩)

கன்னமதம்பெய் துறங்குகோலக் களிறுகிடந்து பிளிறுமலை, தென்னந்தமிழும் பசுங்குழவித் தென்றற்கொழுந்துந் திளைக்குமலை, யன்னம்பயிலும் பொழிற்கூட லறலங்கூந்தற் பிடியாண்ட, பொன்னங்குடுமித் தடஞ்சாரற் பொதியமலையென் மலையம்மே. (௧௪)

---

(௧௨) வடமலையும் மலயமலையும் பார்மடந்தையின் இணையொத்த இருதனமென எவரும்வழங்கவும் அவ்வடமலையை ஒத்ததாகாதபடி அதனினும் அழகுபொதிந்துநிலவும் மலயமலையே என்மலையென்பது. தென் - அழகு.

மந்தமா ருதம்வளரு மலையெங்கண் மலையே
வடகலைதென் கலைபயிலு மலையெங்கண் மலையே
கந்தவேள் விளையாடு மலையெங்கண் மலையே
கனகநவ மணிவிளையு மலையெங்கண் மலையே
யிந்தமா நிலம்புரக்கு மங்கயற்கண் ணம்மை
யின்பமுறுந் தென்பொதிய மலையெங்கண் மலையே. (கரு)

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடு மொருபாற்
சினப்புலியு மடப்பிணையுந் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடு மொருபால்
விடவரவு மடமயிலும் விருந்தயரு மொருபா
லங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீ
ழம்பொன்முடி சூடுமெங்க ளபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவுங் கும்பமுனி பயிலுந்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கண்மலை யம்மே. (கசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கச்சைப் பொருது மதர்த்தெழுந்து கதிர்த்துப் பணைத்த மணிக்கொங்கைப், பச்சைப் பசுங்கொம் பங்கயற்கட் பாவை பயந்த வாறிருதோட், செச்சைப் படலை நறுங்குஞ்சிச் சிறுவன் றனக்குப் பெருந்தடங்கட், கொச்சைச் சிறுமி தனைக்கொடுத்த குறவர் குலமெங் குலமம்மே. (கஎ)

சிந்து.

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம், குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம், பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம், பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே யுடுப்போஞ், செழுந்தினையு நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போஞ், சின வேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போ, மெழுந்

(கரு) இது எப்பிரதிகளிலும் ஓரடி குறைந்தேயிருக்கின்றது.

துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போ, மெங்கள்குறக்
குடிக்கடுத்த வியல்பிதுகா ணம்மே. (கஅ)

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை யிணங்கும்
புதுத்தினைகல் லுரற்பாறை முன்றிற்று முணங்கும்
கல்விடரில் வரிவேங்கை கடமானோ டுறங்குங்
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்குஞ்
சில்வலையும் பல்வாரு முன்னிறப்பிற் றூங்குஞ்
சிறுதுடியும் பெருமுரசுந் திசைதொறுநின் றேங்குங்
கொல்லையின்மான் பிணையுமிளம் பிடியும்விளை யாடுங்
குறிச்சியெங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளிமலைக் குறவன்மகன் பழனிமலைக் குறவனெங்கள் வீட்டிற் கொண்ட, வள்ளிதனக் கேகுறவர் மலையாட்சி சீதனமா வழங்கி னாரற், பிள்ளைதனக் கெண்ணெயிலை யரைக்குமொரு துணியிலையென் பிறகே வந்த, கள்ளிதனைக் கொண்டவன்றே குறவனுக்கு மெனக்குமிலை கஞ்சி தானே. (உ0)

சிந்து.

கூடல்புன வாயில்கொடுங் குன்றுபரங் குன்று
குற்றால மாப்பனூர் பூவணநெல் வேலி
யேடகமா டானைதிருக் கானப்பேர் சுழிய
லிராமேசந் திருப்புத்தூ ரிவைமுதலாந் தலங்க
ளாடியெங்க ளங்கயற்கண் ணண்டதமிழ்ப் பாண்டி
நன்னாடும் பிறநாடு மென்னுட தாகக்
காடுமலை யுந்திரிந்து குறிசொல்லிக் காலங்
கழித்தேனென் குறவனுக்குங் கஞ்சிவரா தம்மே. (உக)

பொற்றொடிவள் ளிக்கிளைய பூங்கொடியென் பாட்டி
பூமகண்மா யவன்மார்பிற் பொலிவளென்று சொன்னாள்

மற்றவள்பெண் களிலெங்கள் பெரியதாய் கலைமான்
மலரயனார் திருநாவில் வாழ்வளென்று சொன்னாள்
பெற்றவெங்கள் நற்றாயுஞ் சுந்தரியிந் திரன்றேவி
பெறுமென்றாள் பின்னெங்கள் சிறியதா யம்மே
சொற்றகுறிக் களவில்லையெங் கன்னிமா ரறியச்
சொன்னேன்பொய் யலநாங்கள் சொன்னதுசொன் னதுவே.

முன்னொருநா ளம்மைதடா தகைபிறந்த நாளின்
முகக்குறிகண் டிவளுலக முழுதாளு மென்றேன்
பின்னொருநாள் கைக்குறிபார்த் தம்மையுனக் கெங்கள்
பிஞ்ஞகர்தா மணவாளப் பிள்ளையென்று சொன்னே
னன்னையவன் மெய்க்குறிக ளனைத்தையும்பார்த் துனக்கோ
ராண்பிள்ளை யுண்டுபிறந் தரசாளு மென்றேன்
சொன்னகுறி யெல்லாமென் சொற்படியே பலிக்குந்
தொகுத்துநீ நினைந்தகுறி யினிச்சொலக்கே ளம்மே. (உ௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒருகாலங் கஞ்சியுமென் குஞ்சிதலைக் கெண்ணெயுமோ ருடுப்பு மீந்தாற், பொருகால வேற்கண்ணாய் மனத்துநீ நினைந்த வெலாம் புகல்வன் கண்டாய், வருகால நிகழ்காலங் கழிகால மூன்றுமொக்க வகுத்துப் பார்த்துத், தருகாலந் தெரிந்துரைப்ப தெளிதரிதன் றெங்கள்குறச் சாதிக் கம்மே. (உ௪)

சிந்து.

குங்குமஞ்சந் தனக்குழம்பிற் குழைத்துத்தரை மெழுகிக்
கோலமிட்டுக் குங்குலியக் கொழும்புகையுங் காட்டிச்
செங்கனக நவமணிக டிசைநான்கும் பரப்பித்
தென்மேலை மூலைதனில் பிள்ளையாரும் வைத்துப்
பொங்குநறு மலரறுகோ டைங்கரர்க்குச் சாத்திப்
புழுகுநெய்வார்த் திடுவிளக்கு நிறைநாழி வைத்து

(உ௪) தருகாலம் - பயன்றருங்காலம்.

மங்கையருக் கரசியெங்க ளங்கயற்கண் ணமுதை
   மனத்துள்வைத்து நினைத்தகுறி யினிச்சொலக்கே ளம்மே.()

மூன்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
   முறத்திலொரு படிநெல்லையென் முன்னேவை யம்மே
யிந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
   யிரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
யுன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தா
   ருனக்கினியெண் ணினகரும மிமைப்பினிற்கை கூடு
மென்னுனை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
   வெக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே.   (உ௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெல்லளந் திட்ட போது நிமித்தநன் றிடத்தெ ழுந்த
பல்லியும் வரத்தே சொல்லும் பத்தினிப் பெண்கள் வாயாற்
சொல்லிய வாய்ச்சொ லன்றித் தும்மலு நல்ல தேகா
ணல்லது இளைகூட் டும்புற் றுந்தைவீச் சழகி தம்மே.   (உ௭)

சிந்து.

கொண்டுவர வம்மேகை கொண்டுவர வம்மே
   கொழுங்கனக நவமணிக ளளைந்திடுமுன் கையே
வண்டுசுலா மலர்கொய்ய வருந்திடுமுன் கையே
   வருந்தினர்க்கு நவநிதியுஞ் சொரிந்திடுமுன் கையே
புண்டரிகம் பூத்தழகு பொலிந்திடுமுன் கையே
   புழுகுறுநெய்ச் சொக்கர்புயந் தழுவிடுமுன் கையே
யண்டர்நா யகியெங்கண் மதுரைநா யகியை
   யங்கயற்கண் ணாயகியைக் கும்பிடுமுன் கையே.   (உ௮)

அம்மேநின் செங்கையைநின் கொங்கையில்வைத் ததுதா
   னபிடேகச் சொக்கருனை யணைவரென்ற குறிகா

ணிம்மேலைத் திசையினிற்கை யெடுத்ததுவு மவர்தா
 மின்றந்திப் பொழுதினில்வந் தெய்துவரென் றதுகாண்
கைம்மேற்கை கட்டியதுந் தப்பாம லுனக்குக்
 கைகூடு நீநினைத்த காரியமென் றதுகாண்
செம்மேனி மணிவயிற்றிற் கைவைத்த தினிநீ
 சிறுவர்பதி னறுவரையும் பெறுவையென்ற தம்மே. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கைத் தலத்துத் தனரேகை யளவில் செல்வந் தருமுனது
செங்கைத் துடிதென் மதுரேசர் செம்பொற் புயத்திற் சேர்க்கு
மிங்கிப் படிபுத் திரரேகை யெவர்க்கு மிலையிப் படிதோளிற்[மா
றங்கு மறுவங் கயற்கணம்மை தன்னோ டிருக்கத் தருமம்மே.()

சிந்து.

பொன்பொதியுந் துகிலெனவெண் புயலொடுதண் பனிமூடுந்
தென்பொதிய மலையாட்டி பேரைச்சொல்லாய் பாடநான்.(௩க)

பலநதிகள் புணர்ந்தநதிப் பதியையணை யாதவைகைக்
குலநதித்தண் டுறைச்செல்வி பேரைச்சொல்லாய் பாடநான்.()

அன்பாண்டு கல்வலிதென் றவ்வைபா டியவெங்க
டென்பாண்டி நாட்டாடன் பேரைச்சொல்லாய் பாடநான். ()

பொன்மாடஞ் சூழ்ந்தகரும் புயலமலன் போர்வைநிகா
பன்மாடக் கூடலாள் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௪)

எண்டிசைக்கும் வேம்பாயெம் மிறையவர்க்குக் கரும்பாகும்
வண்டிசைக்குந் தாரினாள் பேரைச்சொல்லாய் பாடநான். ()

(உகூ) திகை - திசை. (௩௩) அன்பு ஆண்டு - அன்புகொண்டு. ஔவைபாடிய பாடல் "வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்ற, னன்மாடக் கூடலிற் கல்வலிது, சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான், கச்சியிற் காக்கை கரிது."

தினவட்ட மிடும்பரிதித் திண்பரிமண் பரியாக்குங்
கனவட்ட வாம்பரியாள் பேரைச்சொல்லாய் பாடநான். (ருசு)

திக்கயங்கள் புறங்கொடுப்பத் திசையெட்டுந் திறைகொண்ட
கைக்கயத்தைமேற்கொண்டாள் பேரைச்சொல்லாய் பாடநான்.

ஆனேற்றுங் கொடியானை யைங்கணையான் வென்றிடவம்
மீனேற்றின் கொடியுயர்த்தாள் பேரைச்சொல்லாய் பாடநான்.

இனியானை யிலையரசர்க் கென்றுதிசை யெட்டுமொரு
தனியானை செலுத்தினாள் பேரைச்சொல்லாய் பாடநான்.(ருகூ)

கருமலையச் செருமலையுங் கைம்மலைய மன்னர்தொழ
வருமலையத் துவசனருண் மடக்கொடியைப் பாடுவனே. (சo)

விண்புரக்குங் கதிர்மௌலி முடிகவித்து வெண்குடைக்கீழ்
மண்புரக்கு மபிடேக வல்லியைநான் பாடுவனே. (சக)

வெம்புருவச் சிலைகுனித்து விழிக்கணைக ளிரண்டெடுத்தை
மொய்ம்புருவத் தொடுத்தெய்த மொய்குழலைப் பாடுவனே. ()

ஊன்கொண்ட முடைத்தலையிற் பலிகொண்டார்க் குலகேழுந்
தான்கொண்ட வரசாட்சி தந்தாளைப் பாடுவனே. (சரு)

வானவர்கோன் முடிசிதறி வடவரையிற் கயலெழுது
மீனவர்கோன் றனைப்பயந்த மெல்லியலைப் பாடுவனே. (சச)

கான்மணக்குஞ் சடைக்காட்டிற் கவின்மணக்குங் கடிக்கொன்
றைத், தேன்மணக்கும் பிறைநாறுஞ் சீறடியைப் பாடுவனே. ()

எவ்விடத்துந் தாமாகி யிருந்தவருக் கருந்தவரும்
வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே. ()

(ருசு) தினமுமென்னும் உம்மைதொக்கது.

(சo) கருமலைய - கருமயங்க.

வைத்தபகி ரண்டமெனு மணற்சிற்றி லிழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே. (௪௭)

இலக்குறியுங் குணமுநமக் கென்பார்க்கு வளக்குறியு
முலக்குறியு மணிந்திட்ட மொய்குழலைப் பாடுவனே. (௪௮)

ஒன்றாகி யனைத்துயிர்க்கு முயிராகி யெப்பொருளு
மன்றாகி யவையனைத்து மானாளைப் பாடுவனே. (௪௯)

பரசிருக்குந் தமிழ்க்கூடற் பழியஞ்சிச் சொக்கருட
னரசிருக்கு மங்கயற்கண் ணாரமுதைப் பாடுவனே. (௫0)

கொச்சகக்கலிப்பா.

நீர்வாழி தென்மதுரை நின்மலனா ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே. (௫௧)

மீனாக்ஷியம்மைகுறம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

மதுரைமீனாக்ஷியம்மை

இரட்டைமணிமாலை.

நேரிசைவெண்பா.

கார்பூத்த கண்டத்தெங் கண்ணுதலார்க் கீரேழு
பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பே—சீர்கொள்
கடம்பவனத் தாயேநின் கண்ணருள்பெற் றாரே
யிடம்பவனத் தாயே யிரார். (௧)

கட்டளைக்கலித்துறை.

இராவின் றதுஞ்சொக்க ரெண்டோள் குழைய விருகுவட்டாற்
பொராவின் றதுஞ்சில பூசலிட் டோடிப் புலவிநலந்
தராவின் றதுமம்மை யம்மண வாளர் தயவுக்குள்ளாய்
வராவின் றதுமென்று வாய்க்குமென் னெஞ்ச மணவறையே. ()

நேரிசைவெண்பா.

மதம்பரவு முக்கண் மழகளிற்றைப் பெற்றுக்
கதம்பவனத் தேயிருந்த கள்வி—மதங்க
னடியார்க் குடம்பிருகூ றுக்கினாள் பார்க்கிற்
கொடியார்க் கிலைகொல் குணம். (௩)

கட்டளைக்கலித்துறை.

குணங்கொண்டு நின்னைக் குறையிரந் தாகங் குழையப் புல்லி, மணங்கொண் டவரொரு வாமங்கொண் டாய்மது ரேசரவர், பணங்கொண் டிருப்ப தறிந்துசொள் ளாயம்மை பைந்தொடியார், கணங்கொண் டிறைஞ்சு நினக்குமுண் டாற்பொற் கனதனமே. (௪)

நேரிசைவெண்பா.

கனமிருக்குங் கந்தரர்க்குன் கன்னிநா டூந்தென்
றினமிரப்ப தோவொழியார் தேனே—பனவனுக்காப்
பாமாறி யார்க்குனைப்போற் பாரத் தனமிருந்தாற்
றுமாறி யாடுவரோ தான். (௫)

கட்டளைக்கலித்துறை.

தானின் றுலகு தழையத் தழைந்த தமிழ்மதுரைக்
கானின்ற பூங்குழற் கர்ப்பூர வல்லி கருங்கட்செய்ய

(உ) "நன்றென்வன்னெஞ்சமோதன்மணவறையே" என்பதும்பாடம். (௪) பணம் - அரவின்படம் திரவியம். (௫) பனவன் - தருமியென்னும் ஆதிசைவன். (கூ) தானின்றென்பது தானிற்றலாலென்னும் எச்சத்திரிபு. ஆறலைய ஆடுங்கடல் என்க.

மீனின் றுலாவி விளையா டுவதுவிண் ணுறலைய
வானின்ற தோர்வெள்ளி மன்றாடு மானந்த மாக்கடலே. (கூ)

நேரிசைவெண்பா.

கடம்பவன வல்லிசெல்வக் கர்ப்பூர வல்லி
மடந்தை யபிடேக வல்லி—நெடுந்தகையை
யாட்டுவிப்பா ளாடலிவட் காடல்வே றில்லையெமைப்
பாட்டுவிப்ப துங்கேட் பதும். (எ)

கட்டளைக்கலித்துறை.

பதுமத் திருவல்லி கர்ப்பூர வல்லிநின் பாதபத்ம
மதுமத் தொடுந்தம் முடிவைத்த வாமது ரேசரவ
ரிதுமத்தப் பித்தமன் றேழைமை முன்ன ரிமையவர்கைப்
புதுமத் தினைப்பொற் சிலையென் றெடுத்த புராந்தகர்க்கே. (அ)

நேரிசைவெண்பா.

தருமே கடம்பவனத் தாயேநின் சிற்றி
லகமேயென் னெஞ்சகமு தானுன்—மகிழ்நரொடும்
வாழாநின் றுயிம் மனையிருண்மூ டிக்கிடப்ப
தேழாய் விளக்கிட் டிரு. (கூ)

கட்டளைக்கலித்துறை.

இரைக்கு நதிவைகை பொய்கைபொற் றாமரை யீர்ந்தண்டமிழ்
வரைக்கு மலைதென் மலயம தேசொக்கர் வஞ்சநெஞ்சைக்
கரைக்குங் கனகள்வி கர்ப்பூர வல்லிக்குக் கற்பகத்தார்
நிரைக்கும்பொற் கோயி றிருவால வாயுமென் னெஞ்சமுமே.

நேரிசைவெண்பா.

நெஞ்சே திருக்கோயி னீலுண் டிருண்டகுழன்
மஞ்சேர் தபிடேக வல்லிக்கு—விஞ்சி
வருமந் தகாவென் வழிவருதி யாலிக்
கருமந் தகாவுன் கருத்து. (கக)

(கo) தமிழ்வரைக்குமலை - தமிழை வரையறைப்படுத்துமலை. கற்பகத்தாரென்பது பலபொருள்பட நிற்பதறிக.

கட்டளைக்கலித்துறை.

கருவால வாய்சொரிந் தறமெலிந் தேற்கிரு காள்மலரைத், தரு
வால வாய்நின்ற தொன்றுத வாய்வன் றடக்கைக்குகோர், பொரு
வால வாயெட்டுப் போர்க்களி றேந்துபொற் கோயில்கொண்ட,
திருவால வாய்மருந் தேதென்னர் கோன்பெற்ற தெள்ளமுதே.

நேரிசைவெண்பா.

தென்மலையுங் கன்னித் திருநாடும் வெள்ளிமலைப்
பொன்மலைக்கே தந்த பொலங்கொம்பே—நின்மா
முலைக்குவடு பாய்சுவடு மூன்காய மாலம்
மலைக்குவடு வன்றே மணம். (கஅ)

கட்டளைக்கலித்துறை.

மணியே யொருபச்சை மாணிக்க மேமருந் தேயென்றுன்னைப்
பணியேன் பணிந்தவர் பாலுஞ்செல் லேனவர் பாற்செலவுந்
துணியேன் றுணிந்தவை யென்னுரைக் கேன்மது ரைத்திருநாட்
டணியே யனைத்துயிர்க் கும்மனை நீயென் றறிந்துகொண்டே.()

நேரிசைவெண்பா.

கொண்டைச் செருக்குங் குறுநகையு நெட்டயிற்கட்
கெண்டைப் பிறக்கமும்வாய்க் கிஞ்சுகமுங்—கொண்டம்மை
கற்பூர வல்லி கருத்திற் புகட்புகுந்தா
ணற்பூர வல்லியுமென் னு. (கடு)

கட்டளைக்கலித்துறை.

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலைபாந் தொடுத்துப் புனைவதற்கே. (கசு)

(கடு) செருக்கு - செருகியது. பூரவல்லி - கலைமகள்.

நேரிசைவெண்பா.

புனைந்தாள் கடம்பவனப் பூவைசில பூவை
வனைந்தாளென் வாயும் மனமுந்—தினந்தினமும்
பொற்பதமே நாறுமவள் பூம்பதமன் றேநமது
சொற்பதமே நாறுஞ் சுவை. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

சுவையுண் டெனக்கொண்டு சூடுதி யான்மற்றென் சொற்றமிழ்க்சோர், நவையுண் டெனவற நாணுதி போலு நகைத்தெயின்மூன், றவையுண் டவரொ டருட்கூடல் வைகுமம் மேசொற்பொருட், கெவையுண்டு குற்ற மவையுண்டு நீவி ரிருவிர்க்குமே. (கஅ)

நேரிசைவெண்பா.

விண்டிருந்த பொற்கமல மீதிருந்த பொன்னினையுங்
கொண்டிருந்து குற்றேவல் கொள்ளுமாற்—றொண்டரண்டர்
தேங்காவில் வீற்றிருப்பத் தென்மதுரைக் கேகடப்பம்
பூங்காவில் வீற்றிருந்த பொன். (கசு)

கட்டளைக்கலித்துறை.

பொற்பூர வல்லி கமலத்த ளேகொல் புகுந்தகமும்
வெற்பூர வல்லி பிறந்தக மும்மது மீட்டுமென்னை
யற்பூர வல்லியெம் வன்னெஞ்சக் கஞ்சத்தெம் மையனொடுங்
கற்பூர வல்லி குடிபுகுந் தேநின்ற காரணமே. (உ0)

மீனாக்ஷியம்மையிரட்டைமணிமாலை

முற்றிற்று.

(கஎ) சிலபூ என்றது அம்பிகையி னவயவங்களை.
(கசு) கொண்டிருத்தல் - அடிமைகொண்டமர்தல். அண்டர் தேங்காவில் தொண்டர்வீற்றிருப்பவென இயையும்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மதுரைக்கலம்பகம்.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணளிதூய்
வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

மணிகொண்ட திரையாழி சுரிநிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைக்கிழவன் றிருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் றலைநிற்ப
வம்பொன்முடி முடிச்சூடு மபிடேக வல்லியொடுஞ்
செம்பொன்மதிற் றமிழ்க்கூடற் றிருநகரம் பொலிந்தோய்கேள்.

இது எட்டடித்தரவு.

விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே. (க)

(காப்பு) தடம் - மலை. அளி - அன்பாகிய மலரின்மேற்று. தண்ணலர்தூய் என்பதும் பாடம். (க) சுரி - மடிப்பு.

தேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்து நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே. (உ)

வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த
மீனேறே வானேறும் விடுத்தடிக ளெடுப்பதே. (ஙு)

மனவட்ட மிடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டந் தினவட்ட மிடக்கண்டு களிப்பதே. (ச)

விண்ணாறு தலைமடுப்ப நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணாறு குடைந்துவைகைத் தண்டுறையும் படிந்தனையே. ()

பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே. (சு)

இவையாறும் ஈரடித்தாழிசை.

அவனவ ளதுவெனு மவைகளி லொருபொரு
ளிவனென வுணர்வுகொ டெழுதரு முருவினை. (க)

இலதென வுளதென விலதுள தெனுமவை
யலதென வளவிட வரியதொ ரளவினை. (உ)

குறியில னலதொரு குணமில னெனநினை
யறிபவ ரறிவினு மறிவரு நெறியினை. (ங)

இருமையு முதவுவ தெவனவ னெனநின
தருமையை யுணர்வுறி னமிழ்தினு மினிமையை. (ச)

இவைநான்கும் ஈரடியராகம்.

(ங) சிலவென்பது பெரும்பாலும் இரண்டையுணர்த்தும்.

(ச) மனத்தில் வட்டமிடல்-பலகாலும் உளங்கொளப்பயிறல்.

(உ) முயற்கோடு ஆகாயப்பூவென்பனபோன்ற இல்பொருள்களும் அபாவமென்று ஒருபதார்த்தமாகக் கொள்ளப்படுதலால் இலதுநீ என்றார்.

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடிமண் சுமந்ததே. (க)

அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னையவ
டரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே. (உ)

முலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னீ வளைகொண்டு சுமந்ததே. (ங)

ஊன்வலையி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே. (ச)

இவைநான்கும் ஈரடித்தாழிசை.

போகமாய் விளைந்தோய் நீ, புவனமாய்ப் பொலிந்தோய் நீ,
யேகமா யிருந்தோய் நீ, யெண்ணிறந்து நின்றோய் நீ.

இவைநான்கும் முச்சீரோரடி யம்போதரங்கம்.

வானு நீ, நிலனு நீ, மதியு நீ, கதிரு நீ,
யூனு நீ, யுயிரு நீ, யுளது நீ, யிலது நீ.

இவையெட்டும் இருசீரோரடி யம்போதரங்கம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
யண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் டாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பசும்பொனசும் பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்கீ
ழரசுவீற் றிருந்த வாதியங் கடவுணின்

பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுது
மைம்புல வழக்கி னருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக
சரு பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉ
மிறைமையுண் டாயினு மாக குறுகினின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக்கொண்
டம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறாஉந் திறம்பெறற் பொருட்டே. (க)

இது பத்தொன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

நேரிசைவெண்பா.

பொருணன் கொருங்கின்ற பொன்மாடக் கூட
லிருணன் றிருண்டகண்டத் தெம்மான் - சரணன்றே
மண்டுழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மவுலித்
தண்டுழாய் பூத்த தடம். (உ)

கட்டளைக்கலித்துறை.

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் றண்மலர்த்தா
ணடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி நங்களுக்கோர்
திடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறவிண்ணோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே. (ங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை வெள்ளைப் பள்ளை, யானேறும் வலனுயர்த்த வழகியசொக் கர்க்கிதுவு

(உ) தடம் - குளம், மலைப்பக்கம். (ங) கண்டகம் தாளது - முட்களோடுகூடிய நாளத்தையுடையது. ஆகவே அத்தாமரை மலர் திருவடிகட்கொப்பாவது எங்ஙனமென்றெழுத்து என்றபடி இடமுண்டோவென்புழிவினைப்பொருளோகாரம் தொக்கது.

(ச) முல்லைகொடிவிடுங் கொல்லையாகிய முல்லைநிலமென்க.

மழகி தேயோ, கானேறுங் குழல்சரியக் கர்ப்பூர வல்லிதலை கவிழ்ந்து நிற்ப, வூனேறு முடைத்தலையிற் கடைப்பலிகொண் டோர்புக் குழலு மாறே. (௪)

கட்டளைக்கலித்துறை.

மாற்றொன் றிலையென் மருந்துக்கந் தோசொக்கர் மாலை கொடார், கூற்றொன் றலவொரு கோடிகெட் டேன்கொழுந் தொன்றுதென்றற், காற்றொன் றிளம்பிறைக் கீற்றொன்று கார்க்கட லொன்றுகண்ணீ, ரூற்றொன் றிவளுக் குயிரொன் றிலையுண் டெடம்பொன்றுமே. (௫)

விருத்தக்கலித்துறை.

ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங் குடம்பொன்றிலா
ரென்றே யறிந்தம்பி னின்றே யிரங்கென் றிரக்கின்றவா [யு
குன்றே யிரண்டன்றி வெண்பொன் பசும்பொன் குயின்றேசெ
மன்றே யிருக்கப் புறங்கா டரங்காட வல்லாரையே. (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு விற்பீர்போன் மதுரை மூதூர்க், குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல் லாங்கொள்ளை கொள்கின் றீராற், பலங்கொண்ட செட்டுமக்குப் டலித்ததுநன் றுனீரிப் பாவை மார்க்குப், பொலங்கொண்ட வரி வளைகள் விற்பதற்கோ கொள்வதற்கோ புறப்பட் டீரே. (எ)

---

(௬) வெண்பொன் பசும்பொன் என்பவற்றைக் குன்றேடுங் கூட்டுக. (எ) இது வளையல்விற்றகோலமாக விழாக்கொண்டரு ளும் சோமசுந்தரக்கடவுளின் வடிவழகைக்கண்டு மையல்கொ ண்டாளொருத்தி வருத்தவாறுகவுரைத்தது. இங்ஙனம் இந்நூ லில் ஆங்காங்கும் அக்கடவுளின் அருள்விளையாடற்றிறம் அமைக் கப்பட்டிருத்தலின் அஃதோர்ந்து பொருள்கொள்க.

நேரிசைவெண்பா.

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே - கட்ட
விரும்பரவத் தானேநின் மென்மலத்தா ளன்றே
தரும்பரவத் தானே தனை. (அ)

கட்டளைக்கலிப்பா.

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியோன் றற்றவிவ் வூரில்யா
மினியி ருப்பவொண் ணாது மடந்தைமீ
ரிடம ருங்குஞ் சடைமருங் கும்மிரு
கனியி ருக்குங் கடம்பவ னேசனார்
கண்பு குந்தென் கருத்து ளிருக்கவும்
பணியி ருக்கும் பிறைக்கூற்ற முற்றியென்
பாவி யாவியை வாய்மடுத் துண்பதே. (கூ)

நேரிசைவெண்பா.

உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதைமீர் - தண்ணிதழி
யிந்தா நிலமே வெனச்சொலா ரென்செய்வா ண்
மந்தா நிலமே வரின். (கo)

புயவகுப்பு.

வரியளி பொதுளிய விதழியொ டமரர்
மடந்தையர் நீல வனம்புக் கிருந்தன
மதியக டைபட நெடுமுக டடைய
நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன

(அ) தாள் பரவத் தானே தனைத்தரும் என்க. (கூ) ஒன்றுது ஒன்றுதென்பதன்மரூஉ. (கக) நீலவனம் - கண்களாகிய கருங் குவளைத்தொகுதி.

மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டடுதிறன் முறைமுறை துதிசெய்
தணங்கவ ராடு துணங்கைக் கிணங்கின,—

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற் றிநின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன
புலவெயி றயிறரு குருதியொ டுலவு
மடங்கலின் வீர மொடுங்கத் தரந்தன
புகலியர் குரிசில்பண் ணொடுதமி ழருமை
யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன,—

வுருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாண னுதுங்கத் திரிந்தன
வுருகிய மனமொடு தழுவியொர் கிழவி
கருந்துணி மேலி டுவெண்பிட் டுகந்தன
வுறுதியொ டவன்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன
வுருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன,—

திருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக வழுந்தக் குழைந்தன

(கக) வெடி - கடுந்தொனி. உறுதி - விரைவிற் கரைகட்டி முடிப்பனென்னும் துணிவு. முழுகுதல் - பதிதல்.

தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
　　ததும்பிய வூற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
　　சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே. (கக)

கட்டளைக்கலித்துறை.

புயல்வண்ண மொய்குழல் பொன்வண்ணந் தன்வண்ணம் போர்த்தடங்கண், கயல்வண்ண மென்வண்ண மின்வண்ண மேயிடை கன்னற்செந்நெல், வயல்வண்ணப் பண்ணை மதுரைப் பிரான்வெற்பில் வஞ்சியன்ன, வியல்வண்ண மிவ்வண்ண மெண்ணெஞ்ச மற்றவ் விரும்பொழிலே. (கஉ)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகி
லருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
பாணுலுங் காயமிலை யையரவர்க் கம்மானை. (கங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்ம கோவெனும் விழுமழு மெழுந்தின் றருவிநீர் விழி சோரும், விம்மு மேங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென் மெல்லிய லிவட்கம்மா, வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு மணந்தவர் மலர்த்தாமந், தம்மி ேனவெனுந் தவப்பயன் பெரி தெனுந் தந்தைதா ளெறிந்தார்க்கே. (கச)

(கஉ) என்வண்ணமும் மின்வண்ணமுமே இடை. மின்வண்ணம் ஏய்ந்த இடை என்வண்ணமாமெனலும் ஒன்று. என்வண்ணமென்றது தளர்வுநோக்கி. (கங) காயம்-தழும்பு, உருவம். (கச) மெல்லியலிவட்கு என்னதுன்பம் நேர்ந்ததென்றபடி.

மதங்கியார். எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எறிவே லிரண்டுமென துயிர்சோர வுண்டுலவ விகல்வா ளிரண்டு விசிறு, வெறிசேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி விளையாடு மின்கொ டியனீர், சிறுநூன் மருங்குலிறு மிறுமாதெ லென்றுசில சிலைநூபு ரஞ்சொன் முறையீ, டறியீரென் னெஞ்சுமல மரவேசு ழன்றிடுநும் மதிவேக நன்ற றவுமே. (கரு)

கட்டளைக்கலித்துறை.

அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்கொடா
நிறந்தந்த கும்ப மதயா னையுநெடுந் தேர்ப்பரப்பு
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ
புறந்தந்த வாவணங் கேநின்று காமவெம் போரினுக்கே. (கசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத் துப் புழைக்கை நால்வாய்க், காரானைப் போர்வைதழீஇ வெள் ளானைக் கருள்சுரந்த கடவு ளேயோ, வோரானை முனைப்போ ருக் கொருகணைதொட் டெய்திடுநீ ரொருத்தி கொங்கை, யீரானை முனைப்போர்க்கும் வல்லீரே லொருகணைதொட் டெய் திடீரே. (கஎ)

மேற்படிவிருத்தம்.

எய்யாது நின்றொருவ னெய்வதுவு மிளையாட னிளைப்பும் புந்தி, வையாதார் வைதலுறின் மதியார்தா மதித்திடுதல்வழக் கே யன்றே, மெய்யாத மெய்கடிந்து வீடாத வீடெய்தி வீழார் வீழச், செய்யாள்செய் சரக்கறையாந் திருவால வாயிலுறை செல்வ னீரே. (கஅ)

(கரு) எறிவேலென்றது கண்களை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவெமை யாளு
டைய பச்சை மயிலோ, டீறுமுத லற்றமது ராபுரியி லுற்றபரா
மேசரொரு சற்று முணரார், நீறுபடு துட்டமதன் வேறுருவெ
டுத்தலரி னிள்சிலைகு னித்து வழிதே, னூறுகணை தொட்டுவெளி
யேசமர்வி ளைப்பதுமென் னூழ்வினைப லித்த துவுமே. (கக)

தழை. கட்டளைக்கலித்துறை.

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியன்முன்
சல்லாளைக் கிட்ட கரும்பன்று காணின் களபக்கொங்கை
வல்லாளைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினுய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே. ()

வஞ்சித்துறை.

தழைத்திடுங் கூடலார், குழைத்துடன் கூடலார்
பிழைத்திடுங் கூடலே, யிழைத்திடுங் கூடலே. (உக)

வஞ்சிவிருத்தம்.

கூட லம்பதி கோயில்கொண்
டாடல் கொண்டவ ராடலே
யூட லும்முடம் பொன்றிலே
கூட லும்மொரு கொம்பரோ. (உஉ)

ஊசல். கலித்தாழிசை.

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கம்மக் கலனுஞ் சிலம்புங் கலந்தார்ப்ப

(கக) அலரினிள்சிலை - புட்பவில். இது மன்மதனுக்குரிய மூவ
கைவில்லுள் ஒன்று. மூவகையுளொன்றென்பதனைக் "கயக்கணி
ன்ற பூவின்மிக்க காமகாண்டங் கன்னல்வில், லியக்கமானபார
வில்" என்னுங் கந்தபுராணக்காமதகனப்படலச்செய்யுளானு
மறிக. (உ0) கரும்பன்றெனவே இத்தழை அதனினுஞ் சிறந்த
தென்பதாயிற்று. (உரு) கம் - கம்மியர்தொழில்.

மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
யம்மென் மருங்கொசிய வாடுகபொன் னூச
லழகெறிக்கும் பூண்முலையீ ராடுகபொன் னூசல். (உகூ)

கலி. தாழிசை.

அழகுற்றதொர் மதுரேசனை யமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா
லுழுதற்றதொர் சான்றாண்மை பயின்றார்தின முயன்றூற்
பலமுண்டதி னலமுண்டவ ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது வீடுந்தர வற்றா
லெழுதாததொர் திருமந்திர மிளம்பாளையு ளுண்டே. (உச)

கலிவிருத்தம்.

உண்பது நஞ்சமா லுறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத மின்னதே பெரும வேள்கணை
யெண்பது கோடிமே லெவன்றொ டுப்பதே. (உரு)

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
யெடுத்து நின்றது மாயவ ராகமே
யெயிறி றுத்தது மாயவ ராகமே
யடுப்ப தந்தணர் பன்னக ராசியே
யணிவ தஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே
கொள்வ தையர் கடம்பவ னத்தையே. (உசு)

நேரிசைவெண்பா.

கடங்கரைக்கும் வெற்பிற் கரைகரைக்கும் வைகைத்
தடங்கரைக்க ணின்றவர்நீர் தாமோ - நெடுந்தகைநுங்
கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையி
னூட்டம் புயமே நமன். (உஎ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நம்பாநி னக்கோல முறையோவெ னக்கால நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார், தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர், செம்பாதி மெய்யுங் கரும்பாதி யாகத் திருத்தோளு மார்பும் வடுப்பட்டதுங்கண், டெம்பாவை யைப்பின்னு மம்பாவை செய்வா ரெனீ யாரை நலிகிற்பி னேதா மிவர்க்கே. (உஅ)

கோச்சகக்கலிப்பா.

ஆவமே நாணே யடுக்ணையே யம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுஞ் சமனன்றே
யோவமே யன்ன ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே. (உகூ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து கயல்வர வுறங்குபுள்ளீரே, பருவமு மிழந்தென் மகடுய ருழந்து படுவிர கமொன்று முள்ளீரே, யருமையொ டுமெங்கள் பெருமையை யறிந்து மருள்புரிய விங்கு வல்லீரே, மருவிய கடம்ப வனமதுபுகுந்தெ மதுரைய ரன்முன்பு சொல்லீரே. (௩0)

கோச்சகக்கலிப்பா.

ஈரித்த தென்ற லிளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப் பிணியோ தணியாவாற்

---

(௩0) வல்லீரே - மாட்டீரே.

பாருக்கு ணீரே பழியஞ்சி யாரெனின்மற்
றுருக் குரைக்கே மடிகே ளடிகேளோ. (ருக)

பிச்சியார். கட்டளைக்கலிப்பா.

அடுத்த தோர்தவ வேடமும் புண்டர
மணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தெடுத்த தாள்பதித் தாடிக் கடைப்பிச்சைக்
கிச்சை பேசுமப் பிச்சனெ னச்செல்வீர்
எடைக்க ளுக்கமும் புன்மூர லும்முயிர்
கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றே
பிச்சி யாரெனும் பேருமக் கிட்டதே. (ருஉ)

கட்டளைக்கலித்துறை.

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட வொண்மழு வும்மெழுதும், படங்கொண்டு வந்தனை யானெஞ்ச மேயினிப் பங்கடப்பூந், தடங்கொண்ட கூடற் சவுந்தர மாறர்பொற் றாள்பெயர்த்து, நடங்கொண்ட தோர்வெள்ளி மன்றே றுதுமின்று நாளையிலே. (ருங)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இருநில னகழ்ந்ததொரு களிறுவெளி றும்படியொ ரிருளியினைந்த ணையுமக், குருளையை மணந்தருளி னிளமுலை சுரந்துதவு குழகரி துணர்ந்திலர் கொலாங், கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில கணைமதன் வழங்க வவைபோ, யுருவிய பசும்புணில்வெண் ணிலவனல் கொளுந்தியதெம் முயிர்சிறி திருந்த தரிதே. (ருச

(ருக) பழியஞ்சியார் - முன்னிலைப்படர்க்கை.

(ருச) இருளி - பன்றி.

கோற்றியார். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருநாம மரசிவசங் கரநாம மெனக்கொண்
டவற்றொருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
பெற்றியார் தமிழ்மதுரைக் கொற்றியார் கேளீ
ரொருநாமம் பயந்தவர்முன் றருநாமம் வியந்திங்
குலகரிடு நாமமுமொன் றுள்ளதீர் வெள்ளைத்
திருநாம மிட்டவன்றே கெட்டவன்றோ விமையோர்
தெரித்திடுநா மமுமுனிவோர் தரித்திடுநா மமுமே. (௫௫)

நேரிசைவெண்பா.

மும்மைத் தமிழ்க்கூடன் மூலலிங்கத் தங்கயற்க
ணம்மைக் கமுதா மருமருந்தை - வெம்மைவினைக்
கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
முள்ளத் திருக்கோயி லுள். (௫௬)

கட்டளைக்கலித்துறை.

உள்ளும் புறம்புங் கசிந்தூற் றெழநெக் குடைந்துகுதி
கொள்ளுஞ்செந் தேறல் குனிக்கின்ற வாபத்திக் கொத்தரும்பு
விள்ளுங் கமலத்தும் வேத சிரத்தும்விண் மீனைமுகந்
தள்ளுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கத்துமே. ()

(௫௫) கருநாமம் - பிறப்பின்பெயர்; பிறப்பின் அச்சமுமாம். ஒருநாமம் - பெண்ணெனயாவரும்வழங்கு மொருபெயர். அன்றே தேற்றம். கொற்றியாரென்பது வைணவசின்னம் பூண்டுள்ள மகளிர்க்கிட்டு வழங்குவதோர்பெயர். இளையோனென்பதும் பாடம். (௫௬) வினைக்கேதுவாகிய வஞ்சத்திருக்கென்க. (௫௭) அன்பர்மனமும் உடலும் கனிந்து நெக்குடைந்து ஊற்றுநீர்போலக் கரைந்தோடப்பெருகும் சிவமாகியதேன் நடிக்கின்றவாறு வியப்பு எ - று. வியப்பென்பது சொல்லெச்சம். ஆ - கடைக்குறை. கமலம் - ஈண்டு இதயதாமரை.

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
யால யம்பிற வெள்ளிய ரங்கமே
யுரங்கொள் பல்கல னென்பர வாமையே
யுணர்வு றுமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு யாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே. (ருஅ)

விருத்தக்கலித்துறை.

கூடார் புரந்தீ மடுக்கின்ற தஞ்செனன்று கும்பிட்டதோ
ரேடார் குழற்கோதை யுயிருண்ப தும்மைய ரிளமூரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீ ரெனக்கன்னி வளநாடெனு
நாடாள வைத்தாளு நகையா தினிப்போடு நகையாடவே. (ருகூ)

கோச்சகக்கலிப்பா.

நகையே யமையுமித்த நாகரிக நோக்கு
மிகையே யனங்கன் வினைகொளல்வீ ணன்றே
தகையே மதுரேசன் றண்டமிழ்நா டன்னீர்
பகையே நுமக்கு நமக்கும் பகர்வீரே. (சo)

கலிவிருத்தம்.

வீரம் வைத்தவில் வேள்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணே
யீரம் வைத்த விளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்ப வனேசனே. (சக)

(சo) அமைதல் - அழித்தற்கு அஃதொன்றே போதுமான தாதல். தகையேயென்பது, தகுதியன்றென்பது படநின்றது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற்றுங் கடம்
பா டவிச்சுந் தாரேநுந், தடந்தோள் குறித்திங் கணைந்தே
மெனிற்பின் றரும்பே றுன்மத்தின் பெருவாழ்வோ, தொடர்ந்
தே யுடற்றிந் திரன்சா பமுற்றுந் துரந்தா லுமிப்பெண்
பழிபோமோ, வடந்தேம் விடக்கொன் றையந்தா ரெவர்க்
கென் றமைந்தே யிடக்கின் றதுதானே. (சஉ)

ஊர். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தான வெங்களி றேறு மிந்திரன் சாப முந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூனி மிர்ந்திட வேறி மிர்ந்திடு கூட லம்பதியே. (சங)

கைக்கிளை. மருட்பா.

அஞ்சேன் மடநெஞ் சபிடேகச் சொக்கரருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போற் - றுஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கு
மறலியற் கூந்தற் காடமர்க் கண்ணே. (சச)

கட்டளைக்கலித்துறை.

கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத்துக் கேழுத்த முண்டிமயத்
தண்முத் தமைந்த தபனிய மேதலைச் சங்கம்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே. (சரு)

(சங) வெண்களிறு என்றும், மேன்மைதந்த என்றும் பாடம். வான் இமிர்ந்திட - மேகங்கள் முழங்க. (சரு) என் பெண்முத்துக்கோ விடுகை யுண்டாவது? ஈதுவியப்பு! இனியேனும் விரைவில் வந்தணைந்தருள்வீராக. எ - று. முத்தம் - விடுகை.

பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பாணரு மழலைச் சீறியாழ் மதுரப் பாடற்குத் தோடுவார் காதும், பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும் பாலித்தாய் பாட்டளி குழைக்குங்,— கோணரு வுளைப்பூங் கொத்தலர் குடுமிச் சுறுங்கணைட் டிலைச்சிலை குனித்த, கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலா மலதென் கோடியிடைக் காற்றுமா றுளதோ,—சேணுருப் பசும்பொற் றசும்பசும் பிருக்குஞ் சிகரியிற் றகரநா றைம்பாற், சேயரிக் கருங்கட் பசுங்கொடி நுடங்குஞ் செவ்வியிற் சிறைமயி லகவத்,—தூணரு முழவுத் தோண்மடித் தும்பர் சுவல்பிடித் தணைந்துபார்த் துணங்குந், தோரண மாடக் கூடலிற் சோம சுந்தரா சந்த்ரசே கரனே. (௬௧)

நேரிசையாசிரியப்பா.

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்குந்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூட
லொண்ணுத றழீஇய கண்ணுதற் கடவு
ளெண்மர் புரந்தரூஉ மொண்பெருந் திகைக்குத்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரிந்த
விரசதங் குயின்ற திருமா மன்றகம்

---

(௬௧) உளை பூங்கொத்து அலர் குடுமி - மேலே துய்யையுடைய பூங்கொத்துமலர்ந்த நுனி. உளை - துய்; துய்போல் உள்ளீடில்லாதது என்பது. இதனை திருமுருகாற்றுப்படையில் "உளைப்பூ——ரட்டி" என்புழி நச்சினார்க்கினியர்வரைந்த உரையானுமுணர்க. ஆற்றல் - யாழிசைமுதலியவற்றிற்குச் சகித்தல். அசும்பிருத்தல் - (ஓடவிட்டபொன்னாதலால்) நெகிழ்ந்திருத்தல். (௬௭) ௪ படி - ஒன்றன்வடிவையுடைத்தாய் அதுவென்றே கருதப்படுவது; பிரதியென்னும் வடமொழியின் சிதைவு.

பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் றுயினும்
கருந்தாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டு
மிருவே றமைந்தநின் னொருபெருங் கூத்தே. (௪௭)

நேரிசைவெண்பா.

தேத்தந்த கொன்றையான் றெய்வத் தமிழ்க்கூடன்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றெமைவிட்
டேகவி மானமுனக் கேன். (௪௮)

கட்டளைக்கலித்துறை.

ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுமற்றொர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
றேனின்ற வைந்தருச் சிந்தா மணியொடத் தேனுவுமே. (௪௯)

தாழிசை.

தேனறாத சிலைக்கரும்பு கொலைக்கரும்பொரு வேம்பெனுந், தேம்புயத்தணி வேம்பிணைக்கனி தீங்கரும்பெனு மிவ்வண,—மானறாத மழைக்கணங்கையு மாறியாடத் தொடங்குமான், மாறியாடுநின் வல்லபந்தொழ வந்தபேர்க்கும் வருங்கொலோ,—கானறாத சுருப்புநாண்கொள் கருப்புவில்லியைக் காய்ந்தநாட், கைப்பதாகை கவர்ந்துகொண்டதொர் காட்சியென்ன வெடுப்பதோர்,—மீனறாத வடற்பதாகை விடைப்பதாகை யுடன்கொளும், வீரசுந்தர மாறமாறடும் வெள்ளியம்பல வாணனே. (௫0)

(௫0) கொலைக்கு அரும்பு வேம்பு - கொலைத்தொழிலின் பொருட்டே முளைத்தவேம்பு. மாறியாடல் - கான்மாறி நடித்தல்; மாறிப்பேசுதல். கான் அறாத - வாசனையைவிட்டகலாத.

பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானிலாப் பரப்பு மகுடகோ டீர மறிபுனற் கங்கைநங் கைக்கும், வையமீன் றளித்த மரகதக் கொடிக்குன் வாமபா கமும்வழங் கினையாற்,—பூணுலாங் களபப் புணர்முலை யிவட் குன் பொற்புயம் வழங்கலை யமர்போற், பொதுவினின் றாய்க்கு நடுவின்மை யிடையே புகுந்தவா றென்கொலோ புகலாய்,—தூணுலாம் பசும்பொற் றோரண முகப்பிற் சூளிகை நெற்றிநின் றிறங்குஞ், சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கந் தோன்றலு மூன்றுநா ணிரம்பா,— நீணிலா வெணக்கோண் டணங்கனார் வளைக்கை நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கு, நீடு வான் மாடக் கூடலிற் பொலியு நிமலனே மதுரைநா யகனே.()

கட்டளைக்கலிப்பா.

மதும லர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
ததிலொர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
கறிவு நாணுநம் மாவியு மேகொலாம்
பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பினைப்
புதிய துந்நம் முயிர்ப்பலி யேயன்றோ
பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே. (ருஉ)

கிள்ளைவிடுதூது. கட்டளைக்கலித்துறை.

புழுகுநெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க
ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண்
டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந்ததநீ
பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே.()

(ருக) தோரணம் - கோபுரவாயில். (ருங) பழகியசொற்குப் பயனாக அவர்கருத்தறிந்து போதருவாயாக என்பது. கருத்தாவன - தலைவிமாட்டுக் காதலுண்மை யின்மைகள்.

நேரிசைவெண்பா.

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி யார்க்கவமே
வந்ததொரு பெண்பழியென் வாழ்த்துகே—னந்தே
வடியிடுமுன் னையர்க் கடுத்தவா கேட்டேன்
கொடியிடமாப் போந்த குறை. (நிச)

காலம். மடக்கு. தாழிசை.

குறுமுகைவெண் டளவளவின் மணந்துவக்குங் காலங்
கொழுநரொடு மிளமகளிர் மணந்துவக்குங் கால
மறுகுதொறு நின்றமடர்க ளுருத்திகழுங் காலம்
வரிசிலைகொண் டுருவிலியு முருத்திகழுங் காலஞ்
சிறுமதிநம் பெருமதியி னுகப்படருங் காலந்
தென்றலிளங் கன்றுமுயி ருகப்படருங் கால
நிறையினொடு நாணினொடு மகன்றிரியுங் கால
நேசர்மது ரேசர்வரை யகன்றிரியுங் காலம். (நிரு)

நேரிசைவெண்பா.

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே - யிம்முறையு
மிம்மேனி காமநோய்க் கீடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொ றீங்கு. (நிசு)

சிந்து. கட்டளைக்கலிப்பா.

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாங்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினே

(நிசு) பெம்மான் - பெருமானென்பதன் மரூஉ. உண்டாங்கொலென்பது உண்டாயிருப்பின் வந்து எம்மைஅணைந்திருப்பரன்றோ என்பதுபடநின்றது.

மிருந்த வீடும் வறும்பாழ தாமவர்க்
கெருத்துக் கோட்டிலும் பொன்வேய்ந் திடச்செய்தே
மருந்த னந்மக் கோதன மேயப்பா
வாட கத்துமற் றுசையவ் வையர்க்கே. (ருஎ)

மடக்கு. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐய மணிக்கல மென்பணியே யன்பணி யக்கொள்வ தென் பணியே, மெய்யணி சாந்தமும் வெண்பலியே வேண்டுவ துங் கோள வெண்பலியே, யெய்ய வெடுப்பதோர் செம்மலையே யேந்தி யெடுப்பதோர் செம்மலையே, வையகம் வாய்த்த வளம்பதியே வாழ்வது கூடல் வளம்பதியே. (ருஅ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாட லெழுதா மறை யோடு மிசைமுத் தமிழ்பாடப், பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும் பெருமான் முன்சென்றுள் சிறுமா னென்சொல் கேன், பாடா ளம்மனையு நாடா ளெம்மனையும் பயிலா டண்ட லையு முயலாள் வண்டலையு, மாடாஞ் மஞ்சனமுந் தேடா ளஞ் சனமு மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே. (ருகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னியந் துவைப்பச் சங்க மேங்கிடச் செழிய ரீன்ற
கன்னியை மணந்தே யன்றே கன்னிநா டெய்தப் பெற்றார்
மின்னிவண் முயக்கும் பெற்றால் வெறுக்கைமற் றிதன்மே லுண்
கொன்னியல் குமரி மாடக் கூடலம் பதியு ளார்க்கே. [டோ

(ருஅ) ஏந்தியணைப்பதும்பாடம். (ருகூ) முதுபாடலாகிய மறைஎன்க. (சுo) உத்தமவிலக்கணமுடைய பெண்ணை மணக்கி ன் எல்லையில்லாதசெல்வம் பெருகுமென்பது நூற்றுணிபு. வெறு க்கைக்கேதுவாகியமுயக்கை வெறுக்கையென்றது உபசாரம்.

கார். விருத்தக்கலித்துறை.

கேளார் புரஞ்செற்ற வின்ஞரி தோயக் கிளர்ந்துற்றதோர்
தோளாளர் கூடற் பதிக்கேகு முகில்காள் சொலக்கேண்மினோ
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த வென்சொன் மறுத்தேக
ருளாண்மை யன்றோ தலைப்பட்ட வூரிற் றனித்தேகலே.[ன்மின்

இடைச்சியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற
ரெண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சிபே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத் தோயீர் வாளா
மண்டுமென் னகத்தி லெல்னீர் மத்திட்டு மதிக்கின் றீரே.(கூ௨)

கட்டளைக்கலித்துறை.

ஈர மதிக்கு மிளந்தென் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்கோலு மேகொடுங் கோன்மைமுற்றுந்
தீர மதிக்குஞ்செங் கோன்மையென் றுஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே. (கூ௩)

வஞ்சிவிருத்தம்.

கரிய கண்டங் கரந்தவோர்
திருபர் கூடலி னெஞ்சிரே
யுருவ மும்பெண் ணுருக்கொலா
மருவ மென்பதென் னுவியே. (கூ௪)

விருத்தக்கலித்துறை.

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசாந்த
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுந்தனு வுங்கூ னிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே. (கூ௫)

(கூக) தோளில் வின்ஞரிதோய்தல் அம்பெய்ய இழுக்குங்கால்.

வலைச்சியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு முங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே. (௬௬)

நேரிசைவெண்பா.

விற்கரும்பே யொன்றிதுகேண் மென்கரும்பே யன்னார்தஞ்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமா - னற்கரும்பை
டாளார் கடம்பவனத் தையருமற் றென்னியும்
வாளா வலர்தூற்று வாய். (௬௭)

கட்டளைக்கலிப்பா.

வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் றுயென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பானுவி லோசன
பரம லோசன பக்த சகாயடா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே. (௬௮)

கலிவிருத்தம்.

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணினுட்
இட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே. (௬௯)

---

(௬௬) காசினியேழுமென்றது இவ்வுலகின் எழுவகைத் தீவுக ளையும். இதனை பிள்ளைத்தமிழ் சிறுபறைப்பருவத்து முணர்க. (௬௭) கரும்பேயையன்னார் என்பதோர் பொருளுங்காண்க. கருமை - பருமை. (௬௯) தெப்பத்திருவிழாமுடிவில் சோம சுந்தரக்கடவுளைத்தரிசித்துக் காதலித்த தலைவிகூற்று.

நேரிசைவெண்பா.

குங்குமச்சே றூடும் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூட - லங்கயற்க
ணம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தே மஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி. (எ௦)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக் கெழிலார் களனுங் களனு வருளா, நன்னீ ரமுதக் கடலா கியுளார் நரியைப் பரியாக் கிட டத் தினரா, லங்கீர் மையின்மிக் கென்னீர் மையெனு வடன்மா மடன்மா வரமா றுசெயா, மைங்கீ ரளகத் திளமா னையன்னீர் வருவேன் மதுரைத் திருவீ தியிலே. (எக)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத் திகிரிப் படையுய்த் தவர்கூடற், றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத் தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர், புருவச் சிலையிற் குழைபட் டுருவப் பொருகட் கணைதொட் டமராடுஞ், செருவிற் றொலைவற் றவரைக் கொலுநற் சிலைசித் தசர்கைச் சிலைதானே. (எஉ)

கட்டளைக்கலித்துறை.

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேண்
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்சின் மருங்குல்சுற்று
மிலைசிலை யாக்கொண் டிளமானை யெய்திடு மிங்கிவர்பூங் [றே.
குலைசிலை யாக்கொண் டவர்போலு மாற்செம்மல் கொள்கைநன்

(எ௦) மையிடம் என்பது போலி. (எஉ) தருக்கள் செறிந்திருத்தலால் சிறைகளைப்பெற்றுலொத்த அல்லது சிறைக்காவலைப் பெற்றுலொத்த மலயமலையென்க. (எ௩) சிலை பூங்குலையாக்கொண்டவர் - கல்லைப் பூங்கொத்தாக எறிந்த சாக்கியநாயனூர். இவரையுவமித்தது கருத்துவேறு செய்கைவேறுதல்பற்றி, பூங்கொத்தைச் சிலையாக்கொண்ட மன்மதனுரெனவுமாம்.

பாண். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொங்குரை யாற்றி லிட்டுக் குளத்தினிற் றேட நீடு
மங்குறோய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாணு
வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே.()

நேரிசைவெண்பா.

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழு
மூழி முதல்வர்க் குருவழிந்தே - யாழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை. (எ௫)

மறம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமுகத்து திமிர்குடுமி மாடக் கூடற் சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்று, தொருமுகத்தி லொருகோடி மன்னர் மடிந் தொழிந்தா ருனைவிடுத்த மன்னவர்யா ருரையாய் தூதா, மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான் மணம் பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னாய், திருமுகத்தி லெழுத் திதுவேற் றிருமுடியி லெழுத்துந் தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினெடுஞ் சென்றே. (எ௬)

குறம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செல்லிட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா தேவிக் கன்று, சொல்லிட்ட குறமகள்யான் றும்மலுநல் வரத்தே காண் சுளகி லம்மை, நெல்லிட்ட குறிக்குநீ நினைந்தபொரு ளொருளதுவித் திலக்கச் சார்க்கும், வல்லிட்ட குறியினெடும் வளையிட்ட குறியுளதோர் வடிவு தானே. (எஎ)

(எ௪) கொங்குரை - கொங்கம்பொன். இது முற்காலத்து வழங்கிய மாற்றுயர்ந்தபொன். (எ௬) தருமுகத்து திமிர்தல் - கற்பகவிருக்ஷத்தினுனியையளாவி ஓங்கல்.

விருத்தக்கலித்துறை.

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவரா வரையினர் திருமுனி தொருவர் விளம்பாரோ
குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவு கொழுந்தோடப்
படவரா வெனவெரு வருமொரு தமியள் படும்பாடே. (எஅ)

கட்டளைக்கலித்துறை.

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய் நாணும்விட் டாள்வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே. ()

மேகவிடுதூது. எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏமவெற் பென்றுகயி லாயவெற் பென்றுமல யாசலத் தென்று முறைவார், கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம் வளர் கூடலிற் சென்று புகலீர், தாமரைக் கண்டுயிலு மாலெ னச் சந்தமலி சாரலிற் றுஞ்சு முகில்காண், மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர் வாய்மடுத் துண்டொ ழிவதே. (அ0)

சம்பிரதம். மேற்படிவேறு.

மட்டறுக டம்புவிய னைத்துமொரி மைப்பினின்ம றைத்துடன்வி டுத்தி டுவன்மற், றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவ னித்தனையும் வித்தை யலவாற், றட்டமத னைப்பொ டிப டுத்திமது ரைக்குளுறை சொக்கர்குண மெட்டி னுடுமா, சிட்டர்கடு தித்திடுமெ கத்துவம னைத்துமொரு செப்பினுள டக் கிடுவனே. (அக)

(எஅ) குடதிசைகொழுந்தோடவென இயையும். புகையெ ன்றது மாலைப்பொழுதிற் றேன்றுமிருளை. அழலென்றது காந் தியை. (எகூ) குருகு - கைவளை, நாரை, வெண்மை.

(அ0) ஏமவெற்பும் கயிலாயவெற்பும்போல மலயாசலத்து உறைவாரென்க.

நேரிசைவெண்பா.

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
வெடுத்த பதஞ்சலியா ரேனுந் - தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனர்
சீறிக் குனித்தார் சிலை. (அஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ சிவவாவி யொன்று முளதோ, விலையோ வறிந்திலமிம் மதனுண்மை யெ ன்புகல்வ திதுவே தவம்பி றிதெனு, முலையே யணிந்தமுகிழ் நகையீரொர் பெண்கொடியின் முலையோடு முன்கை வளையான், மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம் மதுரே சர் தந்த வரமே. (அங)

உருவெளிப்பாடு. கட்டளைக்கலித்துறை.

வரும்புண்ட ரீக மிரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே. (அச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர்நுங் கடுக்கைக் காட்டின், மருவிட்ட கொன்றைவெள்ள மடுப்படிந்து மூண்டெ ழுமான் மதித்தி கெட்டேன், செருவிட்ட விழிமடவார் வாயிட் டுச் சுடுவதல்லாற் செங்கை யீட்டு, மெருவிட்டு மூட்டிடநீர் விற்கிட்டு மூட்டியவா வென்சொல் கேனே. (அ௫)

(அஉ) தடுத்தவன் - இராஜசேகரபாண்டியன். (அச) கைத் தாமரையால் மேருவாகியகல்லையும் அடித்தாமரையால் நெஞ் சமாகிய இரும்பையுங்குழைத்தபிரான் என்க. (அ௫) விறகிட்டு மூட்டியவா என்றது விறகுசுமந்ததை.

விருத்தக்கலித்துறை.

என்போ டுள்ளமு நெக்குரு கப்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ
தன்போல் காமன் சாப முடித்தாற் றாழ்வுண்டே
முன்போர் காமன் சாப மனைத்து முடித்தாய்க்கே. (அசு)

நேரிசையாசிரியப்பா.

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா னுரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் மூழ்கிப் பதும பீடத்
தூற்றமி றுமு முலப்பில பஃறவம்
வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றொருவனின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரி னொருபழி சுமந்த
புன்றொழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
யன்றருள் சுரந்த தொன்றே சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
யெளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே. (அஎ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றே யாற்றுச்

(அசு) காமன் - காமன், கா+மன்.

சிறுதுயிலும் பெருமூச்சுங் கண்டுமிரங் கலையாற்
றெறுமறலி நீயேயித் தெண்ணி லாவு
மெறியுநெடும் பாசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா லிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனை மதுரேசர் மிலைச்சு
நாகிளவெண் டிங்களென நவில்கின் றாரே. (அஅ)

தாழிசை.

நவ்வியங்கண் மானுமானு மினிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங்க றுத்துளார்
கைவ்விளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
செவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகைநீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவ்விரிந்த வல்குலீர்நும் மன்னைமார்கள் சங்கையிற்
படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே. (அகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற் பார்வை மட்டோ, காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமை படைதல் கணக்கே யன்றோ, மாமிக்குக் கடலேழும் வழங்கினீ ரொருவேலை மகனுக் கீந்து, பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும் போக்கி னீரே. (கூ0)

மேற்படி விருத்தம்.

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்போடு நெட்டுயிர்ப்பு நெடுங் கண் ணீரிற், பீரோடு வனமுலையுங் குறையோடு கிறையுயிரும்

(அஅ) பாசம் கயிற்றுவடிவமைந்த ஓராயுதம்.

(கூ0) மீன்களுக்குரிய கடல்களனைத்தையும் ஒழித்தீராகவின் மீன்களெல்லாம் உம்மைவந்தடைதல் முறையேயென்பதொரு நயமுங் காண்க. (கூக) குறையோடு தாரோடு என்புழி ஓடு கருவிப்பொருட்டும் ஏழாம்வேற்றுமைப்பொருட்டுமோம்.

பெற்று ளன்றே, காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர் நறை கமழ்பூங் கொன்றைத், தாரோடு மனஞ்செல்லத் தனே யோடுந் தான்செல்லாத் தமிய டானே. (கூக)

பதினுன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்று டடாதகா தேவியென் ருெருபேர், தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ சவுந்தர மாறனு னதுவும்,—குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர் கொண்டதுந் தண்டமிழ் மதுரங், கூட்டுண வெழுந்த வேட் கையா லெனிலிக் கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்,—பமரம் யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும் பனிமலர்க் குழலியர் பளிக் குப், பானிலா முன்றிற் றூநிலா முத்தின் பந்தரிற் கண்ணிமை யாடா,—தமரர்நா டியரோ டம்மனை யாட வையநுண் ணுசுப் பள வலவென், றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட லடலரா வலங்கல்வே ணியனே. (கூ௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந் தளித்தீ ரொருவற் கது நிற்கத், தொடுக்குங் கணைவே டனக்குலவாத் தூணி கொடுத்தீர் போலுமா, லெடுக்குங் கணையைத் தெய்தகணை யெண்ணத் தொலையா தென்செய்கேன், றிடுக்கங் கொளமால் சிலைமதனைச் சினத்தீர் கடம்ப வனத்தீரே. (கூ௩)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடமுடைய நறுநெய்க்குண் முழுகியெழு வதையொத்த கரடமத கரிபெற்றெரு் பிடியேபோன், மடவநடை பயில்பச்சை மயிலையொரு புறம்வைத்த மதுரையழ கியசொக்கர் வரைவே

(கூ௨) கூட்டுணல் - கொள்ளையிட்டுண்ணல். இடை யுண்டோ இல்லையோ வென்பதனல் முன் இடையளவிற் சந்தேகம், இப்பொழுது மானுடமாதோ தேவமாதோ வென்பதனல் இவர் வடிவமுழுதினும் சந்தேகமுளதாயிற்றென் பது.

லோய், நடையுமெழு துவைநிற்கு நிலையுமெழு துவைசொற்கு ணலமுமெழு துவைசித்ர ரதிபோல்வா, ளிடையுமெழு துவை முற்று மிலதொர்பொரு ளையுமொக்க வெழுதிலெவ ருனையொ த்த பெயர்தாமே. (கூச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல் விகிர்த கேண்மோ, வேதமினின் றிருவுருவொன் றீருருவாய் நின்றதினு மிறும்பூ தந்தோ, போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு பூவை மார்க்குக், காதலனுய் மற் றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு காட்சி தானே. (கூரு)

நேரிசைவெண்பா.

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்த
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே - பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக. (கூசு)

கட்டளைக்கலித்துறை.

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே. (கூஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்த மிசையே
மலரா கிடந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்

(கூச) மடவம் - மடப்பம். நடைமுதலியன வடிவமில்லனவா தலின் வடிவமில்பொருளை நிகர்க்க வரையவேண்டுமென்பாள். முற்றுமிலதொர்பொருளையும் ஒக்கவெழுதில் என்றாள்.

(கூஅ) மலர் ஆகிடு அந்த நயன அரவிந்தர் எனப்பிரிக்க. எதுகைநோக்கிக் ககரமிகாதாயிற்றெனக்கொண்டு சரணாரவிந் தமிசையே கிடந்தநயனமெனினும் அமையும்.

சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே.

தாழிசை.

தேன்வழங்கு கடுக்கையார்கரு மான்வழங்கு முடுக்கையார்
திருவிருந்த விடத்தினாருள் கருவிருந்த நடத்தினார்
மானடங்கிய வங்கையார்சடைக் கானடங்கிய கங்கையார் [லார்
வைகையொன்றிய கூடலாரிவள் செய்கையொன்றையு நாட
கானவேயிசை கொல்லுமாலுற வானவேய்வசை சொல்லுமாற்
கன்றியன்றி லிரங்குமாலுயிர் தின்றுதென்ற னெருங்குமாற்
றீநிலாவனல் சிந்துமாற்கொல வேனிலான்மெல முந்துமாற்[மே.
றினமிடைந்திடைநொந்தபோன்மகள்மனமிடைந்ததுணர்ந்து

ஊர். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உடையதோர் பெண்கொடி திருமுக மண்டல மொழுகுபெ
ருங்கருணைக், கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள கடவு
ணெ டும்பதியாம், புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்
கலை புனையுமோர் பெண்கொடியா, வடகலை தென்கலை பலகலை
யும்பொலி மதுரைவ ளம்பதியே. (கOO)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிக் தமர்த்த மதரரிக் கண்
ணியு நீயு, மழலைா றமுதக் குமுதவாய்க் குழவி மடித்தலத்
திருத்திமுத் தாடி,—யுள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்
தாங் குகந்தனி ரிருத்திரா லுலக, மொருங்குவாய்த் திருக் கொ
ருதலைக் காம முற்றவா வென்கொலோ வுரையாய்,—வெள்ளி
வெண் ணிலவு விரிந்தகோ டீரம் வெஞ்சுடர்க் கடவுளுங் கிடை

(கூஅ) ஒரங்கியென்றது சந்திரனை. புகையாமை - இருள்கவி
யப்பெறுமை. (கOO) பூதேவி கலைமகளாதலாவது - கலைமக
ளென் றெண்ணுமாறு பலகலைகளும் தன்பாற் பொலியப்பெறு
தல். (கOக) இது சோமாஸ்கந்தமூர்த்தியைச் சுட்டியது.

த்து, வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட மீக்கொளூத் தாக்கணங் கனையார்,—கள்ளவாட் கருங்கண் ணேறுகாத்திட்ட காப்பென வேப்பலர் மிலைச்சுங், கைதவக் களிறே செய்தவக் கூடற் கண்ணுதற் கடவுண்மா மணியே. (௧௦௧)

நேரிசையாசிரியப்பா.

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னொடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரே ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ரூர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழுமலைக் கொலைமதக் களிற்றொடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியுமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவே ளுழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம

(௧௦௧) மகுடத்தைமீக்கொண்டு வேப்பலருமிலைச்சுமென்க.

(௧௦௨) வன்னம் - எழுத்து, நிறம். பரி - வேதமாகியகுதிரை. பூங்கொடி - சிதேவி. மட்கொடி - பூதேவி. வான்கொடி - திருமாலாகிய இடபக்கொடி. ஆழி - கடல், உருள். நிலையென்பதனைத் தேருக்கும் பூமிக்கும் இயையக்கொள்க. மீனவர்பெருமான் - உக்கிரபாண்டியர். ஆங்கெழுகடல் - சோமசுந்தரக்கடவுளால் அழைக்கப்பட்டுள்ளவை. கிடந்தென - கிடந்தனவென.

பெய்முறை வாரி பெயும்பெய லல்ல
நெய்பா றயிர்முதற் பல்பெய றலைஇப்
பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட
லிருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
இந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னொடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
னின்பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாமென
மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
யினையநின் றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் றகவே
வாழியெம் மனனு மணிநா வும்மே. (௧0௨)

மதுரைக்கலம்பகம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

(௧0௨) ஏழுகடலுமுண்ட மேகங்களாகலின் பெய்யுமுறைப்படி நீர்பொழியும் மழைமட்டுமல்ல நெய் பால் தயிர்முதலிய பலமழைகளும் பெய்துவிடுதலால் பெருவளஞ் சுரந்தனவென்பது. தலைஇ - வினையெச்சம். தலையலென்பது மழைபெய்துவிடுதல். நுழை-நுட்பம். கொண்மூக்குறும்பு என்பதும்பாடம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நீதிநெறிவிளக்கம்.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக - ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. (௧)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு - முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (௨)

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கு
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காம
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது. (௩)

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் - சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. (௪)

---

(௧) இது சிதம்பரச் செய்யுட்கோவையினும் உள்ளது.

(௨) உயிர்க்கு நீங்காத்துணை கல்வியினும் மேம்பட்டது இல்லை என்க. ஊங்கு - மேம்பட்டது. (௩) அகற்றல் - அகலமாக்கல். சின்னீரவின்பம் - அற்பத்தன்மையுள்ளசுகம்.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு - முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. (ரு)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு - நவையஞ்சி
யீத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (சு)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (எ)

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பக
லேதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். (அ)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல் - கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்ப்ரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (கூ)

(சு) ஆகுலம் - ஆரவாரம். பூத்தல் - உண்டாகப்பெறுதல். (அ) உட்கு - முதனிலைத்தொழிற்பெயர். உட்குதல் - நாணுதல். உடைந்துளார்கல்வி என்க. (கூ) மற்றுஞ்சிலவென இயையும். உய்த்துச்சொரிதல் - கொண்டுபோயெறிதல். ஆங்கு - எறிந்த அவ்விடத்தில். கருமை - பெருமை.

எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா - மனைத்தக்காண்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். (கo)

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா - வென்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (கக)

இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப - பெரிதுந்தா
முற்பக னோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (கஉ)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக் கழகுசெய் வார். (கங)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க - சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (கச)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. (கரு)

(கo) மணமகன்பூண்ட நல்லறம் என்க.
(கஉ) இவறன்மை - உலோபத்தன்மை. கற்புகல்லாமைகள் அறிவுக்கும் அறியாமைக்கும் ஆதலால் காரணவாகுபெயர்கள்.
(கங) முற்ற - எக்காலத்தினும். (கச) கூடம் - சம்மட்டி.

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு - மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். (கசு)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. (கள)

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின். (கஅ)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற் - றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம். (கசு)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (உо)

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாமில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்

(கள) மீச்செலவு - வரம்புகடந்த நடக்கை.
(கஅ) பாடு - பெருமை. (கசு) வியப்பிப்பான் - நன்குமதிக் குமாறுசெய்ய நினைப்பவன். (உо) பெருஞ்சுட்டு - உயர்வாக மதிக்கப்படுதல். (உக) உரைப்பவை பயனுள்ளனவாயினும் தாம்நில்லார் வாய்ப்பட்டமையால் வெற்றுரையாயின.

தில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். (உக)

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார் - திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். (உஉ)

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொர்கமின் றாத்தைவா யங்காத்தன் - மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். (உங)

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா - தாக்கணங்கு
மாணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில். (உச)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
வேதிலரை நோவ தெவன். (உரு)

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் - மாத்தகைய

(உஉ) வேறுபயன் - ஈண்டு நரகவேதனை. வேலைகொளவி - தம்மைத் தண்டிக்கச் செய்துகொள்ளல். (உச) போக்கு - குற்றம். பேடு - பெண்டன்மையை அவாவி ஆண்டன்மையை இழந்தது; ஆண்டன்மையை அவாவிப் பெண்டன்மையை இழக்குமேல், அது அலியெனப்படும். இக்கருத்துப்பற்றியே, கந்தபுராணத்தாரும் தேவரையேவல்கொள்படலத்தில் "பெண்ணேவலிதாலோ பேடோ வெனவுரைப்பார்." என வேறுபிரித்து ஓதியருளினர். (உரு) கை - சிறுமை.

வந்தப் புரத்தது பூனை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு. (உசு)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு - மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை. (உஎ)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந் - தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. (உஅ)

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலு மாண்பே - குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. (உகூ)

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொரு
ளின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவ
னவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன். (௩O)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
யுடுப்ப வுடுத்துண்ப வுண்ணு - விடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
கெட்டுயிர்ப்போ டற்ற பிணம். (௩க)

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றொ டுணையாத் தெரிதந்துங் - குற்ற
மறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று. (௩உ)

(உசு) பூட்கை - வலி. (௩உ) சிறைப்புறம் - ஒதுக்கிடம்.

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு. (ருரு)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகு - மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
போரா பெருமூச் செறிந்து. (ருச)

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுத - றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (ருரு)

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் றூழ்வார்க் - கணிய
திளையாண் முயக்கெனினுஞ் செய்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங் கொளல். (ருசு)

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (ருஎ)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா - வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. (ருஅ)

(ருச) கண்கூடு - கண்ணுக்குத்தோன்றுவது; எனவே பிரத்தியக்ஷம். (ருரு) நெடுமொழி - பெருமையைத் தருமொழி; அது உறுதிச்சொல். (ருஅ) தூங்கல் - அசையுமியல்பு.

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
யீகையி னெக்கழுத்த மிக்குடைய - மாகோல்
பகைமுகத்த வெள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு. (௩௯)

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம். (௪0)

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்த
மின்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின். (௪௧)

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாருங் - கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிகுடினும். (௪௨)

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுவைபோ டெற்கு. (௪௩)

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப - விகன்மன்னன்

(௩௯) மா கம் - பெரிய ஆகாயம். எக்கழுத்தம் - தலையெடுப்பு. பகைமுகத்தவேலான் - பகைத்தன்மையைத் தன்னிடத்துள்ளவேலான்; எனவே, பகைவரைவணங்காதவலியன் என்றவாறுயிற்று. (௪0) மற்றோர்விளைவு - பிறகாதல். (௪௧) சிறுவரை - கணப்பொழுது. (௪௨) பொய் - நிலையற்ற உலகவின்பம்.

சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை. (சச)

செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா - கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு. (சரு)

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க - வொவ்வொருகா
லெண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னான். (சசு)

பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
இழைமை பிறிதொன்றுங் கொள்ளார் - வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு. (சஎ)

மன்னர் புறங்கடைக் காத்து வறிதேயா
மெங்நலங் காண்டுமென் றெள்ளற்க - பன்னெடுநாட்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும். (சஅ)

உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப - விறுமுயிர்க்கு
மாயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில. (சகூ)

(சரு) வாய்வெருவல் - சொல்லுதற்கஞ்சுதல். (சசு) காதலித்த - வினையாலணையும்பெயர். (சஅ) மிக்கு - பெருமை. (சகூ) உறுதிபயப்ப - நன்மையை நல்கவல்ல முயற்சிகள், ஆயுண்மருந்து - ஆயுளைப்பயக்குமருந்து.

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
யுயலாகா வூழ்த்திறத்த வென்னார் - மயலாயு
மூற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றா றெறிகான் முகத்து. (ருO)

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே - யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. (ருக)

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து - மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (ரு௨)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (ருங)

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர் - நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (ருச)

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சா
ரகப்பகை யொன்றஞ்சிக் காப்ப - வனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்லாலுங் காமப் பகை. (ருரு)

(ருO) முயற்று - முயற்சி. உயல் - ஒழிதல். ஊற்றம் - மறைவு. (ருக) பால் - ஊழ். (ருச) ஓம்புதல் - ஒழிதல்.
(ருரு) யாப்பார் - தம்வசப்படுத்தவல்ல முனிவர்.

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டுங் - கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (ருசு)

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமா
நாளுலந்த தன்றே நடுவ னடுவின்மை
வாளா இடப்பன் மறந்து. (ருஎ)

மனத்த கறுப்பெனி னல்ல செயினு
மனைத்தெவையுந் தீயவே யாகு - மெனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். (ருஅ)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே - யனல்கொளுந்தும்
வெங்கார ம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (ருகூ)

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கு
மெய்தாமை சொல்லின் வழுக்காது - மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா றெனல். (சுo)

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய

(ருசு) கண்ணோட்டம் - கண்ணினது ஓட்டத்திலுளதாவது; அது தாட்சிணியம். (ருகூ) சிங்கி - நஞ்சு.

(சுo) பொய்முதலியநான்கும் சொல்வினெய்தாமலும் மெய்யில் ஐம்பொறிகளும் நெறிதப்பிச்செல்லாமலுங்காத்து மன மாசகற்றுநலமே நல்லாறெனல் என்பது.

செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்துபைங் கூழ். (சுக)

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவுந் - தவம்விற்றுங்
கூனோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை. (சுஉ)

இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியா
ருடைமைகொண் டேமாப்பார் செல்வ - மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும். (சுங)

பெற்ற சிறுகப் பெறுத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா - முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
வெரிதழன் மாயா திரா. (சுச)

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
யொத்த கடப்பாட்டிற் றாளூன்றி - யெய்த்து
மறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள். (சுரு)

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வங்
குலமகளே யனையோர் செல்வங் - கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். (சுசு)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னல்குரவே போலு நனிநல்ல - கொன்னே

(சுஉ) விற்றல் - முற்றும்விடல். (சுச) விராய் - விறகு.
(சுரு) நிலை - ஆச்சிரமம். தாள் - முயற்சி.

யருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். (சு௭)

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்த
லோகோ கொடிது கொடிதம்மா - நாகொன்று
தீவினைக் கம்மிய னுல் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரென்செய் வார். (சு௮)

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழித்
னல்வினை கோறலின் வேறல்ல - வல்லைத்தம்
மாக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். (சு௯)

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழா - ரறனல்ல
வெண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினு
மொண்மையிற் றீர்ந்தொழுக லார். (௭௦)

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னுஞ் - செயிர்த்துரைப்பி
னெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோ
லெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. (௭௧)

அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப - வல்லாற்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார். (௭௨)

---

(௭௧) என்பார் நாகரிகம் - என்பவர்மாட்டுவைக்கும் கண்ணோட்டம். (௭௨) ஆகுலம் - பலரறிதல். கூழ் - பயன். பிறர் பிறர்செய்ப - யாரோபிறரொருவர் செய்வார். அறிமடம் - அறிந்தும் அறியார்போன்றிருத்தல்.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்-பயமின்று[போற்
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்
கைவிதிர்த் தஞ்சப் படும். (எங)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்குந் - தெய்வ
மில்லென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (எச)

தீய செயற்செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல - தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். (எரு)

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயுஞ்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர் - முன்னைத்தம்
மூழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில. (எசு)

பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேற
லறனன்றே யாயினு மாக - சிறுவரையு
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய். (எஎ)

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே - பெரிதுந்த
மின்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்த லலம். (எஅ)

(எங) பயம் - பயன். (எரு) கவயமாப்போல் தீயசெயல்செய்வாரென்க. தீயனவாகா நல்லனவாம் எனக்கூட்டலும் இயையும். (எசு) நாள்வாயும் - நாடோறும்.

கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார் - பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார். (எகூ)

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார் - நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னுந்
தீய விலங்கிற் சிலர். (அ0)

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு - மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. (அக)

ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம். (அஉ)

கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லர் - மற்றுத்தங்
கேள்வற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார். (அங)

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார் - பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவங்
கற்பின் மகளிர் பிறப்பு. (அச)

(அ0) கடு - வைகப்புப்பொருள்களின்மேற்று. (அக) வேறு இல்லையன்றே என்க. அன்றே யென்பது தேற்றப்பொருட்டு.

பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார். (அரு)

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லா
மயிற்சுவையி னாகுவவென் றெண்ணி - யயிற்சுவையும்
பித்துணக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போன்
மொத்துண மொய்ம்பி னவர். (அசு)

அன்பொ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார் - புன்புலாற்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றும்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார். (அஎ)

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப - முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில். (அஅ)

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉ - மவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர். (அகூ)

பரபரப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப - வொருவாற்று

(அரு) உறைத்தல் - பதிதல். (அசு) பித்து - பண்பாகுபெயர். பித்தர் எங்ஙனம் உண்டியைக் கொள்வரோ அங்ஙனம் சிறிதுகொள்வரென்றபடி. (அஎ) உயிர்நிலை - உடல். புக்கில் - புகுதலையுடையவீடு. புக்கு முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.

னல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
வெவ்வாற்ரு னுய்வா ரிவர். (கூ0)

இளைய முதுதவ மாற்றுது நோற்றென்
றுளைவின்று கண்பாடு மூழே - விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாருந்
தாழாமே நோற்பார் தவம். (கூக)

நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
யல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கு - மெல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்டார்
செலவு பிழைத்துய்ப்ப போல். (கூஉ)

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே - கஞ்சுக
மெய்ப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது. (கூங)

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த
வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
யங்கங் குலைவ தறிவு. (கூச)

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந் தாங் கோடிப் பரக்கும் - கழிமுடைப்
புன்புலா னூற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து. (கூரு)

(கூஉ) நோனுமே - பொறுக்காமல். அல்லன - தீயவூழ். செலவு - செல்லுநெறி. பிழைத்து - பிழைப்பித்து. (கூச) வஞ்சித்த - வினையாலணையும்பெயர். (கூரு) மறைவழிப்பட்ட - மறைவில்நடந்த. வழி - ஏழனுருபு. பழிமொழி - பழிப்பொழுக்கத்தைச் சுட்டியமொழி.

மெலியார் விழினு மொருவாற்று னுய்ப
வலியார்மற் றென்றனு முய்யார் - நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினு
முய்யுமா றுய்யா பிற. (கசு)

இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லாற் - பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
யூனோம்பி யூன்றின் பவர். (கஎ)

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி - யெவரெவர்க்கு
முப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையா
னெப்பாலு நிற்ப தென. (கஅ)

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி, கைவருதல் கண்ணுப் புலங்காப்பார் - மெய்யுணர்ந்தார், காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச், சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. (கக)

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போன் - முற்றத்

(கசு) மெலியார் - இல்லறத்தார். வலியார் - துறவறத்தார். நொய்ய - அற்பமானவை. பிற - கனமானவை. (கஎ) வான்வழக்கம் - மேகம் மழைபெய்தல். (கஅ) உப்பால் - புறம்பு. இதில் உகரச்சுட்டு புறத்தையுணர்த்திற்று. "ஊழையும் உப்பக்கங் காண்பர்." என்னும் திருக்குறளிற்போல. எம்முடையார் தம்முடையான் நிற்பதுபோல நிற்பரென்க. (கக) புலம் - ஐண்டுப் பொறிகள். கண் - கருத்து. காப்பு - புலன்களையடக்கல். பழிநாணம் - பழிக்குநாணுதல் சேர்த்தல் - கடவுள் பாவனையில் மனத்தைநிறுவல்.

துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்ப
மிறந்தவெலாந் துன்பமலா தில். (கOO)

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். (கOக)

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். (கOஉ)

நீதிநெறிவிளக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

(கOO) இறந்தன - மெய்யுணர்விற்றோன்றுதலொழிந்த உலகவின்பம். (கOக) பற்றுவது - கொள்ளுதற்குரிய முத்திநெறி. பின்பற்றுவது - அதற்கமைந்த உபாயமாகிய தியானசமாதிகள். ஒன்று - முதற்பொருள். நீணெறி-முத்திப்பெருநெறி.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் நான்மணிமாலை.

காப்பு.

நாடுங் கமலேசர் நான்மணிமா லைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும் - வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

நேரிசைவெண்பா.

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே - யாரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. (க)

கட்டளைக்கலித்துறை.

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாணல் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரே.

(க) விடங்கர் - டங்கத்தினாற் செய்யப்படாதவர், எனவே, சுயம்பு என்றபடி. இப்பெருமான் எனைச் சுயம்புகள்போலாது வீதியினு மெழுந்தருளுதலால் வீதிவிடங்கரென்பர். டங்கம் - உளி. விடங்கர் - அழகருமாம். (உ) நாண் - நாணம்; கயிறு. வணங்கல் - தலைகுனிதல்; வளைதல். சிலை - மலை; வில் எனச்சிலேடைப்பொருள் கொள்க.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்பாக நகுதலையோ டெழிலாக வணிந்தகம லேச மற்றுன், றன்பாக மிடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்துந் தலைவி டாகத், தன்பாக நின்றிருநோக் கவைதோய்ந்துந் திருநிறம்வே றுகை யாலப், பொன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவென வும் புகலொ ணாதே. (௯)

நேரிசையாசிரியப்பா.

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து டாதபத் தொதுங்கிய
விருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலு முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிராற்
றெடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானுட மடங்க றாணிடைத் தோன்றி
யாடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
விறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணாரூ ரெந்தையெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயு
நடுவண் வைகு நாகிளங் குழவியை
யொருவிரி னொருவி ருள்ளநெக் குருக
விருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி

---

(௪) கருநிறமந்தி என்பதும்பாடம். இழுமெனல்-இனிதாதல்.

யுச்சி மோக்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகு
மெழுதாக் கிளவியி னேழிசை பழுத்த
விழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
யருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே. (ச)

நேரிசைவெண்பா.

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண் டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாந் - தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது. (ரு)

கட்டளைக்கலித்துறை.

போதொன்றிய தண் பொழிற்கமலேசர்பொன் மார்பிலெந்தா
சூதொன்று கொங்கைச் சுவடென்ப ராற்றொல் களிற்றுரிவை[ய்
மீதொன் றுவகண்டு வெங்கோப யாமுகன் வெண்மருப்பா
லீதொன் றடுகளி றென்றெதிர் பாய்ந்த வினைச்சுவடே. (சு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இணங்குகம லாலயமா லிதயத்திற் பொலிந்ததியா கேச ரம்பொற், கணங்குழைமண் மகளிதய கமலத்தும் பொலிதலி னக் கமல மான, மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் சமலைகம லாலயப்பேர் வாய்த்த தான்மற், றணங்கனையா ரிதயமுந்தம் மருட் கொழுந ரிதயமுமொன் றாகுந் தானே. (எ)

நேரிசையாசிரியப்பா.

தானமால் களிறு மாகிதிக் குவையு
மேனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ

யிலம்பா டின்றி யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே
அதா அன்று
ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
யிடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகண்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினு
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. (அ)

நேரிசைவெண்பா.

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானுங்
கருமா னுரியதளுங் கச்சு - மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா. (௯)

கட்டளைக்கலித்துறை.

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகந் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
வாவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் றுலுமஞ்சே
ஹவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே. (௧௦)

(அ) ௩ - நலம்பாடு உம்மைத்தொகை. ௪ - இன்றி இன்றுக வென்னும் வினையெச்சத்திரிபு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தரு ணங்கைதென் கமலேசர், வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர் மங்கைகொண் டனள்போலாந், தாம நீற்றெருளி தன்னிறங் காட்டவெண் டலைநிரை நுரைகாட்டக், காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக் கயலுலா வரலாலே. (கக)

நேரிசையாசிரியப்பா.

வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமு
மாயிரு டுரந்து மழகதி ரெறிப்பன
சுரநதி முதல வரநதி மூன்றுந்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப
வொள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு திறைக்குந் திங்களங் கண்ணித்
தீநிறக் கடவுணின் றன்முறை வணங்குதுங்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுளைய
னூற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
வைவளி பித்தென வமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டி றூண்டி யத்தலை
வாழ்நாண் மிதப்பு நோக்கித் தாழா
தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்

(கஉ) சு - வரநதிமூன்று - கங்கை யமுனை சோணை. கஉ - ஊற்றம்-உறுவது; (நிலைபேறு). கசு - மிதப்பாவது - மீன்படுவதும் படாமையும் அறிதற்காரணமாகத் தூண்டிலிற்பிணிக்கப் படுவதொரு சடைக்கருவி.

றள்ளா முயற்சி தவறுபட் டொழிந்தென
வெள்குறீஇ மற்றவன் விம்மித னாக
வருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமா னந்தத் திரையொடு முலாவி
யெய்தரும் பெருமித மெய்த
வையனின் கடைக்க ணருளுதி யெனவே. (கஉ)

நேரிசைவெண்பா.

என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க - ளன்பெனும்
புண்சுமந்தோ நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வர். (கங)

கட்டளைக்கலித்துறை.

வரந்தந் தருள வரதம்வைத் தாலென் வரதமிடக்
கரந்தந்த தாலிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமந் தியாகரென்ப
தரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே. (கச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசிர மாலை யாகக், கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச் சாத்த, வுள்ளுவது மொழிவதுமற் றுழியாயே லடிமுடிக ளுணர்ந்தே மென்றே, கள்ளமொழி வான்புகிற்றென் கமலேச வவர்க்கவையே கரியு மாமே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமை பைங்குவளை குதட்டி

(கஉ) கஅ - தள்ளாமை - தவறுமை.

மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டேவெள் ளெகினை
நூற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்
தென்பான் மேருவிற் றிகழுங் கோயிலின்
மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
வறியா யல்லை யறிந்துவைத் திருந்துந்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருளிலை
புறக்கணித் திருந்ததை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
ருடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதைப்
பிறவியின் றுயர்நினைக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே. (௧௬)

---

(௧௬) ௧௨ - தேவரகண்டரென்பது தியாகேசப்பெருமானுக்கு வழங்கிவருவதொரு திருநாமம். இதனைக் "கங்கைச் சடையவ ராரூரிற் றேவர கண்டர் வெற்பில்" என்றிங்ஙனம் வருஞ்செய்யுள்களானும் அறிக. (திருவாரூர்க்கோவை-௨௫.) ௨௦-கோள்-கொள்கை. வாய் வினைத்தொகை. நீர் - நீர்மையாலென மூன்றனுருபுவிரிக்க. ௨௪ - போலும் ஒப்பில்போலி.

நேரிசைவெண்பா.

கண்ணனூர் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தென்புலத்தா
ரண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ - விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா ளேக்கா
திருந்தாடு கின்றவா வென். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயொ டேழுல கீன்றவன்னை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப் பிரான்மணி கண்டங்கண்டு
மின்னுயிர்க்கும்புய லென்றுமென் கொன்றைபைந் தாதுயிர்க்கப்
பொன்னுயிர்க்கொண் கன் பொலன்றுகி லாமெந்தை பூந்துகிலே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமாதி னிதயகம லத்து வைகும் பொலிவானு மரியணை மேற் புணரி யீன்ற, மாமாது வழிபடவீற் றிருத்த லானு மறை முதலு நடுமுதலு முடிவி னின்று, தாமாத றெளிவிப்பார் போலு நீலத் தரங்கநெடுங் கடன்ஞால மொருங்கு வாய்த்த, கோமாது மனங்குழையக் குழைந்த வாரூர்க் குழகனார் கிண்கிணிக்கா லழகனாரே. (கஅ)

நேரிசையாசிரியப்பா.

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
விளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட

(கஎ) தூக்கியாடின் திருவடிகளைக்கண்டறிந்தேனெனத் திருமால் பொய்ச்சூள்புகலவும், எம்மையுதைத்தற்கெடுத்தனரோ வென இயமனஞ்சவும் நேரிடுமாகலின், அவைபற்றித்தூக்கிலை கொல்லோ என்பது. விருந்தாடல் - விருந்து ஆளுதல்; அது அவியமிழ்தூட்டல். விண்ணோர்க்கென நான்கனுருபுவிரிக்க.

வுடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளெறுழ்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகுகொப் பளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் கரடத் தடங்களிற் றுரிவையு
மடங்கலீ ருரியு முடன்கிடந் தலமர
விண்பட நிவந்த திண்பு யாசல
நெட்டிலைக் கமுகி னெடுங்கயி றூர்த்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்
பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
வந்தி லாங்கவ ரார்த்தன ரலைப்ப
வொண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக் கலுழ்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
வொருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையி
னொத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
யாருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுண்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்

ரேவரி னொருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறிய தாகு மாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே. (உ0)

நேரிசைவெண்பா.

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு - வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென். (உக)

கட்டளைக்கலித்துறை.

இதுவே பொருளென் றெவரெது கூறினு மேற்பதெது,
வதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்
கும், பொதுவேயென் றுலும் பொருந்துமெல் லோர்க்கும் பொ
துவினிற்கு, மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும் வைக
லுமே. (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வைய முழுது முழுதுண்ண வல்லாற் களித்து நவநிதியுங்
கையிலொருவற்களித்தெமக்கே கதிவீ டளித்தோர்கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால் விமலர் கமலைத் தியாகரென்ப
தைய ரிவர்க்கே தகுமுகம னன்று புகழு மன்றுமே. (உ௩)

நேரிசையாசிரியப்பா.

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
ரு மிந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்

(உ௩) உழுதுண்ணவல்லான் - திருமால்.

பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தபனிய மாடத் தரமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கோலக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்கனார் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலஞ்செய் வீதிப் பொன்மதிற் கமலை

---

(௨௪) உள-குறும்பு - வலி. "அரவுக்குறும்பெறிந்தசிறுகட் டீர்வை" என்பதனானும் அறிக. (மலைபடுகடாம் - ௫0௪-ம் அடி)

கரு யண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே. (உச)

நேரிசைவெண்பா.

இன்னீ ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்து
நன்னீர் வயற்கமலை நாதனூர் - பொன்னூர்ந்த
சேவடிக்கா ளானூர் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலைந்து. (உரு)

கட்டளைக்கலித்துறை.

குலைவைத்த செவ்விள நீர்குளிர் பூம்பொழிற் கொம்புக்கின்ப
முலைவைத்த தொக்குங் கமலேசர் வேணி முகிழ்நகைவெண்
டலைவைத்த வேனற் புனமொக்குங் கங்கையத் தண்புனத்தி
னிலைவைத்த மாதனை யொக்குங் கவணொக்கு நீள்பிறையே. ()

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின் பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக், கறையொழுகும் படவரவம் படரும் வேணிக் கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர், நறையொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர் நானிரண்டு மாவடுவு நாடிக் காணே, னிறையொழுகு மிளநீரு நிற்கக் காணே னீர்செய்த காரியமென் னிகழ்த்து வேனே. (உஎ)

நேரிசையாசிரியப்பா.

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
தீராக் கறியத் திருக்கண் டிறந்தோய்

(உரு) இல் நீர் உலகம் - நிலைபெறாத இயல்புடைய உலகம்,
(உகூ) குலைவகுத்தசெவ்விளநீர் சோலையென்னும் பெண்ணுக்கு முலைவகுத்ததொக்கும், வேணி புனமொக்கும் என்க.
(உஎ) பாம்பு - வெள்ளமடைத்தற்கிடும் வைக்கோற்புரி.

நான்மறை முனிவன் கான்முளை நிற்ப
விடற்கரும் பாசத்தொ டேடற்பொறை நீங்க
வுயிருண் கூற்றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
யடிக டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களென் றேடினர் வணங்கி
யருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
வித்தலத் துற்றவ ரினித்தலத் துறுரெனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வுறழு
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வரமிகு கமலைத் திருநகர்ப் பொலிந்தோ
யெழுதாக் கிளவியின் மொழியெனப் படுதலி
னின்பெருந் தன்மை நீயே நவிற்றுதன்
மன்பெரும் புலமைத் தன்றே யும்பரி
னின்னோ ரன்ன ரின்மையி னின்னிலை
கூறுய் நீயெனிற் றேறுந ரிலராற்
றன்னுடை யாற்றன் முன்னூர் முன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தகுமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனை நீயே யாக
விருடீர் காட்சிப் பொருடணிந் துணர்த்தா
தியங்கா மரபி னிதுவிது பொருளென
மயங்கக் கூறுதன் மாண்புடைத் தன்றே
யளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்
றளரா நிலைமைத் தென்ப வென்றலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் றிசைமயங் கிற்றென

மொழிகுவ தேய்ப்ப முதக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்று முழுவது
மெய்யா திசைக்குதும் போலு
மையவின் றன்மை யளப்பரி தெமக்கே. (உ௮)

நேரிசைவெண்பா.

அள்ளற் கருஞ்சேற் றகன்பணைசூ ழாரூரர்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள் - புள்ளுருவாய்
நண்ணிலா தாரை நகைக்கு நகையையன்றே
தண்ணிலா வென்னுஞ் சகம். (உ௯)

கட்டளைக்கலித்துறை.

திண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற [ன்
வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவ
பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே. (௩0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர் திருவுருவும் வாம பாகத், தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு மிருவருக்கு மமுத மான, கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு மருவுரு வாங் குணங்கண் மூன்றி, னல்லுருவா தலினன்றே விவரகில காரணராய் நவில்கின் றாரே. (௩௧)

நேரிசையாசிரியப்பா.

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் கிடக்கு
முவளகங் கண்ணுற் றுவாக்கட லிஃதெனப்

---

(௩0) ஆளுடைய நம்பிகள் பண்மலர்சாத்திப்பணிகொள்ளப் பட்ட கழன்மலர்கள் திருமால் கண்மலர் சாத்தியும் காண்புக் கும் அரிதாயினவாறுவியப்பு! ஒண்மலர்சொன்மலர்க்கொவ்வா துபோலும். எ-று. வியப்பென்பது சொல்லெச்சம். ஆ கடைக் குறை. வியப்பிடைச்சொல்லுமாம். (௩உ) உவளகம்-அகழி.

பருகுவா னமைந்த கருவிமா மழையுஞ்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்விலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைநிமிர்த் தெழுந்து
பாசொடு முலாவிப் படர்தரு தோற்ற
நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலை நிகர்க்குஞ்
சீர்கெழு கமலைத் திருநகர் புரக்குங்
கார்திரண் டன்ன கறைமிடற் றண்ணன்
மூவரென் றெண்ணநின் முதற்றொழில் பூண்டு
மேவலிற் செய்துமென் றெண்ணா ராகி
யடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி
யுடம்பு வேறு யுயிர்ப்பொறை சுமந்து
நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணா தொழிந்ததை நிற்க நாணா
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரென் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
மிகப்பருந் தொண்டரொ டிகலிமற் றுன்னொடும்
பகைத்திறம் பூண்ட பதகனே யெனினு
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெந் தாய்க்கு
நமனார் செய்த நற்றவம் பெரிதே. (௩௨)

---

(௩௨) ௫-உழவர் - படைவீரர். ௧௭ - உடம்புவேறுதல் - வராகமும் அன்னமுமாதல். ௨௧-பிறர் - தவத்திற் கந்நியர். திருவடிகளைத் தரிசித்தலேயன்றிப் பரிசித்தலும் பெற்றமையின் எந்தையை யெய்தற்கு நமனார்செய்தவம் பெரிதென்பது.

நேரிசைவெண்பா.

நற்கரும்பு முக்கட் கரும்பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னுஞ் - சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்கரும்பா மாரூரர்
காமக் கரும்புங் கரும்பு. (கஙு)

கட்டளைக்கலித்துறை.

கரும்புற்ற செந்நெல் வயற்கம லேசர்கண் டார்க்குமச்சந்
தரும்புற்றி னிற்குடி கொண்டிருந் தாரது தானுமன்றி
விரும்புற்று மாசுணப் பூணணிந் தார்வெவ் விடமுமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகைபங் கான துணிவுகொண்டே. ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டலைய லைத்தபல தண்டலையு டுத்தழகு கொண்ட
கம லைப்ப தியுளார்க், கண்டபினை னக்கிதழி தந்தனரெ னப்
பசலை கண்டுயிர்த வெிர்த்த மடவா, ளண்டரமு தொத்தவமு
தந்தனையி ருட்கடுவி தன்பராருண் மிச்சில்கொ லெனு, வுண்டிடு
மு ளத்திலவ ருண்குவரென் மிச்சிலென வுண்டதை மறுத்து
மிழுமே. (கடு)

நேரிசையாசிரியப்பா.

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்த
லமிழ்துகு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
ரு பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெகுண்டு
மாலா யினனென வணங்கினை யிரத்தலிற்
றேலா மொழியை வாழிய பெரிதெனப்

(கஙச) கரும்புஉற்ற - கரும்பையொத்த. உற்ற - உவமவாசகம். கரும்பும் செந்நெலும் உற்றவயலெனக் கூட்டலுமாம்.

புலந்தன ளெழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்
பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின ளல்லள் கூடா ளல்லள்
கைம்மிகு சீற்றமுங் காதலு மலைப்ப
வெள்ளப் புணர்ச்சியின் வேட்கையு ளடக்கி
யுள்ளப் புணர்ச்சிய ளூடின ணிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
யித்திற மகளி ரிளைஞரோ டாடு
நித்தில மாட நீண்மறு குடுத்தமைம்
மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டுமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூன் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே. (௩௬)

---

(௩௬) சிலம்படி திருத்தியவென்பதும்பாடம். அளியர் - எளியர்.

நேரிசைவெண்பா.

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே - யம்மேனி
மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
றானே குடைவேந் தனித்து. (௩௭)

கட்டளைக்கலித்துறை.

தன்னெக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற், றென்னெக்கு மென்னி லெரியொக்குங் கொன்றை யெரியிலிட்ட, பொன்னெக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப் பொன்செய்விக்கு, மின்னெக்கும் பொன்செய் கிழக்கொல்ல னெக்குமவ் வெண்பிறையே. (௩௮)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெண்ணிலவு கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோ லியர்வீதி விடங்க ராரூர்க், கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைக ளிரண்டவற்றுட் கனக மேரு, வண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை வணங்கிடுமெம் மன்னை பார, வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப் பொருவதல்லால் வணங்கிடாதே. (௩௯)

நேரிசையாசிரியப்பா.

வண்டுகூட் டுண்ண நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
௫ செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னங் கிளைதொறும் பணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிக

(௪0) க-பிலிற்றல் - கொப்பளித்தல். உ - உறைத்தல் - துளித்தல். இதனிறுதியிற்கூறப்படும் சரித்திரத்தைக் கந்தபுராணக் கந்தவிரதபடலத்தாலும் திருவாரூர்ப்புராணத்தாலும் அறிக.

ணூற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி னடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
மூட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டொடர மருண்டுமேற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின ணிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளென்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
வருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
யந்தமி றிருவொடு மரசவற் குதவி
யொருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றுங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவிரு நமர்கா ளிறைஞ்சுமின் னீரே. (சO)

திருவாரூர்நான்மணிமாலை முற்றிற்று.

உ

கணபதிதுணை.

வைத்தீசுரர்கோயில்

முத்துக்குமாரசுவாமி

பிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள்.

பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான் பொருப்பிற் பிறந்துதவளப், பொழிநிலவு தவழுமுழு வெள்ளிவே தண்டத்தொர் போர்க்களிற் றைப்புணர்ந்து,—தென்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற் செழும்பிடி பயந்தளித்த, சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக் கன்றினிரு செஞ்சரணை யஞ்சலிப்பா,—மின்பூத்த சிற்றிடைப் பேரமர்க் கட்கடவுள் வேழங் கடம்படுபடா, வெம்முலைக் கோடுகொண் டுழுதுழு தழக்கமுகை விண்டுதண் டேன்றுளிக்குந்,—கொன்பூத்த தெரியற் கடம்பணி தடம்புயக் குரிசிலைப் பொருசிலைக்கைக், குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவுமென் கொழிதமிழ்க் கவிதழையவே.

காப்புப்பருவம்.

திருமால்.

பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட் புலோமசை வளர்த்தகும்பப், புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு பொருப்பனை விருப்பனைத்தும்,—கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த குழகனைக் கழகர்தொறும், கொத்துமுத் தமிழ்மொய்

த்த கந்தபுரி முத்துக் குமாரனைத் தனிபுரக்க,—தேமேவு கடவுட் பொலங்கிரி திசைக்கரிக டிகிரிகிரி குலகிரியொடுந், திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற் றெண்டிரை முகட்டுதித்த,—பாமேவு மதுரம் பழுத்தமுத மொழுகும் பசுங்குதலை மழலையஞ்சொற், பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர் பச்சைப் பசுங்கொண்டலே. (க)

வைத்தியநாதர்.

வே று.

ஒருபுறத்துமர கதமிமைப்பவொளிர் மாமேருமற்றொரு மேருவைச்சாய்த்தென, வுலகளக்கவிமிர்வடபொருப்பையொரு தோளால்வளைத்தபி னுகியைத்திக்கன, லுமிழுமுக்குடுமி யயிறிரித்துவரு வாய்வாண்மழுப்படை வீரனைப்பார்த்தனொ,டுடலூமற்றொழிலி னறவிளைத்துமெதி ரோடாதுடற்றுகி ராதனைக்கூக்குரல்,—விரிகடற்புடவி முழுதுணச்சமையு மோர்காளைகட்டுப்ர தாபனைக்கார்க்கடு, விடமெடுத்தரிய திருமிடற்றிலிடு காமாரியைக்கவு மாரியைப்போற்றிரு, விழிமுனிற்கும்வடி வழகுடைக்கடவுண் மாமோகினிக்குமணாளனைச்சூக்கும, வெளியினிற்பரம நடநவிற்றுதிறல் வேளூர்வயித்திய நாதனைப் போற்றுதுங்,—குரவுசெச்சையொடு நறவுயிர்ப்பவிரி தேனூறுவட்டெழூமார்பனைப்பேய்த்திரள், குரவையிட்டவுணர் தடிசுவைத்திடவொர் கூர்வேல்விடுத்தகு மாரனைப்பார்ப்பதி, குமாரனைச்சமரிலுருமுகக்குளிறு காலாயுதக்கொடி யாளனைக்கோட்டிய, குறுநகைக்குமன முருகவெற்பவர்த மானேடுமேற்பொரு தோளனைத் தாக்கிய,—திரண்மருப்பினமர் பொருதனிக்கடவுண் மால்யானையைப்புணர் காளையைச்சாற்றிய, செழுமறைப்பொருளி னுரைவிரித்துமெனும் வேதாமுடித்தலை மோதுகைக்காய்ப்பொடு, திருவடித்துணையின் முடிபதித்தவடு வாருதமெய்ப்புக

(உ) உரும் - இடி.

ழாளியைப்பூட்டிய, சிறைவிடுத்தமரர் குறைமுடித்துதவு சேனுபதிப்பெருமாடனைக்காக்கவே. (உ)

தையனுயகியம்மை.

வேறு.

குழையடர்ந்துவடி கணைதுரந்துசெறி குமிழ்மறிந்தவிழி நவ்வியைக்கோட்டொடு, குவடெறிந்தமுத கலசம்வென்றதட முலைசுமந்தமலை வல்லியைச்சேற்றுளிர், குமுதம்விண்டசுவை யமுதமுண்டினிய கொழுநர்கோஞ்சுசிறு இள்ளையைத்தாட்டுணைக், குறுகுதொண்டர்பிழை யறமறந்துபிறர் குணமிகழ்ந்த தகவில்லியைச்சேட்செலு,—மெழுபெரும்புவன முழுதொருங்குதவு மிறைவியென்றுமறை கையெடுத்தார்க்கவு, மிடைநுடங்குமட நடையிளங்குமரி யெனவிருந்தகன கள்வியைப்பூத்தவென், னிதயபுண்டரிக மலரிலெந்தையொடு மினிதமர்ந்தவொரு செல்வியைப்பாற்றெருகு, மிருவர்கண்கள்கது வரியசெஞ்சுடரி னிடமருங்குடைய தையலைப்போற்றுது,—முழுதுணர்ந்துமுணர் வரியதொன்றையொரு மொழியின்விண்டசிறு பிள்ளையைச்சூர்ப்பெயர், முதுபழம்பகையை யறவெறிந்தவுணர் முதறடிந்ததனி வில்லியைப்பாட்டளி, முரலவிண்டதரு நிழறெழும்புகுடி புகவழங்குகொடை வள்ளலைப்போற்றடி, முடியுமின்றிவெறு வெளிகடந்துமறை முடிவினின்றுநிறை செல்வனைக்காத்தொறு,—மழலைவண்டுதட மலர்குடைந்துபுது மதுவருந்திநறு மல்லிகைச்சேக்கையின், வடிபசுந்தமிழி னிசைபயின்றபெடை யொடுதுயின்றினிய செவ்வழிப்பாட்டினை, வருவிபஞ்சிபயி றருமதங்கர்தெரு மரமுரன்றுநெடு வைகறைப்போய்ச்செழு, மலரிலஞ்சிதொறு முலவுகந்தபுரி மருவுகந்தனையெம் மையனைக்காக்கவே. (ரு)

(ரு) தொழும்பர் என்பது அர்விகுதி குறைந்து நின்றது. அரசு அமைச்சு என்பனபோல. மதங்கர் - பாணர்.

கற்பகவிநாயகக்கடவுள்.

வே று.

கடாமுமிழ் கைக்கதக் இம்புரிக் கோட்டொரு, கராசல மிட்டமெய்க் கஞ்சுகிக் கேற்பவொர்,—படாமணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள், பராவரு கற்பகக் கன்றினைப் போற்றுதும்,—வடாதுபொ ருப்பினிற் றுன்றுபுத் தேட்கெதிர், மனேலய முற்றமெய்ப் பண்பினைக் காட்டிய,—சடானனனைத்தலைச் சங்கம்வைத் தாற்றிய, சடாயுபு ரத்தருட் கந்தனைக் காக்கவே.

பிரமதேவர்.

வே று.

பைங்காய்க் கமுகு செம்பழுக்காய்ப் பவள முதிர்ப்பக் கதிர்ச்செந்நெல், பனிமுத் துகுக்குஞ் சோணாட்டின் பரிசுபாடி ஞிமிறிரப்பக்,—கொங்கார்த் திரைக்கு நறைக்காந்தள் குறிஞ்சி மலரோ டணிந்தநறுங், குஞ்சிப் பெருமாள் வேதபுரி குமரப் பெருமா னைக்காக்க,—செங்காற் கருங்கட் பைந்தொடியார் சிற்றுப் பாடிப் பெருங்குடியிற், றீம்பா றிருடிக் கட்டுண்டு திரியா வண்ணந் திருத்தாதைக்,—கங்காப் படங்கப் பாறயிர்நெ யருந்தேன் கடலோ டிருந்துண்ண, வகிலம் படைத்துத் தனக்கேற வன்னம் படைத்த பெருமாளே. (ரு)

தேவேந்திரன்.

வே று.

காணுறு கற்பகக் காவுமூ வுலகுமக் காவென விழற்றுமொற்றைக், கவிகையுங் குணதிசைக் காவலும் பிறவுமுள காணியுங் காணியாக,—வாணுறு கோட்டிமைய மலைவயிறு வாய்த்ததலைமகளுக்கு மணமகற்கு, மருமகளை யுரியதன் றிருமக ளெனப்பெற்ற மாலடி களைத்துதிப்பாம்,—பாணுறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென் பைங்குவளை வாய்குதட்டும், பணைமருப் பெ

(சு) காணிதன் காணி என்பதும்பாடம். மால் - தேவேந்திரன்.

ருமைமடு மடிமடை திறந்ததீம் பாலாறு டங்கயச்செந்,—தே
னூறு டன்கடவுள் வானூறெனப்பெருகு சித்தாமிர் தஞ்சிவபி
ரான், சீர்த்திப்ர தாபநிகர் தினகர புரித்தேவ தேவனைக் காக்க
வென்றே. (சு)

திருமகள்.

வேறு.

மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி வனத்துழாய்க் கா
டுமூடி, மாயிருள் வழங்குதன் றிருமாளி கைக்கந்தண் மணிவி
ளக் கிட்டுமுட்டாட்,—கானிறைக் குங்கமல வீட்டுக்கு நெட்டி
தழ்க் கதவந் திறந்தளித்துங், காதன்மை காட்டுங் கவுத்துவத்
துடன்வந்த கன்னிகையை யஞ்சலிப்பா,—மீனிறப் புணரியை
விழுங்குங் கடற்றுளை வெள்ளமொடு கள்ளமனமு, மெய்யுமிரு
ளத்திரளு மவுணக் கருங்கங்குல் விடியக் கடுங்கால்விடுந்,—
தீநிறக் குடுமிவெண் சேவலை யுயர்த்துவண் சிறைமயிற் பரிநடா
த்துஞ், சேவகப் பெருமானை வேதபுரி வருமிளஞ் சேயைப்
புரக்கவென்றே. (எ)

கலைமகள்.

துறைபட்ட மறையவன் செர்நாப் படிந்துதன் சுவைநிறைந்
திதைவுறுமே, தொன்மறை கனிந்தூறு மன்பனீ ரூறலிற் றூத்
துகி னனைப்புறுமே,—நறைபட்ட வெண்டோட்டு நளினப் பொ
குட்டெமது நன்னெஞ் செனக்குடிபுகு, ஞானப் பிராட்டியைச்
சொற்கடற் றெள்ளமுதை நாத்தழும் பத்துதிப்பாஞ்,—சிறை
பட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந் தீர்த்தந் திளைத்தாடிய,
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற் றெள்ளமுத மய
மாகலா,—னுறைபட்ட சுதைநிலவொ டிளவெயிலு மளவளா
யுண்ணச் சகோரம்வெஃகு, மோங்கெயிற் பரிதிபுரி முருகனைச்
சண்முகத் தொருவனைக் காக்கவென்றே. (அ)

(அ) சித்தாமிர்தம்-சித்தர்கள் வைத்தியநாதப்பெருமானையபி
ஷேகித்த தேவாமிர்தக் கலப்புடையதாகலின் அமுதமயமென்றார்.

சத்தமாதர்கள்.

வேறு.

பயிறரு முதுமறை நூலைத் தெரித்தவள் பகைதொகு புர மெரி மூளச் சிரித்தவள், பனிவரை பகநெடு வேலைப் பணித்த வள் படுகடல் புகையெழ வார்விற் குனித்தவ,—ளெயிறுகெ டுழுதெழு பாரைப் பெயர்த்தவ் ளெறிதரு குலிசம்வி டாமற் றரித்தவ, ளிடுபலி கொளுமொர்க பாலக் கரத்தின ளெனுமிவ ரெழுவர்க டாளைப்பழிச்சுதும்,—கயறிரி சரவண வாவிக்கரைக் குரை கழலொடு பரிபுர மோலிட் டிடக்கட, களிறெரு களிறெ திர் மோதத் திசைத்திசை கடுநடை யுளதக ரேறச் சமர்த் தனை,—முயறரு கறையொடு தேய்வுற் றிளைத்தொரு முழுமதி குறைமதி யாகத் துகிற்கொடி, முகிறெரு தடமதில் வேதப் பதித்தனி முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே. (கூ)

முப்பத்துமுக்கோடிதேவர்கள்.

வேறு.

முறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு சொர்க்கத் தலத்தோடு சேடசயனத்தையு, முடித்தலை யடித்தலை பதித் தெதிர் துதித்தவர்த மக்குக் கொடுத்தானை மாதிரமொரெட் டையு,—மிறைப்பொழு தினிற்பொடி படுத்தருள் கொடுக்கவல சத்திக் கரத்தானை யூதியமெனத்தனை, யிருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெமர் சித்தத் திருப்பானை யாறிருபுடத் தனை,—வெறுப்பொடு விருப்பினை யறுத்தவ ருளத்துமலர் பத் மப் பதத்தானை வேதபுரியிற்சின, விடைக்கொடி வலத்தினு மடக் கொடி யிடத்துமுள முக்கட் டிருத்தாதை யார்பணிகுருக்களை, —மறைக்கிழ வனைத்தலை புடைத்துல கனைத்தினையு மொக்கப் படைத்தானை மூவிருமுகத்தனை, மருத்துவர் வசுக்கதி ருருத் திர ரெனப்பொலியு முப்பத்து முக்கோடி தேவர்கள்புரக்கவே.

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

இருக்கோ லிடும்பரி புரக்கோல முந்நுதலி லிட்டபொட் டுஞ்சுட்டியு, மெரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரைஞாணு மிளஞாயி றுதயஞ்செயு,—முருக்கோல முஞ்சுழி யக்கொண் டை யும்முச்சி யுச்சியும் வாளிமுத்து, மொள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டுகண் டோடரிக் கண்களிக்கு,—மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு மருந்தா யிருந்ததெய்வ, மகக்கோல மேமுதிர் கிழக்கோல மாய்க்குற மடந்தைமு னடந்துமற்றத்,— திருக்கோல முடனொரு மணக்கோல மானவன் செங்கீரை யாடி யருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள செங் கீரை யாடியருளே. (க)

கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக் கொண்டவகி லாண்டங்களின், குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக் கூடினுந் தான்றனக்கச்,—சொம்பாதி யன்மைக் கனைத்துந்தன் மயமெனுஞ் சுருதிகரி யாவைத்துமச், சுருதிக்கு மெரிசுடர்ப் பரிதிக்கு மிரவிகுல தோன்றற்கு மிளவலுக்குஞ்,—சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந் தவமுனிவ ரெழுவருக்குந், தண்ணளி சுரந்திட்ட திராத வினைதீர்த்த தம்பிரான் றிருமே னியிற்,—செம்பாதி யுங்கொண்ட தையனு யகிகுமர செங்கீரை யாடியருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள செங்கீரை யாடியருளே. (உ)

கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக் களிற்றோடு முட்டவிட்டுக், ககனவட் டத்தினொடு பரிதிவட் டத்தைவளை கிரிவட் டத்திலிட்டு,—முக்கட் டிருத்தாதை கோதண்ட மெ னவைத்த வேதண்ட மாதண்டமா, மூதண்ட கூடந்திரி கூடத் தொடுஞ்சாடி மூரிக் கடாசலமவன்,—மெய்க்கிட்ட சட்டைக்கு

நேரிட் டிடப்பட்ட மேகபட லத்துமொண்டு, மேல்கட லினைப் பெருங் கீழ்கடல் புகப்பெய்து விளையாட்டு வீரர்களோடுந்,—திக்கெட்டும் விளையாடு சேனு பதிக்கடவுள் செங்கீரை யாடிய ருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள செங்கீரை யாடியருளே. (ஙு)

மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான் மணிமார்பு வாணிக்குநான், மறைமுதலி செந்நாத் தடந்தைய லாளொடும் வயித்தியக் கடவுளார்க்கு,—மெய்விரிக் குந்தொண்ட ருள்ளத் தடத்தினெடு வேதச் சிரங்கடுப்ப, வேதபுரி கந்தபுரி புள்ளூ ரெனப்பொலியும் வேளூர திசைதிசைதொறுங்,—கைவகுத் தரம்களிர் குரவையாட் டயர்பெருங் கயிலைத் தடஞ்சாரலுங், கனகா சலத்தும்வள ரிமையா சலத்துமுயர் கந்தமா தனவெற் பெனத்,—தெய்வதப் பிடியோடும் விளையாடு மழகளிறு செங்கீரை யாடியருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள செங்கீரை யாடியருளே. (ச)

மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி வில்லியா ரிளவலோடும், விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை வெள்ளமென வீற்றிருக்கு,—மானே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கு மருமருந் தாகின்ற, வாதிப் பிரானென்று மும்முதற் கடவுளு மடித்தொழும் பாற்றமற்றக்,—கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண் குறிப்பறிந் தருகணைந்துன், குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக் குறையிரந் தவடொண்டைவாய்த்,—தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன் செங்கீரை யாடியருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள செங்கீரை யாடியருளே. (ரு)

வே று.

செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு சிலம்பு கலந்தாடத், திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வட

மாடப்,—பைம்பொ னசும்பிய சொர்தி யொடுஞ்சிறு பண்டி. சரிந்தாடப், பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்,—கம்பி விதம்பொதி குண்டல மூங்குழை காது மசைந்தாடக், கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடு மாட,—வம்பவ ளத்திரு மேனியு மாடிட வாடுக செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக னுடுக செங்கீரை. (கூ)

குழையொடு குழையெதிர் மோதிக் காதணி குண்டலம் வெயில்வீசக், குமுத விதழ்க்கனி வாயமு தூறிய குறுநகை நில வூர,—முழுவயி ரப்புய வலயமு முன்கை முதாரியு மொளிகால, முத்த மரும்பி யெனக்குறு வேர்வு முகத்தி லரும்பியிடப்,— புழுதி யளைந்த பசுந்திரு மேனிப் பொங்கொளி பொங்கியெழப், புண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை பொழியருள் கரைபு ரள,—வழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி யாடுக செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக னுடுக செங்கீரை. (எ)

விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்லிதழ் புலரா மே, விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன் மென்குரல் கம்மா மே,—கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக் கண்மலர் சிவவாமே, கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல் கருவடி வுண்ணுமே,— யுருவ மணிச்சிறு தொட்டி லுதைந்து நிணெண்பத நோவாமே, யொருதா ளூந்தி யெழுந்திரு கையு மொருங்கு பதித்துநிமிர்ந்,— தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி தாடுக செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக னுடுக செங்கீரை. (அ)

வே று.

கும்ப மதக்களி யானை யிரண்டே யொன்றேமைக், கொண் டல் விழிக்கயன் மீனு மிரண்டே கொண்டேகிச்,—சம்ப ரனைப் பொரு சேவகன் வந்தான் வந்தான்முற், சண்டை கொளற்

(எ) முதாரி - ஓர்வகைக்கங்கணம்.

கென நேர்வரு பெண்பா லன்பாயே,—யம்ப வளக்கொடி யே வளர் கொம்பே யென்றேநீ, யன்று புனத்துயிர் சோர்வது கண்டே முன்போதுங்,—கம்ப மதத்தர் சகோதர செங்கோ செங்கீரை, கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. (கூ)

திங்க ளுதற்றிரு மாதொடு நின்றே மன்றுடுஞ், செங்கண் விடைக்கொடி யோனருள் கன்றே யொன்றேயா,— யெங்க ளுளத்தமு தூறு கரும்பே யன்பாளர்க், கின்ப மளிக்குமெய்ஞ் ஞான மருந்தே யெந்தாயின்,— கொங்கலர் மைக்குழல் வாழ் பொறி வண்டே வண்டேதுங், கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்றோதுங்,—கங்கை மகட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை, கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. (கO)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

பில்கும் பசுந்தே னைசும்பிருந்த பின்று ழளகத் தரமகளிர், பேதைக் குறும்பு விளையாடும் பேரா யத்துச் சிறுமருங்குற்,— கொல்குங் கொடிபோய் நுடங்கியிட வோங்கும் பளிக்கு நிலா முற்றத், துயர்சூ ளிகையின் மரகதத்தி னொளிகால் வீசத் தெளி விசும்பிற்,—பல்குஞ் சுரபி தரங்கநெடும் பாகீ ரதியின் கரை கிளைத்த, பசும்புல் லெனச்செங் நாவளைக்கும் பைம்பொற் றலங் கள் பலகோடி,—மல்குஞ் செல்வக் கந்தபுரி வாழ்வே தாலோ

(கO) எந்தாயின் கொங்கலர்மைக்குழல் வாழ்பொறிவண்டே என்றது திருவுத்தரகோசமங்கையிலே சிவபெருமான் உமாதேவியாருக்குபதேசிக்குங்கால் முருகக்கடவுள் வண்டுருக்கொண்டு கூந்தலிலிருந்து கேட்டனரென்னும் அத்தலபுராண சரித்திரநோக்கி. (க) கொடி ஆயத்துநுடங்கியிட என்க.

தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்தமுழு மணியே தாலோ தாலேலோ. (க)

தொடுக்குந் தொடைவெண் டுகிற்கொடிக டொடுநீர்ப் பரவை முகம்புழுங்கத், தோன்றும் பரிதி மணித்திண்டேர் தூண்டுங் கலின வாம்பரியை,—முடுக்குஞ் சுடர்ப்பொற் றலத் திழைத்த முழுநீ லத்தி னெழுகொளியின், முழுகுங் கடவுண் மால்யானை முகிலிற் றோன்ற வகலிடத்தின், றடுக்குங் களிறென் றரமகளி ரையுற் றிடத்தன் வெளிறுமுடம், பளறு படிந்த தெ னக்கங்கை யாற்றுப் பசும்பொ னசும்புபுனன், — மடுக்குஞ் செல்வக் கந்தபுரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்தமுழு மணியே தாலோ தாலேலோ. (உ)

தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத் திரண்மா மணிகள் வெயில்விரிக்குஞ், செம்பொற் றலத்துப் பேரமர்க்கட் சிறியார் நறிய வகிற்புகையிட்,— டாற்றுங் குழற்காட் டினைப்புயலென் றாடு மயில்கண் டம்பவளத், தரும்பு நகையைச் சகோரப்புள் ளருந்த விரிந்த முழுநகைவிண், — றேற்று நிலவுக் கிந்துசிலை யொளிர்மா ளிகையுஞ் சூளிகையு, முருகிப் பெருகுங் கலுழி வெள்ள முவரோ டெரிக் கடற்புலவு,— மாற்றுங் கடவுட் கந்த புரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்த முழு மணியே தாலோ தாலேலோ. (ங)

கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங் கிடங்கென் றிடங்கர் மாவியக்குங், கீழ்நீ ரழுவக் குண்டகழி கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து,—திளைக்குங் கமஞ்சூ னெடும்புயலைச் சிறுகட் பெருங்கைப் பகடென்றோர், செங்கட் களிறு பிளிறவிமிர் திகிரி கிரியென் றிவர்ந்துடல,—மிளைக்கும் படிவிண் டொடவிவந்த வெழிற்பொற் புரிசை விண்டுபதத், தேறு மேணி பொற்றரு வுக் கிடுவே லியுமா யேழுலகும்,—வளைக்குங் கடவுட் கந்தபுரி

வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்தமுழு மணியே தாலோ தாலேலோ. (ச)

சோலைப் புறமுப் புடைக்கனிக மேக்கு முடத்தெங் கிமைய வர்தந், தோன்றற் றிருவோ லக்கத்துத் தோகை மயிலி னடங் குயிற்று,—மேலைக் கருங்கொந் தளவளகத் திளமா தருக்கு முதிர்வேனி, லிளைப்பாற் றுதற்குத் தாற்றெருடுஞ்செவ் விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த,—காலைப் புயலின் முகந்துடைக்குங் கமுகு பழுக்காய்ப் பவளமுடன், கதிர்முத் திட்டுச் செழும் பாளைக் கற்றைக் கவரி புடையிரட்டு,—மாலைப் பழனப் பரிதி புரி வாழ்வே தாலோ தாலேலோ, மலையாள் வயிறு வாய்த்த முழு மணியே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

மாலி மயத்து மடப்பிடி பெற்று வளர்த்த விளங்களிறே, மழவிடை யேதிரு மாமடி கட்கென வைத்த கவுத்துவமே,— மூல மெனக்குல நான்மறை யோலிடு முழுமுத லேழுவா, முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி முத்திக் கொருவித்தே,— சாலை யிளங்கதி ருக்கெதிர் முதிருங் கதிர்செம் பவளமுடன், கதிர்முத் திட்டு வணங்கக் கன்னல்கொல் கமுகுகொ லெனவளரு ருந்,—சாலி வயற்றமிழ் வேளூ ரடிகேள் தாலோ தாலேலோ, சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (சு)

கருமுகி லுக்கரி தாமடி வாரங் கண்டிரு பறவைகடங், கண் களி பொங்கவொர் பறவை முடித்தலை காணு தட்குவரப்,— பொருபுன லருவித் தலையின் மிசைத்தவழ் புதுமதி நிலவொழு கப், புள்ளூ ரிற்பொலி வெள்ளி மலைக்கட் பொன்மலை யைக்கு வவு,—குருமணி வயிரப் புயமெனு மெட்டுக் குவடுஞ் சுவடுபடக், குத்திப் பொருமிரு கோடு படைத்ததொர் கூந்தற் பிடிபெற்

(எ) இருபறவை - சம்பாதி சடாயு.

றுத்,—தருமொரு தொந்தித் தந்திக் கிளையாய் தாலோ தாலேலோ, சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ.

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட வொளிவிடு முழுமணியே, யுயர்மறை நூற்கலை முடிவின் முடிந்திடு மொழுகொளி மரகதமே,—விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர் விரியு மிளஞ்சுடரே, மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததொர் வீட்டை விளக்கும் விளக்கொளியே,—புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும் புனித நறுங்கனியே, புள்ளூ ரெனவெம துள்ளத் தடநிறை புத்தமு தக்கடலே,—தண்ணொளி பொங்கிய கருணை நிதியே தாலோ தாலேலோ, சங்கத்தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (அ)

வேறு.

தோலா தமுத்தமிழ் நாவா மூவா மாவாமச், சூர்வே ரறத் தொடு வேலா நூலா நூலோதஞ்,—சீலா மலைக்கொடி பாலா கிலா மேலாகுந், தேவா திபற்கொரு தேவா வோவா தேசூவுங்,—காலா யுதக்கொடி வீறு வேறு வேறேறுங், காபா லிபெற்றகு மாரா வீரா பேராளா,—சேலார் வயற்குரு கூரா தாலோ தாலேலோ, சேனு பதிப்பெரு மாளே தாலோ தாலேலோ. (கூ)

ஊனுயிர்க்குயி ரானுய் தாலோ தாலேலோ, வோதா துணர்ந்திடு போதா தாலோ தாலேலோ,—வானு வருட்கனு பானு தாலோ தாலேலோ, வாயா தசொற்சொலு பாயா தாலோ தாலேலோ,—நானு யெனக்கரி தானுய் தாலோ தாலேலோ, நாதா திகட்கனு பூதா தாலோ தாலேலோ,—தேனூர் பொழிற்குரு கூரா தாலோ தாலேலோ, சேனு பதிப்பெரு மாளே தாலோ தாலேலோ. (க0)

தாலப்பருவம் முற்றிற்று.

(கூ) கிலம் - ஒளி. (க0) அனுபூதன் - காரணன்.

சப்பாணிப்பருவம்.

மூடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தின்றநறு முளரிப் பிராட்டிவைத்து, முத்தாடு டச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை முதிருமென் குதலைகற்பத்,—தொடங்கும் குறப்பாவை கற் றைக் குழற்ககிற் றாமமொடு தாமமிட்டுச், சுடிகைநுதல் வெ யர்வுந் துடைத்தொழுகு கத்தூரி தூரியங் கொண்டுதீட்டிக்,— குடங்கைக் கடங்கா நெடுங்கட் கடைக்கழகு கூரவஞ் சனமெழு திமென், கொங்கைத் தடத்தும் பசுங்களப மப்பியவள் குற்றே வன் முற்றுமாற்றித்,—தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட் டவன் சப்பாணி கொட்டியருளே, தையனு யகிமருவு தெய் வநா யகன்மதலை சப்பாணி கொட்டியருளே. (க)

மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயனெடு மதாரிக் கெண்டையுண்கண், மான்கன்றை யமருலகு வாழப் பிறந்திடு மடப்பிடியை வானவில்லைக்,—குழைக்குந் தடக்கைத் திருத் தாதை நீரொடு கொடுப்பக் குடங்கையேற்றுக், கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக் கொம்புமின் கொடியி னுெல்கி,—யிழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன் னிளமுலை முகங்கோட்டிநின், றெய்யாமை நோக்கும் படைக் கட் கடைக்கணுேக் கின்னமுத மூற்ற வின்பந்,—தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன் சப்பாணி கொட்டியரு ளே, தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை சப்பாணி கொ ட்டியருளே. (உ)

உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட வும்பருஞ் செங்களம்பட், டொண்பரிதி யுடல்கிழித் தோடுங் கடற்றுனை யொளிறுவா ளவுணர்குழுவுந்,—தெண்ணிலா மதிநுதற் றெய்

(உ) அமரருலகென்பது தொகுத்தல்விகாரமாயிற்று.

வட் பிணுக்கள்வாய்த் தேனமுது மமுதவாரித், தெள்ளமுது முடனிருந் துண்ணப் பணித்திட்ட செங்கைவேல் பைம்புனத் துப்,—பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற் பாவை விழி வேலொடொப்புப், பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துமின் னவடிருப் பவளத்து முத்தரும்புந்,—தண்ணிலா வுக்கொண் சகோரமென நின்றவன் சப்பாணி கொட்டியருளே, தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை சப்பாணி கொட்டியருளே. ()

மடநடைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின் மயிலிளஞ் சாயலுநிலா, மணிவட மறப்புடைத் திறுமாந்த கனதன வனப் புங் குறித்துநோக்கி,—யிடுகிடைப் பாவிக் கினிப்பிழைப் பில் லைகொ லெனுத்திரு வுளங்குழைந்தாங், கேந்திளங் கொங்கை யை யிணைப்புயத் தேந்திமின் றெல்லா வுறுப்புநிற்கக்,—குடமு லைக் கேயிவள் குடிப்பிறப் புக்கியை குணங்கிடைத் ததுகொ லென்னக், கோதைநெடு நாணெய்த வவயவங் கட்குள குணு குணந் தனிதெரிக்குந்,— தடமலர்க் கைத்தலஞ் சேந்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே, தையனு யகி மருவு தெய்வநா யகன்மதலை சப்பாணி கொட்டியருளே. (ச)

விண்ணெண் கடம்புவன முடவுப் படத்தேந்து வேந்து பொலி பாந்தள்வைப்பும், விரிநீர் வரைப்புமெழில் விஞ்சையர் திருப்புமுகை விண்டுநறை விரிமுண்டகக்,—கண்ணன் றிருப்ப தமு நான்முகக் கடவுள்பூங் கஞ்சமுங் குலிசப்பிரான், கற்பகக் காவுநின் றொண்டர்க டொழும்புக்கொர் காணியா வைத்து மற் றத்,—திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட சீறூரு மூரூர்தொறுஞ், செந்தினைப் புனமுமு தண்சாரல் பிறவு மாஞ் சீதனக் காணிபெற்றத்,—தண்ணென் குறிஞ்சித் தலந் தலை யளிப்பவன் சப்பாணி கொட்டியருளே, தையனு யகிம ருவு தெய்வநா யகன்மதலை சப்பாணி கொட்டியருளே. ()

(ரு) விண்ணெனல் - ஓரனுகரணவோசை.

வேறு.

கடலைச் சுவற வடித்து மிடித்துக் கனவரை தகள்கண்டுந், கடிதிற் றிரிய வகுப்பதை யொப்பக் காரவு ணக்கடலி, — னுடலிற் பெருகிய குருதிக் கடல்பிளை வோங்கலொ டோங்கவமைத், தொட்டிய வொட்டல ரிற்பிற கிட்டவ ரொழியப் பிறரையெலாந், — தடவுத் தாழியின் மத்தெறி தயிரிற் றத்துதி ரப்புனலிற், றசைசுடர் நிணமொடு மூளை குழம்பச் சமர்விளை யாடல் செயுங்,—குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ கொட்டுக சப்பாணி, கொழிதமிழ் வேத புரிக்குமரேசன் கொட்டுக சப்பாணி. (சு)

சமரிற் பட்டவர் வெட்டிய பூதத் தலைவர்க ணிற்பமுதற், றுமரை நாயகன் வயிறு கிழித்துத் தந்தொழி றலைசின்றுங்,—கமரிற் குரிய மடக்கொடி யாரை யலைத்தனர் பற்றியெயிற், றவுண ரெனத்தமை யுணரார் கணவர்க ளார்ப்பில்லெடித்தபெருங்,—கமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு களமெதிர் கண்டினியக், காரவு ணக்கடல் சூரொடு மாளக் கடிதிற் றடிதியடற், — குமரக் கடவு ளெனட்பணி வேலவ கொட்டுக சப்பாணி, கொழிதமிழ் வேத புரிக்குமரேசன் கொட்டுக சப்பாணி. (எ)

அற்ற வுடற்குறை யிற்ற முடித்தலை யங்கைத் தலம்வைத்திட், டாடு பறந்தலை யோடுதி ரப்புன லாறு கடத்துசெனுந், — சிற்றலை கைக்கொரு பேரலை கைப்பெண் டோழி யக்சுழியுந், திகிரிப் பரிசில் விடப்படு சுழியிற் றெருமரல் மட்பகை

(சு) திரியவென்பது மீட்டுமென்னும்பொருட்டு. தடவு - பெருமை. (எ) பட்டவர்தலைநின்று என இயையும். வீரசொர்க்கம்பெற்றார்க்குரிய தேவமகளிரை ஒருவரினொருவர் முந்திவலிந்துபற்றினரென்பார் அலைத்தனர் பற்றியென்றார். கணவர்கள்-கணத்தவர்கள்.

ஞன், — பற்றிய திரிகை திரித்து விடத்திரி பரிசென வுஞ்சுழ லும், பம்பர மெனவும் வரும்படி யவுணர் படக்கள வேள்வி செயாக், — கொற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ கொட்டுக சப்பாணி, கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன் கொட்டுக சப் பாணி. (அ)

வே று.

வளரிள வனமுலை மலைமக ளுக்கொர்த வப்பேறே, மறிதி ரை பொரவிமிர் கருணைகொ ழித்தபெ ருக்காறே, — யளியுமி னமுதெழு வெளியினில் வைத்தசு வைத்தேனே, யறமுது தவ மொடு வளரவ ளர்த்திடு நற்றாயே,—களிமயில் கடவிவி ணடை யமு டுக்கிய புத்தேளே, கலைமறை யெனுமுரல்வரியளி மொய் த்தம லர்க்காவே, — தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி, தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. ()

கனியொடு சுவையமு தொழுகிய சொற்பயி றத்தாய்வேள், கணையொடு பிணையென வுலவுக டைக்கண்ம டப்பாவாய், — கனைமலர் பொதுளிய வெழிலித ழைத்தகு ழற்கோதாய், களிர் புன மிசைவளர் கலபம்வி ரித்தம யிற்பேடே, — யெனவொரு குறமக ளடிமுடி வைத்தனை முத்தேவா, மிறைவரு முறை முறை பணியவி ருக்குமு தற்றேவே, — சினவிடை யவராருண் மழவிடை கொட்டுக சப்பாணி, தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

(கூ) மதவலி - மிக்கவலி; அது ஈண்டு ஈறிலாவாற்றலுடை யவனென்னும்பொருட்டு.

முத்தப்பருவம்.

குருகு நாறு செந்தளிர்க்கைக் கொடிநுண் ணுசுப்பிற் சேட்டிமையக், குலப்பூங் கொம்பு நறலூழ்த்த கொழுந்தா மரையோ டவிழ்ந்ததுழாய்ச், — சருகு நாறு முடைத்தலையின் றுமநாறு திரடிண்டோட், டாதை யாருங் கண்டுகண்டு தடங்கண் களிப்பக் குரவுவிரிந், — தருகு நாறு திருமேனி யந்தீங் குதலை மழலைகனிந், தமுத மூறு பசுந்தேற லசும்பு நாறத் தெய்வமணை,—முருகு நாறுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே. (க)

நறவு விரிந்த விரைத்தோட்டு நளினத் தொட்டிற் றடமுலைப்பா, னல்கி வளர்த்த கைத்தாயர் நகைவாண் முகத்தினு மார்பகத்துங்,—குறுமெ னடைய சிறுபசுங்காற் குருதி ததும்ப வுதைந்துசில, குறும்பு செயத்தா ஞேமெனமென் கோல்கொண்டோச்சப் பெரும்புவன, நிறுவு மொருநின் பெருந்தன்மை நினைந்தாய் போலக் கனிர்தமுது, நெக்குப் பசுந்தே னசும்பூற நெடுவெண் ணிலவு விரிந்தகுறு,— முறுவ லரும்புஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே. (உ)

பொழியுங் கருணைப் பெருவெள்ளப் புணரி பெருகி யலையெறியப், பொங்கி யெழுந்த பெருங்காதற் புளகம் போர்ப்பப் போதுசெயும்,— விழியு மனமுங் குளிர்தூங்க விரிநீர்ச் சூடிலத்தொருவனிரு, வீணைக் குதவுந் திருச்செவிகள் விருந்தாட் டயர விரைகொழித்து,— வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு மதுரவமுது குழைத்தூற்று, மழலை ததும்பப் பழமறையை வடித்

(க) கொம்புந்தாதையாருங் கண்டுகளிப்பக் குரவுநாறுதிருமேனி அசும்புநாற முருகுநாறும்வாயென இயையும்.

துத் தெளித்த வார்த்தையொன்று,—மொழியும் பவளச் செங் கனிவாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்த புரி முருகா முத்தந் தருகவே. (ங)

கலைப்பா னிறைந்த முதுக்குறைவிற் கல்விச் செல்வர் கேள் விரலங், கனியக் கனிய வமுதூறுங் கடவுண் மறையு முதற்சங் கத்,—தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியுந் தண்டே னறையும் வடித்தெடுத்த, சாரங் கனிந்தூற் றிருந்தபசுந் தமிழு நாறத் தடங்கரைகொ,—லலைப்பாய் புனற்றெண் கடல்வைப்பு யகி லாண் டமும்பன் முறையின்று, மழகு முதிர முதிராவென் னம்மை யமுது சூற்கொண்ட,—முலைப்பா லூறுஞ் செங்கனி வாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே. (ச)

புயலுண் டிருண்ட கொந்தளமும் பொன்னங் குழையு மின் னையும், புளகம் பொதிந்த விளமுலையும் புருவச் சிலையும் போர்த்தடங்கட்,— கயலுங் கலப மயிலியலுங் கன்னிப் புனத் தோர் பெண்ணமுதின், காமர் நலனும் பன்னிரண்டு கண்ணான் முகந்துண் டின்னமுதி,— னிட்லுஞ் சுவைநல் லவியொடுநீத் தேக்கற் றிருந்தத் தாக்கணங்கி, னிழுமென் குதலை கனிந்தூறு மிதழ்த்தேன் சுவைகண் டேமாப்பான், முயலுங் குமுதக் கனிவாயான் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே, (ரு)

வே று.

கோடுபடு கொங்கைக் குவட்டுக் கிளைத்திட்ட கொடி யிடைக் கடைசியர்குழாங், குரவையிடு துழனியிற் கொண்ட றிரை யத்தாவு குழவுப் பகட்டுவாளை,—சேடுபடு புத்தே ணிலத் துப் புனிற்றிளஞ் சேதா வயிற்றுமுட்டச், செங்கன் றெனத்

(ச) மறையுந்தமிழுநாற முலைப்பாறுமென இயையும்.

தடவு மடிமடை திறந்தூற்று தீம்பால் சிலைக்கற்பகத்,— தேடு படு தடமலர்த் தேனருவி யொடுசொரிந் தேரியொடு கானி ரம்ப, விழுதுபடு கழனியுந் தெய்வமண நாறவேன் றின்சுவை முதிர்ந்துவிளையுங்,—காடுபடு செந்நெல்பைங் கன்னனிகர் புள் ளூர கனிவாயின் முத்தமருளே, கங்கைக்கு நெடியவன் றங் கைக்கு மொருமகன் கனிவாயின் முத்தமருளே. (௬)

துளிதூங்கு மழைமுகிற் படலங் கிழிக்குந் துகிற்கொடிகள் சோலைசெய்யத், தோரண முகப்பிற் றவழ்ந்தேறு கலைமதித் தோற்றத்தை யறுகான்மடுத்,—தளிதூங்கு தேனிறு லிதுதம் மின் வம்மினென் றழிநறு வார்ந்துமிற்கு, மங்கலார் கைகூப்ப வாடவர் பிழிந்தூற்று மளவினப ராதமிதென, —வொளிதூங் கு முகமதிக் கொப்பென்கி லேன்விடுதி ருயிரொன்று மெனவி டலுமவ், வுடுபதிக் கடவுணற வுண்டமற் றவரினு முய்ந்தோ மொழிந்தோமெனக், — களிதூங்கு மாடமலி கந்தபுரி வரு முருக கனிவாயின் முத்தமருளே, கங்கைக்கு நெடியவன் றங் கைக்கு மொருமகன் கனிவாயின் முத்தமருளே. (எ)

பூமரு வுயிர்க்குங் கருங்கொந் தளத்துவிரி பூந்துகட் படல முமணம், பொங்கிய நறும்புகைப் படலமுங் காலமழை பொழி முகிற் படலஞ்செயத்,— தாமரை முகச்சோதி யெழவெழுஞ் சிறுமுறுவ றண்ணிலவு செயவெயில்செயத், தழன்மணிக் கல னக னிதம்பமொடு வெம்முலை தடங்கடலு மலையுஞ்செயத்,— தேமரு குழற்கோதை மயிலனீர் கோசிகன் செம்மலென வேறு புவனஞ், செயவும்வல் லீரென மணந்திடை தணந்தவர்சொல்

(௬) திரைய - சுருள; இது ஈண்டு ஒதுங்கவென்னும்பொ ருட்டு. இம்மொழி இப்பொருள்பட மீனாக்ஷியம்மைபிள்ளைத் தமிழ் அம்புலிப்பருவத்தும் பிறவினைக்கண் பிரயோகிக்கப்பட் டிருப்பதறிக. திரைதல் - சுருங்கலுமாம். (எ) அவரினும்-அவ ரினின்றும். (அ) கோசிகன் செம்மல் - விசுவாமித்திரமுனிவர்.

செஞ்சொற் பசுங்கிளிசொலக்,—காமரு மனங்குழைய மாதர்ப யில் வேளூர கனிவாயின் முத்தமருளே, கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன் கனிவாயின் முத்தமருளே. (அ)

வேறு.

மதியு நதியு மரவும் விரவு மவுலி யொருவன் முக்கணும், வனச முகமு மகமு மலர மழலை யொழுகு சொற்சொலும்,— புதல்வ விமைய முதல்வியருள்செய் புனித வமரர் கொற்றவன், புதல்வி தழுவு கொழுந குறவர் சிறுமி குடிகொள் பொற்புய,— திரு மதியு மொளிர வொளிரு மொளிய வளிய கற்பகக், கனியி லினிய வுருவ பருவ மழையி னுதவு கைத்தல,—முதிரு மறிவி லறிஞ ருணரு முதல்வ தருக முத்தமே, முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. (கூ)

வடிவி னழகு மெழுத வரிய புயமு நறிய செச்சையு, மரு மம் விரவு குரவு மரையின் மணியு மணிகொள் கச்சையுங், — கடவு மயிலு மயிலு மொழுகு கருணை வதன பத்மமுங், கமல விழியும் விழியு மனமு மெழுதி யெழுதி நித்தலு, — மடிக ளெனவு னடிகள் பணியு மடிய ரலது மற்றும்வே, றமரர் குழுவு மகில மறையு மரியு மயனு முற்றுகின், — முடியு மடியு முணர வரிய முதல்வ தருக முத்தமே, முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. (கώ)

முத்தப்பருவம் முற்றிற்று.

வருகைப்பருவம்

செம்பொற் கருங்கழ லரிக்குரற் கிண்கிணி சிலம்பொடு கலின்கலினெனத், திருவரையி லரைமணி கிணின்கிணி னெ

(கώ) விழியினும் மனத்திலும் வடிவினழகு முதலியன எழுதி யெழுதி நித்தலும்பணியும் அடியரலது பிறர் உணரவரியமுத ல்வ என்க. (க) அரி - தவளை. சன்னவீரம் - வெற்றிமாலை.

ணப்பொலந் திண்டோளின் வளைகலிப்ப,— வம்பொற் பகட்டு மார் பிற்சன்ன வீரமு மாரமுந் திருவில்வீச, மணிமகர குண்ட லம் பரிதிமண் டலமென்ன வலர்கதிர்க் கற்றைசுற்றப்,—பைம் பொற் சுடர்ச்சுட்டி கட்டுசு ழியமுடன் பட்டமொளி விட்டெ றிப்பப், பங்கய மலர்ந்ததிரு முகமண் டலந்தொறும் பனிமு றுவ னிலவரும்பக்,—கும்பப் படாமுலை மலைப்புதல்வி செல்வக் குமாரநா யகன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடி கொண்ட குமரகுரு பரன்வருகவே. (க)

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின் மடித்தல நனைப்பவம்மை, மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான் மார்பினிற் குரவையாடி,—முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனன் மோலிநீர் பெய்தவித்து, முளைமதியை நெளிய்ர வின் வாய்மடுத் திளமானின் முதுபசிக் கறுகருத்தி,—விழவுமு திர் செம்மேனி வெண்ணீறு தூளெழ மிகப்புழுதி யாட்டயர் ந்து, விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு வெள்ள நீர்த் துளையமாடிக்,—குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச் சிறு குறும்புசெய் தவன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியில ருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. (உ)

இருளற விமைக்குநின் றிருவுருவி னலர்சோதி யிளஞாயி றெனமுகையவிழ்ந், தேடுவிரி தாமரைக் காடுமுகிழ் நகைநில வெறிப்பவலர் குமுதவனமுங்,—கரைபுரள வலைமோது கட லைக் கலக்குமழ களிறென வுழக்கியொருநின், கண்மலர்கள்

(உ) அகமுழவு அகப்புறமுழவு புறமுழவு புறப்புறமுழவு பண் ணமைமுழவு நாண்முழவு காலைமுழவு எனப்படும் எழுவகையுள் துடியும் ஒன்றாகலின் முழவுமுதிர் துடியென்றார். முழவென்பது பறைப்பொதுமொழியாகலின் முழவுமுதிர்துடியென்ற தெனு ஆமாம். எழுவகைமுழவினியல்பைச் சிலப்பதிகார அரங்கேற்று காதையுரையிற்காண்க. துளையமாடல்- விளையாடலைச்செய்தல்.

செம்மலர்க ளாகமோ கப்பெருங் கலவியங் கடலின்மூழ்கும்,— வெருளின்மட னோக்கினீ ரரமகளி ருடனாடும் விளையாட் டெனத்திரைபொரும், வெள்ளநீர்ச் சரவணப் பொய்கையந் துறையினீள் வீரர்க ளெனுங்கோளரிக்,—குருளைக ளொடும்புனல் குடைந்துவிளை யாடிய குமாரநா யகன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. ()

கட்டுண்ட படர்சடைக் காட்டெம் பிரான்வைத்த கலைமதி யொ டையநீயக், கவுரிதிரு முடியினித் திலமிட் டிழைத்திட்ட கதிரிளம் பிறையிணைப்பத்,—தெட்டுண்ட போன்முழுத் திங்க ளென் றேக்கறுஞ் செழுமணிச் சூட்டுமோட்டுச், செம்பாய்பு பைவிரித் தாடுதலு மோடிநின் சிறுநறுங் குஞ்சிக்கிடு,—மட்டுண்ட பைங்குலைக் காந்தளென் றணையவம் மாசுணம் வெருண் டோடலு, மணிமுடியி னகுதலையை மற்றெமை நகைத்தியான் மலரவன் றலைநீமுனங்,—குட்டுண்ட தறியாய்கொ லெனவித ழதுக்குங் குமாரநா யகன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே. (ச)

அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற் கடங்காமை யாலெம்பிரா, னலர்விழிகள் பொத்தலு மிருட்படல மூடவுள் ளஞ்சிநின் றேங்கவேங்கிச்,—செங்கைத் தலங்கொண் டெடுத் தணைப் பாட்குந் திருத்தாதை யார்க்குமுத்தந், திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற் றெறித்துமுத் தந்தருகெனுங்,— கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங் கண்ணீர் துடைத் தெடுத்துக், கான்மலரு நீவித்தன் மார்புற வணைக்குமக் கவுமாரி யருண்மாரியிற்,—கொங்கைக் குடங்கொட்டு பாலருவி யாடுங் குமாரநா யகன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடி கொண்ட குமரகுரு பரன்வருகவே. (ரு)

(ச) தெட்டுண்டபோல் - முன் கவர்ந்துண்ணப்பட்டனபோல.

வேறு.

பைந்தண் கமல வட்டவணைப் பாவை யனையார் பூவிரி யும், பசுமென் குழற்கூட் டகிற்புகையின் படலமூட முடைநற வின்,—கந்தம் பொதிர்ந்த செந்துவர்வாய்க் கடைசி மகளிர் செங் நெலைப்பைங், கன்ன லெனவுங் கன்னலைப்பூங் கமுக மெனவுங் கடைக்கூடாத்,—தந்தங் கருத்துக் கமைந்தபடி சாற்றிச் சாற்றி முழுமாயச், சலதி மூழ்கித் தடுமாறுஞ் சமயத் தவர்போற் றலைமயங்கு,—மந்தண் பழனக் கந்தபுரிக் கரசே வருக வருக வே, யருளா னந்தக் கடற்பிறந்த வமுதே வருக வருகவே. (சு)

வள்ளைக் குழையிற் றுவடிபோ மடமா னேக்கிற் கடைசியர் கண், மாலைக் குழல்வண் டோலமிட மடுவில் வெடிபோம் வரி வாளை,—பள்ளத் திருநேர் சமூவநீர்ப் பரப்பென் றகல்வான் மிசைத்தாவப், பாகீ ரதித்தீம் புனல்கிடைத்த பரிசு வீட்டின் பயன்றுய்க்கு,—முள்ளக் கருத்தாற் பிறிதொன்றை யுண்மைப் பொருளென் றுள்ளவுந்த, முணர்விற் றெய்வங் கடைக்கூட்ட வுறுதி கிடைத்த படிபோலு,—மள்ளற் பழனப் புள்ளூருக் கரசே வருக வருகவே, யருளா னந்தக் கடற்பிறந்த வமுதே வருக வருகவே. (எ)

நஞ்சிற் றேய்த்துக் கொலைதீற்று நயன வேலுங் கரும்பு ருவ, நாமச் சிலையு மகலல்கு னகுபொற் றேரு மிகல்கடந்து,— வஞ்சிக் கொடிநுண் ணிடைசாய்த்து மதர்த்துக் களித்த மால் களிறு, மற்றும் படைகள் பற்பலவும் வகுத்துக் கொண்டு மட லவிழ்ந்த,—கஞ்சத் தவிசிற் றிருவன்னார் கடலந் தானை கைசி மிரக், காமன் படைவீ டெனப்பொலியுங் காட்சி யானு மப்பெ யரிட்,—டஞ்சொற் றமிழோர் புகழ்வேளூர்க் கரசே வருக வரு கவே, யருளா னந்தக் கடற்பிறந்த வமுதே வருக வருகவே. ()

(சு) கடைக்கூடாமை - முடிவெய்தாமை.

(எ) அழுவம் - ஈண்டுக் கடல். பரிசு கிடைத்தபடிபோலு மென இயையும். (அ) அப்பெயர் - வேளூரென்னும் பெயர்.

வேறு.

உலகு குளிர வெமது மதியி லொழுகு மமுத கிரணமே, யுருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே,—கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே, கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே,—யலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே, யறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே,—மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே, வளமைதழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. (கூ)

இழுமெ னருவி சொரியு மிமைய முதல்வி புதல்வன் வருகவே, யியலு நடையும் வடிவு மழகு மெழுத வரியன் வருகவே,—யொழுகு கருணை முழுது கமல வதனன் வருக வருகவே, யொருவ னிருவ ரொடுகை தொழுந லுபய சரணன் வருகவே,—விழுது விடுவெ ணிலவு பொழியு நகையன் வருக வருகவே, விளரி பயிலு மளியு ஞிமிறும் விரவு குரவன் வருகவே,—மழலை முதிர முதிரு மதுர வசனன் வருக வருகவே, வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. (கo)

வருகைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

மண்டலம் போற்றுருவ மமுதமய மாய்முழு மதிக்கடவு ளெனவருதலால், வானுறு தலைமடுக் கப்பொங்கு மானந்த மாக்கட லிடைத்தோன்றலாற்,—றண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்வி ளக்கரத் தாமரை முகிழ்த்திடுதலாற், சகலபுவ னத்திலு முயிர்ப்பயிர் தழைப்பநற் றண்ணளி சுரந்திடுதலாற்,—றுண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பரஞ் சோதிகட் பொறியாதலாற், றேன்றலிவ னின்னையொத் துளனு னினக்கு

மொரு துணையிவன் போலில்லைகா,—ணண்டரண் டத்தொடகி லாண்டம் படைத்தவனொ டம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (௧)

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந் தோகை மேல் கொண்டருளினாய், தோற்றிமுன் பொங்கிமலை போல வலை மோதுமச் சோதிவே லையுமுகந்தாய்,— குற்றமில் குணத் தைக் குறித்தவிர வலர்முகங் கோடா தளித்தல்செய்தாய், கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக் குடங்கொடிய தாகவைத் தா,—யுற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனொழுக வொளி நிலா நகைமுகிழ்த்தா, யுன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமா லுனையுமிவ னொவ்வாதிரா,— னற்பொதி களத்தவ னளித்தகும ரேசனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்த புரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (௨)

கங்கைமுடி யடிகட்கொர் கண்ணா யிருத்தியக் கண்ணினுண் மணியிவன்காண், கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்று மொண் கலைமுழுது நிறையநின்றா,— னெங்குமிர வோனெனத் திரிதியிவ னடியவ ரெவர்க்குமிர வினையொழித்தா, னிருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவ னெவ்வுயிரும் வாழச்செய் தான்,—பொங்கமுத மமுதா சனர்க்குதவி னாயிவன் புத்திமுத் தியுமளித்தான், புவனம் படைத்தவிவ னின்னின்மிக் கானெனப் புகல்வதோர் பொருளன்றுகா,— ணங்கண்மறை யோலிட் டரற்றநின் றவனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்த புரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (௩)

பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட் படலங் கிழிப்ப துணராய், பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப் பரப் பெலாம் பொலிவதோராய்,— சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாலுளத் திருமலர் திறக்கவறியாய், சிறைவிரி சகோரப்பு ளன்

றியெவ் வுயிருந் திளைத்தின்ப மாரச்செயாய்,— நீயிவற் கொப் பன்மை செப்புவதெ னிப்பரிசி னின்பெருந் தவமென்சொல்கே, னெடியவன் முதற்றேவர் குறுகிநிற் பவுமுனை நினைத்தழைத் தருளினன்கா—, ணுயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவ னொ டம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (ச)

தருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மொக்கத் தலைத்தலை மயங்கத்தொகுஞ், சந்நிதி யடைந்தவர்கள் பையுணோய் முற்றுந் தவிர்ந்தக மகிழ்ந்துதவிராக்,—கருமன்னு மூழிப் பெரும்பிணியு மாற்றிடுதல் கண்டனை யிருத்தியானின், கயரோக முடன்முயற் கறையுந் துடைத்திடக் கருதிடுதி யேலெம்பிரான்,—திருமுன்ன ரள்ளியிடு வெண்சாந்து மற்றைத் திருச்சாந்து நிற்கவற்றுச், சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந் திவலையொன் றே யமையுமா,— லருவென்ன வுருவென்ன வன்றென்ன நின்றவ னொ டம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (ரு)

ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப தொருதெய்வ முண்டெனவெடுத், துரையா லுணர்த்துவதை யொழியவெவ ரெவர்கட்கு மூன்கண் ணுளக்கண்ணதாம்,— விழியாக முன் னின்று தண்ணளி சுரந்தவர்கள் வேண்டிய வரங்கொடுப்பான், மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில் வேறில்லை யென்றுணர்தியாற்,— பொழியாத புயறங்கு புவனமுந் திசை

(ரு) வெண்சாந்து-சந்நிதியின் தென்பக்கத்திலுள்ள விபூதிகுண்டத்திருநீறு. திருச்சாந்து-அங்கசந்தானதீர்த்த மிர்த்திகையுண்டை. சித்தாமிர்தம்-சந்நிதியிலுள்ளதொருதீர்த்தம். இவற்றினியல்புகளை வேளூர்ப்புராணத்தாலறிக.

(சூ) பொழியாதபுயல் - திருமால். அவர்புவனமுதலிய எவ்வுலகுவேண்டினும் என்க.

முகப் புத்தேள் பெரும்புவனமும், பொன்னுலகு மண்ணுலகு மெவ்வுலகு வேண்டினும் பொருளன் றிவற்குமற்றை,— யழி யாத வீடுந் தரக்கடவ னிவனுட னம்புலீ யாடவாவே, யழகு பொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. ()

நெட்டுடற் பைங்கட் கரும்பேய்கள் செம்மயிர் நிரைத் தூணம் வீக்கியார்த்து, நிற்கும் குறட்பூத மொன்றினை விடுத் துடலி னெடியபழு வென்புநெரியக்,— கட்டெனப் பிடியெ னக் கொடிறுடைத் தடியெனக் கணநாதர் கடுகமுடுகிக், கடல் வாய் திறந்தெனப் பிலவாய் திறந்தலறு காட்சிநீ காணுயலை,— மட்டுடைத் தாறுந் தடங்கமலன் முதலியோர் வாய்புதைத் தஞ்சிநிற்ப, வருகென் றழைத்திடவும் வாரா திருத்தியான் மற் றிவன் முனிந்தாலுனக்,—கட்டதிக் கினிலுமொரு திக்கிலையெ மையனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழைய வரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (எ)

குன்றைத் திறந்திட்ட குடுமிவேல் சூருயிர் குடித்திட விடுத் தநின்றான், குண்டிகைக் கள்வனைக் குடுமித் தலைப்பசுங் குருதி பொங் கப்புடைத்தா,—னின்றைக் குழந்தையென் றெண்ணுது குலிசன்முத லெண்மரும் பிறருமொருஞான், றெதிர்நின் றுடற் றியவர் பட்டபா டறியா திருத்தியலை யதுகிடக்க,—முன்றக் கன் வேள்விக் களங்கொலைக் களமென்ன முடியமரர் மொத் துண்டநாண், முழுமதிக் கடவுணீ யவமதிப் புண்டதை மொ ழிந்திடக் கடவதன்று, — லன்றைக் கணக்கின்றும் வந்திருக் கின்றதினி யம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழைய வரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (அ)

தள்ளும் பவக்கட லுழக்குமெனை முத்தித் தடங்கரை விடுப் பவனுனைத், தலையளிப் பான்வர வழைப்பவும் வராவிடிற் றண் ணளி சுரந்தகருணை,—வெள்ளங் கொழிக்குங் கடைக்கண் சிவப் பவிவன் வெகுளாது விடினுமழுது, விழிசிவப் பக்காணி லிரவி

பகை சாய்த்தவிள வீரன் பொறுப்பானலன்,— கள்ளம் பழுத் தகட் கடைசியர் சிறுர்திரைக் காவிரித் தண்டுறைதொறுங், கதிர்நித் திலங்குவி மணற்குன்ற மேறிநின் கலைமதிக் கலசவ முதை,—யள்ளுந் தடம்பணைச் சோணுட னிவனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம் புலீ யாடவாவே. (கூ)

தென்னெத்த தெய்வச் சிறுருமிள வீரருந் தாணிழற் கீழ்நிற் பவிச்,சகதண்ட மண்டல மடுக்கழியு நாளமரர் தமையழக் காண் பவனிவ,— னின்னைப் பொருட்படுத் தொருவிரற் றலைசுட்டி நீள்கழற் ருளுதைந்து, நெடுமலர்க் கண்பிசைந் தழுதழு தழைத் தன னினக்கிதில் வியப்பில்லைகாண்,—பின்னற் றிரைச்சுர நதித் தண் டுறைத்தேவர் பேதைக் குழாங்களென்னப், பெருகுந் தடம்புனற் காவிரிப் பூவிரி பெருந்தண் டுறைச்சிறைவிரித்,— தன்னக் குழாந்திளைத் தாடுசோ ணுடனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாட வாவே. (௧0)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

சிற்றிற்பருவம்.

குறுமென் னடையு நெடுவெணிலாக் கோட்டு நகையும் வாட் டடங்கண், குளிர முகந்துண் டொளிர்சுட்டிக் குஞ்சி திருத்தி நறுங்குதலை,—முறுகு நறைத்தேன் கனிபவள முத்துண் டுச்சி மோந்துகொண்டுன், முகமுந் துடைத்து விளையாட முன்றிற் புறத்துப் பொன்றதும்பி,—யிறுகும் புளகக் கும்பமுலை யெம்பி ராட்டி விடுத்ததுமற், றிளையார் மறுக மறுகுதொறு மிடக்கன் செயற்கோ வெந்தாய்நின்,—சிறுகிண் கிணிச்செஞ் சீறடியாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (க)

கொழுசாண் மலர்க்கற் பகமுநறைக் குரவு நாறு நறுங்குஞ் சிக், கோமான் மகனே நங்கள்குலக் கொழுந்தே யென்று குறை யிரந்து,— தொழுவா னவர்த முடிசூட்டுஞ் சோதி முடியிற் றுகளெழநின், றுணைத்தாள் வண்டற் றுறைப்புழுதித் தூளி படினும் படுகசுடர்க்,—கழுவா மணியு நிலவுவிரி கதிர்நித் திலமு முமையம்மை, கண்ணி னுறுத்த வடிகேணின் காலி னுறுத்தல் கடனன்றாற்,—செழுநான் மறையின் பெருஞ்செல்வச் செருக் கே சிற்றில் சிதையேலே, செங்கெற் பழனப் புள்ளூரா சிறி யேஞ் சிற்றில் சிதையேலே. (உ)

வழிக்குப் புறம்பா யாமிழைத்த வண்டன் மனையவ் வசு ரேசன், வான்கூட் டுண்பா னடுக்கடலில் வகுத்த நகரன் றிக ழாமே,—கொழிக்குஞ் சிறுமுற் றிலில்வாரிக் கொடுவந் தடியே மனைமுன்றிற், குவியா நின்ற மணிக்குவையக் குருகுப் பெயர்க் குன் றமுமன்றாற்,—சுழிக்குண் டகழி வாய்மடுப்பச் சுடர்வால் வளைத்தெண் டிரைக்கரத்தாற், சுரபி சொரிபான் மடையடைத் த சோற்றி ஞேடுங் கலந்தூட்டிச்,— செழிக்குந் தடங்கா விரி நாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செங்கெற் பழனப் புள் ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (ங)

மூரிக் களிறே மழவிடையோ முடுகிற் றெனப்பார்த் துழி யுனது, முகத்தி னழகெம் வடிக்கண்ணுன் மொண்டுண் டனம் யா மெனவுமிகப்,—பாரித் தோங்கிப் பூரித்த பைம்பொற் புயத் தைக் கண்ணேறு, பட்டே மெனவு மடிகள்பகை பாராட் டுவ தோர் பண்பன்றால்,—வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை விரிபூங் கமுகும் பால்பாயும், வேழக் கரும்பு மிருட்பிழம்பை விழுங்கிக் கக்குஞ் சுடர்ப்பரிதித்,— தேருக் கெழில்செய் சோணுடா சிறி

(ங) நகரமுமன்று குன்றமுமன்று ஆகலால் சிதையேலென முடிக்க. குருகுப்பெயர்க்குன்றம் - கிரவுஞ்சமலை.

யேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (ச)

பொன்னங் கொடிபோ னுடங்குமிடைப் புத்தேண் மகளிர் விளையாடப், புனைமா ளிகையுஞ் சூளிகையும் புதுக்கிக் கொடுத்தாய் பொதுஞான,—மெய்ந்நின் றவருள் விழிப்பாவை விளையாட் டயர வழியாத, வீடுங் கொடுத்தா யெம்மனையும் விடுத்துச் சென்றான் மிகையுண்டோ,— பின்னுந் திரைத்திம் புனற்கங்கைப் பேராற் றூற்று நறைக்கோட்டுப், பெருங்கற் பகத்தின் கழுத்தொடியப் பிறழும் வாளைப் பகடுதைத்த,— தென்னம் பழம்வீழ் சோணாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (ரு)

கானக் குறப்பெண் குடியிருந்த கன்னிப் புனத்துத் தினைமாவுங், கமழ்தேன் றெளிவு முண்டுசுவை கண்டா யென்றே மதுவல்லான், — மீனத் தடங்க ணவண்மிச்சின் மிசைந்திட் டதுவு நசைமிக்கு, விரைத்தீங் குமுதத் தமுதடிகள் விருந்தாடியதும் விண்டோமோ, — கூனற் பிறையின் கோடுரிஞ்சுங் கொடிமா டத்து வெயில்விரிக்குங், குருமா மணியாற் சுரகதியிற் கொழுந்தா மரைகண் முறுக்குடைந்து,—தேனக் கலருஞ் சோணாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (சு)

பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும் பெருமா னூர்க்கு முலகேழும், பெற்ற தாய்க்கு நீயருமைப் பிள்ளை யெனிலெம் பேராய,—வெள்ள மமைத்த சிறுசோறு வேண்டி விடுகே மலதெளியேம், விளையா டிடத்துச் சிறுகுறும்பு விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ,—கள்ள விழிச்சூ ரரமகளிர் காமன் கொடியேற் றெனவியப்பக், கற்ப தருவிற் படர்ந்தேறு காமர் கொடிச்செங்

(ரு) தென்னம்பழம் கற்பகத்தின்கழுத்தொடியக் கங்கைப் பேராற்றுவீழ் சோணாடென்க.

கயல்பாயுர்,—தெள்ளு புனர்கா விரிநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (எ)

மடல்வா யவிழ்ந்த குழற்பேதை யொருத்தி திருத்தும் பகிரண்ட, மணற்சிற் றிலையோர் கணத்தின்கண் மட்டித் தாடு மைந்தனருள்,— விடலாய் தமியேஞ் சிற்றின்முற்றும் விளையாட் டாக வொருநீயும், வீட்டா நிற்பத் தொடங்கினையால் வித்து முளையும் வேறன்றே,—கடமா மருப்புஞ் சுடர்மணியுங் கதிர்நித் திலமு மகளிர்முலைக், களபத் தொடுரங் குமச்சேறுங் கரைத்து விடுத்தக் கடற்குட்டந், — திடராச் செயுங்கா விரிநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (அ)

வாமாண் கலைப்பே ரகலல்குன் மடமா னேக்கி னரமகளிர், மகிழ்பூத் திருப்பப் புத்தேட்கு வந்த விடுக்கண் மாற்றினையால், — கோமா னினக்கப் பெருந்தேவர் குலமே யன்றி யடியேமுங், குற்றே வலுக்கா மகம்படிமைக் குடியாக் கொண்டாற் குறையுண்டோ, — காய்மாண் குலைச்செவ் விளநீரைக் கடவுட் சாதி மடநல்லார், கதிர்ப்பூண் முலையென் றேக்கறப் பைங் கமுகு நகைவாண் முத்தரும்புந், — தேமாம் பொழிற்றீம் புனனாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (கூ)

கருவீற் றிருந்த பெருங்கருணை கடைக்கண் பொழிய வீற்றிருக்குங், கடவு ணீயே பகிரண்டங் கண்டா யெனின்வண் டடைகிடப்ப, — மருவீற் றிருந்த குழன்மகளிர் வண்டற் றுறைக்கு மணற்சிற்றின், மனைகோ லுவது மற்றடிகேள் வகுக்

(அ) மட்டித்தல் - அழித்தலின்மேற்று.

(கூ) புத்தேளிரென்பது விகுதிகுறைந்துநின்றது. அகம்படிமை - உள்ளிடத்தொண்டு. (க0) காண்டல் - உண்டாக்குதல்.

குந் தொழிற்கு மாறன்றே, — குருவீற் றிருந்த மணிமாடக் கொடிமா நகரந் தொறுமலர்ந்த, கொழுந்தா மரைப்பூங் கோயி லிற்பல் கோடி யுருவங் கொண்டுசெழுஞ், — திருவீற் றிருந்த சோணாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௧௦)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

சிறுபறைப்பருவம்.

ஊற்றும் பசுந்தே னுவட்டநெட் டிதழ்விரியு மொண்காந் தண் முச்சியுச்சி, யொருவனீ ரும்முதற் கடவுளு மிளைப்பாற வுலகெலாந் தலையளித்துப், — போற்றுந் திறத்தினைப் பழ மறைக் கிழவன் புரிந்தபகி ரண்டங்கடாம், புதுக்குவ கடுப்ப நெடு வெளிமுகட் டுக்குவிரி புதுநிலாக் கற்றையிட்டுத், —தூற் றம் பெயற்கரு முகிற்படாத் தையும்வெண் டுகிற்படா மாக்கி வீக்கித், தொடுகடற் புவனப் பெருந்தட்டொ டண்டச் சுவர்த் தலத் துக்கும்வெள்ளை, — திற்றுஞ் சுதைத்தவள மாடமலி வேளூர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. (௧)

விளக்கும் பெரும்புவன மொக்கக் கரைத்தகடை வெள் ளஞ் சுருங்கவீங்கி, வேதண்ட மெட்டினொடு மூதண்ட கூடத் தும் விளையாடி யுலகமெழும், — வளைக்குங் கருங்கடல் பெரும் புறக் கடலொடும் வாய்மடுத் தெதிரெடுப்ப, வருபுனற் காவேரி வளநாட நாடொறு மதிக்கடவு ளேறியேறி, — யிளைக்கும் டளிக்கறை முயர்கறை யறக்காலு மிளநிலா வெள்ளமூழ்கி,

(௨) பளிக்குப்பாறைகள் மதியின்களங்கமும் அற்றொழியும்படி சுக்கும் இளநிலாவெள்ளத்திலேமூழ்கிப் பாகிரதிப்புனல்குடை யும் மங்கையர்போலத் திளைக்கும் துகிற்கொடிகள் முகிற்கொடி களைப்போலும் வேளூர. எ-று. செய்யென்பது உவமவாசகம்.

யெறிதிரைப் பாகீ ரதிப்புனல் குடைந்திடு மிடைக்கொடி நகிற்கொடியெனத், — திளைக்குந் துகிற்கொடி முகிற்கொடிசெய் வேளூர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. (௨)

இருளுந் தரங்கக் கருங்கடன் முகட்டெழு மிளம்பிறை முயற்குழந்தைக், கேறவிடு மோடமென வான்மீன் றடந்திரை யெடுத்தெறியு நெடுமீனெனத், — தரளம் பதித்திட்ட மணிமுறுவ லவரோடு தருநிழற் செல்வருய்க்கும், தபனிய விமானமும் வெயிற்கதிர்ப் போர்வையான் றனிபாழி திசையுருட்ட, — வருளுங் கொடித்தேரும் வீற்றுவீற் றெழில்புனைந் தோட்டுபொற் றெப்பமென்ன, வுலகேழு மலையெட்டு மொழுகுகதிர் விழுதுவிடு மொண்ணிலாப் புணரிகோப்பத், — திரளும் பளிக்குமாடங்கள்பொலி வேளூர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. ()

மொய்ம்பிற் பெரும்புவன மொக்கச் சுமக்கின்ற மோட்டாமை முதுகுளுக்க, முடவுப் படங்கிழிந் தரவரசி னுயிரமுடித்தலையு மூளைபொங்கச், — கம்பக் கடாயானை யெட்டும் பிடர்த்தலை கழுத்தொடு முரிந்துகவிழக், கதிர்மணிச் சூட்டுநெட் டரவெட்டும் வடவைக் கடுங்கனற் கண்பிதுங்க, — வம்பொற் றடம்புரிசை பெழுபெருந் தட்டுருவி யண்டகூ டத்தளவலா, லவரவர் வழங்குதற் கிடுதலைக் கடைபோன வடுக்கேழுநிலைமேழுமாஞ், — செம்பொற் றிருக்கோ புரங்கள்பொலி வேளூர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. (௪)

---

(௩) மாடங்களில்விரியும் சுதைநிலவையேகடலாகவும் இளம்பிறையாதியவற்றையே ஓடமுதலியவாகவும் உருவகித்தபடி.

தரிக்குஞ் சுடர்ப்பரிதி முழுமதிக் கடவுளொடு தடமதில் கடந்தசுங்கர், சாரவரி தாற்புவன கோடிகட் கொளிசெயச் சதுர் முகன் கற்பந்தோறும்,— விரிக்கின்ற விருசுடரு மொருவழித் தொக்கென வியன்கதிர்ப் படலமூடி, வீங்கிருள் விழுங்குசெம் மணிமாட நிரையுமொளி விளைபசுங் கதிர்வெண்புரி,—புரிக்குஞ் செழுந்தரள மாடமும் வெயிலினொடு பொழிநிலாப் போர்ப்ப முற்றும், போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப் போதுமே யிருபோதையுந்,—தெரிக்குந் தடம்பணை யுடுத்தத மிழ் வேளூர சிறுபறை முழக்கியருளே, தென்கலைக் கும்ப ழைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கியருளே. (ரு)

வேறு.

மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை மடமயி லினம கவ, மால்கட லோலிடு மொலியென விரக மடந்தையர் மன நெகிழப்,—பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு பண் ணவ ருண்மகிழப், பரநா தத்தொலி யெனவனு பூதி பலித்த வர் நெக்குருக,—வழலவிர் சோதியெ மைய னடஞ்செய வாயிர மங்கையினோ, ரண்ண றுவைத்திடு குடமுழ வொடுசுட ராழி யவன்கொட்டு,—முழவென வமரரு முனிவரு மார்ப்ப முழக் குக சிறுபறையே, முத்தமிழ் பயில்புரி திப்பதி முருகன் முழக் குக சிறுபறையே. (சு)

பெருவெளி முகடு திறந்திட் டண்டப் பித்திகை வெடியா மே, பேரண் டத்துள வேதண் டங்கள் பிதிர்ந்துதிர் வாகா மே,—குருமணி சிதறிய வென்ன வுடுத்திரள் கொட்டுண் டுதி ராமே, குவடு படுந்திசை செவிடு படச்சிலர் சுடர்கள் குழம்பா

(ரு) சாரவரிதால் இருசுடரும் தொக்கென விளங்கும் செம்ம ணிமாடமும் தரளமாடமும் வெயிலினொடுநிலாப்போர்ப்பவெ ன்க. புரி - கோட்டை. புரித்தல் - வளைத்தல். இதனை "பொன் புரிந்தசெஞ்சடைக்கு வெள்ளிப்புரிபுரிக்கும் வெண்டிங்கட்கண் ணியான்" என்னும் சிதம்பரச்செய்யுட்கோவையானுமுணர்க.

மே,—திருவிர லொடுநக கண்களி னுஞ்செங் குருதி ததும்பா மே, சேயொளி நின்று துளும்பிட நின்சிறு செங்கை வருந்தா மே,— முருகலர் தாரவ னொருமுறை மெல்ல முழக்குக சிறு பறையே, முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன் முழக்குக சிறு பறையே. (எ)

வம்மி னெனப்புலவோரை யழைத்திடு வண்கொடை முரச மென, வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி வாணர்களோடி வர,—வம்மென் மடப்பிடி பொன்னுலகீன்ற வணங்கை மணம் புணரு, மணிகிளர் மணிமுர சென்னவெ மையனொ டம்மை மனங்குளிரத்,—தெம்முனை சாய்தரு சமர்வினை யாடிச் செங் கள வேள்விசெயுந், திறன்முர செனவிமை யவர்விழ வயரச் செழுநகர் வீதிதொறு,—மும்முர சமுமதிர் காவிரி நாடன் முழக் குக சிறுபறையே, முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன் முழக் குக சிறுபறையே. (அ)

வேறு.

பெருகுசு வைத்தெளி நறவொழு கக்கனி கனியமுதே, பிடி நடை சுற்றிட வடிகள்பெ யர்த்திடு மடவனமே,— கருவரை நெக்குட னுருகமி ழற்றுமொர் கிளியரசே, கருணைசெ யத்தகு மளியணி டத்தெனு மொழிபுகலா,— வருளில்பு னத்தவர் மக ளிரு பொற்பதம் வருடல்செயா, வவண்முனை டுத்துநின் முடி யின்முடித்திடு காமலராற்,—பருவயி ரப்புய சயிலன்மு ழக்குக சிறுபறையே,பரிதிபு ரிச்சிறு குமரன்மு ழக்குக சிறுபறையே ()

இழுமென்மொ ழித்தெளி தமிழின்வ டித்திடு நவரசமே, பிதயவி ருட்டற வுணர்விலு தித்திடு சுடரொளியே,— கழுவும ணிக்கல னடுவிலி ழைத்திடு குலமணியே, கனிதரு முக்கனி யொடுவடி கட்டிய சுவையமுதே,— யொழுகுந றைச்செழு மலர்விரி யக்கமழ் புதுமணமே, யுருகுமு ளத்தருள் பெருகியு

வட்டெழு சலநிதியே,—பழமறை கட்கொரு முதல்வன்மு ழக்குக சிறுபறையே, பரிதிபு ரிச்சிறு குமரன்மு ழக்குக சிறுபறையே. (௧0)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப்பருவம்.

போரோடு படைதுறந் துடறிறந் தோடுசெம் புனலோடவோடிகிமிரும், புணரிப் பெருந்தானை யவுணப் படைத்தலைவர் பூதப் படைத்தலைவர்முன், — ஞரோ டவிழ்ந்திட்ட குஞ்சிக் கிமைத்திட்ட தழல்விழிக் கெதிர்செலாத, தாளுக்கு வாள்சோர் தடக்கைக்கு நாமநுந் தாலிக்கு வேலிகொலெனப்,— பீரோடு கொங்கைக்க ணீரோடு வெள்ளருவி பெருகக் கடைக்கணிற்கும், பெய்வளை யவர்க்கோத வவர்விழிக டொறுமிளம் பேதையர்கள் கண்டொறுமெனத், — தேரோடு மொருபெருஞ் சிலையோடு நின்றவன் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (௧)

(௧) அவுணப்படைத்தலைவர் தம்வரவை நாடி வாயிலினிற்கும் மங்கையரைநோக்கி, பூதப்படைத்தலைவ ரொதிரவிழ்ந்த, எங்கள் குஞ்சிமுதலியவற்றிற்கும் (இது நீங்குங்கொல்லோவென) அச்சத்தை விளைத்துள்ள உங்கள்தாலிகட்கும் வேலியாய் நின்று காத்தவர் முருகக்கடவுளே யென்றுகூற, (பேரருளைவியந்து அம்மங்கையர் தியானிக்குங்கால்) அவர்விழிகடோறும் பிரசன்னமாயினவரே! சிறுதேருருட்டியருளுக. எ-று. அவுணப்படைத்தலைவர் வேலியென வளையவர்க்கோத அவர்விழிகடொறுநின்றவன் என்க. குஞ்சியவிழ்தல் விழியிமைத்தலாதிய வுடையலாக்கோறல் அறமன்மையின் அத்தகையரைப் பூதப்படைத்தலைவர் கொல்லாமைக்குக் காரணம் முருகக்கடவுளாணை யென்றபடி. வேலி - அரண். கொல் அசை. இளம்பேதையர் - (அக்கடவுளிடத்தே காதல்கொண்ட) சிறுநங்கையர். அவர் கண்களுக்கு எதிர்ப்பட்டு நிற்குமாறுபோல நின்றவரென்க.

கம்பக் களிற்றுக் கடற்றானை வீரர்கட் கடையிற் கடைக்கணலெழக், கண்டொட் டுணுஞ்சில மருட்பேய் கரிந்தெழு கடுங்குருதி வெள்ளமூழ்கித், — தம்மைத் தலைச்செம் மயிர்ச்சிகையினைச்சுடு கனற்சிகை யெனப்பதைப்பச், சூட்டிறைச் சிக்குச்சிணுங்கும் குறட்பேய்க்கொர் சூர்ப்பேய் கொழுந்தசைகள் கோத்,— தம்பிற் சுடத்தான் கவந்தமொடு தொந்தமிட் டாடும் பறந்தலைநிலத், தானைப் பிணக்குன்று மவுணப் பிணக்காடு மளறுபட் டொழியநின்றோர்,— செம்பொற் றடந்தே ருருட்டிவருசேவகன் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (உ)

வண்டேறு செங்கிறப் பங்கித் தலைக்கமல வனமூடு குருதியாற்று, மால்யானை கையெடுத் தார்த்துநீந் தப்புணரி மகரமீனெனவினைந்து,— கொண்டேகு சிறுகுடர்ப் பெருவலை யெடுத்தெறி குறட்பேய் நெடுஞ்சினமொடக், குலகரி பிடித்திர்ப்பவலறுவதும் வீரர்தொடு கோலநேமி யவுணருயிரை,— யுண்டேகு வதுமொருவன் விடவோ லிநங்கரிக் குதவவரு திகிரியேய்க்கு, மொல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்டரு ருய்த்திட்ட விந்தரஞாலத்,— திண்டேரை யுருளாது நிற்கப் பணித்தவன் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவளரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (௩)

பைங்கட் சிறைக்கால் கடைக்கால் செயக்கிரிகள் விரிசிறைபடைத்தெழுவபோற், படருந்தன் வேகத்தி னொக்கப் பறக்கப்பறந்தலைச் செந்தலையறும்,— வெங்கட் டயித்திய ருடற்குறைதலைக்குறை விரைந்துயி ரினைத்தொடர்ந்து, மீச்செல்லு மாச்செல் லெனச்செலப் பூமாரி விண்ரேப்ப தெனவுடுவுகட், — பொங்கற் கடற்சுட்ட மட்டதிக் குந்தமிற் போர்செயப் பார்

(உ) சூர்ப்பேய் அம்பிற்சுட ஆடும் பறந்தலை என்க.

(௪) மாச்செல் - கருமேகம்.

கவிழவெம், பொறியுடற் சேடன் படர்தூக்கி யார்க்கும் புகைப் படல வடவாமுகச், — செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத் தவன் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (சு)

நெய்வைத்த கூந்தற் பிடிக்குதவ னாற்கோட்டு நிகளத் தடங்குன்றுவா, னிமிருங் கதிர்க்குலைச் செந்நெலைப் பாகுபடு நெட்டிலைக் கன்னல்கொலெனுக், — கைவைத் திடப்பரி முகஞ் செய்து வெய்யோன் கடும்பரியை நட்புக்கொளுங், கழனிவிரி காவிரித் திருநாட கற்பகக் காட்டிற் பிறந்துபிரியா, — மெய் வைத்த காதன்மை யரமகளிர் பேராய வெள்ளந் திளைத்தாடி யோர், மென்னடைக் கேக்கற்ற பிடியின் பிடிக்கமுலை வேழங்க ளுடனுலாவுங்,—தெய்வப் பிடிக்குக் கிடைத்ததொரு மழகளிறு சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங் குமர சிறுதே ருருட்டியருளே. (ரு)

பற்றுவிற் காமன் கொடிப்படைக் கூரெலாம் படைவீடு கயல்கடாவும், பழனங்க ளோவத்ர சாலைபூஞ் சோலைப் பரப் பெலாங் காற்றேறொடுங்,—சொற்றவங் கங்குற் கடாயானை யுங் கட்டு கூடமே யெனினுமருதக், கோமகன் குடிகொண்ட சோ ணாட சேணாடு குங்குமங் கொட்டுதிண்டோட்,— பொற்றடங் குன்றினிரு கொங்கைப் பொருட்புமொரு பூங்குழற் காடும்வெ யில்கால், புனைமணிக் கலையல்குன் மாக்கடலு மேந்தியொர் புனத்தின்கண் மிகநுடங்குஞ், — சிற்றிடைக் கொல்குமென் கொடிபடர நின்றவன் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (சு)

(ரு) செந்நெல் பரிமுகஞ்செய்தல் - பரிமுகம்போலும் தோ ற்றமுடையனவாய் வளைந்துநிற்றல். (சு) மருதக்கோமகன் - இந்திரன். குன்றிற் கொடிபடர நின்றவனென இயையும்.

கோல்பாய் பசும்புண் ணைசும்புகும் பத்தடங் குன்றுகவுண்
மடைதிறந்து, கொட்டுநெட் டருவியொடு தேனருவி யுந்திரை
கொழித்துடன் கோப்பமேதிப், — பால்பாய் பெருக்கா றுவட்
டெழுத றன்றுணைப் பாவைய ரொடுங்குறுகுமப், பாகீ ரதிக்கு
நிகர் தண்டுறை தொறுந்திக்கு பாலர்மேற் படையெடுத்து,—
வேல்பாய் நெடுங்கட் கடற்றானை யொடுமொருவன் மேற்செல்ல
நாற்றிசையிலும், வெற்றிக் கயற்கொடி யெடுத்தென வெடுத்
தெறியும் வெண்டிரை இழித்துவெடிபோஞ், — சேல்பாய்
தடம்பணை யுடுத்தகா விரிநாட சிறுதே ருருட்டி யருளே,
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டி
யருளே. (எ)

மீத்தந்த மாகத்து மேகத்தி னூடுமுடு மீனிரியல் போகவு
களும், வெடிவாளை மதியக டுடைத்தூற்று தெள்ளமுத வெள்
ளருவி யாற்பசுந்தண்,—காத்தந்த சண்பகப் பூவேரி மாரிசெய்
காவேரி யாயிரமுகக், கங்கையா கச்செய்து மீட்டுநாற் கோட்டு
வெங் களிறுபிளி றத்தாவிவான்,—பூத்தந்த கற்பகக் காட்டினை
யுழக்கிவிரி பொற்றா தெழுப்பிமற்றப், பூந்துகட் படலத்தி னுற்
றெய்வ நதியையும் பொன்னிநதி யாகச்செயுந், — தேத்தந்த
தண்பணை யுடுத்ததிம் புனனாட சிறுதே ருருட்டியருளே, திரு
வளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே.()

கள்ளவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்துபூங் கற்பகத்
தும்படர்தலாற், காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் சூழ
மியக் கமுகின் கழுத்தில்யாத்த,—வொள்ளொளிய செம்மணிப்
பொன்னூசல் பன்முறை யுதைந்தாட வாடுந்தொறு, மொண்

(எ) தன்றுணைப்பாவையர் - யமுனையும் சோணையும். ஒரு
வன் - மன்மதன். தண்டுறைதொறும் சேல்பாய்பணை என்க.
(அ) வாளை செய்து தாவி உழக்கி எழுப்பி செயுமென இயையும்.

கமுகொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடு மொக்கவசை யத்தலை யசைத்,—தள்ளிலை யலங்கல்வே லெம்பிரா னைப்பாடி யாடுகின் றோனத்தா, மலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வ மம் பொன்மலர் மாரிதூர்க்குர்,—தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (கூ)

வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென மணிமுறுவ னிலவுகாலு, மழலைவாய் முத்துண்டு முச்சிமோந் துந்திரு மடித் தலத் தினிலிருத்திப்—,பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவை நின் படிவமா கக்காட்டியிப், பாலரொடும் விளையா டெனப் பணித் துந்தங்கள் பார்வைகளி யாடச்செயுந்,—தாராட்டு மதி முடித் தீராத வினைதீர்த்த தம்பிரா னுந்தம்பிரான், றழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற தையனு யகியும்வைத் துச்,—சீராட்டி விளையாடு சேனு பதிக்கடவுள் சிறுதே ருருட்டி யருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (க0)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

(கூ) அசைய - அசைதலால். கற்பகத்தெய்வம் தலையசைத் துப்பொழிவபோல் தூர்க்குமென்பது.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரமும்மணிக்கோவை.

காப்பு.

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
மும்மணிக்கோ வைக்குவந்து முன்னிற்கு - மெம்மணிக்கோ
வஞ்சக் கரக்கற் பகத்தா ரிறைஞ்சுமஞ்சு
கஞ்சக் கரக்கற்ப கம்.

நேரிசையாசிரியப்பா.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு
நாமநீர் வரைப்பி னுநில வளாகமு
மேனைய புவனமு மெண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
யனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே
யீட்டிய வினைப்பய னைவற்றையு மறைத்துநின்
றாட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
யடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
யித்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென

(க) கஉ. குஞ்சிதம் - வளைவு.

நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பி
னருள்சூற் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியு
மற்புதக் கூத்தநின் னமுதவாக் களித்த
நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில
வில்லறந் துறவற மெனச்சிறந் தனவே
யர்நிலை யிரண்டினுண் முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவ
னற்குண நிறைந்த கற்புடை மனைவியோ
டன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
யைவகை வேள்வியு மாற்றி யிவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவா னறன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித் தன்றே
மற்றையது கிளப்பின் மனையற நிரப்பி
முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப்
பொருளு மின்பமு மொரீஇ யருளொடு
பொறையு மாற்றலு நிறைபே ரொழுக்கமும்
வாய்மையுந் தவமுந் தூய்மையுந் தழீஇ
யோரறி வுயிர்க்கு முறுதுய ரோம்பிக்

(க) ௨௮. புறந்தருதல் - ஓம்புதல். ௨௯. ஐவகைவேள்வி யாவன:—பிரமயாகம் தேவயாகம் பிதிர்யாகம் மானுடயாகம் பூதயாகம். இவற்றிற்குப்பொருள், வேதமோதுதல் ஓமம்வளர்த்தல் நீர்க்கடனாற்றல் விருந்தோம்பல் பலியீதல் என்பனவாம்.

காலோய் நடைய னாகித் தோலுடுத்
தென்பெழு மியாக்கையன் றன்புறத் தளங்காது
வரையுங் கானு மெய்திச் சருகொடு
கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீ ரழுவத் தழுங்கி வேனிலி
னைவகை யழலின் மெய்வருந்த வருந்தி
யிவ்வகை யொழுகு மியல்பிற் றன்றே
அதனால்
இந்நிலை யிரண்டு மெம்மனோர்க் கியலா
நன்னிலை யாகலி னந்நிலை நிற்றற்
குரனு மாற்றலு மின்றி வெருவந்
தெளிதினிற் றமியனே னரியது பெறுதற்
குளதோ நெறியொன் றுணர்த்துமி னீரென
மூத்தலந் தலங்களு மூத்தித் தலமா
வித்தல முடைத்தென விசைத்தனர் சிலரே
யறிஞராங் குரைத்த வுறுதிக் கட்டுரை
யுலகியல் வழக்கும் புலனெறி வழக்குமென்
றிருவகை வழக்கினு நிலைபெற் றன்றே
அவற்றுள்
ஆரூர்ப் பிறத்த னேர்படி னல்லது
செயற்கையி னெய்து மியற்கைய தன்றே
அதா அன்று
காசியி னிறத்த னோக்கித் தேசம்விட்
டறந்தலைத் தந்த வரும்பொரு டாங்கிப்

---

(௧) ௪௩. கானீர் - கால் + நீர். ௪௭ - நிலை - ஆச்சிரமம். ௫௨ - ௫௩ - இப்பரதகண்டம் தலங்களுள் முத்தித்தலமாக முத்தலமுடையதென அறிஞர் சிலர் இசைத்தனரென்க. ௫௫. புலனெறிவழக்கு - செய்யுள்வழக்கு. ௫௭ - நேர்படல் - இயல்பாக வாய்த்தல். ௬௰ - அறந்தலைத்தந்த - அறத்தின்வழிமீட்டிய.

பிறன்பொருள் கொள்ளாப் பேரறம் பூண்டு
கழிபெருங் கான நீங்கி வழியிடைத்
தீப்பசிக் கிரங்கி நோய்ப்பனிக் கொதுங்கிப்
பல்பிணிக் குடைந்து செல்லுங் காலத்
திடைச்சுரத் திறவா தின்னுயிர் தாங்கிக்
கிடைத்தன னாயி னடுத்தநல் லொழுக்கமோ
டுடல்விடு காறுமத் தடாகர் வைகி
முடிவது கடைபோக முடிவதோ வரிதே

அதனாற்

சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூ
ருற்றநின் றிருக்கூத் தொருகா னோக்கிப்
பரகதி பெறுவான் றிருமுன் பெய்தப்
பெற்றன னெளியனேன் பற்றில னாயினு
மன்பிலை சொடியையென் றருளா யல்லை
நின்பதம் வழங்குதி நிமலவென் றனக்கே
மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினு
மருந்துழி யொருவ னருவருப் புறீஇத்
தன்முகஞ் சுழித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்குந்
தீப்பிணி மாற்றுத றிண்ணமே யன்றி
நொதுமலும் பகையும் போக்கி யொருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
வழக்குமன் றைய மன்றுடை யோர்க்கே. (௧)

---

(௧) ௬௯. பெரும்பற்றப்புலியூர் - தன்னைத்தரிசித்தவர்கட்குத் தன்னிடத்தே பெரும்பற்றைவிளைக்கும் புலியூர்; அகரம் சாரியை. ௭௩. அருளாய் அல்லை - அருளாதுவிடக்கடவாயல்லை. ௮௧. நொதுமலர் - உறவும்பகையுமல்லாத புதியோர்.

நேரிசைவெண்பா.

மன்றம் பொருட்டா மதிலிதழா மாடங்க
டுன்றம் புயல்கள் சுரும்பராப் - பொன்றங்கு
நற்புண்ட ரீகமே யொக்கு நடராசன்
பொற்புண்ட ரீக புரம். (உ)

கட்டளைக்கலித்துறை.

புரமொன் றிரண்டும் புகையழ லுண்ணப் புவனமுண்ணுஞ்
சரமொன் றகிலஞ் சலிக்கவெய் தோய்சலி யாநடஞ்செய்
வரமொன் றிரண்டு மலர்த்தா ளூன்றிற்றன் மாமகுடம்
பரமொன்று மென்றுகொல் லோகொண்ட வாவப்பதஞ்சலியே.

நேரிசையாசிரியப்பா.

சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்
பலநா ளோதிக் கலைமுற்று கிரம்பி
யளவையி னளந்துகொண் டுத்தியிற் றெளிந்து
செம்பொரு ளிதுவெனத் தேறி யம்பலத்
ரு தாரா வன்பினோ டகனமர்ந் திறைஞ்சிப்
பேரா வியற்கை பெற்றனர் யானே
சரியையிற் சரியாது கிரியையிற் றளரா
தியோகத் துணங்கா தொண்பொரு ணோக்காது
வறிதே நின்றிரு மன்ற நோக்கிப்

(உ) புண்டரீகம்-தாமரை; வியாக்கிரம்.

(ங) சரமொன்றெய்தோய்! சலியாது நடனஞ்செய்தருள வேண்டுமென்று அப்பதஞ்சலிமுனிவர் வரமொன்றுகொண்ட வாறு இருபதமும் ஊன்றினல் தம்மகுடம் பாரமொன்றும் என்றுகருதியோ? எ-று. (ச) ங. அளவை - பிரமாணங்கள். ரு-பேராவியற்கை - என்ஞான்றும் ஒருநிலைமையதா மியல்புடைமை; அது வீடு. அ - ஒண்பொருணோக்கல் - பதி பசு பாசங்களை உள்ளவாறறிதல்; இதுவே ஞானமெனப்படும்.

பிறவா நன்னெறி பெற்றன னன்றே
முட்புறம் பொதிந்த நெட்டிலைக் கைதை
சுரிமுகப் பணிலமொடு சூலுளைந் துமிழ்ந்த
தரளமும் வெண்மடற் றுங்குவ தம்ம
கருங்கழிக் கரையில் வெண்பொடி பூசி
யிருந்தவ முஞற்றியு மியாம்பெறற் கரிய
செஞ்சடைக் கிடந்த வெண்மதிக் கடவுள்
வருகவென் றழைத்துப் பெருநயப் பெய்திக்
கண்ணீர் வாரக் கலந்துடன் றழீஇ
யுண்ணென வெண்சோ றேந்தித் தண்ணெ
னுடக்கணைத் தொடுமவ் வுடுபதிக் கடவுளை
மடற்றலைத் தாங்கி வைகுவது கடுக்கு
நெய்தலொடு தழீஇய மருத வேலித்
தெய்வப் புலியூர் வைதிகக் கூத்த
பொன்னிறப் புறவுங் கருநிறக் காக்கையு
மன்னுமா லிமைய வரைப்புறஞ் சேர்ந்துழி
யிருதிறப் பறவைக்கு மொருநிற னல்லதை
நிறம்வேறு தெரிப்ப துண்டோ விறைவநின்
னின்னருள் பழுத்த சந்நிதிச் சேர்ந்துழி
யிருவேம் பெற்றது மொருபே றகலின்
வேற்றுமை யுளதோ வில்லை
யாற்றல்சால் சிறப்பி னனையரோ டெனக்கே. (௪)

நேரிசைவெண்பா.

ஓட்டுவிக்கக் கூட்டினைவிட் டோடும் பொறியரவைத்
தாட்டுவிக்குஞ் சித்தர்நீ ரானக்காற் - கூட்டமிட்டு
மன்றாடு மும்மையொரு மாசுணநின் றாட்டுவிக்க
நின்றாடு கின்றதென்கொ னீர். (௫)

---

(௪) ௧௮ - கண்ணீர் - கண் + நீர்; கள் + நீர். ௨௫ - இமைய வரை - பொன்மலை. (௫) முதலடிமுற்றும் சிலேடை.

கட்டளைக்கலித்துறை.

ருண்ட புண்டரி கத்துணைத் தாணிழற் கீழ்ப்பொலியுஞ்
சீருண் டடித்தொண்டு செய்யா வெனக்குஞ்சிற் றம்பலத்தெங்
காருண்ட கண்டனைக் கண்டன னூலக் கடலமுத
மாருண் டனர்மற் றவரெவ ரேனு மமரர்களே. (௬)

நேரிசையாசிரியப்பா.

அமரர் கோமக னரும்பெறல் வாழ்க்கையு
மிருநிதிக் கிழவ னொருபெரு வெறுக்கையு
மைங்கணைக் கிழவன் றஞ்சா நலனு
மொருவழிக் கிடைப்பினும் வெருவந்து கலங்கிக்
கைத்துண் வாழ்க்கை யுத்தம யோகிகட்
கெத்திறம் வைகினு மிடையூ றின்றே
யானே
வளியுண் புளிப்பும் பித்துண் கைப்பு
மையுண் மதுரமு மல்லன பிறவு
நாச்சுவை யறிய நல்கின மேற்சென்
றதுவது வாக வழூஉத்திப் புதிதுண்டு
கழிபெருங் காம மூழ்கி முழுவதும்
பாவமும் பழியு மேவுவ தல்லது
செம்பொரு டெரிந்து சிற்றறி வொரீஇ
யைம்புல னடக்கி யறந்தலை நின்று
தீநெறி விலக்கி நன்னெறிப் படர்தற்
குரனில் காட்சி யிழுதைய னுதலிற்
பூவாது பழுக்குஞ் சூலடிப் பனசம்

---

(௭) ௫ - கைத்து உண் வாழ்க்கை - வெறுத்து அனுபவிக்கும் வாழ்வு. ௭ - உண்ணல் - வாதபித்த சிலேத்தும சரீரிகளால் உண்ணப்படுதல்; வாதமுதலியவற்றை அழிப்பதுமாம். ௧௬ - உரனில்காட்சி - திண்மைபெறாதவுணர்ச்சி.

பார்கிழித் தோடிப் பணியுல களந்த
வேர்தொறும் வேர்தொறும் வெவ்வேறு பழுத்து
முட்புறக் கனிக டேக்குவ தொட்பமொடு
பதஞ்சலி முனிவனைப் பார்கொளத் தந்த
பிலங்கொளக் கொடுக்கும் பலங்கள்பல நிகர்த்து
மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்

அதுவே

பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன் றுடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடக்கைக்
கிடம்பிறி தில்லை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையூ ணல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டாற்றினு
மீகுந ரில்லை யாகநா ணுளு
மொழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திற
முடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே. (எ)

நேரிசைவெண்பா.

வேதண்ட மேபுயங்கள் விண்ணே திருமேனி
மூதண்ட கூடமே மோலியாங் - கோதண்ட
மொற்றைமா மேரு வுமாபதியார் நின்றாடப்
பற்றுமோ சிற்றம் பலம். (அ)

(எ) ௨0. ஒட்பம் - ஞானம். ௩௩. விழுமை - மேன்மை.
(அ) சிற்றம்பலம் ஈண்டு சிறியவம்பலம் என்பது.

கட்டளைக்கலித்துறை.

பற்றம் பலமிதித் துத்துதித் தேசெவ்வி பார்த்துப்புல்லர்
வெற்றம் பலந்தொறு மெய்யிளைத் தேறுவர் வீணர்கெட்டேன்
குற்றம் பலபொறுத் தென்னையுமாண்டுகொண் டோன்புலியூர்ச்
சிற்றம் பலங்கண்டு பேரம் பலத்தைச்செய் யாதவரே. (௯)

நேரிசையாசிரியப்பா.

செய்தவ வேட மெய்யிற் றாங்கிக்
கைதவ வொழுக்கமுள் வைத்துப் பொதிந்தும்
வடதிசைக் குன்றம் வாய்பிளந் தன்ன
கடவுண் மன்றிற் றிருநடங் கும்பிட்
டுய்வது கிடைத்தனன் யானே யுய்தற்
கொருபெருந் தவமு முஞற்றில னுஞற்றா
தெளிதினிற் பெற்ற தென்னெனக் கிளப்பிற்
கூடா வொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற் கேற்பநின் றொண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறு
நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பண்ணா ணோக்கின ராகலி னன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலி
னெவ்விடத் தவருனை யெண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையெனற் கையம்வே றின்றே

அதனால்

இருபெருஞ் சுடரு மொருபெரும் புருடனு
மைவகைப் பூதமோ டெண்வகை யுறுப்பின்
மாபெருங் காயந் தாங்கி யோய்நின்

---

(௯) பற்றம்பலம் - பல்+தம்பலம். பேரம்பலம் - பெரிய அழ
கிய பலன். (௧௦) ௧௧ - நின்னிலையென்றது - சிவபாவனையை.

அருண்முந் துறுத்த வைந்தொழி னடிக்கும்
பரமா னந்தக் கூத்த கருணையொடு
நிலையில் பொருளு நிலையியற் பொருளு
முலையா மரபி னுளங்கொளப் படுத்திப்
புல்லறி வகற்றி நல்லறிவு கொளீஇ
யெம்ம னோரையு மிடித்துவரை நிறுத்திச்
செம்மைசெய் தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே. (௧௦)

நேரிசைவெண்பா.

தக்கனார் வேள்வி தகர்த்துச் சமர்முடித்த
நக்கனார் தில்லை நடராச - ரொக்கற்
படப்பாய லான்காணப் பைந்தொடியா ளென்றோ
விடப்பாதந் தூக்கியவா வின்று. (௧௧)

கட்டளைக்கலித்துறை.

இனமொக்குந் தொண்டரொ டென்னையு மாட்கொண்ட வீசர்தில்லைக், கனமொக்குங் கண்டத்தெந் தண்ணுத லார்சடைக் காடுகஞ்ச, வனமொக்கு மற்றவ் வனத்தே குடிகொண்டு வாழும்வெள்ளை, யனமொக்குங் கங்கை யருகேவெண் சங்கொக்கு மம்புலியே. (௧௨)

நேரிசையாசிரியப்பா.

புலிக்கான் முனிவற்குப் பொற்கழல் காட்டிக்
கலிக்கா னிவந்த கட்டில் வாங்கி
மாயோன் மணிப்படப் பாயலு மெடுத்து
வறும்பாழ் வீட்டில் வைத்துக் கொண்டிருந்
துறங்காது விழித்த வொருதனிக் கள்வ
காற்றோர்க் குடம்பைக் கமைப்புட் படுக்கத்

(௧௦) ௨௰. முந்துறுத்தல் - முற்கொள்ளல்.

தீப்பொறி வைத்த திருநுதற் கண்ண
வாதி நான்மறை வேதியற் பயந்த
தாதை யாகிய மாதவ ரொருவரு
மிருங்கா ளத்தி யிறைவர்முன் னுண்ண
வருஞ்சா பத்தா லமுதமூ னுக்கு
நற்றவ வேடக் கொற்றவ ரொருவரு
மொருபிழை செய்யா தருள்வழி நிற்பவவ்
விருவர்கண் பறித்த தரும மூர்த்தி
முட்டையிற் கருவில் வித்தினில் வெயர்ப்பி
னிற்பன நெளிவ தத்துவ தவழ்வ
நடப்பன கிடப்பன பறப்பன வாகக்
கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் கோடி
பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்
கெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்
கெண்ணுன் கறமு மியற்றுதி நீயென
வள்ளன்மை செலுத்து மொண்ணிதிச் செல்வ
வளியன் மாற்றமொன் றிகழாது கேண்மதி
யெழுவகைச் சனனத் தெம்ம னேரு
முழிதரு பிறப்பிற் குட்குவந் தம்ம
முழுவது மொரீஇ முத்திபெற் றுய்வா
னின்னடிக் கமலம் போற்றுப விந்நிலத்
தொருபது வகைத்தாம் யோனிதோ றுழன்றும்
வெருவரும் பிறப்பின் வேட்கைய னுகிநின்
சந்நிதிப் புக்குமத் தாமரைக் கண்ணன்
றுஞ்சினன் றுயிலொரீஇ யெழாஅ
னஞ்சினன் போலுநின் னுடல்காண் பதற்கே. (கரு)

நேரிசைவெண்பா.

ஆட்டுகின்றே ரின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று - வேட்டதனை

யுற்றுநெடு நாளாக வுண்ணுமோர் மால்யானை
பெற்றதொரு கூந்தற் பிடி. (கச)

கட்டளைக்கலித்துறை.

பிடிப்ப தமக்கெனை வேண்டில்வெங் கூற்றெனும் பேர்முடிய
முடிப்பது மத்த முடியார்க்கு வேண்டுமுக் கட்பரனு
ரடிப்பது மத்தொன் றெடுத்துத்தென் பான்முக மாகநின்று
நடிப்பது மத்தன்மை யாகம ளுரிது நாடுமினே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

மின்வீழ்ந் தன்ன விரிசடைக் காட்டிற்
பன்மாண் டுத்திப் பஃறலைப் பாந்தட்
சிறுமூச்சிற் பிறந்த பெருங்காற் றடிப்ப
விரிதிரை சுருட்டும் பொருபுனற் கங்கை
படம்விரித் தாடுமச் சுடிகைவா ளரவி
னழற்கண் கான்றவவ் வாரழல் கொளுந்தச்
சுழித்துள் வாங்கிச் சுருங்கச் சுருங்காது
திருநுதற் கண்ணிற் றீக்கொழுந் தோட
வுருகுமின் னமுத முவட்டெழுந் தோடியக்
கங்கை யாற்றின் கடுகிரப் பொழிக்குந்
திங்களங் கண்ணித் தில்லை வாண
வன்பருக் கெளியை யாகலி னைய
நின்பெருந் தன்மை நீயே யிரங்கி
யுண்ணின் றுணர்த்தி னுணரி னல்லதை
நுண்ணு லெண்ணி நுணங்க நாடிப்
பழுதின் றெண்ணிப் பகர்து மியாமெனின்
முழுது மியாரே முதுக்குறைந் தோரே

(கரு) நமனுரே! எனைப்பிடிப்பதாகியவெற்றியை உமக்கு வேண்டில் உம்மைமுடிப்பதாகியவெற்றி பெருமானுக்குவேண்டப்படும்: அடிதூக்கியதும் உதைக்குங் குறிப்பே என்பது.

நால்வகைப் பொருளு நவையறக் கிளந்த
வேத புருடனு மியாதுநின் னிலையெனத்
தேறலன் பலவாக் கூறின னென்ப

அதாஅன்று

முன்னைநான் மறையு முறைப்பட நிறீஇய
மன்னிருஞ் சிறப்பின் வாதரா யணனுங்
கையிழந் தனனது பொய்மொழிந் தன்றே

அதனால்

தெளிவில் கேள்வியிற் சின்னா ளோதி
யளவா நின்னிலை யளத்தும் போலு
மறிவு மாயுளுங் குறையக் குறையாத
பையுளொ டெண்ணில படைத்துப்
பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே. (கசு)

நேரிசைவெண்பா.

புனையேன் தருவுதவு பொன்னரிய மாலை
வனையேம் பசுந்துழாய் மாலை - பனிதோய்
முடிக்கமலஞ் சூடினேன் மொய்குழலோ டாடு
மடிக்கமலஞ் சூடினே மால். (கஎ)

(கசு) கங்கைசுருங்குதலும் அங்ஙனஞ்சுருங்காதபடி இன்னமுதமோடி அந்நிரப்பொழிக்குந்திங்கள் என்க. எண்ணல் இரண்டுள்ளே முந்தியது ஆராய்தல்; பிந்தியது தெளிதல். நுணங்கநாடல் - பிரமாணங்களுக்கியைய நுண்ணிதிநோக்கல். நின்னிலை நீயேயுணர்த்தினல்லது புன்மையோமாகியயாமோ அளக்கக்கடவோம். எ-று. போலும் ஒப்பில்போலி. பையுள் - துன்பம். முறைப்படநிறீஇ என்பதும் பாடம். கையிழந்தது காசியில் விசுவநாதர் சந்நிதியில் கேசவனே பரம்பொருளெனக் கூறியேயாம். இதனைக் காசிகாண்டத்துட்காண்க. (கஎ) பனிதோய்கமலம் - கங்கை. கழலோடாடுமென்பதும்பாடம்.

கட்டளைக்கலித்துறை.

சூடுங் கலைமதி யைத்தொட ராதுபைந் தோகைக்கஞ்சா
தோடும் பொறியர வொன்றுகேட் டேன்மறை யோலமிட்டுத்
தேடும் பிரான்றிருக் கூத்தினுக் கேமையல் செய்யுமென்று
மாடுந் தொழில்வல்ல தாகையி னாலவ் வருணமகண்டே. (கஅ)

நேரிசையாசிரியப்பா.

கட்புலங் கதுவாக் கதிர்மணி குயிற்றி
விட்புலஞ் சென்ற மேனிலை மாடத்து
வல்லியி னுடங்கு மயிலிளஞ் சாயற்
சில்லரித் தடங்கட் டிருந்திழை மகளி
ரளவில் பேரழ காற்றியும் வாளா
விளமுலைத் தொய்யி லெழுதிய தோற்றந்
தருமிழற் செய்த வரமிய முற்றத்
தமரர் மாதரோ டம்மனை யாடுழி
யிமையா நாட்ட மிருவர்க்கு மொத்தலி
னற்குறி தெரிதற்கு நாகிளங் குமரர்
விற்குறி யெழுதி விடுத்தது கடுக்கும்
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்
பொன்னடிக் கொன்றிது பன்னுவன் கேண்மதி
யென்றுநீ யுளைமற் றன்றே யானுள
னன்றுதொட் டின்றுகா றலமரு பிறப்பிற்கு
வெருவர லுற்றில னன்றே யொருதுய
ருற்றுழி யுற்றுழி யுணர்வதை யல்லதை
முற்று நோக்க முதுக்குறை வின்மையின்
முந்நீர் நீந்திப் போந்தவன் பின்னர்ச்
சின்னீர்க் கழிநீத் தஞ்சா னின்னு
மெத்துணைச் சனன மெய்தினு மெய்துக
வத்தமற் றதனுக் கஞ்சல னியானே

யிமையாது விழித்த வமரரிற் சிலரென்
பரிபாக மின்மை நோக்கா ரியார்கொ
உ௫ திருநடங் கும்பிட் டொருவனுய்ந் திலனாற்
சுருதியு முண்மை சொல்லா கொல்லென
வறிதே யஞ்சுவ ரஞ்சாது
சிறியேற் கருளுதி செல்கதிச் செலவே. (கசு)

நேரிசைவெண்பா.

சென்றவரைத் தாமாக்குந் தில்லைச்சிற் றம்பலத்து
மன்றவரைத் தாமாக்க வல்லவர்யா - ரென்றுமிவ
ராடப் பதஞ்சலியா ராக்கினா ரென்பிறவி
சாடப் பதஞ்சலியார் தாம். (உ0)

கட்டளைக்கலித்துறை.

தாமக் குழலினல் லார்விழி மீன்பொரச் சற்றுமினிக்
காமக் கருங்குழி யிற்சுழ லேங்கலந் தாடப்பெற்றே
நாமப் புனற்கங்கைப் பேரா றுபாயநஞ் சங்களத்தும்
வாமத் தமுதமும் வைத்தாடு மானந்த மாக்கடலே. ()

நேரிசையாசிரியப்பா.

கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்

(கசு) அமரரிற்சிலர் எனதுபரிபாகமின்மை நோக்காராய்த் திருநடங்கும்பிட்டும் ஒருவனுய்ந்திலன் இவன்யார்கொல்! தரிசித்தவர்களுக்கு முத்தியுண்டென்பது சுருதிப்பிரமாணமன்றோ? சுருதியும் உண்மைசொல்லாகொல் எனஅஞ்சுவர்; அஞ்சாதபடி சிறியேற்கு செல்கதிச்செலவு அருளுதி. என்க.

(உ0) பிறரைத்தம்வயமாக்குவதன்றித் தாம்பிறர்வயமாகாத சிற்றம்பலவர் பதஞ்சலியாதவராய் என்றும் ஆடும்படி என்பிறவியையொழிக்கும் அப்பதஞ்சலிமுனிவர் ஆக்கினார்: இங்ஙனம் இவர் சிற்றம்பலவரைத் தம்வயமாக்கியது வியப்பென்றபடி.

இருநில மகிழ்ந்து மெண்ணில்பல் கால
மொருவன் காணு தொளித்திருந் தோயை
வனசப் புத்தேண் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் சாட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவ
னைந்திணை யுறுப்பி னற்பொருள் பயக்குங்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய வொருபெருஞ் செல்வ
திருத்தொண்டத் தொகைக்கு முதற்பொரு ளாகி
யருமறை கிளந்தநின் றிருவாக்கிற் பிறந்த
வறுபதிற் றுக்கிய வைம்பதிற்று முனிவரு
ளொருவனென் றிசைத்த விருபிறப் பாள
வரைசெய் தன்ன புரசை மால்களிற்
றரசிளங் குமரர் திருவுலாப் போதத்
தவளமா டங்க ளிளநிலாப் பரப்பிச்
செங்கண்யா னைக்கு வெண்சுதை தீற்ற
முதிரா விளமுலை முற்றிழை மடந்தையர்
கதிர்செய் மேனிக்குக் கண்மலர் சாத்தக்
கடவுட் களிற்றிற் கவின்கொளப் பொலிந்த
வுடலக் கண்ண ரொருவ ரல்ல
ரிருநிலத் தநேகரென் றெடுத்துக் காட்டுந்
திருவநீண் மறுகிற் றில்லை வாண
வேய்ச்சொற் றெக்க வாய்ச்சொற் போல
விரிச்சியிற் கொண்ட வுரைத்திற நோக்கி
வினைமேற் செல்லுநர் பலரே யனையர்க்
கவ்வினை முடிவதூஉங் காண்டு மதாஅன்று
பல்லியும் பிறவும் பயன்றாக் காது
சொல்லிய பொருளுந் துணிபொரு ளுடைத்தெனக்
கொண்டோர் கொளினுங் குறைபா டின்றே

அதனால்

யாவர் கூற்றுநின் னேவலி னல்லதை
நிகழா நிகழ்ச்சி யுணராது போலுங்
குழந்தை யன்பிற் பெரும்புகழ் நவிற்றிநின்
௩௫ ஞணையி னின்ற வென்னை
நாணிலை கொல்லென நகுவதென் மனனே. (௨௨)

நேரிசைவெண்பா.

மன்றுடையான் செஞ்சடைமேல் வாளரவுக் குள்ளஞ்சி
யென்றுமதி தேய்ந்தே யிருக்குமா - னின்றுதவஞ்
செய்யுமுனி வோர்காமத் தீப்பிணிக்கஞ் சித்தமது
பொய்யுடலை வாட்டுமா போல் (௨௩)

கட்டளைக்கலித்துறை.

வாடிய நுண்ணிடை வஞ்சியன் னீர்தில்லை மன்றினுணின்
றாடிய கூத்த னலர்விழி மூன்றி னரும்பகலு
நீடிய கங்குலுங் கண்ணிரண் டாலுற நெற்றிக்கண்ணாற்
கூடிய தீப்பொழு தாகுங்கொன் மாலைக் கொடும்பொழுதே. ()

நேரிசையாசிரியப்பா.

கொடியு முரசுங் கொற்றவெண் குடையும்
பிறர்கொளப் பொறாஅன் றனே கொண்டு
பொதுநீங்கு திகிரி திசைதிசை போக்கிச்
செவியிற் கண்டு கண்ணிற் கூறி
௫ யிருநிலம் புரக்கு மொருபெரு வேந்தன்
மிக்கோ னொருவன் வெறுக்கை நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை சுருங்கித் தோன்ற
விழப்புறு விழும மெய்தி யழுக்கறுத்து

---

(௨௫) அ. இழப்புறுவிழுமம் - உள்ளசெல்வத்தையும் இழத்தற் கேதுவாகிய துன்பம். அழுக்கறுத்தல் - பிறர்செல்வநோக்கியவழிப் பொறாமைகொள்ளல்.

மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
யயிற்சுவை பெறாஅன் றுயிற்சுவை யுறாஅன்
மாணிழை மகளிர் தோணலங் கொளாஅன்
சிறுகாற்று வழங்காப் பெருமூச் செறிந்து
கவலையுற் றழிவதூஉங் காண்டு மதாஅன்று
விறகெடுத் தூர்தொறுஞ் சுமந்து விற்றுக்
கூலிகொண்டு
புற்கையு மடகு மாந்தி மக்களொடு
மனையும் பிறவு நோக்கி யயன்மனை
முயற்சியின் மகனை யிழித்தன னெள்ளி
யெனக்கிணை யிலையென வினையன்மற் றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங் காண்டும்
அதனால்
செல்வ மென்பது சிந்தையி னிறைவே
யல்கா நல்குர வவாவெனப் படுமே
யையுணர் வடக்கிய மெய்யுணர் வல்லதை
யுவாக்கடல் சிறுக வுலகெலாம் விழுங்கு
மவாக்கடல் கடத்தற் கரும்புணை யின்றே
அதனால்
இருபிறப் பமைந்த வொருபிறப் பெய்து
நான்மறை முனிவர் மூவா யிரவரு
மாகுதி வழங்கும் யாக சாலையிற்
றாஉ நறும்புகை வானுற வெழூஉ
தெழூஉநாப் படைத்த முத்தீக் கடவுள்
கடலமிழ் தமிழ்ந்தாங் கவியமிழ் துண்ண
வரும்பெருந் தேவரை வானவர் கோனொடும்
விருந்தெதிர் கொள்கென விடுத்தது கடுக்கும்
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்

னருள்பெற் றுய்தற் குரிய னியானெனிற்
பல்லுயிர்த் தொகுதியும் பவக்கட லழுந்த
வல்லல் செய்யு மவாவெனப் படுமவ்
வறுமையி னின்றும் வாங்கி
யறிவின் செல்வ மளித்தரு ளெனக்கே. (௨௫)

நேரிசைவெண்பா.

என்செய்தீர் தில்லைவனத் தீசரே புன்முறுவன்
முன்செய் தெயிலை முடியாமற் - கொன்செய்த
பொற்புயங்க நாணேற்றிப் பொன்மலையைத் தேவரீர்
மற்புயங்க ளேவ வளைத்து. (௨௬)

கட்டளைக்கலித்துறை.

வள்ளக் கலச முலையெம் பிராட்டி வரிநயனக்
கள்ளச் சுரும்பர் களிக்கின்ற வாசடைக் காட்டிற்கங்கை
வெள்ளத்தை மேலிட்டு வெண்டா தணிந்து விராட்புருட
னுள்ளக் கமலத்தி னூறுபைந் தேறலை யுண்டுகொண்டே. (௨௭)

நேரிசையாசிரியப்பா.

கொண்டல்கண் படுக்குந் தண்டலை வளைஇத்
தடம்பணை யுடுத்த மருத வைப்பி
னிடம்புரி சுரிமுக வலம்புரி யீன்ற
தெண்ணீர் நித்திலம் வெண்ணில வெறிப்ப
வூற்றெழு தீம்புனல் பாற்கட லாக
விரிதிரைச் சுருட்டே யரவணை யாகப்
பாசடைக் குழாங்கள் பசுங்கதிர் விரிக்குந்
தேசுகொண் மேனித் திருநிற னாகப்
பொற்றாது பொதிந்த சேயிதழ்க் கமல
மலர்விழி முதல பலவுறுப் பாக
வங்கணோர் வனசத் தாசுவீற் றிருக்குஞ்
செங்கா லன்னந் திருமக ளாகப்

பைந்துழாய் முகுந்தன் பள்ளிகொண் டன்ன
வந்தண் பூந்தட மளப்பில சூழ்ந்து
பல்வளம் பயின்ற தில்லையம் பதியிற்
பொன்னின் மன்றிற் பூங்கழன் மிழற்ற
நன்னடம் புரியு ஞானக் கூத்த
வொருபெரும் புலவனோ டேட நீர்ப்பப்
பரவை வாய்தலிற் பாயிரு ணடோ
ளேதமென் றுன்னு திருகா லொருகாற்
றாதிற் சென்றநின் றுணையடிக் கமலத்
தீதொன் றியம்புவல் கேண்மதி பெரும
வலையா மரபி னாணவக் கொடியெனும்
பலர்புகழ் சேரிப் பரத்தையொடு தழீஇ
யேகலன் றணந்தாங் கென்னையு முணராது
மோகமொ டழுந்தி முயங்குறு மமையத்
தங்கவட் குரிய தங்கைய ரிருவருட்
குடிலை யென்னு மடவர லொருத்தி
யெய்தரும் புதல்விய ரைவரைப் பெற்றனண்
மோகினி யென்பவண் மூவரைப் பயந்தன
ளாகிய புதல்விய ரங்கவர் மூவருட்
கலையெனப் பெயரிய கணிகைமற் றொருத்தி
தானு மூவரைத் தந்தன ளவருண்
மானெனப் பட்ட மடவர லொருத்தி
யெண்மூன்று திறத்தரை யீன்றன ளித்திற
நண்ணிய மடந்தைய ரையெழு வரையுங்
கிளப்பருங் காமக் கிழத்திய ராக

(உஅ) உ0 - ஒருகால் இருகால் - ஒருகாலத்தில் இருமுறை. அலையாமரபின் ஆணவம் - பிறவுயிர்களைத் தானலைப்பதன்றி அவற்றால் தானலைக்கப்படுதலில்லாத ஆணவம். உச-தழீஇ முயங்குறுமமையத்து: ஐயெழுவரையும் அணைந்தனன் என்றியைக்க.

வளப்பில் கால மணைந்தனன் முயக்குழி
முறைபிறழ்ந் திவரொடு முயங்குத லொழிகென
வறிஞராங் குணர்த்த வஞ்சின னொரீஇ
நின்னிடைப் புகுந்தனன் மன்னே யென்னிடை
ஞான வல்லியை நன்மணம் புணர்த்தி
யானு ஞேயத் தரும்பொருள் வழங்கி
யிறவா வீட்டினி லிருத்திக்
குறையாச் செல்வரொடு கூட்டுதி மகிழ்ந்தே. (௨அ)

நேரிசைவெண்பா.

கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென
நாடு மபிநயத்தை நண்ணிற்று - லோடியகட்
காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனார் செய்யு நடம். (௨௯)

கட்டளைக்கலித்துறை.

நடிக்கச் சிவந்தது மன்றெம் பிராட்டி நறுந்தளிர்க்கை
பிடிக்கச் சிவந்தது மன்றுகோ லாமெம் பிரானென்றும்பர்
முடிக்கச் சிவந்தன போலுங்கெட் டேன்புர மூன்றுமன்று
பொடிக்கச் சிவந்த நகைத்தில்லை யான்மலர்ப் பூங்கழலே. ()

சிதம்பரமும்மணிக்கோவை

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

(௨அ) சஎ - ஞேயம் - போலி. ஆனுநேயம் - நீங்காத அன்பு. (௨௯) ஒருகாற் கும்பிட்டா லென்புழி ஒருகாலென்பது சிலேஷை. அபிநயம் - குறிப்பு. நடம் நண்ணிற்றென்க.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரச்செய்யுட்கோவை.

வெண்பாவிகற்பம்.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன்றைக் கண்ணி யவர்.

இது சீர்முழுதும் எதுகையொன்றத் தொடுத்தமையாற் றலையாகெதுகை. பூங்கொன்றைக் கண்ணியான் (எ-ம்) பொன் மன்றிறைஞ்சிடுக (எ-ம்) வெண்சீர்வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவிவருதலின், இது ஒழுகிசைச்செப்பலோசைத்து. இதனானே, வெண்பா இரண்டடிச்சிறுமையுடைத் தென்பதூஉங் கொள்க. இதனுட் கண்ணியவர் என்னும் ஒரு மொழியைக் கண்ணியெனவும், அவரெனவும், வகையுளிசெய்து சீர்கொள்ளப்படுதலின், இது மலரென்னும் வாய்பாட் டான்முடிந்த ஒருவிகற்பக் குறள்வெண்பா. (க)

அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள.

(க) ஒன்றென்பது முத்தியை. (உ) எந்தைதாள்காணார் நாணுக்கொள உலகு மாதவனென்பது அறனன்று என்றியைக்க. மாதவன் - இலக்குமிநாயகன். இது மிக்கதவத்தனெனவும்பொருள்படுதலின் தாள்காணாத்திருமாலுக்கு நாணநிகழாநின்றது என்பது.

இது இருவிகற்பக்குறள்வெண்பா. மோனைமுதலியதொடையும், தொடைவிகற்பமும் போலாது தொடுத்தமையால், இது செந்தொடை. (உ)

கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றேற்றங் கொளல்.

இதுவுமது. அனுவெழுத்தால் இணைமோனையமைத்து, ஏனைத் தொடையும், தொடைவிகற்பமும்போலாதுதொடுத்தமையால், இது மருட்செந்தொடை. (ங)

திருமுடியிற் கண்ணிய மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு - பெருமான்
திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.

இது குறளிரண்டாய் இடையே தனிச்சொற்பெற்று ஒருவிகற்பமாய்நடத்தலின் ஒருவிகற்பத்திருகுறணேரிசைவெண்பா. அடிதொறும் ஈற்றுச்சீர் ஒருசொல்லேவரத்தொடுத்தமையால் அடியியைபு. இது காசென்னும்வாய்பாட்டுக் குற்றியலுகர இயற்சீரான்முடிந்தது. (ச)

கறையரவுக் கஞ்சுறு தஞ்சுறாஉங் திங்க
ளிறைவி நறுநுதலைக் கண்டு - பிறைமுடியோன்
கைம்மா னடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்ச
மம்மான் விழிமானைக் கண்டு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தானடந்தமையான், இருவிகற்பத்திருகுறணேரிசைவெண்பா. அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத்தொடுத்தமையால் அடியெதுகை. இதனுள் முதற்றொடை இரண்டாமெழுத்துமாத்திரையே ஒன்றத் தொடுத்தமையால் இடையாகெதுகையுமாம். (ரு)

வணங்கு சிறுமருங்குற் பேரமர்க்கண் மாதர்க்
கணங்கு புரிவ தறமாற் - பிணங்கி
நிணங்காலு முத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காது போலு மிரவு.

இது குறளிரண்டாய் முதற்குறளீற்றின்கண், ஓராசிடையிட்டுத் தனிச்சொற்பெற்று, ஒருவிகற்பமாய்நடத்தலான் ஒருவிகற்பத் தோராசிடைநேரிசைவெண்பா. இதனுள் முதலடி நடுவிருசீரும் முரணத்தொடுத்தமையால் இடைப்புணர் முரண். இது பிறப்பென்னும்வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான்முடிந்தது. (௬)

வரத்திற் பிறப்பொன் றருள்கெனினும் வள்ளல்
கரத்திற் கபாலத்தைக் காணூஉப் - புரத்தை
யிரும்புண்ட ரீகபுரத் தெய்தினார்க் கியா
னரும்புண்ட ரீகத் தயன்.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலான் இருவிகற்பத்தோராசிடை நேரிசைவெண்பா. இதனுள் முதலடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉமோனை. (௭)

கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற் - சீற்றஞ்செய்
யேற்றினான் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா லல்கும் பொருள்.

இது முதற்குறளீற்றின்கண் இரண்டாசிடையிட்டு ஒருவிகற்பமாய் நடத்தலால் ஒருவிகற்பத்திராசிடை நேரிசைவெண்பா.

(௬) கோமானை வணங்குமாதர்க்கு அணங்குபுரிவதையே அறமாகக்கொண்டிருத்தலால் இரவு அப்பெருமானுக்கு இணக்கமில்லாததுபோலும். எ-று. (௭) புரம் - சரீரம். புண்டரீகபுரம் - புலியூர்.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக - ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலால் இருவிகற்பத் தீராசிடைநேரிசைவெண்பா. (௯)

வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்.

இது நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒருவிகற்பமாய் நடத்தலின் ஒருவிகற்பத் தின்னிசைவெண்பா. இது அடிதோறும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் அடிமோனை. இதனுள் அடிதோறும் ஈற்றுச்சீர் முரணத்தொடுத்தமையால் கடைமுரணுமாம். (௧0)

பூந்தண் பசுந்துழாய்ப் போது நறுவிரி
தேந்தண் டிரடிண்டோட் டேவற்குந் தேவிக்குஞ்
சாந்தன் பதமலர்கள் காமுற்றார் காமுறார்
பாந்தண் முடிச்சூடும் பூ.

இதுவுமது. இதனுள் மூன்றுமடி இரண்டாஞ்சீரொழிந்து ஏனை மூச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவாய் மோனை. இதனுள்ளே போ என நெட்டெழுத்துத் தனியேநின்றும், து எனக் குற்றெழுத்துத் தனியேநின்றும், பூந் என நெட்டெழுத் தொற்றடுத்துநின்றும், தண் எனக் குற்றெழுத்தொற்றடுத்துநின்றும், நேரசைநான்கும் வந்தன. விரி எனக் குறிலிணைந்தும், நறு எனக் குறிநெடிலிணைந்தும், பசுந் எனக் குறிலிணைந்தொற்றடுத்தும், துழாய் எனக் குறிநெடிலிணைந்தொற்றடுத்தும் நிரையசைநான்கும் வந்தன. ஓரசைச்சீரி

ரண்டனுட், பூ என நேரசைச்சீரும் வந்தவாறு காண்க. இது நாளென்னும் வாய்பாட்டான் முடிந்தது. (சக)

புனலழுவம் புக்குடைந்தோர் தாளூன்றி நின்று
வனசங்காள் செய்தவநீர் வாழியரோ வாழி
பொருவிடையோன் றெய்வப் புலியூரை யொப்பா
டிருமுகத்துக் கொப்பச் செயின்.

இது பலவிகற்பத்தின்னிசைவெண்பா. தமிழ்வழக்கால் இருவிகற்பமும் பலவிகற்பமெனப்பட்டது. இதன் முதலடி முதற்சீரிரண்டும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் இணைமோனை. இது முதற்றொடை ஓரெதுகைத்தாயும், ஏனைத்தொடை வேறோரெதுகைத்தாயும் வந்தமையால் இரண்டடியெதுகையென்க. இதனுள்ளே தாளூன்றி எனத் தேமாங்காயும், வனசங்காள் எனப் புளிமாங்காயும், புனலழுவம் எனக் கருவிளங்காயும், புக்குடைந்தோர் எனக் கூவிளங்காயுமாக வெண்சீர் நான்கும், செயின் என நிரையசைச்சீரும் வந்தன. (கஉ)

ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
வோஒ பெரிது மரிதே யெளிதேயோ [தான்
வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்
பேதுற்றும் வெஃகேம் பிற.

இதுவுமது. இதனுள் இரண்டாமடி ஈற்றுச்சீரிரண்டும் முரணத்தொடுத்தமையால் கடையிணைமுரண். இதனுள்ளே ஆ என நெட்டெழுத்தும், தி எனக் குற்றெழுத்தும், ஆ என வுயிரெழுத்தும், ஓஒ என அளபெடையெழுத்தும், வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்ந்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக்குறுக்கமும்

(கஉ) நீர்செய்தவம் ஒப்பச்செயின் வாழிவாழியென்க. அரோ அசை. வாழியரெனப்பிரித்தலுமாம்.

வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களும் மெய்யும் உயிர்மெய்யுமாகிய அசைக்குறுப்பாமெழுத்துப் பதின்மூன்றுங்காண்க. முதலுணர்ந்தியாமெனக் கனிச்சீர் வெள்ளையின் விரவிவரலாகாமையிற் குற்றியலிகரம் அலகுபெறுதெனத்தள்ளிக் கருவிளங்காய் எனச் சீர்கொள்க. ஐகாரம் கை எனக் குறுகாதவழி நெட்டெழுத்தினியல்பிற்றாயும், துறை எனக் குறுகியவழிக் குற்றெழுத்தினியல்பிற்றாயும் நின்றவாறு காண்க. (கங)

பொன்மன்றம் பொற்றா மரையொக்கு மம்மன்றிற்
செம்ம றிருமேனி தேனொக்கு மத்தேனை
யுண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
யெம்பெரு மாட்டி விழி.

இதுவும் பலவிகற்பத் தின்னிசைவெண்பா. இதன் முதலடியிரண்டும் மூன்றுமெழுத்தொன்றிவரத்தொடுத்தமையால், மூன்றுமெழுத்தொன்றெதுகை. (கச)

ஆடகச் செம்பொ னணிமன் றிடங்கொண்ட
பாடகச் சீறடியாள் பாகத்தான் - சூடகக்கைக்
கங்கையாள் கேள்வன் கழறொழூஉக் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறைஞ்சுங் கூற்று.

இதுவும் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. இதன் மூன்றுமடி முதற்சீரும் மூன்றுஞ்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்புமோனை. இதனுட் செம்பொன் எனத் தேமாவும், அணிமன் எனப் புளிமாவும், கழறொழூஉ எனக் கருவிளமும், ஆடக எனக் கூவிளமுமாக ஆசிரியவுரிச்சீர்நான்கும் வந்தன. (கரு)

காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சும் பிழைத்தகன்றார் நன்னெஞ்சும்

போதம் படரும் புலியூரே - தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு.

இது மூன்றுமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. இதன்முதலடியிரண்டாமெழுத்துத் தகரஅகரமும், இரண்டாமடி யிரண்டாமெழுத்துத் தகரஉகரமுமாக வந்தமையால் வருக்கவெதுகை. (௧௬)

காம ருயிர்செகுக்குங் கண்ணென்றே - காமருசீர்
மாதர் நலனழிக்குங் கண்ணென்றே - மாதருக்
கின்ன விரவொழிக்குங் கண்ணென்றே - யிந்நிலத்திற்
றன்னே ரிலாதான் றனக்கு.

இது அடிதோறும் ஒரூஉத்தொடையமைய முதன்மூன்றடிகளினும் தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. இதன் மூன்றுமடி யீற்றயற்சீரொழிந்து ஏனை மூச்சீரும் முதலெழுத்தொன்றத்தொடுத்தமையால் கீழ்க்கதுவாய்மோனை. (௧௭)

செக்கர்ச் சடையிற் பசுங்குழவி வெண்டிங்காண்
முக்க ணொருவற்கு நின்னோ டிருசுடரு
மொக்க விழித்தலா லுய்ந்தே மொருநீயே
யக்க ணொருமூன்று மாயின்மற் றுய்வுண்டே
மைக்கண் மடவா ருயிர்க்கு.

இது ஒருவிகற்பத்து ஐந்தடிப்பஃறொடைவெண்பா. இதன் முதலடியிரண்டாஞ்சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத்தொடுத்தமையால் மேற்கதுவாய்முரண். இரண்டாமடியீற்றயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத்தொடுத்தமையால் கீழ்க்கதுவாய்முரண். இது பிறப்பென்னும்வாய்பாட்டுக் குற்றுகரஇயற்சீரான்முடிந்தது. (௧௮)

(௧௬) போதம்படரும் - போது+அம்பு+அடரும்; போதம்+படரும் எனப்பிரிக்க.

பொன்புரிந்த செஞ்சடைக்கு வெள்ளிப் புரிபுரிக்கும்
வெண்டிங்கட் கண்ணியான் வெல்கொடியு மானேறே
யங்கவன்ற னூர்தியுமற் றவ்வேறே யவ்வேற்றின்
கண்டத்திற் கட்டுங் கதிர்மணிக்கிங் கென்கொலோ
பைந்தொடியார் செய்த பகை.

இது பலவிகற்பத்து ஐந்தடிப்பஃறொடைவெண்பா. இதன் முதலடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் முரணத்தொடுத்தமையால் பொழிப்புமுரண். நான்காமடி யிறுதிச்சீரொழிந்து ஏனை முச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் கூழை மோனை. இது அடிதோறு மிரண்டாமெழுத்து மெல்லினம் வரத் தொடுத்தமையால் இனவெதுகை. (௧௯)

கருந்தாது கொல்லுங் கருங்கைத்திண் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றிற்றொறுஞ் சென்றுசிலர் தூங்க
விருந்தேங் களிதூங்கி யாமேமற் றம்ம
வருந்தா தலர்தில்லை யம்பலத்திற் றூங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

இது ஒருவிகற்பத்து ஆறடிப்பஃறொடைவெண்பா. (உ0)

வின்மதனை வென்ற தலர்விழியே யொன்னூர்தம்
பொன்னெயி றீமடுத்த தின்னகையே பூமிசையோன்
றூர்முடி கொய்தது கூருகிரே யாருயிருண்
கூற்றுயி ருண்ட தடித்தலமே யேற்றான்
பரசும் பிநாகமுஞ் சூலமு மென்னே
கரமலர் சேப்பக் கொளல்.

(உ0) கொல்லர் தொழிலான்வருந்தாதபடி தானேசமைந்த தொருவிலங்காவது - ஆசைத்தளை; அது தன்னையுடையானைப் பொருளாதிய காரணம்பற்றிப் பகைவர்வாயிலினும் அகலாது காக்குமாறு புரியவல்லதாகலின் அதனை வல்விலங்கென்றார்.

இது பலவிகற்பத்து ஆறடிப்பஃறொடைவெண்பா. இதன் முதலடி யீற்றயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத் தொன்றத்தொடுத்தமையால் கீழ்க்கதுவாயெதுகை. இரண்டா மடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்பெதுகை. மூன்றாமடி முதலயற்சீ ரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத்தொடுத் தமையால் மேற்கதுவாயெதுகை. நான்காமடி முதற்சீரும் ஈற் றுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத்தொடுத்தமையால் ஒரூஉ வெதுகை. (உக)

வானே நிலனே கனலே மறிபுனலே
யூனே யவ்வூனி னுயிரே யுயிர்த்துணையே
யானேறு மேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியோங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
யானுனு மென்போன்மற் றார்பெற்றா ரம்பலத்துண்
மாநா டகங்காணும் வாழ்வு.

இது ஒருவிகற்பத்து ஏழடிப்பஃறொடைவெண்பா. இதன் முதலடி நாற்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றியைபு. இரண்டாமடிமுதலயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத்தொன்றத்தொடுத்தமையால்கீழ்க்கதுவாயியைபு. மூன்றாமடி முதற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத் தொன்றத் தொடுத்தமையால் கூழையியைபு. நான்காமடி யீற் றயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொ டுத்தமையால் மேற்கதுவாயியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறு திச்சீரும் இறுதியெழுத்தொன்றத்தொடுத்தமையால் ஒரூஉவி யைபு. இது காசென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான் முடிந்தது. (உஉ)

வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந்தார்ப்பத்
தண்டே னிறைக்கு மிதழி நறுங்கண்ணி
யெண்டோண்முக் கண்ணு னிமையம் புனைமன்றி
லண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வன்றிண் மறலி புடைத்துக் கொடிறுடைக்கு
மன்று முருகிர்கொல் லாம்.

இது பலவிகற்பத்து ஏழடிப்பஃறொடைவெண்பா. இதனிரண்டாமடி இறுதிச்சீரிரண்டும் இறுதியெழுத்தொன்றத்தொடுத்தமையால் இணையியைபு. மூன்றாமடி முதற்சீரும் இரண்டாஞ்சீரும் இரண்டாமெழுத்தொன்றத்தொடுத்தமையால் இணையெதுகை. நான்காமடியிறுதிச்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத்தொடுத்தமையால் கூழையெதுகை. அதுவே இரண்டாஞ்சீரும் இறுதிச்சீரும் இறுதியெழுத்தொன்றத்தொடுத்தமையால் பொழிப்பியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் முரணத்தொடுத்தமையால் ஒரூஉமுரண். (உ௩)

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே - யெங்கோமான்
பங்குற்றுந் தீரா பசப்பு.

இது மூன்றடியாய் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று ஒருவிகற்பத்தால் வந்தமையால் ஒருவிகற்ப நேரிசைச்சிந்தியல்வெண்பா. (உ௪)

(உ௩) இமையம் - பொன். (உ௪) பெருமான் கங்கையை நோக்குதலளவிலும் சகியாமலும் அவருருவில் நேர்பாகம்பெற்றிருந்தும் பசப்புத்தணியாமலும் அதிவிரக முடையராய்த் தேவியாரமர்தற்காரணம் உலகிற் போகநிகழ்ச்சிப்பொருட்டேயென்பது என்னேயென்னும் வினாவானிகழ்த்திச் சிவகாமியென்னும் பெயரெய்தற்காரணங்களுள் இஃதும் ஒன்றுதல் விளக்கியவாறு. கண்சிவத்தல்சினக்குறிப்பு.

கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த
வம்பொற் புயத்தார்க் கமைந்ததா - லம்பை
முலையானைக் கோடணிந்த மார்பு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தான்வந்தமையால் இருவிகற்பநேரிசைச்சிந்தியல்வெண்பா. இதன் முதலடிநாற்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றுமோனை. (உரு)

போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுவந்தான் பொற்று ளிணை.

இது தனிச்சொலின்றி மூன்றடியாய் ஒருவிகற்பத்தான்வந்த ஒருவிகற்பத்தின்னிசைச் சிந்தியல்வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் ஒருசொல்லேவரத்தொடுத்தமையால் இரட்டைத்தொடை. (உசா)

உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தம்பொற் புயம்வேட்டேந் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

இது இரண்டுவிகற்பத்தால்வந்த இன்னிசைச் சிந்தியல்வெண்பா. இதன் முதலடியினிறுதியெழுத்து இரண்டாமடிக்கு முதலாகவும் அவ்வடியினிறுதிச்சீர் மூன்றுமடிக்குமுதலாகவும் தொடுத்தமையால் அந்தாதித்தொடை. (உஎ)

கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்ற னென்னு
மழுவலத்தன் மானிடத்த னென்னு - முழுவலத்த
மன்றுடையான் றார்வேட்ட மான்.

இது பலவிகற்பத்தின்னிசைச்சிந்தியல்வெண்பா. இதன் முதற்றொடை இரண்டாமெழுத்தின்மேனின்ற உயிரொன்றத்தொ

டுத்தமையால் உயிரெதுகை. இதன் முதலடி இறுதிச்சீரொழிந்து ஏனைமூச்சீரும் மூரணத்தொடுத்தமையாற் கூழைமுரண். (உ௮)

வெண்பாவிகற்பம் முற்றிற்று.

வெண்பாவினம்.

செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்
தம்பொன் மேருவுக் கடிமுடி யின்றே.

இது விழுமியபொருளும் ஒழுகியவோசையும் உடைத்தாய் அடியிரண்டாய்த் தம்மில் ஒத்துவந்தமையால் குறள்வெண்செந்துறை. (உ௯)

கம்பைமாநதி யின்கரைச்சிறு கன்னிபார முலைத்தழும்பணி
யும்பர்கோன்விடை யொன்றுலகேழு முண்டதுவே.

இது அடியிரண்டாய்ச் சீர்வரையறையின்றி யீற்றடிகுறைந்துவந்தமையால் குறள்வெண்டாழிசை. (௩௦)

முன்புல கீன்ற முகிழ்முலைக் கன்னியோ
டின்புறும் யோகி யெழுபுவிக் கரசே.

இது ஒழுகியவோசையும் விழுமியபொருளுமின்றிக் குறள்வெண்செந்துறையோடு மாறுபட்டுவந்த குறள்வெண்டாழிசை. (௩௧)

பின்றாழ் நறுங்கூந்தற் பிடிதழீஇ மால்யானைக்
கன்றீனு முக்கட் களிறு.

இது குறள்வெண்பா செப்பலோசையிற் சிதைந்துவந்த குறள்வெண்டாழிசை. இவையிரண்டும் குறள்வெண்பாவினம்.

கனக மார் கவின்செய் மன்றி
லனகநா டகற்கெம் மன்னே
மனைவிதாய் தங்கை மகள்.

இது மூன்றடியாய் வெண்பாவேபோன் முடிந்தமையால் வெள்ளொத்தாழிசை. இதனுள் ஆர் என நேரசைச்சீர்நின்று மேலே கவினென நிரையசைவர மாஞ்சீர்போல இயற்சீர்வெண்டளையாயினவாறுகாண்க. (௩௩)

அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்.

வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்.

இது சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளொத்தாழிசை. இதில் ஆளாக ஆண்டான் என முதலிருசீரும் முரணத்தொடுத்தமையால் இணைமுரண். ()

பரசிருக்குந் தமிழ்மூவர் பாட்டிருக்குந் திருமன்றிற்
பரசொன் றேந்தி
யரசிருக்கும் பெருமானார்க் காட்செய்யா ரென்செய்வார்
முரசிருக்கும் படைநமனார் முன்னாகு மந்நாளே.

இது முதலடி அறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த மூன்றடி வெண்டுறை. (௩௫)

(௩௪) க - அம்பு ஏர் - அம்புபோலும்; ஏர் - உவமவாசகம்.

படர்தரும்வெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
 பவத்தொடர்பாற் படரா கிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
 கொழிபுண்டே வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
 னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த நான்கடி வெண்டுறை. (௩௬)

கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
 கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத்
 தொருதா ளூன்றி
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஓரோசைத்தாய் ஏனையடிநாற்சீராய் வேறோரோசைத்தாய் வந்தமையால் ஏழடிவேற்றொலிவெண்டுறை. (௩௭)

உருவல னருவல னொருவன்மற் றிருவருக்
கரியவ னெனவுணர்ந் தறைகுந ரறைகமற்
பரவைதன் மனைவயிற் பாவல னேவலி
னிருமுறை திரிதலி னெளியனென் றெளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.

இதுவும் ஈற்றடி ஒருசீர் குறைந்துவந்தமையால் ஓரொலி வெண்டுறை. இதன் முதலடிநாற்சீரும் முரணத்தொடுத்த

மையால் முற்றுமுரண். அதுவே நாற்சீரும் இரண்டாமெழுத் தொன்றத்தொடுத்தமையால் முற்றெதுகையுமாம். (௩௮)

அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலுந்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரு நீரேபோலும்.

இது அடிதோறும் தனிச்சொற்பெற்று மூன்றடியால்வந்தமையால் மூன்றடி வெளிவிருத்தம். (௩௯)

வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்கா
ளஞ்ச லெனுஞ்சொல் லார்சொல வல்லார் நமரங்காண்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்கா
ணஞ்ச மயின்றூர் நல்குவர் மாதோ நமரங்காள்.

இது நான்கடியாய் அடிதோறும் தனிச்சொற்பெற்று வந்தமையால் நான்கடிவெளிவிருத்தம். (௪0)

வெண்பாவினம் முற்றிற்று.

ஆசிரியப்பா.

பொற்றூது பொதிந்த சிற்சபை பொலியப்
பச்சிளங் கொடியொடு படருஞ்
செக்கர் வார்சடைக் கற்பகத் தருவே.

இது ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையால் நேரிசையாசிரியம். இது அடிதோறும் முதற்சீர்முரணத் தொடுத்தமையால் அடிமுரண். இதனுள் பொதிந்த சிற்சபை என நேரொன்றாசிரியத்தளையும், சிற்சபை பொலிய என நிரையொன்றாசிரியத்தளையும், வந்தவாறுகாண்க. இதனானே ஆசிரியம் மூன்றடிச் சிறுமையுடைத்தென்பதூஉமறிக. (௪௧)

பூஉந் தண்ண் புனமயி லகவ
மாஅங் குயில்கள் சாஅய்ந் தொளிப்பக்
கோஒ டரங்கண் முசுவொடும் வெரீஇக்
காஅ றழீஇக் கவிழ்ந் தொடுங்கச்
சூஉன் முதிர்ந்து காஅல் வீஇழ்
வாஅன் றூஅழ் மழைப்பெய றலைஇத்
தேஎன் றூஅழ் பூஉங் காஅ
வளஙங் கனிந்த மணிமன்றுள்
விளங்ங் கொளியை யுளங்கொள றவமே.

இதுவுமது. இது அடிதோறு முதற்கண்ணே அளபெடுத்தமையால் அடியளபெடை. இதனுள், இணையளபெடை முதலாகிய விகற்பம் ஏழும் முறையானே வந்தவாறுகாண்க. ஏனைத்தொடை ஏழும் விகற்பம் இருபத்தெட்டும் முன்னர்க்காட்டப்பட்டன. (சஉ)

தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்தர
வெண்மதிக் கண்ணி சூடுங்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும்
விண்மிசைப் போகிய வீடுபெறற் பொருட்டே.

இது முதலடியும் ஈற்றடியும் அளவடியாகக் குறளடியும் சிந்தடியும் இடையிட்டுத்தொடுத்தமையால் இணைக்குறளாசிரியம். இவ்வகவலுள் புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும் என நெடிலடியும் அருகிவந்தவாறுகாண்க. குறளடிமுதல் நான்கும் இதனுள்ளேவந்தன. ஏனைக்கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்துட்காண்க. (சங)

மாயிரு விசும்பிற் றூநிலாப் பரப்பிப்
பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியு

மின்செய் கொண்மூ வெள்ளிவீழ் வீழ்ப்பப்
பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும்
புலியூர் மன்றி னொலிகழன் மிழற்றப்
பரம நாடக மிருவரைக் காட்டு
மெரிகிறத் தைம்முகத் தெண்டோண் முக்கட்
கருமிடற் றொருவனின் செஞ்சடைப் பொலிதலி
னுயு மருந்து மோர்வழிக் கிடைத்தென
வாருயிர் தரித்தன ளன்றே யதாஅன்று
தெள்ளமு தன்னவ ருள்ளுயிர் குடிக்குமித்
திங்க ளொன்றே திருமுடிக் கணியிற்
கங்கை யாளு முயிர்வா ழாளே.

இது முற்றும் நேரடியாய்வந்தமையின் நிலைமண்டிலவாசிரியம். இதனுள், பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியும் என இயற்றளைவெள்ளடியும், பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும் என வஞ்சியடியும் மயங்கிவந்தவாறு காண்க. எரிநிறத் தைம் முகத் தெண்டோண் முக்கண்என முதற்சீரொழிந்து ஏனைமுச் சீரும் முரணத்தொடுத்தமையால் கடைக்கூழைமுரண். (சச)

தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன தருவே.

இது முத லிடை கடையடிகளை மாறிமாறியுரைப்பினும் பொருடிரியாமையின் அடிமறிமண்டிலவாசிரியம். (சரு)

ஆசிரியப்பா முற்றிற்று.

(சச) மதிக்கண்ணியும் பூங்கொன்றையும் சடைப்பொலிதலின் கங்கையாள் ஆருயிர்தரித்தனள் என்க.

ஆசிரியப்பாவினம்.

சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன.

இது மூன்றடியாய்த் தம்மிலொத்து வந்தமையால் ஆசிரியத் தாழிசை. (சசு)

சிற்றம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
கற்றைச் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கண்
மற்றப் புனன்மங்கை வாணுதலை யொக்குமால்.

பேரம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
வார்செஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ணீர்மங்கை கொங்கைக்கு நித்திலக்கச் சொக்குமால்.

பொன்னம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
மின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ளந்நங்கை செங்கைக் கணிவளையு மொக்குமால்.

இது ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

நாகம் பொதிசடைமே னுண்மதியும் வாண்மதிபோ னங்கை கங்குன், மேகஞ்செய் கூந்தன் மிலைச்சுந் தலைக்கலனும் விளங்குந் தோற்ற, மாகம் பகுந்தளித்த வந்நாளி லம்பலத்தான், மாகம் பதியு மதியும் பகுந்தளித்த வண்ணம் போலும்.

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்று ளாடு
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கருதேலந் நாட்டமரார் [போலும்.
சேயிழை மாதருக்குச் செங்கைகளுங் கொங்கைகளுஞ் சிவக்கும்

இது அவ்வாறே இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. (சகூ)

உண்டாங் கெனினு மிலதென் றறிஞர்கள் பொய்யெனப் புகலவு மெய்யெனப் பெயர்பெற் றுன்னுமுன மின்னுமென வுளதாய் மாய்வது நிலையில் யாக்கை,—கண்டாங் கிகழும் இழுமுதி ரமையத் தைவளி பித்தெனு மெய்தரும் வித்திற் கடலிற் றிரையென வுடலிற் றிரையொடு கலியா நின்றன நலிவுசெய் நோய்கள்,—புண்டாங் கயின்முக் குடுமிப் படையொடு மெயிற லைத் தழல்விழித் துயிருணக் கனல்சேர் புகையாமென நிழலா மெனத் திரியா நின்றது கொலைசெய் கூற்றம்,—விண்டாங் கக லுபு மெய்ப்பொரு டுணிவோர் மின்பொலி பொன்புனை மன்றி லெம் முயிராம் விமலன் குஞ்சித கமலங் கும்பிட வேண்டுவர் வேண்டார் விண்மிசை யுலகே.

இது முதலடியும் மூன்றுமடியும் பதின்குசீராய் ஏனை இரண்டடியும் பதினறுசீராய்வந்தமையின் இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை. (ருo)

திங்கட் சடைக்கற்றைப் புத்தே டிருமார்பிற்
பைங்கட் டலைகள் பலவு நகுவ போலுமால்
பைங்கட் டலைகள் பலவு நகுவகண்
டங்கட் கமலத் தயனு மாலு மழுவரால்.

இது முதலடியும் மூன்றுமடியும் நாற்சீராய் ஏனை இரண்டடியும் ஐஞ்சீராய் இடைமடக்காய்வருதலின் இடையிடைகுறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. (ருக)

கனம ளித்தபைங் காவில்வெண் டாளமும் பவளமுங் கமுகினைப், புனம ளித்தபூங் கொன்றைபொன் சொரிதரப் புண்ணி

(ருo) உடற்குமூலம் சிலேத்தும வாத பித்தங்களேயாகலின் அவற்றை மெய்தரும்வித்தென்றார். கலியாநின்றன - பெருகுகின்றன. வித்திற்கலியாநின்றனவென இயையும்.

ய மலர்தில்லை, வனம ளித்ததே யெனினுமோ ரானந்த மாக்க டற்றிளைத்தாடு, மனம ளித்தவேழ் பொழிற்குமோர் பலமெ ன்ப தம்பொனம் பலந்தானே. (ருஉ)

இது அறுசீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.

கோமுனிவ ருக்குமரி தாய்முதும றைப்பனுவல் கூறியப ரப்பிரமமா, மோமெனுமெ ழுத்தின்வடி வாய்நடந விற்றுபுலி யூரன்மகு டச்ச டிலமேன், மாமதியி னைத்தனது கோடெனவெ டுப்பமத மாமுகன்மு கக்கை தொடவத், தூமதிப ணிப்பகையெ னுவரந திப்புகவோர் தோணியென விட்ட கலுமே.

இது எழுசீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம். ()

அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க் கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட, மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர் மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட, வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ் வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி யென்கோ, விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோ ரியற்சொலில தெனில்யான்மற் றென்சொல் கேனே.

இது எண்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.(ருச)

வளங்கு லாவரு மணங்க ளுர்விழி
மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு
காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ

(ருஉ) ஆனந்தமாக்கடல் - சிவம். அனம் - உமாதேவியார். ஏழ்பொழில் - ஏழுலகம். பொன்னம்பலமென்பது தில்லைவனமென்னும் ஓர்பொழிலளித்ததேயெனினும் ஏழ்பொழிற்கும் ஓர் பலமாயுள்ளது என்பதொரு சாதுரியப்பொருள்பட நின்றது. - பயன்; அது இப்பொருட்கண் கனியின்மேலதாயிற்று.

துளங்கு நீள்கழ றழங்க வாடல்செய்
சோதி யானணி பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீர்யமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே.

இது ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.

கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றுத்த டிக்க னத்து
நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
ளத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு நெட்ட யிர்க ணித்தி
லத்தி னுற்றி டச்செய் விக்கு மதுதானே.

இது பதின்முச்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.

ஆசிரியப்பாவினம் முற்றிற்று.

க லி ப் பா.

கொன்செய்த கலையல்குற் கொலைசெய்த மதர்வேற்கண்
மின்செய்த சிறுமருங்குற் பெருந்தேவி விழிகுளிர்ப்பப்
பொன்செய்த மணிமன்றி னடஞ்செய்த புகழோய்கேள்.

இது மூவடித்தரவு.

முருகுயிர்க்கு நறுந்தெரியன் மொய்குழலின் மையுண்கட்
பொருகயற்குன் றிருமேனி புதுவெள்ளப் புணரியே.

தேன்மறிக்கும் வெறித்தொங்க லறற்கூந்தற் றிருந்திழைகண்
மான்மறிக்குன் றிருமேனி மலர்முல்லைப் புறவமே.

பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கட்
சிறையளிக்குன் றிருமேனி தேனளிக்கும் பொதும்பரே.

இவைமூன்றும் ஈரடித்தாழிசை.

அதனால், இது தனிச்சொல்.

மதுவிரி கோதை மடவரற் கம்ம
புதுவிருந் துண்ண வுண்ண
வதிசயம் விளைக்குநின் னற்புதக் கூத்தே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவொன்றும் தாழிசைமூன்றும் தனிச்சொல்லும் சுரிதகமுமாய்வருதலின் நேரிசையொத்தாழிசைக்கலிப்பா. இதனுட் பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கண்ணென இரண்டாஞ்சீரும் ஈற்றுச்சீரும் முரணத்தொடுக்கப்பட்டுப் பின்முரண் வந்தவாறுகாண்க. இதனானே தரவு மூன்றடிச்சிறுமையுடைத்தெனவும் தாழிசை இரண்டடிச்சிறுமையுடைத்தெனவுமுணர்க. (ருள)

பேதையீர் பேதையீர்!
பூமன்னு திசைமுகனும் புயல்வண்ணப் பண்ணவனுங்
காமன்னு புரந்தரனுங் கடவுளரும் புடைநெருங்க
விருகோட்டுக் கிடைந்தவிடு கிடையவர்பல் லாண்டிசைப்ப
வொருகோட்டு மழகளிறு மிளங்கோவு முடன்போத
வம்பொன்மணி மதிற்றில்லை நடராச னணிமறுகிற் [ல்.
செம்பொன்மணிப் பொலந்திண்டேர்த் திருவுலாப் போதுங்கா

இது ஆறடித்தரவு.

பாரித்த பேரண்டஞ் சிறுபண்டி கொளப்பெய்து
வாரித்தண் புனற்றுஞ்சு மாலுக்கு மால்செய்வீர்
வேரித்தண் குழலார்கை வளைகொள்ள விழைந்தேயோ
பூரித்து வீங்குவதும் புயமென்பார் சிலமாதர்.

சொன்மாலை தொடுத்தணிந்த தொண்டர்க்குத் துணைவராய்
நன்மாலைக் குழலியர்பா னள்ளிருளிற் செலவல்லீர்
பன்மாத ருயிர்கொள்ளல் பழியன்றே பகைகொள்ளும்
வின்மார னுயிர்கொண்ட விழிக்கென்பார் சிலமாதர்.

அங்கமலன் முடைத்தலையே பலிக்கலனா வையமிடு
மங்கையர்க ணலங்கவர்வான் பலிக்குழலு மாதவத்தீர்
தங்கலர்தங் கியமும்மைப் புரமன்றே தலையன்பி
னங்கையர்தம் புரமுமது நகைக்கென்பார் சிலமாதர்.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

அருங்கலை கவர்ந்தீ ரளிக்கப் பெற்றநும்
மிருங்கலை யினிதெமக் கென்ப ரோர்சிலர்.

நன்னிறங் கவர்ந்தீர் நல்கப் பெற்றநும்
பொன்னிற மினிதெனப் புகல்வ ரோர்சிலர்.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

தேரினை நோக்கியே திரிவர் சிற்சிலர்.
ஏரினை நோக்கியே யெழுவர் சிற்சிலர்.
தாரினை நோக்கியே தளர்வர் சிற்சிலர்.
மாரினை நோக்கியே மருள்வர் சிற்சிலர்.

இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம். அளவெண்.

நலனழிந்து நிற்பார் சிலர். நாண்டுறந்து நிற்பார் சிலர்.
கலனழிந்து நிற்பார் சிலர். கண்கலுழ்ந்து நிற்பார் சிலர்.

இவைநான்கும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பாடு வார்சிலர். ஆடு வார்சிலர்.
பரவு வார்சிலர். விரவு வார்சிலர்.

(ரு அ) நும் இருங்கலை என்றது திகம்பரம். மார்-மார்பென் பதன்மரூஉ. மார்பினையென்பதும் பாடம்.

வாடு வார்சிலர். ஓடு வார்சிலர்.
மகிழு வார்சிலர். புகழு வார்சிலர்.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண்.

ஆங்கொருசார், இது தனிச்சொல்.

முதிரா விளமுலை மழலையந் தீஞ்சொன்
மங்கை மற்றிவ ணங்குலக் கொழுந்து
கணங்குழை யவரொடும் வணங்கின ணிற்பச்
சோர்ந்தது மேகலை நெகிழ்ந்தன தோள்வளை
சாந்தமுங் கரிந்தது தாளமுந் தீர்ந்தன
விவ்வா றுயின ளிவளே செவ்விதி
னும்பற் பூவின் முல்லையு முகைத்தில
விளையோள் சாலவு மம்ம
முதியோள் போலுங் காம நோய்க்கே.

இது ஒன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் தனிச்சொற்கும் இடையே நால்வகையம்போதரங்கமும் பெற்றுவருதலின் அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா. இதனது முதற்கண் பேதைமீர் பேதைமீர் என அடி கூனாய்வந்தவாறு காண்க. (ருஅ)

தொல்லுலகம் படுசுடிகைச் சுடருமணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தாதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவிதுணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்,

இது ஆறடித்தரவு.

முன்மலையுங் கோலமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்

பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடநாக மெட்டும்விடங் காணுக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றுடுமிடல் பெறுபக டொடுமட
லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.

உலகமோ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளோர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இலவிதழ் மதிநுத லிரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர

(௫௬) துகில் ஈண்டு திகம்பரம். பிந்தியநாகம் - நற்றாகு.

வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை.

இவைநான்கும் நான்கடியராகம்.

அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.

சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம் அளவெண்.

மூத்தொழிலின் வினைமுத னீ. மூவர்க்கு முழுமுத னீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ. இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ. எழின்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ. ஆலின்கி ழமர்ந்தோய் நீ.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பெரியை நீ. சிறியை நீ. பெண்ணு நீ. ஆணு நீ.
அரியை நீ. எளியை நீ. அறமு நீ. மறமு நீ.
விண்ணு நீ. மண்ணு நீ. வித்து நீ. விளைவு நீ.
பண்ணு நீ. பயனு நீ. பகையு நீ. உறவு நீ.

இவைபதினாறும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

கற்பனை கழன்றநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்

தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே.

இது ஏழடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் அம்போதரங்கத்திற்கும் இடையே அராகவுறுப்புப்பெற்று கலியுறுப்பாறுங் குறைவின்றிவந்தமையால் வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. இவ்வண்ணக வொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், சிறுமைபெருமையின்றி ஆறடித்தரவே வந்தவாறு காண்க. (ருகூ)

கலிப்பா முற்றிற்று.

வெண்கலி.

சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப நின்று.

இது கலித்தளைதட்டுத் துள்ளலோசைத்தாய் வெண்பாவே போல் முடிந்தமையால் வெண்கலிப்பா. (சுO)

(சுO) செய்த வென்பன மூன்றும் உவமவாசகம். மால் - மேகம். அகம் - மனம், பாவம்.

அற்புத மணிமன்றி லடிகணின் னடியுன்னார்
மைக்கடல் விடமென்னும் வடவைத்தீ யெழவஞ்சி
நொஎன வடிவீழ்ந்தார்க் குதவிலர் நாணார்கொல்
கைத்தல வபயத்தர் வரதத்தர் கைசெய்யாச்
சித்திர மன்ன சிலர்.

இது பிறதளைவிரவிவந்த வெண்கலிப்பா. இதனுள் நொ எனக் குற்றெழுத்து விட்டிசைத்தவழித் தனியே நின்று முதற் கண் நேரசையாயிற்று. அவ்விட்டிசை வல்லொற்றோ டொத்து எதுகையாய் நடத்தலின் இது விட்டிசைவல்லொற் றெதுகை.

தொடலைக் குறுந்தொடித் தோகாய்நம் பாவை
படலைச் சிறுமுச்சி யுச்சிப் பசுங்கிள்ளை
பேதைக் குழாத்தொடு நென்னற் பொழுதின்கண்
வீதிக்கே நின்று விளையாட் டயருங்கா
லஞ்சனக் கண்ணுனார் தாமு மணிதில்லைச்
செஞ்சடைக் கூத்தனார் வெள்விடைமேற் சேறலு
முண்ணெக் குருக வெதிர்ப்பட் டுடையானைக்
கண்ணிற் பிணித்து மனத்திற் கொடுபுக்
கிறைவளை சிந்த வணிதுகில் சோரப்
பிறரறியா வண்ணம் புணர்ந்தும் புணராள்போன்
மையுண்கண் ணீர்சோரச் சோர்தலும் வார்குழலார்
கைகோத் தெடுத்துக் கடிமனை கொண்டுய்ப்பப்
பைந்தண் குளிரி படுத்துக் கிடத்தலுஞ்
செந்தீப் பிழம்பிற் கிடத்திச் செருச்செய்வ
தந்தோ கொடிதுகொடி தென்செய்தி ரன்னைமீர்
பொன்னஞ் சிலையே சிலையாப் புரமெய்தான்

(கூக) நொ - துன்பம்.

(கூஉ) கரு. குளிரி-பூவாலேனும் தளிராலேனும் அமைக்கப் பட்ட குளிர்ந்த அணை; நீர்க்குளிரியென்னும் கொடியுமாம்.

றண்ணென் கடுக்கை கொணர்ந்தாரோ தம்மினென
மின்றந்த நுண்ணிடையா யெங்கோன் விரைத்தொங்க
றன்றந்தை தாளெறிந்தார்க் கன்றித் தராரென்றேற்
கன்றே பகைநோக் களித்தாண்மற் றம்ம
சிறியாள் பெரும்பித் தறிந்திருந்துஞ் செவ்வி
யறியா துரைத்தே னது.

இது செப்ப லோசைத்தாய் ஒருபொருணுதலி அவ்வாறு வந்தமையால் கலிவெண்பா. (௬௨)

வெண்கலி முற்றிற்று.

கொச்சகக்கலி.

அடிகொண்ட குனிப்பன்றே யரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லா முறைமுறைபோய்க்
கடிகொண்ட பொழிற்றில்லை நடராசன் கழற்காலிற்
குடிகொண்ட படிபோலு மிடத்தாளிற் குஞ்சிதமே.

இது கலித்தளைதட்டுத் தனிச்சொல்லும் சுரிதகமும் பெறாது தனியே வந்த தரவுகொச்சகம். (௬௩)

மல்லாண்ட திரடிண்டோட் டுழாய்முதலு மணிநாவிற்
சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் தொலைவெய்தப்
பல்லாண்டு செலச்செல்லா விளையோரும் பணிப்பெய்த
வல்லாண்ட நள்ளிருளி லழலாடுந் தொழிலினையே.

இது நாலடித்தரவு.

அதனால், இது தனிச்சொல்.

(௬௪) பல்லாண்டுசெலவும் மாறாத இளமையர் - பெருமானுக்குரியகணதிபர். ஒல்லை - சிறுபொழுது.

பல்பே ரூழி செல்லினு மடிகட்
கொல்லையுஞ் செல்லா தாகு மாகலி
னளவில் கால மலக்கணுற் றுழலுமென்
றளர்வு நோக்காய் போலு நோக்கிற்
கருணைசெய் தருளா யல்லை
யருணலம் பழுத்த வாடல்வல் லோயே.

இது ஆறடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த தாவுகொச்சகம். (கூச)

குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்க
ளிழைதூங்கு முலைக்கண்வைத் தேயெய்தா னாணெய்த,
வுழைதூங்கு குயினெங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

மீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
னானேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்திங்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எனவாங்கு, இது தனிச்சொல்.

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
வந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்
முனியான் முனிவன் போலு
மனைய தன்றே யான்றோர் கடனே.

இது நாலடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தாவிணைக்கொச்சகம். (கூரு)

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக்
குறைதங்கு கலைநிறையிற் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்.

இது ஐந்தடித்தரவு.

எனவாங்கு, இது தனிச்சொல்.

வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் றிருமார்பி னுறவழுத்துங்
கள்ளிருக்குங் குழலுமையாண் முலைச்சுவட்டைக் கடுவொடுங்கு
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால்.

அதாஅன்று, இது தனிச்சொல்.

சிலைக்கோடு பொருமருப்பிற் புகர்முகனின் றிருமார்பின்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோண்
மலைக்கோடு விளையாடும் பருவத்து மற்றுத்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

அதாஅன்று, இது தனிச்சொல்.

விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பில்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெர்தை
தடமார்பம் விடர்செய்யச் சமர்செய்தான் கொல்லென்று
கடமார்வெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

இவை மூன்றும் நான்கடித்தாழிசை.

அதனால், இது தனிச்சொல்.

---

(௬௬) தலையுவவு-பூர்வபக்கப்பௌர்ணிமை. எனவாங்கு என்னுந் தனிச்சொல் சிலபிரதிகளிலில்லை. மலைக்கோடி விளையாடும் என்பதும் பாடம்.

சிலைமுகங் கோட்டுமச் சில்லரித் தடங்கண்
முலைமுகக் கோட்டின னகுமான்
மலைமுகக் கோட்டுநின் மற்புய மறைந்தே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவு ஒன்றுந் தாழிசைமூன்றும் இடையிடை தனிச்சொல்லும் பெற்றுச் சுரிதகத்தா லிறுதலின் சிஃறாழிசைக் கொச்சகம். (௬௬)

ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
விருநோக்கிற் றொழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணோக்கஞ் செய்ஞ்ஞானத்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

இது ஐந்தடித்தரவு.

கடிக்கமலப் பார்வைவைத்துங் கண்ணனார் காணுநின்
அடிக்கமல முடிக்கமல மறியாதே மறிதுமே.

மூத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் றலையிழந்த
வத்தொழிலிற் கெனிற்றமியே மறிதொழிற்கும் வல்லமே.

இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
திருக்கோல மியாமுணர்ந்து சிந்திக்கக் கடவமே.

நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முய்த்துணர்வு பெரியமே.

---

(௬௭) கருணைக்கண்ணோக்கமென்றது பொதுநோக்கம். ஞானத்திருநோக்கவருநோக்கமென்றது சிறப்புநோக்கம். உயிர்கள் பிறவியை நாடாதபடி இருபார்வையும் இவ்விருநோக்கமுஞ்செய்ய நடஞ்செய்வோய் என்பது. மலம் மறியாதேம் அடிக்கமல முடிக்க அறிதுமேயென மாற்றுக. உலகு-உயர்ந்தோர்.

தாமடிகண் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாமடிகண் மறவாமை யுடையமே.

பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகலையு முணராதே முணர்துமே.

இவையாறும் ஈரடித்தாழிசை. அதனால், இது தனிச்சொல்.

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது பஃறாழிசைக் கொச்சகம். (௬௭)

தூன்முகத்த சுரிமுகங்க ணிரைத்தார்ப்பத் தொடுகடல்வாய்
வான்முகத்த மழைக்குலங்கண் மறிபுனல்வாய் மடுத்தெண்ணக்
கான்முகத்த மதுகரத்தின் குலமீண்டிக் கடிமலர்வாய்த் [ய்.
தேன்முகக்கும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலத்துறைவோ

புற்புதமுந் தொலைவெய்து நிலையெய்தாப் புலையுடம்பி
னிற்புதவு துறந்திறவா வின்பவீ டெய்தவொரு
நற்புதவு திறந்தன்ன நறும்பொதுவி னங்கையுட
னற்புதவு மானந்த நடம்பயிலு மறவோய்கேள்.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எவ்விடத்தி லெப்பொருளு மொருங்குண்ண விருக்குநீ
வெவ்விடத்தை யெடுத்தமுது செய்ததுமோர் வியப்பாமே.

எண்பயிலா வுலகடங்க வொருநொடியி லெரித்திடுநீ
விண்பயிலு மெயின்மூன்று மெரித்ததுமோர் வீறுமே.

---

(௬௮) உதித்தபுற்புதம் அழியுமெல்லையளவுங் கூட வாழாத உடலினுற்ற சுருங்கைவழி துறந்தென்க. தொலைவெய்தவென் பதும்பாடம். நிலையுமென உம்மை பிரித்துக்கூட்டுக.

பெருவெள்ளப் பகிரண்டந் தரித்திடுநீ பெயர்த்துமலை
பொருவெள்ளப் புனற்கங்கை தரித்ததுமோர் புகழாமே.

மாயையினு லனைத்துலகு மயக்குநீ மாமுனிவர்
சேயிழையார் சிலர்தம்மை மயக்கியதோர் சிறப்பாமே.

மேதக்க புவனங்க டொலைத்திடுநீ வெகுண்டாய்போன்
மாதக்கன் பெருவேள்வி தொலைத்ததுமோர் வன்மையே.

ஓருருவாய் நிறைந்தநீ யிருவர்க்கன் றுணர்வரிய
பேருருவொன் றுடையையாய் நின்றதுமோர் பெருமையே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

அறிவினி லறிபவ ரறிவதை யலதொரு
குறியினி லறிவுறு குறியினை யலை.

உளவையி னுளவள வுணர்வதை யலதுரை
யளவையி னளவிடு மளவினை யலை.

அருவெனி னுருவமு முளையுரு வெனிலரு
வுருவமு முளையவை யுபயமு மலை.

இலதெனி னுளதுள தெனிலில திலதுள
தலதெனி னிலதுரு வறிபவ ரெவர்.

இவைநான்கும் ஈரடியராகம்.

எத்தொழிலுங் கரணங்க ளிறந்தநினக் கிலையைந்து
மெய்த்தொழில்செய் வதுமடிகேள் விளையாட்டு நிமித்தமே.

சீராட்டு நினக்கிலையச் சீராட்டுஞ் சிறுமருங்குற்
பேராட்டி விளையாட்டுன் பெயர்த்தாகி நடந்ததே.

மெய்த்துயர முயிர்க்கெய்தும் விளையாட்டு முளகின்ற
வத்திருவுக் கிலையதுவு மவர்பொருட்டே யாமன்றே.

இன்னருளே மன்னுயிர்கட் கெத்தொழிலு மீன்றெடுத்த
வன்னைமுனி வதுந்தனயர்க் கருள்புரிதற் கேயன்றே.

எவ்வுருவு நின்னுருவு மவளுருவு மென்றன்றே
யவ்வுருவும் பெண்ணுருவு மாணுருவு மாயவே.

நின்னலா தவளில்லை யவளலா னீயில்லை
யென்னினீ யேயவனு மவளுமா யிருத்தியால்.

இவையாறும் ஈரடித்தாழிசை. அதனால், இது தனிச்சொல்.

தந்தை நீ. தாயு நீ. தமரு நீ. பிறரு நீ.
சிந்தை நீ. யுணர்வு நீ. சிவ னீ. யாவு நீ.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

நெஞ்சகங் குழைந்து நெக்குநெக் குருகநின்
குஞ்சித சரண மஞ்சலித் திறைஞ்சுது
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையிற்
செம்மாந் திருப்பது தீர்ந்து
மெய்ம்மையிற் பொலிந்த வீடுபெறற் பொருட்டே.

இது ஐந்தடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது மயங்கிசைக் கொச்சகம். (௬௮)

கொச்சகக்கலி முற்றிற்று.

கலிப்பா முற்றுப்பெற்றது.

கலியினம்.

செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

மூத்தேவர் தேவை முகிலூர்தி முன்னனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்

ஆங்கற் பகக்கன் றளித்தருளூர் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

இது இரண்டடியாய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி ஈற்றடிமிக்குவந்த கலித்தாழிசை. (சுகூ)

இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
யொருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.

இது இடைமடக்காய் ஈற்றடி மிக்க நான்கடிக்கலித்தாழிசை.

காளி யாடக் கனலும்மிழ் கண்ணுதன்
மீளி யாடுதல் பாருமே
மீளி யாடல் வியந்தவ டோற்றெனக்
கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே.

இது இரண்டாமடி குறைந்து இடைமடக்காய் ஈற்றடிமிக்கு வந்த நான்கடிக் கலித்தாழிசை. (எக)

பானற் கருங்கட் பசுந்தோகை யேமெய்ப் பயன்றுய்ப்பவத்
தேனக் கலர்கொன்றை சாருப்பி யந்தந்த செயலோர்கிலா
ரூனக்க ணிதுபீளை யொழுகும் புறக்கண் ணுளக்கண்ணதா
ஞானக் கணேயாத னல்கும் பிரான்றில்லை நடராசரே.

இது நெடிலடிநான்காய்வந்தமையால் கலித்துறை. (எஉ)

(எC) இருகூற்றுருவம், சத்தியுஞ் சிவமுமாகிய இருதிறவடிவம். அதிலொருகூறு சிவவடிவம். (எக) தோற்றென வென்பது வினையெச்சம்; தோற்றமைகுறித்து பொருள். (எஉ) பீளையொழுகும்புறக்கண்ணாகிய ஊனக்கண்ணிதுவே உளக்கண்ணாகிய ஞானக்கண்ணதலை அன்பர்க்கு நல்கும் நடராசரென்பது.

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கு, மொவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினை மற், றெவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப், பைவ்வாய்ப் பொறியர வல்குலெந் தாயென்று பாடுதுமே.

இது நேரசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன்முதலடி முரணடுக்கிவந்தமையால் வழிமுரண். (எ௩)

கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வே
ளிரும்புங் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே. ()

இது நிரையசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன் முதலடி வழியெதுகை. (எ௪)

கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லிரே
தேவே சன்பயி றில்லையி னெல்லையிற்
சேர்வீ ரேலது செய்யவும் வல்லிரே.

இது அளவடிநான்காய்வந்தமையால் கலிவிருத்தம். இது அடிதோறும் இரண்டாமெழுத்து நெட்டெழுத்துவரத்தொடுத்தமையால் நெடிலெதுகை. முதலெழுத்து நெட்டெழுத்தேவ

(எ௩) பெண்ணும்ஆணுமாயிருத்தலின் ஒவ்வாத்திருவுருவென்றார். வாச்சியம் - வாசகத்தாலுணர்த்தப்படுவதாகிய பொருள். (எ௪) கரும்பு வில்லும், சுரும்பு நாணும், அரும்பு அம்புமாகவும், கரும்புஞ்சுரும்பும் காமர்வில்லென்றது நாண் வில்லின் ஒருறுப்பாயடங்குதலின். படை - அம்பு.

ரத் தொடுத்தமையால் நெடின்மோனையுமாம். மூன்றாமடியும் நான்காமடியும் முதலெழுத்து அனுவெழுத்தாய்வந்தமையின் அனுமோனை. (எடு)

கலிப்பாவினம் முற்றிற்று.

வஞ்சிப்பா.

வையமீன்ற மறைக்கிழவனுங்
கொய்துழாய்மௌலிக் குணக்கொண்டலுந்
தருவார்நீழற் றார்வேந்தனும்
வரன்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச
விமையம்பயந்த விளங்கொடியொடுந்
தபனியப்பொதுவிற் றாண்டவம்புரி
தில்லைவாணநின் றிருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன்றிது சொலக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கு
மமளியைநின்மருங் காதரித்தனை
செங்கேழ்நறுநுதற் றிருமகளொடு
மங்கவனுறைதரு மாழிச் சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நலத்தகுகருணையி னயந்தளித்தனை

அவன் அதனால்

பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகின னணையொடு
மத்திரு மனையவற் களித்திநின்
மெய்த்தொழி லன்றே வீடுநல் குவதே.

இது குறளடிவஞ்சிப்பா. இதனடிதோறும் முதற்கண்ணே பொதுச்சீர் பதினாறும் வந்தன. தார்வேந்தனும் (எ-ம்) குணக்கொண்டலும் (எ-ம்) மறைக்கிழவனும் (எ-ம்) தாண்டவம்புரி (எ-ம்) வஞ்சிச்சீர் நான்கும் வந்தன. இதனுள்ளே அங்கவனுறைதரு மாழிச் சேக்கையை என ஆசிரியவடி அருகிவந்தது அவன் என வஞ்சியீற்றின்கண் அசை கூனாய் வந்தது. (௭௬)

கடித்தாமரைக் கண்ணன்விழிக் கமலந்தர
வடித்தாமரைச் சுடர்ப்பரிதியை யளித்தருளினை—அதனால்
புதுமலர்ப் பொழிற்றில்லை வாண
வுதவியின் வரைத்தோ வடிகள்கைம் மாறே.

இது சிந்தடி வஞ்சிப்பா. (௭௭)

வஞ்சிப்பா முற்றிற்று.

வஞ்சியினம்.

பிணியென்று பெயராமே, துணிநின்று தவஞ்செய்வீ,
ரணிமன்ற லுமைபாகன், மணிமன்று பணியீரே.

என்னென்று பெயராமே, கன்னின்று தவஞ்செய்வீர்,
நன்மன்ற லுமைபாகன், பொன்மன்று பணியீரே.

அரிதென்று பெயராமே, வரைநின்று தவஞ்செய்வீ,
ருருமன்ற லுமைபாகன், றிருமன்று பணியீரே.

---

(௭௭) சிவபிரான் அடித்தாமரைப் பெருவிரலால் நிலத்திற் கீறியுண்டாக்கிச் சலந்தரனைக்கொன்ற பேரொளி மயமாகிய சக்கரமென்க. பூர்வம் திருமால் ததீசிமுனிவர் மேலேவியவழித் தமது சக்கரம் வாய்மடிந்தமையால் பிரானைப்பூசித்து இதுபெற்றனரென்பது.

இது குறளடி நான்காய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை. (எஅ)

பொன்செய் மன்றில்வாழ், கொன்செய் கோலத்தான்
மின்செய் தாடொழா, ரென்செய் கிற்பரே.

இது குறளடி நான்காய் வந்தமையால் வஞ்சித்துறை. (எகூ)

ஒன்றி னம்பர லோகமே, யொன்றி னம்பர லோகமே,
சென்று மேவருந் தில்லையே, சென்று மேவருந் தில்லையே.

இது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சிவிருத்தம். (அ0)

வஞ்சிப்பாவினம் முற்றிற்று.

மருட்பா.

அரசியல் கோடா தரனடியார்ப் பேணு
முரசிய ருனைவேன் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர்வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலைவாழ்த்தாய்வருதலின் புறநிலைவாழ்த்துமருட்பா. வெள்ளடியும் ஆசிரியவடியுஞ் சமமாகலின் இது சமனிலை. (அக)

பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந் - திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனக்

(அக) பொதுவில் பரசோன்கழலிணை காவலாக மன்னர்வாழ்க என்பது. (அஉ) நோக்கு முத்தலைவேற் பண்ணவற்கேயன்றி விண்ணோர்க்கும் விருந்தளித்தலின் பண்ணவற்கு விடமும் விண்ணவர்க்கு அமுதுமளித்த பாற்கடல்போலுமென்க.

குலமுனி புதல்வனுக் கீந்த
வலைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

இதுவும் அவ்வாறே கைக்கிளைப்பொருண்மேல் வருதலின் கைக்கிளை மருட்பா. வெள்ளடிகுறைந்து ஆசிரியவடிமிகுதலின் இது வியனிலை.

(அ௨)

வம்மி னமராங்காண் மன்றுடையான் வார்கழல்கண்
டெம்மி னுறுதி பிறிதில்லை - மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையா தாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் றருமே.

இது வாயுறைவாழ்த்து மருட்பா. (அ௩)

வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு - வீழ்த்த
புறநெறி யாற்று தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉமருட்பா. (அ௪)

மருட்பா முற்றிற்று.

சிதம்பரச்செய்யுட்கோவை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

சிதம்பரம் சிவகாமியம்மை

இரட்டைமணிமாலை.

நேரிசைவெண்பா.

சீர்பூத்த செல்வத் திருத்தில்லை மன்றகமென்
கார்பூத்த நெஞ்சகமாக் கைக்கொண்டா—ளேர்பூத்து
ளைய மொருங்கீன்ற வந்நுண் மருங்கொசிய
வைய மொருங்கீன்ற மான். (௧)

கட்டளைக்கலித்துறை.

மாகந் திருவுரு மன்றுடை யார்க்கெனின் மற்றுனக்கோர்
பாகந் தரவொர் படிவமுண் டேபர மானந்தமே
யேகந் தருந்திரு மேனிய தாக்கிமற் றெண்ணிறந்த
வாகந் தருவது மம்மைநின் னுடல்கொ லங்கவர்க்கே. (௨)

நேரிசைவெண்பா.

அங்கம் பகுந்தளித்த வம்பலத்தார்க் காம்பலங்கைச்
சங்கொன்று கொங்கைத் தழும்பொன்றே—நங்கையுனை
வந்திப்பார் பெற்றவர மற்றொருநீ வாய்த்ததிரு
வுந்திப்பா ரேழு மொருங்கு. (௩)

---

(௨) அம்மன்றுடையார்க்கே பரமானந்தமே நிலைபேறாகிய தனித்திருமேனியதாக்கி மேலும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டு மற்றெண்ணிறந்த திருவுருவை உண்டாக்கிக்கொடுப்பதும் நினது திருவிளையாடலாயின் நினக்குப் பாகந்தருதற்குச் சிதாகாய சொரூபியாகிய அப்பிரானுக்குப் படிவமேது. எ - று. கொல் - அசை.

(௩) வந்திப்பார் பெற்றபலம் நீ திருவுந்திவாய்த்த ஏழுலகமும் ஒருங்கே தமக்குரியவாகப் பெறுதலாம். எ-று.

கட்டளைக்கலித்துறை.

ஒருவல்லி யல்லிக் கமலத்து ளூறுபைந் தேறலொத்த
திருவல்லி தில்லைச் சிவகாம வல்லியென் சித்தத்துள்ளே
வருவல்லி செம்பொன் வடமேரு வில்லியை வாட்கணம்பாற்
பொருவல்லி பூத்தலி னன்றேயிப் பூமியைப் பூவென்பதே. ()

நேரிசைவெண்பா.

பூத்ததுவு மீரேழ் புவனமே யப்புவனங்
காத்ததுமென் னம்மை கருணையே—கூத்தரவர்
பாடுகின்ற வேதமே டாராவிப் பாரொடுங்க
வாடுகின்ற வேதமே யங்கு. (௫)

கட்டளைக்கலித்துறை.

அங்கைகொண் டேநின் னடிதைவந் தாரழ லாரமுடிக், கங்கைகொண் டாட்டுநங் கண்ணுத லாரக் கனகவெற்பைச், செங்கைகொண் டேகுழைத் தார்சிவ காமிநின் சித்திரமென், கொங்கைகொண் டேகுழைத் தாயவர் பொற்புயக் குன்றெட்டுமே. (௬)

நேரிசைவெண்பா.

குன்றஞ் சுமந்தொசிந்த கொம்பேநின் கோயிலும்பொன்
மன்றும் பணிந்தேம் வழிவந்தாற்—பொன்ருழ்
வரைசென்ற திண்டோண் மறலிக்கு நெய்தன்
முரசன்றே வென்றி முரசு. (௭)

---

(௪) பூத்தல் சிலேடை. (௬) ஆரழல் - சினக்கனல். குன்றெட்டுங்குழைத்தாய் நின்விசித்திரமென்னே! என்பது. கொண்டு என்பன நான்கும் மூன்றும்வேற்றுமைச்சொல் லுருபுகள்.

(௭) நெய்தன்முரசு - செத்தார்க்குரிய பறை.

கட்டளைக்கலித்துறை.

முருந்தடர்ந் தார முகிழ்த்தபுன் மூரன் முதல்விகயல்
பொருந்தடங் கண்விழிக் கும்புலி யூரர்பொன் மார்பின்மற்றுன்
பெருந்தடங் கொங்கை குறியிட்ட வாகண்டப் பிஞ்ஞகர்க்குன்
கருந்தடங் கண்ணுங் குறியிட்ட போலுங் கறைக்கண்டமே. (அ)

நேரிசைவெண்பா.

கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தா ரென்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே—யிறைசொண்
டயிலிருக்கு முத்தலைவே லண்ணலுக்கென் னேயோர்
மயிலிருக்கத் தில்லை வனத்து. (௯)

கட்டளைக்கலித்துறை.

வன்னஞ் செறிவளைக் கைச்சிற காற்றன் வயிற்றினுள்வைத்
தின்னஞ் சராசர வீர்ங்குஞ் சணைத்திரை தேர்ந்தருத்திப்
பொன்னம் பலத்துளொ ரானந்த வாரிபுக் காடும்பச்சை
யன்னம் பயந்தன கொல்லாம்பல் லாயிர வண்டமுமே. (௧0)

நேரிசைவெண்பா.

அண்டந் திருமேனி யம்பலத்தார்க் கென்பதுரை
கொண்டங் குணர்தல் குறைபாடே—கண்டளவில்
விண்ணம் பொலிந்ததொரு மின்கொடியே சொல்லாதோ
வண்ணம் பொலிந்திருந்த வா. (௧௧)

கட்டளைக்கலித்துறை.

வாய்ந்தது நின்மனை வாழ்க்கையென் றேதில்லை வாணரம்மே
காய்ந்தது வென்றிவிற் காமனை யேமுடிக் கங்கையைப்பின்

(அ) முருந்தையடர்த்து முத்தைப்போலரும்பிய சிறுபற் களையுடைய முதல்விநின் கயல்பொருந்தடங்கண் எப்பொழு துங் காதலித்துநோக்கும் மார்பில் என்க. தடம்கயற்கண்விழிக் குமென்பதும் ஒரு சாதுரியப் பொருள். முதல்வி அண்மைவிளி.

(௯) இறை-ஊழித்தீ. (௧0) அண்டம் சிலேஷை. (௧௧) உரை-ஆகமப்பிரமாணம்.

வேய்ந்தது பாவயின் மென்பதந் தாக்கவவ் வெண்மதியுந்
தேய்ந்தது பெண்மதி யென்படு மோவச் சிறுநுதற்கே. (௧உ)

நேரிசைவெண்பா.

சிறைசெய்த நூரீர்த் திருத்தில்லைத் தொல்லை
மறைசெய்த வீர்ந்தண் மழலைப்—பிறைசெய்த
வொண்ணுதலைக் கண்ணுதலோ டுள்ளத் திருத்தியின்ப
நண்ணுதலைக் கண்ணுதலே நன்று. (௧௩)

கட்டளைக்கலித்துறை.

நங்காய் திருத்தில்லை நன்னுத லாய்நுத னுட்டமொத்துன்
செங்காவி யங்கண் சிவப்பதென் னேசெழுங் கங்கையைநின்
பங்காளர் நின்னைப் பணியுமப் போதுகைப் பற்றிமற்றென்
றங்கா யெழுந்திரென் றுலவட் கேது தலையெடுப்பே. (௧௪)

நேரிசைவெண்பா.

தலைவளைத்து நாணியெந்தை தண்ணளிக்கே யொல்குங்
குலைவளைத்த கற்பகப்பூங் கொம்பர்—கலைமறைக
ணுன்குமறி யார்க்கிந்த ஞாலமெலா மீன்றளித்துந்
தான்குமரி யாகியிருந் தாள் (௧௫)

கட்டளைக்கலித்துறை.

தாளிற் பதித்த மதித்தழும் புக்குச் சரியெம்பிரான்
றோளிற் பதித்த வளைத்தழும் பேதொல்லைத் தில்லைப்பிரான்
வாளிற் பதித்த முலைத்தழும் பங்கவர் மார்பினிலந்
நாளிற் பதித்ததொன் றேயெம் பிராட்டி நடுவின்மையே. ()

நேரிசைவெண்பா.

இன்றளிர்க்கைக் கிள்ளைக்கே யிர்ங்குதலை கற்பிக்கும்
பொன்றளிர்த்த காமர்ப் பொலங்கொம்பு—மன்றவர்தம்

---

(௧௩) பழையவேதத்தைத் தோற்றுவித்த மழலைமொழியையும் பிறைபோன்ற வொண்ணுதலையுமுடைய தேவியையென்க. பிந்திய கண்ணுதல் - கருதல். (௧௪) தலையெடுப்பு சிலேடை-

பாகத் திருந்தாள் பதுமத்தாள் பாவித்தா
ளாகத் திருந்தா ளலள். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

அல்லிக் கமலத் துணைத்தாளி லென்றுமென் னாவிக்குள்ளே
புல்லிக் கிடந்தன போலுங்கெட் டேன்புன் மலக்கிழங்கைக்
கல்லிப் புலக்களை கட்டருள் பூத்துட் கனிந்தமலை
வல்லிக் கிலைகொன் மருங்கென் றிரங்கு மறைச்சிலம்பே. (கஅ)

நேரிசைவெண்பா.

மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்—மறைநாறு
நாட்கமலஞ் சூடே நறுந்துழாய் தேடேநின்
றாட்கமலஞ் சூடத் தரின். (கக)

கட்டளைக்கலித்துறை.

தருவற நாணத் திருவறச் சாலை சமைத்தம்மைநீ
பொருவறு நல்லறம் பூண்டதென் னுமெந்தை பொற்புலியூர்
மருவறு மத்த முடித்துக் கடைப்பலி தேர்ந்துவம்பே
தெருவற வோடித் திரிதரு மான்மற்றுன் சீர்த்திகொண்டே. ()

இரட்டைமணிமாலை முற்றிற்று.

(கஎ) இலக்குமி தந்தலைவராகத்திருப்பவும் ஆகத்திருந்தா ளல்லளென்றது உமாதேவியார்போன்று ஆகமுற்றும் நேர்பாகத்து இருப்புப்பெறாது ஏகதேசமாகிய மார்பத்து மட்டும் இருப்புப்பெற்றமையினென்க. ஆகம் வடிவையும் மார்பையும் உணர்த்திநின்றது. "பதுமத்தார்பாவித்தா ராகத்திருந்தாரலர்" என்னும்பாடங்கொள்ளின், கலைமகளும் ஏகதேசமாகிய நாவகத்திலேயே யிருத்தலின் ஆகத்திருந்தார் அலரென்றதென்க.

(கஅ) மலைவல்லியென்றதற்கியையக் கிழங்குமுதலியன உருவகித்திருப்பதோர்க. ஆவி - உயிர், தடாகம்.

(கக) திருமாலாதியர் பதவியையும் வெஃகேமென்றபடி.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

தருமபுரம்
பண்டாரமும்மணிக்கோவை.

காப்பு.

நேரிசைவெண்பா.

எண்டிசைக்குஞ் சூளா மணியாகி லாமணிசீர்
கொண்டிசைக்கு மும்மணிக் கோவைக்குக் - கண்டிகைப்பொற்
பைந்நாகத் தானனத்தான் பாற்கடலான் போற்றவருள்
கைந்நாகத் தானனத்தான் காப்பு.

நேரிசையாசிரியப்பா.

பூமலி சததளப் பொன்னந் தாதுகு
காமர்பீ டிகையிற் கருணையொடு பொலிந்து
வீற்றுவீற் றமைந்த விரிதலைப் புவனம்
பாற்பட வகுத்த பழமறைக் கிழவனு
மதுக்குட முடைந்தாங் கிதழ்க்கடை திறந்து
பிரசமூற் றிருந்து முருகுகொப் பளிப்ப
வண்டுழு துழக்குந் தண்டுழா யலங்கற்
புரவுபூண் டகிலம் பொதுக்கடிந் தளிக்குங்

காப்பு:—அனத்தான் பாற்கடலான் போற்றப் பொற்கண்டிகைப் பைந்நாகத்தான் அருள் கை நாகத்து ஆனனத்தான் காப்பு என்க. போற்றல் கயமுகாசுர வதத்தின்பொருட்டு வேண்டலின்மேற்று. அரவின்படம் பொற்பதக்கம் போலுதலின் பொற்கண்டிகைப் பைந்நாகமென்றார்.

கருணைபூத் தலர்ந்த கமலக் கண்ணனு
மஞ்சிறைச் சுதைநிறச் செஞ்சூட் டன்னமுஞ்
செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிற் றேனமு
மாகுபு தனித்தனி யலமர நிவந்த
மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட் டம்ம
வெம்மனோர் போல வினிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில்பே ரின்ப
மோனவாழ் வளிக்கு ஞான தேசிகன்
விரிகதிர் பரப்பு மரகதத் தகட்டிற்
சுடர்செய் செம்மணி யிடையிடை பதித்தெனப்
பாசடைப் பரப்பிற் பதும ராசிகள்
சேயிதழ் விரிக்குஞ் செழுமல ரோடையு
மண்டகோ ளகையு மெண்டிசா முகமுங்
கோட்டுடைத் தடக்கை நீட்டியளந் தென்னச்
சேட்பட நிவந்த செண்பகா டவியுங்
கால்கிளர் விசும்பிற் கற்பகா டவிக்கு
வேலியிட் டன்ன வியன்மணிப் புரிசையு
மருங்குசூழ் கிடந்த வண்டமிழ்க் கமலைப்
பெரும்பதி புரக்கும் பேரருட் குரிசில்
நான்மறை நவின்ற நற்பொரு ளிவையென
மோனவா சகத்தான் முப்பொரு ணவிற்றுபு
நன்னலம் புரியு ஞானப்பிர காச
னின்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன்
திருக்கிளர் ஞானத் திருந்திழைக் கணியா
மருட்பெருஞ் சைவத் தருங்கல னுப்ப
ணுசற விளங்கு மாசி லாமணி
யமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்

(க) சைவத்து என்புழி அத்துச்சாரியை விரித்தல் விகாரம்.

துள்ளதன் படிவ முணர்த்துவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தன்
பொன்னடிக் கமலஞ் சென்னிவைத் திறைஞ்சுது
மிருகால் சுமந்த வொருபெருஞ் சேவகத்
தைம்புலக் களிறுந் தம்புலத் திழுப்ப
ஊனுடைப் பிறவிக் கானகத் துழலா
தேனைய முத்திநா டெய்தவோர்
ஞான வாரண நல்குதி யெனவே. (௧)

நேரிசைவெண்பா.

என்வடிவ நின்வடிவாக் கொண்டா யெளியேற்குன்
றன்வடிவ நல்கத் தகுங்கண்டாய் - மன்வடிவால்
வெம்பந்த நீக்கும் விமலநீ மெய்ஞ்ஞான
சம்பந்த னென்பதனாற் றான். (௨)

கட்டளைக்கலித்துறை.

தானின் றெனைத்தனக் குள்ளே யொளிக்குமென் றன்மைநிற்க
யானின்ற போதெனைக் குள்ளே யொளித்திடு மிப்பரிசே
வானின்ற சின்மய மாமாசி லாமணி மன்னுந்தன்மை
நானின்று கண்டனன் காணே னிதற்கொத்த நன்மணியே. (௩)

நேரிசையாசிரியப்பா.

மணிவடஞ் சுமந்த புணர்முலைக் கொதுங்கி
யீயா மாக்க ணடுமொழி கவர்ந்த
சிற்றிடை படைத்த பேரமர்க் கண்ணியர்

---

(௩) சிவபோதமேலிட்டகாலத்துச் சீவபோதமொடுங்கியும் சிவபோத மேலிட்டகாலத்துச் சிவபோத மொடுங்கியும் நிற்கு மியல்பு தெரிவித்தவாறு. இதனைக் காசிக்கலம்பகம் அ௩ - வது செய்யுளானும் அறிக. (௪) உ - ஈயாமாக்கள் நீமொழி - இல்லை யென்னும் கடுமொழி.

கரைகொன் றிரங்குந் திரைசெய்நீர்ப் பட்டத்து
மைவிழி சேப்பச் செவ்வாய் விளர்ப்பக்
கருங்குழல் சரிய வெள்வளை கலிப்பச்
சீராட் டயரு நீராட் டயர்ந்து
புலவியிற் றீர்ந்து கலவியிற் றிளைக்கு
நீரர மகளிர் பேரெழில் காட்ட
மருதம்வீற் றிருந்து பெருவளஞ் சுரக்குந்
தருமையம் பதிவாழ் சற்குரு ராய
வொள்ளொளி பரப்பும் வெள்ளிவே தண்டத்
தொருபாற் பொலிந்த மரகதங் கவினச்
சுடர்விடு செங்கதிர்க் கடவுண்மா மணிக்கு
விளங்கெழின் மிடற்றோர் களங்கமுண் டென்பவக்
காசிலா மலினங் கரந்தசா ரணத்தான்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்த
வீண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனி
னந்நிய மென்று மநந்நிய மென்று
மிந்நிலை யிரண்டு மெய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே
யங்கது புரிதற் கரிதெனி னிங்கொரு
சனனம்யான் வேண்டுவ தினிதரு ளெனக்கே

அதுவே

ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கு
மிந்திர னாகிவாழ்ந் திருப்பதோ வன்றே

(சு) உ0 - அந்நியம் - பேதம். அநந்நியம் - அபேதம். இந்நிலையிரண்டும் எய்தியது - பேதாபேதம்.

மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
யடலரா வணையி லறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே

அவைதாம்

ஆரா வின்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே
யன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனின்
விழுத்தகு கல்வியு மொழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்திநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லழுக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
னருளையு மயரா தவதரிப் பதுவே. (௪)

நேரிசைவெண்பா.

அவமாசி லாமனத்தார்க் காருயிரா ஞானேற்
பவமாசி லாமணிச்சம் பந்தா - தவமார்
ததியருளத் தானேநின் சந்நிதிப்பட் டேற்குக்
கதியருளத் தானே கடன். (௫)

கட்டளைக்கலித்துறை.

கடல்பெற்ற தோர்மணி சிந்தித்த நல்குங் கருத்துக்கெட்டா
மிடல்பெற்ற பேரின்ப நல்கிய வாவருள் வேலைபெற்றென்
னுடல்பெற்ற கண்மணிக் குண்மணி யாகியொண் கூடல்வைகு
மடல்பெற்ற ஞானச் சுடர்மாசி லாமணி யானதொன்றே. (௬)

---

(௪) ௩௬-கொல் பிற அசைகள். அது அவதரிப்பதுவே என இயையும். (௫) ததியர் - பருவத்தர்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

ஒன்றே தன்மை யுனக்குமற் றெமக்கு
மன்றென மொழியினு மாமெனப் படுமே
யங்ஙனங் கூறிய தெங்ஙனம் பிறவெனி
னெஞ்ஞான் றுளையுள மஞ்ஞான் றியாமே
யழியா நிலைமையை யனையம் யாமே
வியாபக நினக்குள தியாமுமஃ துளமே
யறிவெனப் பெயரிய பெயரினை யப்பெயர்
பிறிவரும் பெயராப் பெற்றனம் யாமே
யிச்சா ஞானக் கிரியையென் றிசைக்குஞ்
சத்திக ளுளையுள தத்திற மெமக்கே
யிந்நிலை முழுவதூஉ மெமக்குமுண் டாகலி
னந்நிய மலநினக் கநநியம் யாமே
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந்
திருநக ராக வரசுவீற் றிருக்கு
மாசி லாமணித் தேசிக ராய
சம்பந் தப்பெயர் தரித்தனை யாலெமைச்
சம்பந் தஞ்செயத் தகுந்தகு நினக்கே
கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலிற்
புருட நாமமும் புனைந்தன மாயினு
மத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே
புருடனைச் சத்தியிற் புணர்த்தனை யன்னதற்
கொருகாட் டென்ப புருடோத் தமனே
யுன்னுட னெம்மையு மொப்பனைப் படுத்து
முன்னர்க் கூறிய முறைமையிற் சிற்சில
முழுவது மொவ்வா தொழியினு மொழிக
வுயர்ந்தோன் றலைவ னெத்தோட் புணரினு

(எ) உக-புணர்த்தனை - புணர்வித்தனை. உஉ-காட்டு - உதாரணம். உ௩-ஒப்பனை - சமம்.

மிழிந்தோட் புணரினு மிழிபெனப் படாதே
யாதலின் யாமுனைக் காதலித் தனமாற்
காதலி னெமையருட் கைப்பிடித் தருளி
யொருவரு முணராப் பரம வீட்டி
லிருளறை திறந்த பெருவெளி மண்டபத்
தயர்நா தாந்தத் திருமல ரமளியிற்
புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற
வுள்ளொலி நாதப் புள்ளொலி முழக்க
ஞானவா ரமுத பானம தருந்திக்
கருவிகள் கழன்று பரவச மாகிப்
பரமா னந்தப் பரவையுட் படிந்து
பேரா வியற்கை பெற்றினி திருப்ப
வாரா வின்ப மளித்தரு ளெமக்கே. (எ)

நேரிசைவெண்பா.

எம்மா ருயிரா மெழின்மாசி லாமணியை
யம்மா பெறுதற் கரிதென்றே - சும்மா
விருந்தாரோ பெற்றார்மற் றெவ்வுலகில் யாரோ
வருந்தாது பெற்றார் மணி. (அ)

கட்டளைக்கலித்துறை.

மணிகொண் டவர்தம் பொருளாவ தன்றியம் மாமணியா, மணிகொண் டவரைக்கொண் டாள்வதுண் டேயருட் கூடல் வைகும், கணிகொண்ட கொன்றைத் தொடைமாசி லாமணி கண்டவுடன், பணிகொண்டு தொண்டுங்கொண் டாளுங்கொள் வோமென்று பார்க்குமுன்னே. (கூ)

(கூ) அணியாகும் மாமணி அம்மணியைக் கொண்டவரது பொருளாவதல்லது கொண்டவரைத் தனக்கு அடிமைகொண் டாள்வதுமுண்டோ இன்று: அங்ஙனமாக; மாசிலாமணி யெனும் ஒருமணியானது இதனைக்கொள்வோமென்று ஒருவர் பார்க்கு முன்னமே அவரைப்பணிகொண்டு தொண்டுங்கொண்டு தான் கண்டவுடன் இவ்வாறு ஆளாநிற்கும்; இஃது வியப்பு. எ-று.

நிலைமண்டிலவாசிரியப்பா.

முற்படு மாயை முதற்கனா நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
யீரிரு கண்ணுற் றெழுதாம் வகுத்த
வாறே ழிரட்டி நூறா யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
யூழெனப் பட்ட தாழ்புனற் படுகரிற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகு
மொவ்வொரு மதகா வுடனுடன் றிறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலு
மிதத்துட னகித மெனுமிரண் டேற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா
வோராறு வகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன வறுத்தாங்
கொருகளஞ் செய்யு முழவ னாகி
மாநிலம் புரக்கு மாசிலா மணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவய னுப்ப
ணருள்வித் திட்டுக் கருணைநீர்ப் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே

அவற்றுள்

இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
வோரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னாயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே. (௧௦)

நேரிசைவெண்பா.

விண்புரக்குஞ் சிந்தா மணியென்கோ மெய்ச்சுடரான்
மண்புரக்குஞ் சூளா மணியென்கோ - பண்பாற்
றிருமா முனிவர் சிகாமணியென் கோசீர்
தருமாசி லாமணியைத் தான். (௧௧)

கட்டளைக்கலித்துறை.

தானவ னாகிய தன்மைபெற் றுனடி தாழப்பெற்றாற்
றானவ னாகிய தன்மைபெற் றுய்வனத் தன்மையின்றித்
தானவ னாகிய தன்மைபெற் றேற்கரு டாழ்சடிலத்
தானவ னாகம் பெருமாசி லாமணிச் சம்பந்தனே. (௧௨)

நேரிசையாசிரியப்பா.

பந்தனை தவிராச் சிந்தனை நிகர்ப்பப்
பாயிருள் பரந்த மாயிரும் பொழிலிற்
கொளற்குரி மாந்தர்க் களித்தல் செய்யா

(௧௦) ௬௧-பயத்தல் - பயன்படல்.

தரும்பூண் சுமந்த வறிவி லாளரிற்
சுரும்பூண் வெறுத்த துதைமலர் வேங்கை
தன்மருங் குறீஇப் பொன்மலர் பிலிற்ற
விலையறப் பூத்த சுதைமலர்ப் புன்னையின்
மெய்ப்புல னோக்கார் கட்புலன் கடுப்ப
விமையா வறுங்கண் ணிமைத்தபைங் கூந்தற்
பசுந்தார் மஞ்ஞை யசைந்தமர் தோற்றம்
பொற்றுணர் பொதுளிய கற்பகப் பொதும்பர்
பொறிவண் டுண்ணா நறுமலர் தூற்றப்
பாடல் சான்ற கோடுபல தாங்கிக்
கவளங் கொள்ளாத் தவளமால் களிற்றிற்
கண்பல படைத்த கார்முகில் வண்ணத்
திந்திரன் பொலியு மெழினலங் காட்டுந்
தண்பணை யுடுத்த தமிழ்ப்பெருங் கூடல்
வண்பதி புரக்கு மாசி லாமணி
தலைப்படு கலைமதி தாங்கா தாங்கத்
தலைப்படு கலைமதி தாங்கி நிலைப்படு
மானிட னாய வடிவுகொண் டருளாது
மானிட னாய வடிவுகொண் டருளி
யெற்பணி பூணா தெற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
வாரூ ரமர்ந்த ஞானசம் பந்த
நிற்புகழ்ந் திறைஞ்சுங் கற்பின் மாக்கள்
விருப்பு வெறுப்பற் றிருப்ப ரொன்ப
பொருட்டுணி புணர்ந்த புலமை யோரே
யிகபர மிரண்டினு மெதிர்நிறை கோளினுந்
தொகுதியுள் வேற்றுமைத் தொகைப்பொருள்கோளினு
முன்னவர் மொழிந்ததற் கன்னிய மாகலின்

(கரு) ௧0 - தார் - கழுத்திலுள்ள வளை.

விருப்பு வெறுப்புள வாய
கருத்தின ராகவும் கண்டனம் யாமே. (கங)

நேரிசைவெண்பா.

கண்ணிற் கணியாங் கதிர்மாசி லாமணியைப்
பண்ணிற் கணியாப் பகர்வரா - லெண்ணுங்காற்
பன்னூலிற் கோக்கப் படுமணியன் றிம்மணிமற்
றிந்நூலிற் கோக்குமணி யென்று. (கச)

கட்டளைக்கலித்துறை.

என்வச மாகவில் லாதநெஞ் சாமிரும் பைக்குழைத்துத்
தன்வச மாக்கொண் டிழுக்கின்ற தாற்றொண்டர் தம்மையருண்
மன்வச மாகச் செயுமாசி லாமணி மாமணிக்குப்
பொன்வச மாகச்செய் காந்தமென் றேசொலப் போந்ததுவே. ()

நேரிசையாசிரியப்பா.

போந்தையங் கண்ணி வேந்துவிற் பொறித்த
மன்பெருங் கிரியின் மென்கரும் பெழுதித்
தேசுலாம் பசும்பொற் சிகரமந் தரத்தின்
வாசுகி பிணித்தென மணிக்கச் சிறுக்கிக்
கடாம்பொழி கரடக் களிநல் லியானை
படாம்புனைந் தென்னப் பைந்துகில் போர்த்துப்
பிதிர்சுணங் கலர்ந்த கதிர்முலை மடந்தையர்
விட்புலத் தவர்க்குங் கட்புலன் கதுவாச்
சூளிகை வகுத்த மாளிகை வைப்பிற்
சுவல்லைகத் தாங்குபு மதியணர்ந்து பார்க்கச்
சேணிகந் தோங்கும் யாணர்செய் குன்றத்

(கச) இந்நூலிற் கோக்குமணியென்று குறித்து இசைப்பாட்டிற் பகர்வரென்க. (கரு) இரும்பை யிழுக்கின்றதால் காந்தமென்றே பெயர்சொல்ல நேர்ந்தது. எ-று. பொன்-இரும்பு.

தாடகத் தியன்ற சூடகக் கரத்தான்
மாடகத் திவவியாழ் மருமமீ தணைத்து
மூவகை நிலையத் தேழுசுர நிறீஇக்
கொவ்வைவாய் திறந்து குயிலென மிழற்றுபு
மென்னரம் புகிரான் விரன்முறை தடவிக்
இன்னரம் வியக்குங் கீதம் பாட
நகைநில வெறிக்கு முகமதி காணூஉச்
சந்திர காந்தத்திற் சமைத்தசெய் குன்ற
மைந்தர்போன் றுருகி மழைக்கணீர் சொரியப்
பல்வளஞ் சுரக்கும் பைந்தமிழ்க் கமலை
நல்வளம் பதிவாழ் ஞானசம் பந்த
பாசமா மிருட்கோர் படர்மணி விளக்கெனு
மாசி லாமணித் தேசிக ராய
சாற்றுவன் கேண்மதி மாற்றமொன் றுளதே
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார
மொழிதடு மாற வுழுவலன் பலைப்பச்
சத்திநி பாதத் தன்மைவந் தடைந்தோர்க்
கப்பொருள் புரிதற் கதுபொழு தாகலின்
மெய்ப்பொரு ளுணர்த்துதல் வியப்பெனப் படாதே
சொற்றமிழ் விரகன் றுணைக்கண் சாத்த
மூற்றுணர் கேள்வியர் பற்பல ராயினுங்
கைசொலக் கேட்குங் கட்செவி மூங்கைக்
குய்வகை புணர்த்த தொருவியப் பாகலி
னன்னது கடுப்பநின் சந்நிதி விசேடத்
தின்னருள் பெறுதவர் யாவரு மிலரென
வியப்புள தாகவு நயப்பதொன் றுளதே

(கசு) கச-மூவகைநிலையம் - எடுத்தல் படுத்தல் நலிதலென்னும் ஓசைகளையெழுப்புதற்குரிய மூவகைத்தானம்.

௩க-சொற்றமிழ்விரகன் - ஈண்டு மாணிக்கவாசக சுவாமிகள்.

யனையதிக் கென்னென வினவுதி யாலெனிற்
கதலித் தண்டிற் பொதிதழல் கொளீஇப்
சுO பற்று திருப்பினும் பைப்பைய மூட்டுபு
மற்றொரு சூழ்ச்சியிற் பற்றுவித் தாலென
வொருசிறி தெனினும் பருவமின் றாயினும்
பவவிரு டோந்தருள் பதியத்
தவமில் பேதையேன் றனக்கருள் வதுவே. (கசு)

நேரிசைவெண்பா.

தன்னே ரிலாஞான சம்பந்தன் றாளடைந்தார்க்
கென்னே யிருள்வெளியா மென்பரா - லன்னோ
னருளாத போதுவெளி யாயிருந்த வெல்லா
மிருளா யிருந்த வெனக்கு. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

என்செய லாவொன்றும் யான்செய்த தில்லை யெனக்கவமே
புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென் போதமில்லேன்
றன்செய லாயவெல் லாமாசி லாமணிச் சம்பந்தநின்
னன்செய லாயினு மென்செய லாச்செய்யு நானென்பதே. ()

நேரிசையாசிரியப்பா.

நான்மறைக் கிழவ நற்றவ முதல்வ
நூன்முறை பயின்ற நுண்மைசா லறிஞ
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ
கற்றவர் வியக்குங் காவியப் புலவ
ரு செவிதொறுஞ் செவிதொறுந் தெள்ளமு தூட்டுபு
கவிஞர்வயி னிரப்புங் கல்விப்பிர சங்க
வெள்ளிடைத் தோன்று முள்ளத் துணர்த்தவுஞ்
சேய்நிலை நின்று திருக்கண் சாத்தவுஞ்

(கஎ) வெளியாயிருந்தன - சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சப்பொருள்கள். இருளாயிருத்தல் - அவை தோன்றுதொழிதல்.

சாயா மும்மலச் சகலரே முய்ய
வெம்முருக் கொண்டு மெய்மொடு பயின்று
மும்மலக் கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பர முணர்த்துஞ் சற்குரு ராய
பளிங்கினிற் குயின்ற பணிநிலா முற்றத்து
விளங்கிழை மடந்தையர் விளையாட் டயர்தரக்
கொங்குவார் குழலுங் குவளைவாள் விழியும்
பங்கய முகமும் பத்திபாய்ந் தொளிர்தலிற்
சைவலம் படர்ந்து தடங்கய லுகளுஞ்
செய்யபூங் கமலச் செழுமல ரோடையென்
றுடவர் சிற்சிலர் நாடினர் காணூஉ
வம்மின் வம்மின் மடந்தையர் நீவிர்மற்
றம்மெல் லோதி யரம்பைய ராதலி
னீர்நிலை நிற்றிரா னீரவர் தங்களுள்
யார்கொல் யார்கொ லிசைமி னிசைமினென்
றிறும்பூ தெய்தி யிரந்தன ரிசைப்ப
மறுமொழி கொடாது குறுநகை முகிழ்த்தாங்
கையுற வகற்று மணிமதிற் கமலை
நன்னகர் புரக்கு ஞான தேசிக
வாசிலா வண்புக ழணிநிலா வெறிக்கு
மாசி லாமணி ஞானசம் பந்த
வென்பொருட் டாயினு மென்பொருட் டன்றிது
நின்பொருட் டொருபொரு ணிகழ்த்துவன் கேண்மோ
வறிஞ ரேம்பிய செறுவொன் றேய்ப்பப்
பருவ நோக்காப் பவந்தொறும் பவந்தொறு
மிருவினைப் போகமு மெற்கொண் டார்த்துபு
மற்றென் னுருக்கொடு முற்றனை யாலினித்
தாகமின் றகலிற் பாகமின் றெனக்கென
வருளா தொழியினும் பரிபவ நினக்கே

செய்முகம் பாராள் சினந்தன ளேகினும்
போயெடுத் தாற்றுமத் தாய்மீட் டன்றே
யாதலி னெனைப்போ லடிக்கடித் தோன்றலை
யீதியா லின்னரு ளின்னண மெனக்கே
சமையந் தீர்ந்த தனிப்பொரு டெரித்தற்
கமையந் தேர்கலை யருளுதி யாயினு
மெண்ணீ ராண்டைக் கிலக்கமிட் டிருந்த
வண்ணலங் குமரற் காருயிர் தோற்றக்
கடாவிடை யூர்திபாற் கண்டு
மடாதென மொழிகுந ரார்கொன்மற் றுனையே. (௧௯)

நேரிசைவெண்பா.

ஆரூரே யூர்பே ருண்மாசி லாமணியென்
றோரூர்பே ரில்லாற் குரைத்தேற்குப்—பாரேறப்
பொய்யென்றான் மெய்யென்றான் பொய்யான பொய்யுடலை
மெய்யென்றான் பொய்யென்றான் மீண்டு. (௨0)

கட்டளைக்கலித்துறை.

மீளா மணிமந் திரமருந் தாற்சென்ம வெவ்விடநோய்
வாளா மணியொன்றி னான்மீண்ட வாவம் மணிபிறர்கொண்
டாளா மணியெமை யாட்கொள்சிந் தாமணி யைந்தவித்தோர்
சூளா மணிமெய்ச் சுடர்மாசி லாமணி சூழ்ந்திடினே. (௨௧)

(௧௯) ௪௬ - கடாவிடை - நிகரில்லாதவிடை; கடுத்தல் - நிகர்த்தல். (௨0) பாரனைத்தும் காரியவகையால் இல்லனவாதலும் காரணவகையால் உள்ளனவாதலும், உடல்கள் போகநுகர்ச்சியுள்ளவரையும் உள்ளன வாதலும் நுகர்ச்சியற்றவழி இல்லனவாதலும் பற்றி இங்ஙனம் கூறியபடி. ஊர்பேரில்லாதவர்க்கு ஊர்பேருண்டென யான் ஒருமுறைகூறி மருட்டினமையின், அவர் இங்ஙனம் இருமுறைகூறி என்னை மருட்டினரென்பது. (௨௧) மணிமந்திரமருந்துகளால் மீளாச்சென்மநோயென்க.

நேரிசையாசிரியப்பா.

சூழ்போய் நிவந்த வாழ்கட லுலகத்
தின்னருட் டிறத்தா லிடைமரு தமர்ந்த
பொன்னவிர் கடுக்கைப் புரிசடைப் புங்கவ
னமையாக் காத லிமையவல் லிக்கும்
வழிபடன் முறைமை விழுமிதி னுணர்த்தத்
தானே தன்னைப் பூசனை புரிந்தென
வருத்தியோ டெம்மைநம் முருத்திர கணங்க
டெரித்துமற் றிவ்வா றருச்சனை புரிதிரென்
றங்கயற் கண்ணி பங்கில்வீற் றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்கநா யகனை
யீரெண் டிறத்துப சாரமும் வாய்ப்பப்
பூசனை புரியுந் தேசிக ராய
மழைக்குலந் தழைப்பத் தழைத்ததீம் பலவின்
வேரிடைப் பழுத்துப் பாரினுட் கிடந்த
முட்புறக் கனிகள் விட்புறக் கமழ்தலுஞ்
சிறுகண் மந்தி குறிவழிச் சென்று
கீண்டுபொற் சுளைபல தோண்டுவ தம்ம
முற்பக லொருவர் பொற்குட நிரம்பப்
புதைத்தனர் வைத்த நிதிக்குழா மனைத்தும்
வஞ்சகம் பழகு மஞ்சனக் கள்வர்
கண்டுகண் டெடுக்குங் காட்சித் தன்ன
தண்டலை வளைஇத் தடமதி லுடுத்த
தேசுலாங் கமலைத் திருநகர் புரக்கு
மாசிலா லாமணி ஞானசம் பந்த

(உஉ) ௪ - இமையவல்லிக்குமென்றவும்மையால் காசிபமுனிவராதியர்க்குமெனக்கொள்க. இச்சரித்திரவிரிவைத் திருவிடைமருதூர்ப்புராணத்துணர்க. எ - உருத்திரகணங்கள் என்றது அண்மைவிளி. ௧௫. விட்பு - வெடிப்பு.

வாக்கு மனனும் யாக்கையு மொன்றாய்ச்
சொற்றரு கரண மற்றிவை மூன்று
நின்புகழ் நவிற்றியு நினைத்துநின் றுணைத்தா
ளன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவா
லவகர ணங்களே யல்லமற் றம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன வன்றே
அதனால்
திரிகர ணங்களென் றுரைசெயு மப்பெய
ரொருபொருட் கிளவியெல் லோர்க்கு
மிருபொருட் கிளவியா யிருந்ததின் றெனக்கே. (உஉ)

நேரிசைவெண்பா.

ஏற்கமலஞ் செய்யு மெழின்மாசி லாமணிதாட்
பொற்கமலஞ் சென்னி பொலிவித்தே - னற்கமலை
யூரிற் குறுகினே னோர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின். (உ௩)

கட்டளைக்கலித்துறை.

பின்னம் படைத்த சமய விரோதப் பிணக்கறுத்தோர்
சின்னம் படைத்த முனிமாசி லாமணிச் சித்தரியா
மின்னம் படைத்தவ ரேதுபெ றாமு திங்கெமக்கென்
றன்னம் படைத்தவர் பெற்றார் புவன மடங்கலுமே. (உ௪)

நேரிசையாசிரியப்பா.

அடங்கா வைம்புல னடங்கினர்க் கம்ம
வொடுங்கா வைம்புல னுளத்தினு முளவே
அவைதாம்
செவிப்புல னறியா வகத்தொலி யொன்றே

(உஉ) ௩க - திரிகரணம் - முக்கரணம்; திரிந்தகரணம்.
(உ௩) ஓர்மாத்திரைகுறுகல் - சிவனென்பது சிவனென்றுதல்.

மெய்ப்புல னறியாத் தட்பமற் றென்றே
கட்புல னறியாக் கதிரொளி யொன்றே
நாச்சுவை யறியா நறுஞ்சுவை யொன்றே
மூக்குயிர்த் தறியா முருகுமற் றென்றே
பேரா வின்பமிப் பெற்றியிற் றிளைக்கு
மாரா வின்பமொன் றூர்ந்தனம் யாமே

அதுவே

கரையெறிந் தார்க்கும் பொருபுனற் படுகரிற்
பணிலமீன் றளித்த மணிநிலாப் போர்ப்பத்
தருணவெள் ளெகினந் தன்னகத் தடங்க
வருண முண்டக மகவிதழ் முகிழ்ப்பது
தெண்டிரை யுடுத்த தீம்புனன் மடந்தை
வெண்டுகிற் படாஅம் விரித்தனள் போர்த்து
வள்ளவாய்க் கமல மலர்க்கையால் வளைத்துப்
பிள்ளைவெள் ளெகினம் பிடிப்பது கடுக்குங்
காசுலாம் பசும்பொற் கடிமதிற் கமலை
மாசி லாமணி ஞானசம் பந்தனென்
றருந்தவர் துதிப்பவோர் பெரும்பெயர் நிறீஇப்
பரமா னந்தப் பரவையுட் டோன்றிய
வின்பவா ரமுதமவ் வமுத
மன்பருக் கெளிதெளி தரிதுவின் னவர்க்கே. (௨௫)

நேரிசைவெண்பா.

விண்மணியாய்க் காண்போர் விழிக்குட் பொலிந்ததுணைக்
கண்மணியாய் நின்றெவையுங் காட்டுமா - லொண்மணிச்சூட்
டம்மா சுணந்தள்ளி யம்முடியேற் கொண்டிருந்த
விம்மா சிலாமணிமற் றின்று. (௨௬)

(௨௬) விண்மணி - சூரியன்.

கட்டளைக்கலித்துறை.

இன்றோர் வியப்புள தான்மாசி லாமணி யென்றிருப்ப
தொன்றோர் மணிகண் டவர்பல ராலதற் கோர்மருங்காய்
நின்றோர் பலபல பேதங்க ளாச்சொல்வர் நீக்கமறச்
சென்றோர்மற் றிம்மணி செம்மணி யேயென்று செப்புவரே. ()

நேரிசையாசிரியப்பா.

ஏழுயர் மும்மதச் சூழிமால் யானை
தடம்புனல் குடைந்து படிந்தெழூந் துழக்கத்
தெண்டிரை சுருட்டுங் குண்டகழ் வாவியிற்
பங்கயத் தவிசிற் பசும்பொற் றுதளைத்
தங்கம் வேறுபட் டாசனம் பொலிதலு
மாவலிற் படர்ந்த சேவல்கண் டயிர்த்துநம்
பேடையன் றிதுமல ரோடையு மன்றாற்
படரும்வெண் டாமரை படர்ந்ததை யன்றிது
கடவுள ரமுதங் கடைந்தபாற் கடலே
காந்துவெங் கனற்கட் களிறுமன் றிதுகடற்
சாய்ந்தெழு மந்தரத் தடங்கிரி யதுவே
போகுவா லுறுப்பும் புழைக்கையுந் தைவரும்
பாகரோ வாசுகி பற்றும்வா னவரே
பொங்கிவெண் ணிலவு பொழிதவெண் டரளமன்
றிங்கிது வங்கதி லெழுந்தவா ரமுதே
கொடிவிடு பாசடைக் குழாமன் றிங்கிதக்
கடலிடைத் தோன்றிய கற்பகா டவியே
சேயிதழ் விரிக்குஞ் செந்தா மரையிதன்

(உஎ) ஓர்மருங்காய் நின்றோர் - புறமாகிய பிறசமயங்களில் நின்றோர். (உஅ) ஏழுயர்தல் - ஏழுமுழம் அல்லது உடலில் ஏழிடம் உயர்தல்: அ-படர்ந்ததையென்பதில் ஐ சாரியை.

றுயதன் வடிவமா யமர்ந்தமா நிதியே
சங்கமன் றிதுலதன் றனிப்பெயர் நிதியே
செங்கிடை யன்றிது சிந்தா மணியே
யாதலி னமதுபேட் டன்னமு மன்றிதப்
போதிலங் குதித்த பொலங்கொம் பன்றே
யென்றுள மருளவோ ரெழினலம் பயக்கு
மன்றலம் பணைசூழ் மருத வேலிப்
பொன்மதிற் கமலை நன்னகர் புரக்குந்
தேசிக ராய சிற்பர முதல்வ
மாசி லாமணி ஞானசம் பந்த
வெனையாட் கொள்ளவந் தெய்தினை யாகலின்
முனியா தொன்றிது மொழிகுவன் கேண்மதி
கற்றன ராயினுங் கல்லா ராயினு
மற்றனம் யாமென வடைந்தனர் தமையெனிற்
காலம் பாரார் கருத்தினை யளவார்
சீல நோக்கார் தீக்குணங் கொள்ளார்
பரிசிலர் வேண்டிய பரிசுமற் றெல்லாம்
வரிசையோ டளிப்பது வள்ளியோர் கடனே
நன்னெறிப் படாஅ நலமிலி யாயினுஞ்
செந்நெறிப் படர்ந்துநின் சீர்புனைந் தேத்தலிற்
சத்தினி பாதநின் சந்நிதிப் பட்ட
வித்திறத் தெளிதினி லெய்திய தெனக்கே

அதனால்

சரியையிற் றாழ்க்கலை கிரியையிற் பணிக்கலை
யோகத் துய்க்கலை பாகமு நோக்கலை
நாளையின் றெனவொரு வேளையு நவிற்றலை
யீண்டெனக் கருளுதி யிறைவ
பூண்டுசொண் டிருப்பனின் பொன்னடித் துணையே. ()

(உஅ) உரு - பொலங்கொம்பு - இலக்குமி.

நேரிசைவெண்பா.

பொன்னேயல் லாமற் பொருளோ டேலுயிர்விற்
றென்னே மணியொன் றெவர்கொள்வார்—கொன்னே
குருமாசி லாமணியைக் கொள்வோர் கொள்ளார்முன்
றருவார்மற் றிம்மூன்றுந் தாம். (உகூ)

கட்டளைக்கலித்துறை.

தருமணிக் கோவைத் தகுஞான சம்பந்தன் றண்கமலைக்,
குருமணிக் கோவை நிகர்மாசி லாமணி கோத்திடலா, லொருமணிக் கோவையிம் மும்மணிக் கோவையொண் சங்குகஞ்சம்,
பொருமணிக் கோவைப் பொருளாக்கொள் ளாரிது பூண்டவரே. (௩0)

நூற்சிறப்பு.

தடுத்த பிறவித் தளையாம் விலங்கு தனைமுறித்து
விடுத்த கருணைக் கடன்மாசி லாமணி மெய்ப்புகழாற்
றெடுத்த தமிழ்மும் மணிக்கோவை நித்தந் துதிக்கவல்லா
ரெடுத்த சனனத்தி லெய்தாத பேரின்ப மெய்துவரே. (௩க)

உள்ளத் தருணின் றுணர்த்தவென் னாவி லுறைந்தவெள்ளை
வள்ளக் கமலத் தவண்மாசி லாமணி வண்புகழி
லெள்ளத் தனையள வோர்தொடை யாக்கி யிசைத்தனளாற்
கள்ளப் புலன்கொண் டுரைத்தே னலனிக் கவிமுற்றுமே. ()

விரிக்குஞ் சரியையிப் பாமாலை சேர்த்தது மெய்க்கிரியை
தரிக்கும் படிக்கின்று சாத்திய தேமற்றென் றண்டமிழ்நீ
தெரிக்கின்ற போதருள் செய்தது வேசிவ யோகமுண்மை
பரிக்கின்ற ஞானமொன் றேமாசி லாமணி பாலித்ததே. (௩௩)

பண்டாரமும்மணிக்கோவை முற்றிற்று.

(உகூ) கொள்ளாமுன் என்பதும் பாடம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

காசிக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே - மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
வோரானை வந்தென் னுளத்து.

மயங்கிசைக்கோச்சகக்கலிப்பா.

நீர்கொண்ட கடலாடை நிலமகளுக் கணியான
கார்கொண்ட பொழிற்காசிக் கடிநகரங் களிதூங்க
விடமருங்கிற் சிறுமருங்குற் பெருந்தடங்க ணின்னமிர்தஞ்
சடைமருங்கி னெடுந்திரைக்கைப் பெண்ணமிர்தந் தலைசிறப்பக்
கண்கதுவு கடவுண்மணி தெரிந்தமரர் கம்மியன்செய் [ய்.
விண்கதுவு பொலங்குடுமி விமானத்தின் மிசைப்பொலிந்தோ

நிற்பனவுந் தவழ்வனவு நடப்பனவு மாய்நிலத்துக்
கற்பமள விலகண்டு முறுகளைகண் காணுமே
பழங்கணுறு முயிர்கடுயர்க் கடனீந்திப் பரங்கருணை
வழங்குபர மானந்த மாக்கடலிற் றிளைத்தாட
வுரையாத பழமறையின் முதலெழுத்தி னெண்பொருளை
வரையாது கொடுத்திடுநின் வள்ளன்மை வாழ்த்துதுமே. (உ)

இவையிரண்டும் ஆறடித்தரவு.

(க) க - குளிர்தூங்க (உ) கடனீத்து என்பதும்பாடம்.

நீரெழுத்துக் கொத்தவுட னித்தார்க்கு நீநவில்வ
தோரெழுத்தே முழுதுமவ ரெவ்வண்ண முணர்வதுவே. (க)

என்பணிவ துடுப்பதுதோ லெம்பிரான் றமர்களவர்
முன்பணியும் பேறுடையார் திசைமுகனு முகுந்தனுமே. (உ)

செடிகொண்முடைப் புழுக்கூடே சிற்றடியோ மிடுதிறைமற்
றடிகளடி யார்க்களிப்ப தானந்தப் பெருவாழ்வே. (ங)

ற்பகனுந் றருந்தவரும் பெறற்கரிய பரந்தாம
மெற்புடல்விற் றளியேமுங் கொளப்பெறுவ திறும்பூதே. (ச)

நிணம்புணர்வெண் டலைக்கலன்சொ னேரிழைமுத் தித்திருவை
மணம்புணர்வார்க் கையனருண் மணவாளக் கோலமே. (ரு)

முடைத்தலையிற் பலிகொள்வான் மூவுலகு மவரவர்தங்
கடைத்தலையிற் றிரிவதுகொல் யாம்பெறுநின் காணியே. (சு)

இவையாறும் ஈரடித்தாழிசை.

உளதென விலதென வொருவரொ ரளவையி
னளவினி லளவிட லரியதொ ருருவினை. (க)

இதுவென லருமையி னெழுதரு மொழிகளு
மதுவல வெனுமெனி லெவருனை யறிபவர். (உ)

அவனவ ளதுவெனு மவைகளி னுளனல
னெவனவ னிவனென வெதிர்தரு தகைமையை. (ங)

அறிபவ ரறிவினு ளறிவுகொ டறிவுறு
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை. (ச)

இவைநான்கும் ஈரடியராகம்.

ஆனொடு பெண்ணுரு வமைந்து நின்றனை.
பூண்முலை கலந்துமைம் புலனும் வென்றனை.

எண்வகை யுறுப்பினொ ருருவெ டுத்தனை.
தொன்மறைப் பனுவலின் றொடைதொ டுத்தனை.

இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம்.

வடவரை குழைய வளைத்தனை.
மலைமகண் முலைக டிளைத்தனை.
விடமமிர் தமர விளைத்தனை.
விசயனொ டமர்செய் திளைத்தனை.
வரிசிலை மதனை யெரித்தனை.
மதகரி யுரிவை தரித்தனை.
அருமறை தெரிய விரித்தனை.
அலகில்பல் கலைக டெரித்தனை.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம்.

அழல்வி ழித்தனை. பவமொ ழித்தனை.
ஆற ணிந்தனை. மாற ணிந்தனை.
மழுவ லத்தினை. முழுந லத்தினை.
மான டத்தினை. மாணி டத்தினை.
அலகி றந்தனை. தலைசி றந்தனை.
அருள்சு ரந்தனை. இருடு ரந்தனை.
உலக ளித்தனை. தமிழ்தெ ளித்தனை.
ஒன்று மாயினை. பலவு மாயினை.

இவைபதினாறும் இருசீரோரடியம்போதரங்கம்.

அலகில்பல புவனங்க ளடங்கலுமுண் டொழிப்பாய்க்குக்
கொலைவிடமுண் டனையென்று கூறுவதோர் வீறுமே. (க)

பயின்மூன்று புவனமுங்கட் பொறிக்கிரையாப் பாலிப்பாய்க்
கெயின்மூன்று மெரிமடுத்தா யென்பதுமோ ரிசையாமே. (உ)

அடியவரே முக்குறும்பு மறவெறிந்தா ரெனிலடிகள்
விடுகணைவிற் காமனைமுன் வென்றதுமோர் வியப்பாமே. (ங)

இக்கூற்றின் றிருநாமத் தொருகூற்றுக் கிலக்கென்று
லக்கூற்றங் குமைத்தனையென் றிசைப்பதுமோ ரற்புதமே. (௪)

இவைநான்கும் ஈரடித்தாழிசை.

எனவாங்கு, இது தனிச்சொல்.

உலகுருக் கொண்ட தலைவியு நீயும்
மலைபக வெறிந்த மழவிளங் குழவியை
யமிர்தமூற் றிருக்குங் குமுதவாய்த் தேறல்
வண்டுகி னனைப்ப மடித்தலத் திருத்திக்
கண்களிற் பருகியக் காமரு குழவி
யெழுதாக் கிளவி யின்சுவை பழுத்த
மழலைநா றமிர்தம் வாய்மடுத் துண்ணச்
செஞ்செவி நிறைத்தநும் மஞ்செவிக் கடிகளென்
புன்மொழிக் கடுக்கொளப் புகட்டின
னின்னருள் விழைகுவா யிறும்பூ துடைத்தே. (௧)

இது பத்தடிநேரிசையாசிரியச்சுரிதகம்.

நேரிசைவெண்பா.

உடையா ளகிலேசர்க் கோங்குமுலைக் கோட்டி
னடையாள மிட்டுவையா ளானல் - கடையிலவர்
செவ்வண்ணம் பெற்றார் திரளொடுநிற் கின்றாரை
யெவ்வண்ணங் கண்டிறைஞ்சு வேம். (௨)

தூது - கட்டளைக்கலித்துறை.

இறைவனைக் காகம் பரிந்தளித் தாரகி லேசர்கொன்றை
நறைவளைக் கும்முடி யாரடித் தேகங்கை நன்னதியின்

(௧) ச. இக்கூற்றின் திருநாமத்து - இப்புகழ்ச்சிக் கூறுபாட்டுத் திருநாமங்களுள் என்க. கரும்பினிரத ஊற்றைப்போவினிய ஆயிரந்திருநாமங்களுள் எனவும் ஒன்று. அற்புதமே எனக் கடுப் புகட்டினன் என்பது. (உ) அகிலேசர் - விசுவேசர்.

றுறைவனைக் குங்குரு கிருரு கிரென்று துமொழிகைக்
குறைவனைக் கும்முங்கள் பேரிட்ட தூற்சென்று கூறிடுமே.(ரு)

புயவகுப்பு.

இடமற மிடைதரு கடவுளர் மடவிய
 ரெறிதரு கவரியி ழற்கட் டுயின்றன
வினவனை கொடுமத ணிடுசய விருதென
 விறையவ ளெழுதுசு வட்டுக் கிசைந்தன
விருவரு மிகரென வரிசிலை விசயனொ
 டெதிர்பொரு சமரினி ளைப்புற் றிருந்தன
விணையடி பரவிய மலடிமு னுதவிய
 விடியலி னுணவொரு தட்டைப் பரிந்தன,—

படவர வுமிழ்தரு மணிவெயில் விடவளர்
 பரிதியொ டெழுமுத யத்திற் பொலிந்தன
பருகுமி னமிர்தென வுருகிரு கவிஞர்கள்
 பனுவலின் மதுரவி சைக்குக் குழைந்தன
படரொளி விடுசுடர் வலயம தெனவொரு
 பருவரை நெடுவிலெ டுத்துச் சுமந்தன
பரர்புர மெரியொடு புகையெழ மலர்மகள்
 பணைமுலை தழுவுசு ரத்தைத் துரந்தன,—

மடலவிழ் தடமல ரிதழியி னிழிதரு
 மதுமழை யருவிகு ளித்துக் கிளர்ந்தன
வழிதர வுதிரமு மிணமொடு குடர்களும்
 வருநர கரியின்ம தத்தைத் தடிந்தன
மதகரி யுரியதள் குலகிரி முதுகினின்
 மழைமுகி றவழ்வதெ னப்பொற் பமைந்தன

(ரு) குறை - இன்றியமையாப்பொருள். இது "வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை - தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு." என்னும் திருக்குறளானுமுணர்க. அடிக்கே கூறிடுமென்க.

மலிபுகழ் நிலவொடு மடுதிறல் வெயிலெழ
மதிகதிர் வலம்வரு வெற்பொத்து நின்றன,—
குடவளை துறைதொறு முடுநிரை யெனவிரி
குளிர்நில வெழுவுமிழ் முத்தைத் தடங்கரை
குலவிய படர்சிறை மடவன மொடுசில
குருகுகள் சினையொடு ணைத்துத் துயின்றிடு
குரைபுனல் வரநதி சுரர்தரு முருகவிழ்
கொழுமலர் சிதறவி முத்தத் தவின்டொடு
குலகிரி யுதவிய வளரிள வனமுலை
கொழுநர்த மழகிய கொற்றப் புயங்களே. (ச)

நேரிசைவெண்பா.

புயலார் பொழிற்காசிப் பூங்கோயின் மேய
கயலார் தடங்கணாள் காந்தன்—செயலாவி
யுய்யத் துதியா ருதிப்பார் துதிப்பாரேல்
வையத் துதியார் மறுத்து. (ரு)

கட்டளைக்கலித்துறை.

மறைக்கோலங் கொண்ட வகிலேச ரேயின்று மாதர்முன்னே
பிறைக்கோலங் கொண்டு புறப்பட்ட வாமுன் பிறைமுடித்த
விறைக்கோல மோல மெனத்தேவ ரோல மிடவிருண்ட
கறைக்கோலங் கொண்டநுங் கண்டத் தொளித்த கனல்விடமே.

(ச) அவிமுத்தம் என்பதில் முத்தம் - விடுகை; விமுத்தம் - மிகவும் விடுகை; அவிமுத்தம் - மிகவும் விடவேண்டிய காலத்தும் விடாமை எனப்பொருள்கொள்க. முன்னொரு காலத்திலே விசுவநாதர் திவோதாஸன் காரணமாகக் காசியையகலும்படி நேர்ந்தகாலத்தும், அருவுருவாக வீற்றிருந் தருளினராகலின் இத்தலம் அவிமுத்தமெனப் பெயர்பெற்றது. இதன்விரிவைக் காசிகாண்டத்துட்காண்க. (ரு) தடங்கணாள் - விசாலாக்ஷி.
(சா) கனல்விடம் புறப்பட்டவாறு வியப்பு என்க.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விடுத்த வாளிக்கும் விரகிலாக் கருப்புவில் வீணன்மீ ளவும் வாளாத், தொடுத்த வாளிக்கு மேபகை மூண்டதித் தூயநன் மொழிக்கென்னு, மடுத்த நான்மறை முனிவரர் நால்வர்க்கு மம் மறைப் பொருள்கூற, வெடுத்த கோலமா யானந்த வனத்து மெம் மிதயத்து மிருப்போனே. (எ)

கட்டளைக்கலித்துறை.

இருப்பா ரவிமுத்தத் தெங்கேகண் மூடுவ ரென்றும்வெள் ளிப், பொருப்பாள ரோடித் திரிவதல் லாலிப் புவனங்களை, யுருப்பாதி யிற்படைத் தோர்பாதி யிற்றுடைத் தூழிதொறும், விருப்பா ருயிர்களின் மேல்வைத்துத் தாஞ்செயும் வேலை கண்டே. (அ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்ணொன்று திருநுதலிற் கனலுருவ மாப்படைத்த காசி நாதா, தண்ணொன்று நறையிதழித் தாரென்று ணெட்டுயிர்த்தா டரைமேல் வீழ்ந்தா, ளெண்ணொன்று முணராமே கிடக்கின்று ளிதுகண்டா லெழுத்தொன்றேதத், துண்ணென்று வருவ ரெனத் துணிந்தனளோ வறியேனித் தோகை தானே. (கூ)

நேரிசைவெண்பா.

தோகை யுயிர்முடிப்பான் றும்பைமுடித் தான்மதவேள்
வாகை முடித்திடவும் வல்லனே—யாகெடுவீர்
காமாந் தகர்காசிக் கண்ணுதலார்க் கோதீர்மற்
றேமாந் திராம லெடுத்து. (கo)

கட்டளைக்கலித்துறை.

எடுக்கச் சிவந்த சிலம்படி யாரகி லேசர்நறைக்
கடுக்கைச் சடைமுடி யாரடி யார்க்குக் கலைகள்கொய்து

(எ) பகைமூளல் - கொல்லுதல் காரணமாக விரோதித்தல்.
(கக) அடியார் - ஈண்டுச் சிவசாரூபம் பெறுவார்.

கொடுக்கக் கொடுக்க வளர்கின்ற வாவெறுங் கூட்டிலெரி
மடுக்கக் குறையுயிர் மாதரைத் தேடு மதிக்கொழுந்தே. (௧௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொழுதி வரிவண் டுழுதுழக்குங் குழலீர் நறுங்கட் கோதையிவ
ளழுத விழிநீர் முந்நீரை யுவர்நீ ராக்கு மதுகூறீ
ரெழுத வரிய திருமார்பி லிளஞ்சேய் சிறுசே வடிச்சுவடு [சே.
முழுது முடையாண் முலைச்சுவடு முடையார் காசி முதல்வருக்

நேரிசைவெண்பா.

வரைவளைக்கும் பொற்றடந்தோண் மைந்தர்க் கிவரார்
நிரைவளைக்கை யார்நகைக்கு நேராக்—கரையிற்
குவிமுத்தம் வெண்ணிலவு கொப்பளிக்குங் கங்கை
யவிமுத்தஞ் சென்றிறைஞ்சா தார். (௧௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்க்கும் படைவே ளரசிருப்பென் றஞ்சா தடிக ளருட்காசி, யூர்க்கும் புதுத்தோ ரணமமைத்தா லுமக்கிங் கிவள்பேச்சுரைப்பாரார், வார்க்குங் குமட்பூண் முலைச்சுவட்டை வளையென் றேடி வளைந்துசுற்றிப், பார்க்குந் தொளைமுள் ளெயிற்றரகப் பணியீர் மோகந் தணியீரே. (௧௪)

பிச்சியார். கட்டளைக்கலிப்பா.

தண்ணு லாம்பொழிற் காசித் தெருவினீர்
தரித்தி டுந்தவக் கோலமுஞ் சூலமும்
பெண்ணொ டாடுமப் பிச்சனுக் கொத்தலாற்
பிச்சி யாரெனும் பேர்தரித் தாடுவீர்
வெண்ணி லாமுகிழ்க் குங்குறு மூரலால்
வீணி லேயெம் புரத்தெரி யிட்டநீர்
கண்ணி னாலுமிக் காமனைக் காய்ந்திடிற்
கடவு ளீரென் றிறைஞ்சுதுங் காணுமே. (௧௫)

இதுவுமது.

காணுங் காணு நதிகளெல் லாம்புனற்
 கங்கை யேயங் குளதெய்வம் யாவையுந்
தாணு வெங்க ளகிலேச ரேமற்றைத்
 தலங்கள் யாவுந் தடமதிற் காசியே
பூணு மாசைமற் றொன்றே யுடல்விடும்
 போது நன்மணி கர்ணிகைப் பூந்துறை
பேணு மாறு பெறவேண்டு மப்புறம்
 பேயொ டாடினு மாடிப் பெறுதுமே. (கசு)

இதுவுமது.

பெற்ற மூர்வதும் வெண்டலை யோட்டினிற்
 பிச்சை யேற்றுத் திரிவதும் பேய்களே
சுற்ற மாகச் சுடலையில் வாழ்வதுந்
 தோலு டுப்பதுந் தொண்டர்க் கரிதன்றால்
கற்றை வார்சடைக் காசிப் பதியுளீர்
 கற்பந் தோறுங் கடைநா ளுலகெலாஞ்
செற்று மீளப்ப டைக்கவும் வேண்டுமே
 தேவ ரீர்பதஞ் சிந்திப்ப தில்லையே. (கஎ)

நேரிசைவெண்பா.

இல்லாளே முப்பத் திரண்டறமுஞ் செய்திருப்பச்
செல்லார் பொழிற்காசிச் செல்வனார் - மெல்லப்
பரக்கின்ற புண்ணீர்ப் படுதலைகொண் டைய
மிரக்கின்ற வாறென்சொல் கேன். (கஅ)

(கஅ) இல்லாளே முப்பத்திரண்டறமுஞ்செய்திருப்பச் செல்வனார் இரக்கின்றவாறு வியப்பு என்றபடி. இல்லாள் - மனையவள்; வறியவள். பரத்தல் - பரம்புதல்.

கோச்சகக்கலிப்பா.

சொல்லா வதுமறையே சொல்லுவது நல்லறமே
யில்லா வதுமுத்திக் கேதுவா மித்தலமே
யல்லார் குழலளவு மாகொன் மனம்வயிரக்
கல்லா யிருந்தவா காசிப் பிரானூர்க்கே. (௧௯)

கட்டளைக்கலித்துறை.

பிரானென் றவர்க்கொரு பெண்ணொடு மோடிப் பெருங்கருணை
தராநின்ற காசித் தடம்பதி யார்வந்தென் றன்னகத்தே
யிராநின் றனரைம் புலக்கள்வர் கொள்ளையிட் டேகுதற்கே
வராநின்ற போதுள்ள மாதனங் காத்து வழங்குதற்கே. (௨0)

கோற்றியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வழுத்துமவர்க் கானந்த வாழ்வையருள் வார்காசி வளமை யெல்லாங், கொழுத்ததமி ழாற்பாடித் துளசிமணி தரித்தாடுங் கொற்றி யாரோ, பழுத்ததவக் கோலமுங்கைச் சங்கமுமா ழியுங் கண்டு பணிந்தே மாசின், முழுத்தவத் தால்யாமு மாலாயி னேங்கூடி முயங்கு வீரே. (௨௧)

கட்டளைக்கலித்துறை.

முயலாம லேதவ முத்தித் திருவை முயங்கநல்குங்
கயலார் பெருந்தடங் கண்ணிபங் காரருட் காசியிலே
செயலாவ தொன்றிலை வாளா நெடுந்துயில் செய்யுமுங்கள்
பயலாக வேபணி செய்வார் புவனம் படைப்பவரே. (௨௨)

ஊர். கட்டளைக்கலிப்பா.

படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினு

---

(௨0) உள்ளமாதனம் - நிலைபெற்றபெருந்தனம்; உள்ளமாகிய மிக்கதனம் என்க. (௨௨) பயல் - பையல்.

மடுத்த திங்கிவர்க் கேபெரு வாழ்வெனு
மப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிங் கிரதிரு வும்புவி
வெண்கு டைக்கு ளிடுமர சாட்சியுங்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவார்
காத லித்து வருந்திருக் காசியே. (உரு)

கட்டளைக்கலித்துறை.

திருக்கோலங் கொண்டநற் றேன்மொழி யாளெண் டிசை
யினுநின், னுருக்கோல மேகண்டுங் கண்டிலள் போலு மொழு
குநறை, மருக்கோல நீலக் குழல்சே ரவிமுத்த வாணதொல்லே,
யிருக்கோல மிட்டுணை ராயெங்கு மாகி யிருப்பதுவே. (உச)

இருகுங் குமக்குன்று பீர்பூப்பக் காம வெரியினினின் [டுத்துச்
றுருகும் பசும்பொன்னுக் கோர்மாற்றுண் டேயுரை யாய்தொ
செருகு நறுங்கொன்றை தேன்பிழிந் தூற்றச் சிறைச்சுரும்பர்
பருகும் பொலஞ்சடை யாய்காசி வாழ்முக்கட் பண்ணவனே.()

விருத்தக்கலித்துறை.

பண்ணேர் வேதம் பாடிய காசிப் பதியாயிப்
பெண்ணே ரொருவ னெய்கணை யைந்தும் பெய்தானு
னுண்ணேர் நின்று யின்னெரு ளாலென் னுயிரன்னாள்
கண்ணேர் நிற்றற் கொல்கி யொழிந்த கழுநீரே. (உசு)

கட்டளைக்கலித்துறை.

கழியுந் தலைக்கலன் பூண்டாடுங் காசிக் கடவுணுதல்
விழியு மிடக்கண்ணும் வெண்ணெருப் பேயவ் விழியிரண்டிற்
பொழியுங் கனல்விழி காமனைக் காய்ந்தவப் போரிலுடைந்
தொழியும் படைகளென் றேவெமைக் காயுமற் றோர்விழியே.

(உரு) குங்குமம் பீர் பொன் மாற்று உரையாய் என்பன சிலே
டை. (உசு) உள் நேர் நின்றாய்-உள்ளத்திலே நேர்ந்துநின்றாய்.
(உஎ) தழலுக்கு நிறம் வெண்மையென்பர் தார்க்கிகர்.

௩௨௭. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விழைகுவ தன்பர கஞ்சுகமே வெங்கரி யின்னுரி கஞ்சுகமே, தொழிலடி கட்குள மாலயமே தூமுனி வோருள மாலயமே, யழகம ரும்பணி யென்பணியே யாட்கொள மேற்கொள்வதென்பணியே, மழகளி றீன்ற வளம்பதியே வாழ்வது காசி வளம்பதியே. (உ௮)

௩௨௭. கட்டளைக்கலிப்பா.

வண்ண மேனி யரும்பு வனங்களே
வாசம் வாச மரும்பு வனங்களே
நண்ணு மாலய மாதவ ரங்கமே
ஞால மேழ்தரு மாதவ ரங்கமே
தண்ணென் மாலை தருமருக் கொன்றையே
தருவ தையர் தருமருக் கொன்றையே
கண்ணி னிற்பர் மனத்திருக் கோயிலே
காசி யேயவர்க் கோர்திருக் கோயிலே. (உ௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருகுசினக் கூற்றினெயிற் றிடைக்கிடந்துங் கடைநாளிற் றிரையே யொன்றுய்ப், பெருகுமுழு நீத்தத்திற் றிளைத்தாடப் புணைதேடும் பேதை நெஞ்சே, யுருகிலைநெக் குடைந்திலையொண் டானந்த வனத்தேனை யோடி யோடிப், பருகிலைகண் ணரும்பிலைமெய் பொடித்திலைமற் றுனக்கென்ன பாவந் தானே. ()

நேரிசைவெண்பா.

பாவலரு நாவலரும் பண்மலரக் கண்மலருங்
காவலரு மேடவிழ்க்குங் காசியே - தீவளருங்

(௩௧) பாக்கள்விரிந்த நாவினையுடைய வித்துவான்களும் (வண்டுகளின்) இசைகள்பரம்பத்தேன்விரிந்துள்ள காக்களிற்றங்கியமலர்களும் ஏடவிழ்க்குங்காசியென்புழி வித்துவான்களுக்குத் திருமுறையேடும் மலர்களுக்கு இதழுங்கொள்க.

கஞ்சக் கரத்தான் கலைமறைக்கு நாயகமா
மஞ்சக் கரத்தா னகம். (௩௧)

இதுவுமது.

அகமே யவிமுத்த மையரிவர்க் காகஞ்
சகமேழு மீன்றெடுத்த தாயே - மிகமேவு
மெண்ணம் பரமே யெமக்களித்தன் முச்சுடருங்
கண்ணம் பரமே கலை. (௩௨)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

கலைமதியின் கீற்றணிந்த காசியகி லேசர்
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்கா ணம்மானை
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனரே யாமாகின்
மலைமகட்குப் பாகம் வழங்குவதே னம்மானை
வழங்காரோ வப்பாலு மாலானு லம்மானை. (௩௩)

கட்டளைக்கலித்துறை.

அம்மனை தம்மனை யாத்திருக் கோயி லவிமுத்தமா
வெம்மனை யாய்த்தந்தை யாயிருந் தாரடிக் கிழிறைஞ்சீர்
நம்மனை மக்களென் றேக்கறுப் பீருங்க ளுளலந்தாற்
சொம்மனை வைத்தெப் படிநடப் பீர்யமன் றூதரொடே. (௩௪)

கட்டளைக்கலிப்பா.

தூது கொண்டுந் தமைத்தோ ழமைகொண்ட
தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக்
காது கொண்டெங் கவிதைகொண் டாட்கொண்ட
காசி நாதர் கருத்தே தறிகிலேம்

---

(௩௨) எண்ணம் எமக்குப் பரமளித்தலே என்க. எண்ணம் - கருத்து. பரம் - முத்தி. (௩௩) மால் - திருமால்; வேட்கை. (௩௪) சொம் - சொத்து.

போது கொண்டொரு பச்சிலை கொண்டுதாம்
பூசை செய்திலர் புண்டரி கப்பத
மேது கொண்டு கொடுப்பர் கொடுப்பரே
லிருவ ருக்குமற் றென்படு நெஞ்சமே. (கூரு)

சித்து. நேரிசைவெண்பா.

ஏடவிழ்பொற் கொன்றையணி லேசரன்பர்க் கேயிருப்பை
யாடகமாக் கிக்கொடுத்தோ மவ்வளவோ—நீடுதிறல்
காட்டுமிமை யோர்க்கிருப்புக் கற்கனக மாக்கியண்ட
வோட்டினையும் பொன்னாக்கி னோம். (கூகூ)

நேரிசையாசிரியப்பா.

பொன்னுருக் கன்ன பூந்துணர்க் கொன்றையும்
வெள்ளிமுளை யன்ன விரிநிலாக் கொழுந்துங்
காந்தண் மலர்ந் தன்ன பாந்தளி னிரையுந்
திரைசுழித் தெறியும் பொருபுனற் கங்கையில்
வெள்ளிதழ்க் கமலம் வள்ளவாய் விரித்தென
முழுநகை முகிழ்க்குங் கழிமுடை வெண்டலை
தோலடிச் செங்காற் பால்புரை வரிச்சிறைக்
கிஞ்சுக மலர்ந்த செஞ்சூட் டெகினத்
துருவெடுத் தகல்வான் றுருவியுங் காணாத்
தொன்மறைக் கிழவ சென்னிமற் றியானே
கண்டுகொண் டனனிக் கடவுண்மா முடியெனப்
பெருமகிழ் சிறப்பக் குரவையிட் டார்த்து
வெள்ளெயி றிலங்க விரைவிற் சிரித்தெனப்
பெருவியப் பிழைக்கு மெரிபுரை சடையோ

---

(௬௬) இருப்புக்கல் - இருப்பாகியகல்; இரும்பாகியமலை.

(௬௭) ௬ - வெண்டலை பெருவியப்பிழைக்குமென இயையும்.

௧0 - சென்னிமற்றியானே - தலையாகியயானே.

யாள்வழக் கறுக்கும் வாளமர்த் தடங்கண்
மின்னிழை மருங்குற் சின்மொழி மகளி
ரொழுகொளி மிடற்றி னழகுகவர்ந் துண்டெனக்
கயிறுகொண் டார்க்குங் காட்சித் தென்ன
மரகதங் காய்த்துப் பவளம் பழுக்குங்
கமஞ்சூற் கமுகின் கழுத்திற யாத்து
வீசொளிப் பசும்பொ னூசலாட் டயர்தரப்
பருமணிக் கமுகின் பசுங்கழுத் துடைந்து
திரைபடு குருதித் திரடெறித் தென்ன
முழுக்குலை முரிந்து பழுக்காய் சிதறு
மங்குல்கண் படுக்கு மதுமலர்ப் பொதும்பர்
கங்கைசூழ் கிடந்த காசி வாண
வைவளி பித்தெனு மவைதலை யெடுப்ப
மெய்விட் டைவருங் கைவிடு மேல்வையின்
மாமுத றடிந்த காமரு குழவியும்
பொழிமதங் கரையு மழவிளங் களிறு
மூண்டெழு மானம் பூண்டழுக் கறுப்ப
விடக்கையி னணைத்துநின் மடித்தலத் திருத்தி
யுலகமோ ரேழும் பலமுறை பயந்து
முதிரா விளமுலை முற்றிழை மடந்தை
யொண்டொடித் தடக்கையின் வீசு நுண்டுகிற்
றோகையிற் பிறந்த நாகிளந் தென்றன்
மோகமுந் தளர்ச்சியுந் தாகமுந் தணிப்ப
மறைமுதற் பொருளி னிறைசுவை யமுதினை
யஞ்செவி மடுத்துண வூட்டிநின்
குஞ்சித வடிக்கீழ்க் குடியிருத் துகவே. (௩௭)

(௩௭) ௧௫-வழக்கறுத்தல்-சஞ்சரித்தலை யகற்றல். (௧௭) உண்டென உண்டனவென. (௨௮) ஏல்வையில் அழுக்கறுப்ப இருத்தி ஊட்டி இருத்துக எனமுடிக்க. (௩௦) கரைதல் - ஒலித்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடியிருக்கும் புன்குரம்பை குலைந்திடுநாட் கொலைக்கூற்றங் குமைத்த செம்பொ, னடியிருக்கும் பரந்தாமப் புக்கில்புகுந் தானந்த வமுத மாந்திக், கடியிருக்கு நறைக்குழன்முத்தித்திருவை முயங்கிடவுங் கடவேன் கொல்லோ, துடியிருக்குமிடையவளோ டவிமுத்தத் திருந்தபரஞ் சோதி யானே. ()

களி - தாழிசை.

சோதியொன்றிலொரு பாதிசத்தியொரு பாதியும்பரமசிவமெனத், தொகுத்துவைத்தவவி முத்தநாயகர் துணைப்பதம்பரவு களியரே, மோதியோதியுமி ளைப்பர்வேதம துணர்த்துதத்துவமு முணர்கிலா, ருணரும்வண்ணமநு பவத்தில்வந்திடுமோ ருண்மைவாசகமு ணர்த்துகே, மேதினுலற மனைத்தினும்பசுவி னைப்படுத்தனல்வ ளர்த்திடும், யாகமேயதிக மென்பதன்பர்த மிறைச்சிமிச்சிலதி லிச்சையா, ராதியாரறிவ ரதுகிடக்கமது வருந்திலப்பொழுதி லேபெறற், கரியதோர்பரம சுகம்விளைந்திடுவ ததுமறுத்தவவை யில்லையே. (௩௬)

கட்டளைக்கலித்துறை.

இல்வாழ்வை விட்டுக் கதிவேட் டடைபவர்க் கேழைபங்க
னல்வாழ்வை யேதருங் காசிப் பிரானறும் பூங்கடுக்கை
வல்வார் முலைக்கொம்ப னுய்தந்தை தாண்மழு வாலெறிந்து
கொல்வா ரொருவருக் கல்லா தெவர்க்குங் கொளற்கரிதே. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளையிடச் சிலர்க்குமுத்திச் சரக்கறையைத் திறந்துகொடுத் தனந்த கோடி, பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்கிழத்திக் கேகுடும்பம் பேணு கென்னு, வுள்ளபடி யிருநாழி

(௩௬) இத்தகைய செய்யுள்களையும் ஆசிரியவிருத்தமென வழங்குதலும் உண்டு. (௪௧) இருநாழி ஈண்டு இருநாழிநெல்.

கொடுத்ததிலென் ஞன்கறமு மோய்பு கென்று, ரள்ளல்வள வயற்காசி யாண்டகையார் பெருந்தகைமை யழகி தாமே. ()

துறம். மேற்படிவேறு.

அழகு துயில்குங் குமக்கொங்கை யணங்கே யெங்க ளருட் காசிக், குழகர் மகற்கு மகட்கொடுத்த குடியிற் பிறந்த குற மகள்யா, னெழுது தொடிக்கைக் குறியுமுகக் குறியுந் தருமொள் வளைக்குறியும், புழுகு முழுகு முலைக்குறியு முடையா ரவர் பொற் புயந்தானே. (சஉ)

கட்டளைக்கலித்துறை.

புயல்வண்ணக் கண்ணற் கோளித்தவக் கள்வன் புணர்ப் பையெண்ணுள், கயல்வண்ணக் கண்ணிதன் கண்ணினுட் புக்கது கண்டிருந்துஞ், செயல்வண்ணங் கண்டிலள் வாளாப் புறத்தெங் குந் தேடுகின்றுள், வயல்வண்ணப் பண்ணை யவிழுத்தத் தானை மனத்துள்வைத்தே. (சங)

மறம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வையமுழு தொருங்கின்ற விடப்பாக ரானந்த வனத்தில் வாழும், வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை வேட்டரசன் விடுத்த தூதா, கையிலவன் றிருமுகமோ காட்டிருகண் டொட் டுமுட்டைக் கதையிற் றுக்கிச், செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோ நாசியொடு செவியுந் தானே. (சச)

மேற்படி வேறு.

தாக்கு படைவேள் கணைமழைக்குத் தரியா திருகண் மழையருவி, தேக்கு மிவட்கா னந்தவனத் திருந்தா ருள்ளங் திருந்தார்கொல், காக்க வரிய விளவாடைக் காற்றுக் குடைந்து கரந்துவச்சை, மாக்க ளெனவே முடவலவன் வளையா யடைக்கு மழைநாளே. (சரு)

(சச) முட்டு - பிணிப்புக்களாயுள்ள எலும்புகளின் திரட்சி.
(சரு) வச்சைமாக்கள் - உலோபிகள்.

தழை. கட்டளைக்கலித்துறை.

மழைவளைக் கும்பொழிற் காசிப் பிரான்வெற்பில் வண் டறைபூந், தழைவளைக் கைக்கொடுத் தேன்கண்ணி லொற்றித் தளரிடைதன், னிழைவளைக் குங்கொங்கை யூடணைத் தாளித் தழையினுள்ளே, கழைவளைக் குஞ்சிலை வேளனை யாயுளங் கண் டுகொள்ளே. (சசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந் திருக்கரமுங் கலந்தோர் பேதைப், பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக் கு மவுலியுமாய்ப் பிரிக்க லாகா, வெண்ணிருக்குங் கணத்தொ டுமா னந்தவனத் திருப்பாரை யெங்கே காண்பார், பண்ணிரு க்கு மறைகளுமென் கண்ணனுங்கண் ணனுமமரர் பலருந் தாமே. (சஎ)

கட்டளைக்கலித்துறை.

பல்லாண்டு தம்மைப் படைத்தவத் தேவரைப் பார்த்துப் பைம்பொன், வில்லாண்ட தோள்கொட்டி யெந்தையர் கோல விடம்பழுத்த, வல்லாண்ட கண்டத்தெம் மாதிப் பிரானவி முத் தத்திலே, சில்லாண் டிருந்து சிவமாய்ச் செலுஞ்சிறு செந்துக் களே. (சஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்தே னொழுகும் பொழிற்காசிச் சிறுநுண் ணுசுப்பிற் பெருந்தடங்கட், பைந்தே னொழுகு மிடப்பாகர் படைவீ டெ ன்ப துணராய்கொல், வந்தேன் வளைந்தா யெமைப்பாவி மதனு வினையே விளைந்தபோ, ருய்ந்தே குவதிங் கரிதனற்க ணுடை யார் மழுவாட் படையாரே. (சகூ)

(சகூ) மதனு என்வந்துவளைந்தாய் உனதுதிவினையே போ ராகவிளைந்தன எமதுதலைவர் அனற்கண்ணும் மழுப்படையுமு டையார் இப்போரில் உயிர்பிழைத்து நீசெல்வதரிது என்பது.

மதங்கியார். மேற்படிவேறு.

படலைநறுங் கடுக்கைமுடிப் பரஞ்சுடரா ரிசைபாடிப் பசுந்தேன் பில்கி, மடலவிழ்பூம் பொழிற்காசி மணிமறுகில் விளையாடு மதங்கி யாரே, யுடலுமெமக் குயிருமொன்றே யோடரிக்கண் வாளிரண்டு மொழிய வென்னே, தொடலைவளைத் தடக்கையின்வா ளிரண்டெடுத்து வீசிடநீர் தொடங்கு மாறே. (ருo)

ஊசல். கலித்தாழிசை.

தொடங்காமே பணியலருந் தூவாமே நல்குங்
கடங்கால் களிற்றுரியார் காசிவளம் பாடி
விடங்கான் றகன்றுகுழை மேற்போய்க் குடங்கைக்
கடங்காத வுண்கணீ ராடுகபொன் னூச
லம்பொன்மலர்க் கொம்பன்னீ ராடுகபொன் னூசல். (ருக)

நேரிசைவெண்பா.

பொன்னந்தா தென்னமலர்ப் பூந்துறையிற் புண்டரிகத்
தன்னந்தா தாடு மவிமுத்த - ரின்னமிர்தா
முன்னங் கடுக்கை முகந்துண்டார் நல்காரே
யின்னங் கடுக்கை யிவட்கு. (ருஉ)

தவம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குன்றிரண்டு சுமந்தொசியுங் கொடியன்னீ ரவிமுத்தங் குடிகொண் டாக, மொன்றிரண்டு வடிவானார் திரள்புயத்து மார்பகத்து மிழ்தேன் பில்கி, மின்றிரண்ட தெனப்புரளும் பொலங்கடுக்கைத் தாமத்தின் விரைத்தா தாடிப், பொன்றிரண்ட தெனவிருக்கும் பொறிவண்டு செய்தவமென் புகலு வீரே. ()

(ருo) தொடலைவளை - மாலைபோலும் அணிபெற்றவளை; அல்லது, தொடுத்தலையுடையவளை. (ருஉ) பொன்னந்தாது - பொற்றுகள். (ருரு) வண்டுசெய்ததவம் இன்னதெனப்புலப்படுத்தின் யானும் அத்தவம்புரிந்து அக்கொன்றைமாலை தினைக்கப்பெறுவேனென்பது கருத்து.

கொச்சகக்கலிப்பா.

புகுமே மதிக்கொழுந்தும் புன்மாலைப் போது
நகுமே கிளையு நகைத்தா னமக்கென்னே
யுகுமே யுயிர்காசி யுத்தமரைக் காணத்
தகுமேயப் போதிதழித் தாரும் பெறலாமே. (௫௪)

இதுவுமது.

ஆமோ வவிமுத்தத் தையரே பெண்பழிவீண்
போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ
தேமோது கொன்றைச் செழுந்தாம நல்காநீர்
தாமோ தருவீ ருமதுபரந் தாமமே. (௫௫)

விருத்தக்கலித்துறை.

பரந்தா மத்தைப் பல்லுயிர் கட்கும் பாலிப்பார்
வரந்தா மத்தைப் பின்றரு வதைமுன் வழங்காரேற்
புரந்தா மத்தைப் பொருதரு காசிப் புரமானர்க்
கிரந்தா மத்தை யெனப்புக லீரேங் கிழையீரே. (௫௬)

பாண். நேரிசையாசிரியப்பா.

இழுமென் மழலை யின்னமு துறைப்பப்
பிழிதே னொழுக்கி னொழுகுமின் னரம்பின்
வள்ளுகிர் வடிம்பின் வரன்முறை வருடித்
தெள்விளி யெடுக்குஞ் சிறியயாழ்ப் பாண
வாழிய கேண்மதி மாற்றமொன் றியானு
மேழிசைப் பாணன்மற் றிறைமக னலனே
பலவுடன் பழிச்சுவ தொழிகமற் றம்ம
சிலபகல் யானுநின் னிலைமைய னாகி
நலம்பா டறியா விலம்பா டலைப்ப

(௫௫) சாதனம் - ஈண்டு பெண்கொலை அவமிருத்தியுமுத லியன கலவாத ஆஞ்ஞை.

நீர்வாய்ச் சிதலையு நூல்வாய்ச் சிலம்பியுஞ்
சிலவிட மேய்ந்த சிறுபுன் குரம்பையின்
மசகமு முலங்கும் வாய்ப்படைக் குடவனும்
பசையில் யாக்கைத் தசைகறித் துண்ண
வரும்பசிக் குணங்கியும் பெரும்பிணிக் குடைந்துஞ்
சாம்பல்கண் டறியா வாம்பி பூத்த
வெலிதுயி லடுப்பிற் றலைமடுத் தொதுங்கிச்
சிறுசிறு ரலறப் பெருமனைக் கிழத்தி
குடங்கையிற் றுங்கிய கொடிற்றினள் குடங்கைக்
கடங்கா வுண்க ணுறலைத் தொழுக
வழுகுரல் செவிசுட விழுமநோய் மிக்குக்
களைகண் காணு தலமரு மேல்வையிற்
கடவு ணல்லூழ் பிடர்பிடித் துந்தக்
குரைபுனற் கங்கைக் கரைவழிச் சென்ருங்குத்
தேம்பழுத் தழிந்த பூம்பொழிற் படப்பையிற்
கடவுட் கற்பகக் கொடிபடர்ந் தேறி
வான்றெடு கமுகின் மடற்றலை விரிந்து
நான்றன திசைதொறு நறுநிழற் கதலித்
தேங்கனி பழுத்த பூங்குலை வளைப்ப
வம்மலர்க் கொடியிற் செம்முக மந்தி
முடவுப் பலவின் முட்புறக் கனியைப்
புன்றலை சுமந்து சென்றிடுங் காட்சி
குடமிசைக் கொண்டொரு கூன்மிடை கிழவ
னெடுநிலைக் கம்பத்தின் வடமிசை நடந்தென
விறும்பூது பயக்கு நறும்பணை மருதக்
கன்னிமதி லுடுத்த காசிமா நகரம்
பெருவளஞ் சுரக்க வரசுவீற் றிருக்கு

---

(௫௭) ௧௨ - மசகம் - கொதுகு. உலங்கு - கொதுகினோர் பேதம். குடவன் - குடவுண்ணி. ௨௩ - சென்றுபாடலும் என்க.

மழுவல னுயர்த்த வடூனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி யின்னிசை பாடலு
மங்கிலக் கண்ணே யமல்விசும் பொரீஇச்
சுரபியுந் தருவும் பெருவளஞ் சுரப்ப
விருமையும் பெற்றனன் யானே நீயுமத்
திருநகர் வளமை பாடி யிருநிலத்
திருநிதிக் கிழவனைக் கறுப்பத்
திருவொடும் பொலிக பெருமகிழ் சிறந்தே. (௫௭)

வண்டுவிடுதூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறைவிரிக்கு மதுகரங்கா டேம்பிழிபூம் பொழிற்காசித் திருநா டாளு, மறைவிரிக்குஞ் சிலம்படியார் திரள்புயத்துப் புரளுநறு மலர்ப்பூங் கொன்றை, நறைவிரிக்கு மிதழ்க்கரத்தா லூட்டுமது விருந்துண்டு நயந்து மற்றென், குறைவிரித்தோ ரிருவரிசை கூட்டுண்ணுந் திருச்செவிக்கே கூறு வீரே. (௫௮)

கட்டளைக்கலித்துறை.

கூற்றடிக் கஞ்சிக் குலையுநெஞ் சேயஞ்சல் கோச்செழியன்
மாற்றடிக் கஞ்சு மிடப்பா கனைமள்ளர் கொன்றகருஞ்
சேற்றடிக் கஞ்ச மலர்வயற் காசிச் சிவக்கொழுந்தைப்
போற்றடிக் கஞ்சலி செய்பற்று வேறு புகலில்லையே. (௫௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இலைமுகங் குழைத்த பைம்பூ ணேந்திள முலையோ டாடு
மலைமுகங் குழைத்த காசி வரதர்கண் டிலர்கொன் மாரன்
சிலைமுகக் கணைக்கெம் மாவி செகுத்துண வருத்தத் திங்கட்
கலைமுகம் போழ்ந்த காயங் களங்கமாய் விளங்கு மாறே. ()

(௬௦) கணைக்கு எமதாவியை உணவாக அருத்துதற்பொருட்டுக் கலைமதிபோலும் எமதுமுகத்தைப்பிளந்தகாயம் அம்மதிக் களங்கம்போன்று விளங்குமாறு வரதர்கண்டிலர்கொல். எ-று

கட்டளைக்கலித்துறை.

விளங்கனி யொன்றெறி வெள்விடை யோடும் விழிக்கணுழைந்
துளங்கனி யப்புகுந் தாய்விர காலைத் துற்றதென்னும்
வளங்கனி பண்ணை வயல்சூ ழவிமுத்த வாணநறுங்
களங்கனி யென்றுமை கைக்கிளி பார்க்குங் கறைக்கண்டனே.()

தாழிசை.

கண்டமட்டு மிருண்டுபோதி பசந்துபாதி சிவந்துளார், காசி நாதர் கரத்துவைத்த கபாலமொன்றல தில்லையா, — லுண்டு கோடியின் மேலுமையர் பதம்பெறக்கட வாரவர்க், கொவ்வொ ருத்தர் கரத்திலொவ்வொர் கபாலம்வேண்டு மதற்கெலாம், — பண்டிருந்த விரிஞ்சன்மார்தலை மாலையுஞ்செல வாய்விடிற், பாரமென்றலை மேல்வருங்கொ லெனுங்கவற்சியி னூற்பசுங், — கொண்டல்வண்ணர் துயிலவுர்துயி லார்பிதாமக னாரெனுங், கொள்கைகண்டும் விழைந்தவாவவர் பதஞ்சமீரகு மாரனே. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கும்ப மிரண்டு சுமந்தொசியுங் கொடிநுண் மருங்கு லிறு மிறுமென், றம்பொற் பசுங்கொம் பன்னை யாகத் தணைத்த வகிலேசர், செம்பொ னிதழித் தெரியலையே சிந்தித் திருப்பத் திரண்முலையும், பைம்பொ னுருவும் பீர்பூத்த பவளச் செவ் வாய்ப் பசுங்கிளிக்கே. (கூங)

(கூக) உள்ளத்திற்புகுந்த தேவரீர் ஆங்குமூண்டுள்ள காமாக் கினியைத் தணியாது அத்துடன்வசிப்பது நும்பெருமைக்கு யாதாம். எ-று. இது பிரிந்துபோந்து மீண்டெய்திய தலைவன் பால் தோழி தன்றலைவியினது பிரிவாற்றுமையும் அவள் தலை வனைக் கண்ணிற்பிணித்து மனத்திற்கொடுபுக்குப் பேணும்வகை யும் விளக்கியபடி. (கூஉ) பிதாமகனுர் கவற்சியினற் றுயிலாரெ னுங் கொள்கைகண்டும் அவர்பதஞ் சமீரகுமாரன் விழைந்தவா று வியப்பென்பது. சமீரகுமாரன் - வாயுபுதல்வனுகிய அனுமன்.

கட்டளைக்கலித்துறை.

கிள்ளைக் கமிர்த மொழிசாற் றிடுங்கிஞ் சுகவிதழ்ப்பெண்,
பிள்ளைக் கிடந்தந்த காசிப் பிரான்பிறை யோடுமுடிக், கொள்
ளைச் சிறைவண்டு கூட்டுணுங் கொன்றையுங் கூடவைத்தார்,
வள்ளக் கலச முலைக்கங்கை யாளுயிர் வாழ்வதற்கே. (௬௪)

கலிவிருத்தம்.

வாட்ட டங்கண் மழைப்புனன் மூழ்கியே
சேட்டி ளங்கொங்கை செய்தவ மோர்கிலார்
தோட்டி னங்கொன்றை சூடிப்பொ னம்பலத்
தாட்டு வந்த வவிமுத்த வாணரே. (௬௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நரைமு திர்ந்தன கண்கள்பஞ் சார்ந்தன நமன்றமர் வழிக்கொண்டார், திரைமு திர்ந்துட றிரங்கின திரங்கலை செயலிது மடநெஞ்சே, யுரைமு திர்ந்தவர் குழாத்தொடு மடைதியா லொழுகொளி முடிக்கங்கைக், கரைமு திர்ந்திடாக் கலைமதி முடித்தவர் காசிநன் னகர்தானே. (௬௬)

வஞ்சித்துறை.

நகர மாய்மறைச், சிகர மானதா,
லகர மாயினு, னிகரில் காசியே. (௬௭)

---

(௬௬) நெஞ்சே உடல்திரைந்தது இரங்கலை காசிநகரடைதி இனிச்செயற்பாலது இதுவே என்பது. (௬௭) அகரவெழுத்தைப்போல இலங்கும்பிரானது நிகரில்லாதகாசியானது நகர்போலுந் தோற்றமுடையதாய் வேதசிரசென விளங்காநின்றது எ - று. வேதசிரசென்றுவமித்தது என்றும் அப்பிரான் அகலாதமர்வது நோக்கி. மகரமாயினுனென்னும் பாடங்கொள்ளின் மாய்த்தானென்னும் பிறவினை மாயினுனெனத் தன்வினைபோன்றுநின்றது என்க. மகரம் - ஆணவமலம்.

கட்டளைக்கலித்துறை.

இல்லொன் றெனவென் னிதயம்புக் காய்மத னெய்கணைகள்
வல்லொன்று பூண்முலை மார்பகம் போழ்வன மற்றென்செய்கே
னல்லொன்று கூர்த லணங்கர சோடுமொ ராடகப்பொன்
வில்லொன்று கொண்டவி முத்தத்தி லேநின்ற விண்ணவனே.()

நைக்கிளை மருட்பா.

விண்ணமிர்து நஞ்சாம் விடமு மமிர்தமா
முண்ணமிர்த நஞ்சோ டுதவலாற்—றண்ணென்
கடலொடு பிறந்தன போலுந் தடமலர்
கடிநகர்க் காசியுண் மேவு
மடலவிழ் கோதை மதர்நெடுங் கண்ணே. (௬௬)

வஞ்சிவிருத்தம்.

கண்ணொ டாவி கருத்துமா, யுண்ணி றைந்ததொ ரெண்பொரு, ணண்ணு மாநக ரானதா, லண்ண லாரவி முத்தமே. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூத்தாடி மடித்தலத்தோ ரிளஞ்சேயை யுலகீன்ற முதல்வியோடும், வைத்தாடு வீர்பொதுவி னின்றாடு முமக்கிந்த வாரமென்னே, கொத்தாடு சடையொடுமா னந்தவனத் தேகுறுந்தாணெடும்பூ தத்தோ, டொத்தாடு வீரடிகட் கெல்லோமும் பிள்ளைகளென் றுணர்ந்தி டீரே. (எக)

சம்பிரதம். பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உண்டகில கோடியு முமிழ்ந்திடுவன் முகிலேழு மொக்கப்பிழிந்துகடலே, ழுடன்வாய் மடுத்திடுவன் வடமேரு மூலத்

---

(௬௬) விண்ணமிர்தும் நஞ்சாம் உண்ணமிர்தை விடமுமமிர்தமாம் நஞ்சோடு உதவுதலால் கண்கள் இவ்விரண்டுமெளித்த பாற்கடலொடு பிறந்தனபோலும் என்க. காதலைவெளிப்படுத்தும் சிறப்புநோக்கு இன்பஞ்செய்தலின் அமுதென்றும், அஃதின்றிய பொதுநோக்கு துன்பஞ்செய்தலின் நஞ்சென்றும் கூறியவாறு. தடம் மலர்காசி - தடாகங்கள் தாமரைமலருங்காசி.

தொடும்பிடுங் கிச்சுழற்றி,—யண்டபகி ரண்டமு மடித்துடைப் பன்புவன மவையேழு பிலமேழுமா, யடைவடை வடுக்கிய வடுக்கைக் குலைப்பனிவை யத்தனையும் வித்தையலவாங்,—கொண்டன்மணி வண்ணனும் முண்டகக் கண்ணனுங் குஞ்சிதச் செஞ்சரணமுங், குடிலகோடீரமுந் தேடியத லமுமண்டகோளமுந் துருவியோடப்,—பண்டைமறை யோலமிட வெளியினட மாடும் பரஞ்சுடர் பொலிந்தகாசிப், பதியிலடை யாமலிப் பல்லுயிர்த் தொகுதியும் பரமபத மடைவிப்பனே. (எஉ)

தூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரைகுழைக்கு மழைமுகில்காள் விண்டலர்தண் டுழாய்ப்படலை விடலை யென்ன, வரைகுழைக்கும் பொழிற்காசியணிநகருக் கேகுதிரே லறன்மென் கூந்தல், வரைகுழைக்கு முலைகுழைப்பக் குழைதிரடோ ளழகின்முடி வணங்கி யென்னக், கரைகுழைக்கு மலைகுழைத்த கண்ணுதற்கென் பேதை திறங் கழறு வீரே. (எ௩)

கட்டளைக்கலித்துறை.

கழைக்கரும் பைக்குழைத் தான்மத வேளக் கணத்திலம்பொற்
குழைக்கரும் புங்குழைந் திட்டதந் தோகுளிர் தூங்குதுளி
மழைக்கரும் பும்பொழிற் காசிப் பிரான்மலை யாண்முலைபோழ்
துழைக்கரும் புற்றர வாடகின் றுடிய முக்கண்ணனே. (எச)

இதுவுமது.

கண்ணஞ் சனத்தைக் கரைத்தோடு நீர்கடல் செய்யநின்று
ளுண்ணஞ் சனத்துக்கு மஞ்சவைத் தாரும்ப ரோட்டெடுப்பப்
பண்ணஞ்ச நச்சமிர் தாக்கொண்ட காசிப் பரமர்பச்சைப்
பெண்ணஞ்ச நச்சர வார்த்துநின் றுடுமப் பிஞ்ஞகரே. (எரு)

(எ௩) அரை - பக்கத்தாறுகள். கரைகுழைத்தல் - எல்லைகடத்தல். (எரு) உள் நஞ்சு அன்னத்துக்கும் அஞ்சுதலாவது - விடம்போலு மிவ்வுணவை எவ்வாறருந்துவலென ஏங்குதல். நைந்து நஞ்சென்றுயது போலி. பிஞ்ஞகர் - தலைக்கோல முடையவர்.

கட்டளைக்கலிப்பா.

கருகு கங்குற் கரும்பக ரேந்துவெண்
   கலைம திக்கொலைக் கூற்றங் கவர்ந்துயிர்
பருகு தற்குக் கரத்தால் விரிநிலாப்
   பாசம் வீசி வளைத்ததிங் கென்செய்கேன்
முருகு நாறு குழற்பொலங் கொம்பனீர்
   முத்தர் வாழவி முத்தமு நெக்குடைந்
துருகு பத்தர்தஞ் சித்தமுங் கோயிலா
   வுடைய நாதற் குரைத்திடு வீர்களே. (எசு)

ஊர். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உரைத்த நான்மறைச் சிரத்துமைந் தவித்தவ ருளத்தும் வண் டொருகோடி, நிரைத்த பூங்குழ னிரைவளை யவளொடு நின்றவ ருறைகோயில், குரைத்த தெண்டிரைக் கங்கைமங் கையர்துணைக் கொங்கைமான் மதச்சேற்றைக், கரைத்தி ருங்கடல் கருங்கட லாச்செயுங் காசிமா நகர்தானே. (எஎ)

கட்டளைக்கலிப்பா.

மான மொன்று நிறையொன்று நாணொன்று
   மதிய மொன்று குயிலொன்று தீங்குழற்
கான மொன்று கவர்ந்துணு மாமதன்
   கணைக்கி லக்கென் னுயிரொன்று மேகொலாம்
வான மொன்று வடிவண்ட கோளமே
   மவுலி பாதல மேழ்தாண் மலையெட்டு

(எஅ) மதியமும் குயிலும் தீங்குழற்கானமுமாகிய மூன்றும் மானமும் நிறையும் நாணுமாகிய மூன்றையும் தனித்தனி கவர்ந்துண்ணும்; இங்ஙனம் மன்மதனைங்கணைகளுக்கும் வெவ்வேறிலக்கின்மையின் என்னுயி ரொன்றுமே இலக்காயிற்றென்பது. உம்மைக்காதலித்த நங்கையர் பலரிருக்க யானொருத்திதானே இலக்கெனவுமாம். வானமே ஒரு பெரிய திருமேனி என்க.

நான மொன்று புயமுச் சுடருமே
நயன மாப்பொலி யும்மகி லேசனே. (௭௮)

நேரிசைவெண்பா.

அகிலாண்ட மாயகண்ட மானவகி லேசா
முகிலாண்ட சோலையவி முத்தா—நகிலாண்ட
சின்னவிடைப் பாகா திருநயனஞ் செங்கமல
மன்னவிடைப் பாகா வருள். (௭௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருகுமதன் குழைத்தகழை தெறித்தமுத்தே றுண்டெழு வண் டரற்று மோசை, பெருகுசிறு நாணொலியென் றறிவழிந்து பேதுறுமிப் பேதைக் கென்னு, முருகுபசும் பொன்னசும்பு தசும்புவிசும் பிரவியென வுடைந்து கஞ்ச, முருகுயிர்க்கும் பொலங்குடுமி விமானத்திற் பொலிந்தவவி முத்த னூரே. (௮௦)

கட்டளைக்கலித்துறை.

முத்திக்கு வேட்டவர் மோட்டுடற் பார முடைத்தலையோ
டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பின ராலிவை யன்றியப்பாற்
சித்திக்கு மற்ற திலைபோலுங் காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவல மேபல மாகப் பலித்ததுவே. (௮௧)

விருந்தக்கலித்துறை.

பல்வே றுருவாய் நின்றருள் காசிப் பதியுள்ளீர்
வில்வே றில்லை பூவல தம்பும் வேறில்லை

(௭௯) அகிலாண்டமாய் அகண்டமான அகிலேசன் - விசுவ ரூபியும் விசுவாதிகனுமான விசுவேசன். (௮௦) வண்டொலியை யே நாணொலியென்று பேதுறும் இப்பேதைக்கு உள்ளபடி யெழும் நாணொலியாலும் அம்புதுளைத்தலாலும் யாதுவிளையுமோ? எ - று. தசும்பை இரவியெனக் கஞ்சம் உடைந்து முருகுயிர்க்கும். (௮௨) வில்லும் அம்பும் பூவேயென்றபடி.

யல்வே றல்லாப் பல்குழ லாரை யலைக்கின்றான்
சொல்வே றென்னே பாரு மனங்கன் றொழிலானே. (அஉ)

கட்டளைக்கலித்துறை.

தானென் றவர்மு னொளித்தோடித் தன்னை யிழந்தவர்முன்
யானென்று சென்றிடுங் காசிப் பிரானுடம் பென்பதென்போ
டேனென்று விட்டொழிந் தார்களிப் பாருவட் டாதவின்பத்
தேனென் றடைந்தவர்க் குண்ணக் கிடைப்பது தீவிடமே. ()

கட்டளைக்கலிப்பா.

தீவி டங்கொடுத் தேயமு துண்டவத்
தேவ ருக்கொளித் துத்திரி கின்றநீர்
பாவி டும்மலர்ப் பஞ்சணை மேலிவள்
பவள வாயமிர் துண்டாற் பழுதுண்டோ
நாவி டங்கொண் டொருவன் முகங்களோர்
நான்கி னுந்நடிக் குந்துர கத்தைவிட்
டாவி டங்கொண் டருட்காசி வீதிக்கே
யாடல் செய்திடு மானந்தக் கூத்தரே. (அச)

நேரிசைவெண்பா.

ஆனந்த வல்லியுட னானந்த கானகத்தே
யானந்தக் கூத்தா டருட்கடலை—யானந்தங்
கொள்ளத் திளைத்தாடுங் கூடாதே லிப்பிறவி
வெள்ளத் திளைத்தாடு வீர். (அரு)

கலிவிருத்தம்.

வீர மென்பது வின்மதற் கேகுணஞ்
சோர மென்பது கொண்டிருந் தாவதென்

(அச) முகங்கர நான்கினும் என்பதும் பாடம்.

வீர மென்ப திலையிவர்க் கென்றதால்
வார மென்பதி வாழவி முத்தரே. (௬௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முத்து நிரைத்த குறுநகையீர் முளரிக் கணையான் கணைகடி கைப், பத்து நிரைத்தா னினித்தொடுக்கிற் பாவைக் கொருதிக் கிலைபோலு, மொத்து நிரைத்த வுடுநிரையோ டொன்றோ பிற வோ வெனவரும்பூங், கொத்து நிரைத்த பொழிற்காசிக் குழ கற் கொருவர் கூறீரே. (௬௭)

கட்டளைக்கலித்துறை.

கூற்றடிக் கஞ்சி முறையோ வெனக்குல நான்மறையும்
போற்றடிக் கஞ்சம் புகலடைந் தேமுனைப் போலவைத்தாற்
சேற்றடிக் கஞ்ச வயற்காசி நாத செருப்படிக்கும்
மாற்றடிக் குந்தொண்டர் வில்லடிக் கும்புகன் மற்றில்லையே. ()

---

(௬௬) வாழும்பதி அவிமுத்தமாக வுடையவரே! வீரமென் பது வின்மதனுக்கே உரியகுணமாக இருக்கின்றது; (நீர் அவன் பால்) பகைமைகொண் டிருத்தலால் ஆவது யாது? (என்வருத் தங்கண்டும் அவனையழித்து எனக்கு இன்பமளியாமையின் எவ ரும்) இவர்க்கு இரக்கமென்பதில்லை யென்று சொல்லுதலால் (என்பால் நுமக்கு) உரிமைதான் யாதுளது. எ - று. ஏகாரம் பிரிநிலை. கோரமென்பது அகோரமூர்த்தங்களைக் குறித்ததுவு மாம். இருந்து வினையெச்சத்திரிபு. தலைவியிரங்கல். உரிமை யாக அவிமுத்தப் பதிவாழும் எனதிறைவரே! நீர் வரையாமை யாகிய கொடுமையைக்கொண் டிருத்தலால் வரும்பயன் யாது? வரும்பயன் இவர்க்கு இரக்கமென்பதில்லை யென்றதே யெனப் பாங்கிகூற்றுக்கலும் ஒன்று. (௬௭) முளரி - அக்கினி; தாமரை யுமாம். திகை-திக்கு. திக்கு - சிலேஷை. பலவோவென அரும்பு மென்பதும் பாடம். (௬௮) கூற்றடிக்குஅஞ்சி உமதடியை யடைந்தவழிப் பலவடிநேரின் அவ்வடிபோக்க யாலாச் சரண டைவது. எ - று. அடியர்க்கெளியராகும் நிலைமையை ஓர்வ கைச் சாதுரியம்படச் சாற்றியவாறு.

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

இல்லை யென்ப திலையோர் மருங்கிலே
யெவ்வ றங்களு முண்டோர் மருங்கிலே
கொல்லு கின்ற தெழுதருங் கூற்றமே
கூறு மாற்ற மெழுதருங் கூற்றமே
வில்லு மேற்றிடு நாணும்பொன் னாகமே
விடுக ணைக்குண்டு நாணும்பொன் னாகமே
மல்லல் மார்பின் மணிமுத்த மென்பதே
வாச மையர்க் கவிமுத்த மென்பதே. (அகூ)

கலிவிருத்தம்.

என்ப ணிக்கும் பணியென் றிரந்தபோ
தென்ப ணிக்கும் பணிதிக்கு மேக்கென்று
ரென்ப ணிக்கும் பணியா யிருந்ததோ
ரென்ப ணிக்குமின் பாமங் லேசர்க்கே. (கூ0)

(அகூ) வீற்றிராரென்று சொல்வது அல்லது ஒன்றுங் கொடாது விடுவது இன்மைச் சொல்லை யுடையோராகிய உலோபரிடத்திலே, எத்தருமங்களும் அம்பிகையின் கூறாகிய ஓர் பாகத்திலே உண்டு; கொல்லுகின்றது அன்பர்மேற் சீறிவரும் இயமனையே, சொல்லும் வார்த்தை எழுதாக் கிளவியாகிய வேதமே; வில்லும் பொன்மலையே அதிற்றொடுக்கும்நாணும் அழகிய அரவமே, (திரிபுரத்தையழிக்க) விட்டகணைக்கு நாணுதலையுடைய இலக்குமியைத்தரித்தமார்பே உண்டு; வளப்பம் பொருந்திய மார்பிலணியப்பட்ட அழகியமுத்துவடம் எலும்பே, அக்கடவுளுக்கு வீற்றிருக்குந்தான மெனப்படுவது அவிமுத்தமே எ - று. இல்லையென்பது இலை ஓர்மருங்கிலே என்பதற்கு, இருகூற்றொருவடிவாகிய திருமேனியில் அம்பிகையின்கூறாகிய இடையிலே இல்லையென்பதுண்டேயன்றித் தமதுகூறாகிய இடை வடிவுள்ளதாகலின் அதற்கு இன்மைத்தன்மையில்லையெனினும் அமையும். ஓர்பாகத்திலே வரமளித்தலும் மற்றொருபாகத்திலே அறம்வளர்த்தலும் உண்டெனலுமாம்.

நேரிசைவெண்பா.

கேயூர மூரக் கிளர்தோ ளகிலேசர்
மாயூர மூருமொரு மைந்தற்குத்—தீயூரு
மவ்வேலை யீந்தா ரடித்தொழும்பு செய்தொழுகு
மிவ்வேலை யீந்தா ரெமக்கு. (௬௬)

தூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருகை விடுத்தா ளெனக்குருகே கூறாய் சுகத்தை விடுத்தாளென், றருகு வளருஞ் சுகமேசென் றறையாய் கிறைநீர் தெரிந்துபால், பருகு மனமே யனம்விடுத்த படிசென் றுரையாய் படிவருளத், துருகு பசும்பொன் மதிற்காசி யுடையார் வரித்தோ லுடையார்க்கே. (௬௭)

இதுவுமது.

உடுத்த கலையு மேகலையு மொழுகும் பணியும் விரும்பணியுந்
தொடுத்த வளையுங் கைவளையுந் துறந்தா ளாவி துறந்தாலு
மடுத்த நுமது பரந்தாம மதனு லிதழிப் பரந்தாமம்
விடுத்து விடுவா ளலளெனப்போய் விளம்பீர் காசி வேதியர்க்கே.

நேரிசைவெண்பா.

வேதத் துரகர் விரக ரகிலேசர்
பாதத் துரகப் பரிபுரத்தார்—நாதரிவர்
சேவடிக்கண் டாரே திறம்பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண் டாரே குலைந்து. (௬௯)

---

(௬௭) உளத்து - உளத்தைப்போல. (௬௮) வளை - கங்கணம். பரந்தாமம் - முத்தி; மேலாகியமாலை. (௬௯) விரகர் - இயற்கையுணர்வினர். சேவடிக்கு அண்டார் வன்மையிழந்து பிதிரர்கட்குத் தலைவனாகிய இயமன்மேோதுதலைக் கண்டவராவர் என்க. சேவடிகண்டார் கோ அடிக்கு அண்டார், அல்லது கோவை அடிக்கண்டவராவர் எனலுமாம். அடிக்காணுதல் - கீழ்ப்படுத்துவேறல். பிதிரர்க்கிடம் தெற்காதலின் தென்புலத்தாரென்றார்.

கட்டளைக்கலித்துறை.

குலைவளைக் கும்பழுக் காய்முழுத் தாறு கொழுங்கமுகின், றலைவளைக் கும்பொழிற் காசிப் பிரான்றடங் கோட்டுப்பைம் பொன், மலைவளைக் கும்புயத் தாண்மையென் னுந்தெவ் வளைந் துகழைச், சிலைவளைத் துத்தன் படைவீ டமர்க்களஞ் செய்திடினே. (கூடு)

தாழிசை.

இடமருங்கினின் மருங்கிலாதவவள் குடியிருக்கவுநன் முடியில்வே, றிவளொருத்தியை யிருத்திவைத்துமதி மோகமோகினியி னுருவமாய்,—நடமிடிங்கிவடன் மேலும்வைத்துள நயந்தொர்பிள்ளைமுன் பயந்தநீர், நங்குலத்திருவை மருவினின்றுபிறர் நாவலைக்கவிட மாகுமோ,—குடமுடைந்ததென வானினங் கண்மடி மடைதிறந்துபொழி பாலொடுங், கொழுமடற்பொதியவிழ்ந்துகைதைசொரி சோறுமிட்டணி திரைக்கையாற்,—கடல்வயிற்றினை நிரப்புகின்றசுர கங்கைகுண்டகழி யாநெடுங், ககனநீள்குடுமி மதில்களேழுடைய காசிமேவுமகி லேசரே. (கூசு)

மடக்கு. தாழிசை.

சரியோடொழுகுங் கரவளையே சரக்கோடொழுகுங் கரவளையே
  தையற்கனமே நீவிடமே தவழுங்கனமே நீவிடமே
சொரிவதடங்காக் கண்ணீரே துளிக்குந்தடங்காக் கண்ணீரே
  துயரேவதித னந்தினமே சூழற்கழுத்தி னந்தினமே
கருகிப்புலர்ந்த நாவாயே கரைவந்திழியு நாவாயே
  கண்களுறங்கா கழுநீரே கடலேகழியே கழுநீரே
யரிவையிவளுக் குருகீரே யனத்தோடுறங்குங் குருகீரே
  யளியாரிதழி வனத்தாரே யருளானந்த வனத்தாரே. (கஎ)

(கூடு) தெவ்-பகைவனுகிய மன்மதன். அவன் பிரானது படைவீடாகிய காசியையே தனது அமர்க்களமாகச் செய்துகொள்ளின் பிரானதுபுயத்தாண்மை என்னு மென்பது.

ஊர். எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வனத்தினுமொர் பொற்பொது முகப்பினு நினைப்பவர் மனத்தினு நடித்த ருள்செய்வார், சினக்கயல் விழிக்கடை கருக் கொள்கரு ணைக்கொடி திளைத்தமரு மத்த ரிடமா, நனைக்கமல நெக்குடை தரக்குடை துறைச்சுர நதிக்கரையின் முட்டைகொ லெனுக், கனத்தபரு முத்தினை யணைத்தன மினத்தொடு களிக் குமவி முத்த நகரே. (௯௮)

மேற்படி வேறு.

கருமுகில் வெளுப்பவற விருளுமள கத்தினிவள் கதிர்முலை முகட்டணைய வணைமீதே, வருகில ரெனிற்செவியி லொருமொழி சொலச்சமையம் வருகென வழைக்கிலுடன் வருவார்காண், சுரநதி சுருட்டும்விரி திரைகளொரு முத்திமக டணைமுலை திளைக் குமவர் மணநாளின், முரசொடு முழக்குகுட முழவென விரைக் கவளை முரலுமவி முத்தநக ருடையாரே. (௯௯)

நேரிசையாசிரியப்பா.

உடைதிரைக் கங்கை நெடுநதித் துறையின்
வலம்புரி யென்னவாங் கிடம்புரி திங்கள்
வெள்ளிவீ ழன்ன விரிநிலாப் பரப்பும்
பொன்வீ ழன்ன புரிசடைக் கடவுள்
முடவுப் படத்த கடவுட் பைம்பூண்
கறங்கெனச் சுழலுங் கால்விசைக் காற்று
துமிழ்தரு குருதித் திரடெறித் தாங்குத்
திசைதொறுந் தெறித்த திரண்மணிக் குலங்கள்
வானேறு கடுப்ப வெரிநிற் றுக்கலுங்
கையெடுத் தெண்டிசைக் களிறும் வீறிடத்
தெய்வநா டகஞ்செய் வைதிகக் கூத்தன்

---

(௧௦௦) நதித்துறையிலுள்ள வலம்புரிச்சங்கைப் போல அந் நதித்துறையில் இடங்கொண்டமர்ந்த திங்கள் என்க.

வரைபகப் பாயும் வானரக் குழாத்தொரு
கருமுக மந்தி கால்விசைத் தெழுந்து
பழுக்காய்க் கமுகின் விழுக்குலை பறித்துப்
படர்தரு தோற்றஞ் சுடரோன் செம்மல்
தசமுகத் தொருவன் றிரண்முடி பிடுங்கி
விசையிற் பாய்ந்தென விம்மிதம் விளைக்குந்
தடமலர்ப் படப்பைத் தண்டலைக் காசிக்
கடிநகர் புரக்குங் கண்ணுதற் செல்வன்
வேம்புங் கடுவுந் தேம்பிழி யாகச்
செஞ்செவி கைப்பயான் றெரித்த சின்மொழி
யஞ்செவி மடுத்தாங் களித்தன னதனல்
வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்குந்
தேத்தமிழ் தெளிக்குஞ் செந்நாப் புலவீர்
மண்மகள் கவிகைத் தண்ணிழ றுஞ்சப்
புரவுபூண் டிந்திர திருவொடும் பொலிந்து
முடிவினு முடியா முழுநலங் கொடுக்குஞ்
செந்நெறி வினவுதி ராயி னின்னிசைப்
பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க வேத்துமி னீரே. (௧௦௦)

காசிக்கலம்பகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சகலகலாவல்லிமாலையென்னும்

சரசுவதிதோத்திரம்.

கட்டளைக்கலித்துறை.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத், தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித், துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணங், கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. (க)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. (உ)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற், குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித், தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு, களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. (ங)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய், வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந், தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று, காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. (ச)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்

இதை வெள்ளைக்கிழத்திமாலை எனவும் வழங்குவர்.

தஞ்சத் தவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. (ரு)

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யா
னெண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே (சு)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமெ ன்பாற், கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொ ண்டர், தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண் ணங், காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.()

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. (அ)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற் றமென்ன, நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழை க்கை, நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை, கற் கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே. (கூ)

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமெ ன், பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முத லாம், விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பி லுன்போற், கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

சரசுவதிதோத்திரமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

சிவசண்முகன்றுணை.

அருஞ்செய்யுளுரைக்குறிப்பு.

கந்தர்கலிவெண்பா.

கண்ணி (உ௫) உடலறுபத்தெட்டென்பதனை "எண்சாணளவா லெடுத்த வுடம்புக்குட், கண்கா லுடலிற் கரக்கின்ற கைகளிற், புண்கா லறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற, நண்பா லுடம்புதன் ஞாலுடம் பாகுமே" என்னுந் திருமந்திரத்தானுந் தேர்க. நிலம் ஏழு - எழுவகைப் போகபூமிகள். அத்துவாக்களிருமூன்று - மந்திரமுதலிய ஆறுமாம். இவற்றுள், மந்திரங்கள் - கக; பதங்கள் - அக; வர்ணங்கள் - ௫க; புவனங்கள்- உஉச; தத்துவங்கள் - ௩௬; கலைகள் - ௫; எனக்கூறபடும். இவ்வாறனுள்ளே முந்தியமூன்றும் சொல்வடிவமும் பிந்தியமூன்றும் பொருள்வடிவமுமாய் நிலவி, ஆன்மாக்கள் இருவினைப் பயன்களை நுகர்தற்கு ஏதுவாய் இறைவர்க்கும் திருவுருவாய் அமைந்து நிற்கும். இவற்றை இந்நூலினும் (கசு-௬௦-௬க-௬உ) ஆகிய கண்ணிகளினுணர்க. அத்துவா - வழி. பாழாதலாவது - போகநுகர்ச்சிக் கேதுவாகிய இவ்வுடலாதியன பரிபாகப்பட்ட அவ்வான்மாக்களுக்குப் போகநுகர்ச்சிதீர்ந்தமையின் பயன்படாதனவாதல். ஈண்டுத்தொகுத்துக்கூறிய இவற்றின்விரிவை ஞானசாத்திரங்களுட் காண்க.

மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்.

காப்பு. ஐராவணமென்பது-இருபாலினும் தனித்தனி ஆயிர மருப்புடையதாய்ச் சிவபெருமானுக்கு உரிமை வாய்ந்துள்ள தொருயானை. இதனை "நிரைநிரை யாயிரம் வகுத்த மாயிரு

மருப்பின் வெண்ணிறச் செங்கண் வேழமும்" என்னும் கோயி ஞன்மணிமாலை முதலியவற்ருனும், அதன்கண் மூத்தபிள்ளை யாரும் இவர்தனுண்மையை "அருப்பு மாமுலைத் தேவிய ரணி மணிச் சிவிகை, விருப்பி னேறினர் விநாயகப் பண்ணவ னெ மூர்ந்து, மருப்பி ராயிர மேந்தயி ராவண மென்னும், பொருப்பி னேறினன் பொழிந்தன ரமரர்பூ மாரி." என்னும் விநாயகபுரா ணத் திருமணப்படலத் திருவிருத்த முதலியவற்ருனும் தெ ளிக. ஐராவணத்தையொத்து உலவுங்களிறென்னலும் ஒன்று. தடவு - பெருமை, வளைவுமாம். தார் - பூவரும்பு. முடியிளமதி யை முகிழாக ஒப்பித்தலை "திங்கண் முகிழ்விளங்கு முடிச்செ ன்னி" என்னும் திருப்பழனத் தேவாரமாதிய வற்ருனும் "மதி முகிழ் முடித்தவேணி" "மதிமுகிழ்ப் பெருஞ்சடையோய்" என்றிங்ஙனம் வரும் பிறவான்ருேர் செய்யுள்களானும் அறிக.

காப்புப்பருவம்.

க. திருமழிசையாழ்வார் காஞ்சியில் வசிக்குங்கால் திருவெஃ காவென்னுந் தலத்தில் தொண்டுபூண்டிருந்த ஓர் விருத்தைக்கு யௌவனமளித்த துணர்ந்த பல்லவராஜன் தானும் அவராலே யௌவனம்பெறவிரும்பி அவர் சீடராகிய கணிகண்ணரிடத்தே யறிவித்து அவர் அதற்கு உடன்படாமையால் எனதுநாட்டை விட்டகல்வது தகுதியென்றனன். உடனே கணிகண்ணர் திரு மழிசையாழ்வார்பால் விண்ணப்பித்துத் தாம் முற்செல்ல, ஆழ் வாரும் "கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி, மணி வண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய, செந்நாப் புலவ னுஞ் செல்கின்றே னீயுமுன்றன், பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள். "என்னுஞ் செய்யுளைப் பாடிக்கொண்டு பிற்ருெடர்ந்த வழி, விஷ்ணு மூர்த்தியும் உடனெழுந்தருளினர். அதனையறிந்த மன்னவன் ஓடிவந்து கணிகண்ணரை வணங்கிப் பிரார்த்திக்க அவர் ஆழ்வார்பால் விண்ணப்பித்தலும் அவ்வாழ்வார் "கணி

கண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீகிடக்க வேண்டுந்—துணிவுடைய, செந்நாப் புலவனுஞ் செல்வொழிந்தே னீயுமுன்றன், பைந்நாகப் பாய்படுத்துக் கொள்” என்று அச்செய்யுளையே மாற்றிப்பாடிவேண்ட அங்ஙனமே திருமாலும் மீட்டுமெழுந்தருளி அமர்ந்தனரென்பது சரித்திரம்.

௨. சிவபிரான் சீர்த்தியையன்றிப் பிறர்சீர்த்தியைப்பாடாத நியமமுடைய கம்பளர் அசுவதரரென்னும் இருகந்தருவர்கள் ஒருஞான்று பெரிதும் புகழ்ந்து பாடியவழிப் பெருமான் திருவுளமுவந்து என்றும் தோடென்னும் காதணிவடிவா யமர்ந்து வீணைகொண்டு பாடுமாறு பணிக்க அங்ஙனமே பாடியமரும் பெருவாழ்வு பெற்றனரென்பது இசைநூற்றுணிபாகலின் இருவர்களென்றது அக்கந்தருவர்களையெனக் கொள்க. இக்கருத்துப்பற்றியே * “காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டுபே, ரேதிலராய்க் காணா ரிரண்டுபேர் - பேதைமுலை, யுண்ணா ரிரண்டுபே ரோங்குபுலி யூரருக்குப், பெண்ணான பேரிரண்டு பேர்.” என்றும், † “கந்தரு வரையிரு காதிற் சேர்த்தனை” என்றும் ஆங்காங்கு வியந்துகூறும் ஆன்றோர் செய்யுள்களானும் அறிக. தோடு தானியாகுபெயராய்ச் செவியை யுணர்த்திற்று; அன்றித் தும்புரு நாரதர்பயிலும் இயலை ஆராய்ந்துகொண் டிருக்கும் இருகந்தருவர் வடிவாகிய தோடெனினும் அமையும்.

௧௦. கார்முகச்சூர்ப்புயல்வர வருமிளைய குமாரியென உமாதேவியாரைத் திருமாலுக்குத் தங்கையென்றது ஒருசிருட்டியில் திருமாலையும் உமாதேவியையும் இடப்பாகத்தினும் பிரமதேவரையும் இலக்குமியையும் வலப்பாகத்தினும் உருத்திரமூர்த்தியையும் கலைமகளையும் உள்ளத்தினும் சிவபெருமான் தோற்றுவித்தமை குறித்தென்க. இதனைக் காஞ்சிப்புராணம் வீரட்டகாசப்படலத்தில் “நிலையியற் பொருளு மியங்கியற் பொருளு

* தில்லைக்கலம்பகம். † வேளூர்க்கலம்பகம்.

நிலைபெறத் தொழிற்படுத் துடைய, தலைவனங் கவனே பனி வரைப் பிராட்டி தன்னையு நின்னையு மிடப்பான், மலரணைப் புத்தே டன்னையு மெனையும் வலப்புடைக் காலருத் திரனைக், கலைமக டனையு முளத்திடைத் தந்தான் காத்துயிர்த் தழிப்பது கருதி.'' என்றிங்ஙனம் திருமாலை நோக்கி இலக்குமி கூறியிருத் தலானும் கேசவருக்குப் பின்னுதித்தமையால் உபகேசியெனத் தேவிக்குத் திருநாமம் போந்திருத்தலானும் தெளிக.

தாலப்பருவம்.

௬. கார்முதல் புனலிறுதியாகிய இடங்களிலே பொருகின்ற கயன்மீன்போலக், குழலினிடத்தும் குழையினிடத்தும் (இயல் பாகவே) போர்புரிகின்ற கண்களாகிய கயல்கள், ஆடவர் மார்பி னும் திருவினும் சிலையினும் புயமலையினும் தாரினும் பொருதிடு மதுரையென்றவாறு. பொருகயலிற் பொருதிடுமென இயையும். திரு - கண்டோரால் விரும்பப்படும் பெருஞ்சிறப்பு. எனவே, ஆடவருலாப்போதுங்கால் அவரது மார்பழகுமுதலியவற்றை மங்கையர் கண்கள்பதியக் கண்டுகளிக்கும் மதுரையென்பது கருத்து. யாண்டும் வருவித்துரைப்பன இசையெச்சமென்க.

௭. (தடாதகைப் பிராட்டியார் திக்குவிசயஞ் செய்தநாளில்) சேனாதிபதிகளும் திசைத்தலைவர்களும் யுத்தத்திலே தங்களு டைய வில்லினுனிகளைத் தேரிலுள்ள கொடிகளோடு இழக்கும் படி (பிராட்டியாருடைய) சேனைத்தலைவர்களால் சிந்தியிட்டுஞ் சோனைபோலும் கணைமழை சொரிதலாற் பெருகிய குருதிக் கடல் என்க. தலைவர்களால் சிலையிற்சிந்தியிடுங் கணைமழையெ னலும் ஒன்று. சொரிய-வினையெச்சத்திரிபு. அப்பெயர்மீனென் றது ஆனைமீன் குதிரைமீனென்னும் இரண்டையும். இவை கட லகத்துள்ளன.

சப்பாணிப்பருவம்.

சு. மண்ணவர் தேவர்வாளின் மடிந்தவராகி (வீரசொர்க்க மடைந்து) அங்குள்ள அரம்பையர்களின் கட்கணையும் முலைக்கு வடுமாகிய பொருபடையினும் தாக்குண்ணவும் குரவையாடவும் நாணெய்தவும் நாணுறலிசெய்து கணைதொட்டவளென்க. மண்ணவர் மடிந்துழித் தம்மீது வீழ்ந்துபுலம்பும் மனைவியர்கண்களும் தனங்களும் மேற்படப்பெறுதலால் படையிற்பட என்றுரென்னலும் ஒன்று.

அ. கூளிகளும் காளிகளும் சேனாதிபதிகள் முதலியோரும் ஓடும்படி (தடாதகைப் பிராட்டியாரால் விடுக்கப்பட்டுச்) சென்றவாளிகள் சிந்திடக்கண்டு நந்திபிரானின்றிலன். எ-று. ஞாளியில் ஆளி - ஞாளியிலிவரும் ஆளிபோலும் வைரவக் கடவுள். அவர்போலச் செருமலைந்துநின்ற சேனாதிபதியென்க. முன்னழகு - எதிர்ந்துழியிருந்த முகமலர்ச்சி. பின்னழகு - புறங்காட்டுழிநேர்ந்த உடலயர்ச்சி. முளரிக்கணையெனுமொழி புருவங்கட்கேற்பத் தாமரைமலர்போலுங் கட்கணையையும் சிலைக்கேற்ப அனற்கணையையும் குறித்து நின்றது. பெருமானுக்குரியது வலிய குன்றவில்லாகலின் அதனைவேறற்கு ஒருங்கு மூன்றுவில் வளைத்துதொப்பக் குனித்துக்கணைதொட்டு வென்றவளென்பது.

முத்தப்பருவம்.

தடாதகைப் பிராட்டியாரின் வெற்றிக்கொடியானது சேரனுடைய விற்கொடியும் சோழனுடைய புலிக்கொடியும் தோற்றோட மீனுடுதிகழ்ந்து உயர்ந்தவடவரையில் விளங்குமாறு போலத் துகிற்கொடிகள், மேகவில்லும் அம்புலியும் தாழ்ந்தோடும்படி யுயர்ந்து வான்மீனை மணந்து கொச்சியிற் பொலியுமென்பது. மேகச்சிலை ஏனைச்சிலைகளின் வேற்றுமையுளதென்பார் முனைக்கணை நுனிபரிசியாத செஞ்சிலையென்றும், கொடிகளி

னுனிகள் வேலுருவினை யொப்பனவாய் வயப்புரவி வழிச்செல் லுமாறு தாற்றுக்கோ லேந்தியனபோலுமென்பார் முட்கோல் பிடித்தென்றும், வெற்றிக்கொடி நாட்டுதற்குரியது மேருவே யென்பார் வடவரைமுகந்த கொடியென்றும் கூறினார்.

எ. திரைக்கடலை அறப்பருகிப் பிறைமதியொடுதோன்றும் கருமுகில்களோடு மின்னல்கள் வெருவிப்பெயரவும் நக்ஷத் திரங்கள் வெருக்கொள்ளவும் (மதுரைப்பதியிலுள்ள) வெடிவ ரால்குதிகொள்ளும் விட்புலமெனவும், குடத்திலுள்ளமதுவை அறப்பருகிய காருடலத்தையும் வெண்பிறைமதிபோலுங் கூனி ய அரிவாளையேந்திய கையையுமுடைய கடைஞர்களோடு மின் னல்போலுங் கடைசியர்கள் வெருவிப் பெயரவும் மீன்கணம் வெருக்கொள்ளவும் வெடிவரால் குதிகொள்ளும் விளைபுலமென வும் கூறியது உருவகம். விட்புலம் விளைபுலமே யென்னும்படி கடவுண்மாகவளங்கொளக் கன்னற்காடும், அதனோடு காம தேனுவுங்கடைவாய்குதட்டச் செந்நெற்குலையும் விண்ணளவும் ஓங்கிவிளையும் படப்பையென்க. வெடிவரால் - வெடித்தவரால்; வெடித்தல் - வெளிப்படல்.

அ. தாமமும் கற்பகப்பொன்மலரான் இயன்றதாகலின் தப னியக் குப்பையொடு தலைமயங்கலாயிற்று. கொங்கோ லிடுங் கோல் - மணஞ்சுலவு மலரம்பு. எதிர்ந்தபெருமான் மணத்தலை வேட்டமையின் மதன்கொடிச்சுறவு இரசதக்குன்றினும் சென் றுலவ வல்லதாயிற்றென்பது. சூரியனிரதத்திற் பூட்டிய உயர்ந் தசக்கரம் சக்கரவாளகிரியிற் றிரிந்து புலம்பும்படி போராழி யென்னும் ஆஞ்ஞாசக்கரம் அச்சம் விளைத்தலாவது - சூரியன் முதலிய கிரகாதிபதிகள் உலகிற்குக் கெடுதிவிளையாவண்ணம் தினமும் தத்தங்கதிகளிலே தவறாது சஞ்சரிக்குமாறு பணித் தல். திரிபுலம்பவென்பது திரிந்து + புலம்ப, திரிபு + உலம்ப எனப் பிரிக்கப்படும். இவற்றுள் முந்தியதில் திரியென்னும்

பகுதியே எச்சப் பொருள்பட்டு நின்றதாம். ஆஞ்ஞாசக்கரம்-வெற்றியால்விளைந்த பிரதாபம்.

அம்புலிப்பருவம்.

அ. உண்ணமுது கலையொடுமிழந்தென்பது தேவர்களால் உணவாகக்கவரப்படுதலால் அமுதத்தையும் தக்கன்சாபத்தாற் கலையையும் இழந்தென்றும், அன்னவஸ்திரங்களையிழந்தென்றும்; வெறுமட்கலத்திடு புதுக்கூழினுக் கிரவுபூண்டென்பது சிறுமியர்படைக்கும் சிறுமட்கலச்சோற்றையருந்துதற்கு இராத்திரியை உரியகாலமாகக்கொண்டென்றும், வெறுமட்கலப் புதுக்கூழினுக்கு இரத்தலைப்பூண்டென்றும்; களங்கம் வைத்தாயென்பது களங்கத்தைக்கொண்டாயென்றும், பழியைவிளைத்தாயென்றும்; ஒருத்தனுண்டொதுக்கியமிச்சிலென்பது சூரியனலழிந்தெஞ்சிய விருளென்றும், ஒருவனுண்டொதுக்கிய உணவின்சேடமென்றும்; நள்ளிருளினள்ளியுண்டென்பது மிச்சிலாகியநள்ளிருளில் சிறிதள்ளியுண்டென்றும், மிச்சிலை நள்ளிருளில் களவிற்கவர்ந்துண்டென்றும் இங்ஙனம் இரட்டுறமொழிதலாய் நிற்பதறிக.

அம்மானைப்பருவம்.

கூ. தனிமுதற்பொருள் யாமேயெனத்தருக்கும் பிறதேவர்க்கெல்லாம் தாயானவர்க்கும் தாயானவ ளென்றது பராசத்தியினின்றும் சிவந்தோன்றுமென்னும் முறைமைபற்றியேயாம். இங்ஙனம் கூறுமுறைமையைச் சிதம்பரச் செய்யுட்கோவைக் குறிப்புரையினும் உணர்க. அறிவிலிகளும் தெளிந்துய்யுமாறு தனிமுதல்யாமேயெனப் பலபிரமாணங்களால் நாட்டியபிரானுக்கு அன்னையுமாகி மனைவியுமானவள் என்னலும் ஒன்று.

நீராடற்பருவம்.

௮. வைகைப்பெருக்கை நோக்கியோர் இம்முறையும் இறைவரினன்றி இவ்வெள்ளம் அடைபடாதென்றெண்ணுங்கால் தேவிகுடையப்பெறின் அத்தேவியின் யானையாதிய சேனைகள் பருகுதலானும் உழக்குதலானும் ஆடையாதியவற்றிற் சுவறுதலானும் இவ்வைகையும்வற்றி இதற்கு மூலமாகிய இறைவர் முடிக்கங்கையும் வற்றாநிற்குமென்பது. வைகைக்குமூலம் முடிக்கங்கையென்பதனைத் திருவிளையாடற்புராணம் வைகையழைத்தபடலத்திற்காண்க. சுமந்தோர்க்குப் பூந்துறைமண்போல் வெளுத்த பிட்டிடவுமென இயையும்.

மீனாக்ஷியம்மையிரட்டைமணிமாலை.

௧. நின்கண்ணருள்பெற்று பவனத்து இடம் ஆய் இரார் ஆர்—நினது திருவருணோக்கம்பெறுதலால் மோக்ஷபூமியிற்சென்று நிலைபெற்றுவாழாதார் ஆர்? என்றும், இடமகன்றபூமியில் விருத்தியடைந்துவாழாதார் ஆர்? என்றும், கண்ணருள்பெற்றாரே பூமியிற்பிறந்துவாழ்ந்திரார் எனவே, மேற்கதிபெறுவார் என்றும் பலபொருள்பட்டுநிற்பதறிக. பெற்று வினையெச்சத்திரிபு.

௫. மதங்கன் - பாணபத்திரர். கொடியார் - கொடியவர், கொடிபோல்பவர் என்றும், கொடியார்க்கு இல்லைகொல்லோ குணமென்றும், உடம்பை இருகூறாக்கினும் கொடியார்க்குக் கொல்லுங்குணமில்லையென்றும், கொடிக்கு இலைதாமோகுணமென்றுங் கொள்க. இங்ஙனம் இந்நூலில் ஆங்காங்கும் சொற்பொருணயங்கள் பல்கிக்கிடப்பதோர்க.

௯. கடம்பவனத்தாயே! என்னெஞ்சகம் நின்சிற்றிலிடமேயானால் இருண்மூடிக்கிடப்பதுதகும்; மகிழ்நரொடும் வாழாநின்றாயாகலின் இத்தகையபெருவீடு இருண்மூடிக்கிடப்பது தகாது: நீயும் ஏழையாயிருத்தலின் விளக்கேற்றிக்கொண்டே

னும் இருப்பாயாக. எ - று. தகுமேயென்பது தகுமென்பத னோடு தகாமையையும், இருளென்பது புறவிருளோடு அகவி ருளையும், ஏழைமையென்பது மகளிரியல்புக்குணத்தோடு வறு மையையும், விளக்கென்பது தீபத்தோடு ஞானத்தையும் குறி த்து நின்றன.

கஉ. வலிய விசாலமாகிய துதிக்கைக்குநேரொத்த வால்களை யுடையனவாகி எட்டியானைகள் தாங்கப்படும் திருவாலவாயின் கணுள்ள இந்திரவிமானத்திலமரும் மருந்துபோல்பவளே! மலயத்துவசன்பெற்ற தெளிந்தவமிழ்தமே! ஆசைமிக்குக் கரு வினுல் மிகமெலிந்தவெனக்கு உபயதிருவடிமலர்களையும் பாலி த்தருளுகின்ற கல்லாலவிருக்ஷத்தடியிலமரும் சிவபெருமானை யடையுமாறு கருணைபுரிவாயாக. எ - று. இவ்வாறுபிரார்த்தித் தது அருட்சத்தியானே சிவத்தையடைய வேண்டுமென்னும் சித்தாந்தநோக்கியென்க. அவாய்க் கருவால்மெலிந்தேற்கென இயையும். கருவாகிய ஆலிலையுட்பட்டு என்றும், கல்லாணிழலை அவாவிநின்ற பொருளாகிய சிவமென்றும் மாற்றிப்பொருள் கூறலுமாம். ஆலவாயென்புழி வாய் ஏழனுருபு. தாள்மலர் பல பொருள்படநிற்பதோர்க. பிறவிப்பிணியையகற்றலின் மருந் தென்றும் அழியாநிலைமையை யளித்தலின் அமிர்தென்றும் கூறினர்.

கங. முலைக்குவடு பாய்தலானுண்டாகியகுறி முன்னர்க்காய மாயினும் அப்பொன்மலைக்கு அது மங்கலமே வடுவன்று. எ-று. சுவடு முன்காயமாதலால் வடுவன்றென்றும், சுவடு காயமும், ஆலம் வடுவுமாயமையினும் அவை அத்தகையவன்று மணமே யென்றும் கொள்க. முன் மார்புமாம். வடு பழியுமாம்.

கஎ. என்னைப் புணர்ந்தடிமைகொண்ட கடம்பவனப்பூவை போல்வாள் அவயவங்களாகிய சிலபூவை என்வாயினும் மனத் தினும்வனைந்தாள்; அவற்றுள் பொன்னொளிவீசும் அவள் பூம்

பதமே நாளும் நமதுசொற்பொருள்களில் மணக்குஞ்சுவையா யமைந்தன. எ - று. புனைந்தாளுதல் - குணமிலியையும் குணமுடையனுக்கியாளுதல். இதனை "திருத்தித்திருத்தி வந் தென்சிந்தை யிடங்கொள் கயிலாயா" என்னும் ஆளுடையநம்பிகள் தேவாரத்தானு முணர்க. வனைதலாவது-நினைக்கவும் துதிக்கவும் வணங்கவும் அளித்தல். ஏனையவற்றினும் திருவடிப்புகழ்ச்சியே மிக்கிருப்பதென்பார் சொற்பதங்களில் நாறுஞ்சுவை பூம்பதமன்றேயென்றார். அன்றேயென்பது தேற்றம். வாயும்மனமுங் கூறினமையின் காயம் உபலக்கணத்தாற்பெற்றாம்.

கஅ. அம்மே! என்சொற்றமிழ்க்குச் சொற்பொருட் குற்றமுண்டென அறநாணுதிபோலும், நாணற்க; சொற்பொருட்கண் குற்றம் எவையுண்டோ அவை அச்சொற்பொருள்வடிவாகிய சத்திசிவமென்னும் நீவிரிருவிர்க்கு முண்டாமாகலின் குற்றநாடாது சுவையுண்டெனக்கொண்டு சூடுதி. எ-று.

உ0. கற்பூரவல்லி பொன் பூரவல்லி கமலத்தளே கொல் - கற்பூரவல்லியென்னும் அங்கயற்கணம்மையார் அழகிய கலைமகளேகொல் அல்லது திருமகளேகொல் அறியேம்,—புகுந்த அகமும் அல்லி வெற்பு ஊர பிறந்த அகமும் அது - அமர்ந்த இடமும் அகவிதழ்போலும் உள்ளடி இமையவெற்பிற்றவழப் பிறந்த இடமும் தாமரைமலரேயாம்,— மீட்டும் வல்லி எம் வன்னெஞ்சம் கஞ்சத்து எம் ஐயனொடும் அற்பு ஊர குடிபுகுந்து நின்ற காரணம் என்னே - மேலும் பாசத்தனையோடு கூடிய எமது வலியநெஞ்சமாகிய தாமரையிடத்தும் எமதையனொடும் அன்புதவழக் குடிபுகுந்துநின்ற காரணம் என்னே! எ - று.

புகுந்தகமும் பிறந்தகமும் தாமரைகளேயாகலின் இக்கற்பூரவல்லி அத்தாமரைமலர்களிலமரும் மகளிர்தாமோ அறியேமென்பது. கலைமகளும் கமலத்தளேயாகவும் திருமகளை மட்டும் கமலத்தளென்றது சிறப்புப்பற்றி. புகுந்தகமென்றது அன்ப

ரகத்தாமரைகளை. பிறந்தகமென்றது மலையரையன்புதல்வியா ய்த் திருவுருக்கொண்டமர்ந்த தாமரையை. குடிபுகுந்தவென் றது சிந்திக்கும் ஏனையோர் இதயதாமரைகளை, புகுந்தகம் பிற ந்தகமென்புழிப் பெயரெச்சத்தகரம் எஞ்சின. அதுவென்னுஞ் சுட்டு முற்போந்தது செய்யுளாகலின்; அது ஈண்டுத் தாமரை மலரின்மேற்று. மீட்டுமென்பது பிறிதுமொன்றுண்டென்பது பட வினைமாற்றாய்நிற்பதோரிடைச்சொல். இதனை "இரத முடைய நடமாட் டுடையவ ரெம்முடையர், வரத முடைய வணிதில்லை யன்ன வரிப்புனத்தார், விரத முடையர் விருந் தொடு பேச்சின்மை மீட்டதன்றேற், சரத முடையர் மணி வாய் திறக்கிற் சலக்கென்பவே." என்னும் திருக்கோவையாரா னு முணர்க. என்னே யென்பது வியப்பிடைச்சொல்.

மதுரைக்கலம்பகம்.

கசு. அணங்கே அழகியபொன்னாற்சித்திரித்த முகபடாத்தை யணிந்த கும்பமதயானையையும் நெடுந்தேர்ப்பரப்பையும் விற் படை வாட்படைகளையுங் கொண்டிருந்தும் பிரான்வெற்பில் அவையொன்றும்பெறாத என்னுடுபுரியும் கலவிப்போரில் தோ ல்வியுற்றமைநன்று. எ-று. நன்றென்பது நன்றன்றென்பதுபட நின்றது. தலைமகளைப்புணர்ந்த தலைமகன் அவளது புணர்ச்சி மெலிவுநோக்கிக் கூறியபடி. இது புறங்காட்டலென்னுந்துறை. காமப்போரினுக்கு யானுடையாதபடி ஒருநீ மதயானையாதிய கொண்டு என்னையோம்பியவாறு நன்று எனப்பொருள் கொ ண்டு புணர்ச்சிமுடிவிற் றலைமகளை வியந்துரைத்ததுறையாக்க லும் ஒன்று. அறந்தந்தபொன்-ஈண்டு உமாதேவியார். அறங் களை உண்டாக்கியசெல்வம், அல்லது அறத்தின்வழி யீட்டப்பட் டசெல்வம் எனினுமமையும். திறம் - மார்பு, அழகுமாம். யானை தனம், தேர்ப்பரப்பு அல்குல், விற்படை புருவம், வாட்படை கண் என்க. போரினுக்கு வேற்றுமைமயக்கம்.

கஎ. கொங்கைப்போரென்றது கலவிப்போரை. ஒருகணை தொட்டெய்திலரென்றது சாதுரியம்படச்சாற்றியவாறு. ஈண்டு ஒருகணையென்பது மன்மதபாணம் ஐந்தனுளொன்றாகிய தாமரைமலரின்மேற்றாய் அதையொத்த கையைக் குறிப்பாலுணர்த்திற்று. கைதொட்டெய்தல் - பாணிக்கிரகணஞ் செய்து மணத்தல். இது தலைமகளைவரைந்தெய்துமாறு பாங்கி தலைவற்கு வற்புறுத்தியதுறை.

கஅ. நிலைபெறுததேகத்தை யொழிந்து நிலைபெற்ற முத்தியையடைந்து பிறிதொன்றையும் விரும்பாதவரும் விரும்பும்படி இலக்குமிவகுத்த சரக்கறையாகிய திருவாலவாயின்கண் அமரும் செல்வரே! மதன் பிறரால் அறியப்படாமனின்று அம்பெய்வதையும் இளம்பருவமுடைய இம்மகள் அதனுன்மெலிவதையும் அறிவில்வைக்காதபிறர் பழிப்பின் முற்றறிவுடையநீர் ஆய்ந்துவந்து கூடுவது முறையன்றோ. எ - று. தலைமகன் மெலிவுநோக்கிய பாங்கி தலைவற்குணர்த்தியது. மதன் அனங்கனாதலால் எய்யாதென்றார். * எய்யாமை அறியாமை; இளையாமையுமாம். எய்யாமனின்றவொருவள் எய்வதும் இளையாதவளொருத்தி இளைப்பதும் வையாதவர் வைவதூம் செய்யநேரின் மதியாதவர் மதிக்கவேண்டுவது முறையன்றோவென ஓர்வகைச் சாதுரியந்தோன்றவும் கூறியபடி. மதியார் தாமதித்திடுதலும் வழக்கேயென வெறுத்தற்பொருளமைதியுங்காண்க. வீழார்-மீளாதவருமாம். சரக்கறை - எச்செல்வமுநிரம்பியசிறுவீடு.

உக. கடற்கரையிலிழைத்திடுங்கூடற்சுழி கூடல்செய்யாது வழுவுகின்றன ஆகையால் செழித்தமதுரையையுடையகடவுள் என்னை மனமுவக்கச்செய்து விரையக்கூடார் போலும். எ-று. கூடற்சுழியாவது-சுழியைநோக்காது சுழிக்குங்கால் அச்சுழித்தொடக்கத்திலேயே அதன் கூடுதலும் ஒற்றுமைப்படக் கலப்

* தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரியியல்.

பின் தலைவர்வந்துகூடுவர் பிழைக்கின் வந்துகூடாரென்று வழங்குவதுபற்றி அங்ஙனம் பன்முறை இழைப்பது. சுழித்தபல சுழிகளையும் இவ்விரண்டாகவெண்ணின் அவை இரட்டைப்பட்டால் தலைவர்வந்துகூடுவர் ஒற்றைப்பட்டால் வந்துகூடாரென்று கருதிக்குறிபார்த்தலும் உண்டு.

உ௨. பூங்கொம்புபோலுந்தேவியார் ஊடலும் அதுநீங்கிக்கூடலும் உடம் பொன்றிலேயாம்; கூடலம்பதியிற் கோயில்கொண்டு திருவிளையாடல்கள்புரிந்தருளிய இறைவரது இத்திருவிளையாடல் அதிவியப்புடைத்து. எ-று. ஆடலே என்புழி ஏகாரம் வியப்பிடைச்சொல். ஆடல் ஊடலும்கூடலுமாமெனலும் ஒன்று. இது உமையொருபாகமூர்த்தியைச்சுட்டியது.

உச. கலம் - மட்பாத்திரம், ஓரளவுமாம்; சான்று ஆண்மை பயின்றார் - பலகுணங்களானுநிறைந்து அவற்றை ஆளுந்தற்றன்மைபயின்றார், சான்றாண்மையென்னுஞ் சாதித்தன்மைபொருந்திய சான்றார்; முயலல் - வழிபாடுகளான்முனைதல், சீவுதலாதியதொழிலின் ஊக்குதல்; பலம் - பயன், மது, வன்மையுமாம்; உண்டவர் - அநுபவித்தவர், பருகியவர்; ஏடு - சுவடி, ஓலை; வீடு - முத்தி, குடில்; எழுதாததோர்திருமந்திரம் - எழுதாக்கிளவியாகியவேதம், கள்; என்க. பொதுப்பட ஆசிரியனெனக்கொள்ளின் இளம்பாளையென்பது இருபொருள்பயவாதாகலின் தக்ஷிணமூர்த்தியெனக்கொண்டு அக்கடவுளினிளங்குருத்தாகிய முருகக்கடவுளிடத்துப் பொருளளவிட்டு வரைதற்கரிய வேதம் அல்லது பிரணவம் உண்டென்க. வற்று - வல்லது.

உரு. நஞ்சம் - விஷம், விஷம்போல்வது; உறக்கம் - ஒடுக்கம், நித்திரை; பதி - நகரம், கணவன்; கூடல் - மதுரை, கலத்தல்; என்க. பதம் - நிலைமை. எண்பதுகோடி யென்பது மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்றெடுத்துக்காட்டியவாறு. * "எழு

* திருக்குறள் - கூ௩௬.

பதுகோடியுறும்" என்பதுபோல. இவளியல்பு மன்மதனையெ ரித்த உமதியல்புநிகர்க்கவும் அவன் அச்சமின்றி அம்பெய்து வருத்துவது வியப்பென்றபடி.

உசு. மாலையாகத் தொடுத்துத்தரித்ததும் அழகியதேவர்க ளுடைய எலும்பையே, சுமந்துகொண்டிருப்பதும் அலைகளையு டையகங்கையையே, தாங்கியிருப்பதும் மாயையையுடையவாம னமூர்த்தியின் சரீரத்தையே, மாயும்படி தந்தத்தைமுறித்த தும் திருமாலவதாரமாகியபன்றியையே, (எப்பொழுதும்) ஏற் றுக்கொள்வதும் பிராமணர்முனிவர்களுடைய ஆசீர்வசனங்க ளையே, தரித்துக்கொள்வதும் சில பாம்புக் கூட்டங்களையே, (விருப்பியவர்க்குத்தாம்) பாலிப்பதும் முனிவர்களுடையவுல கத்தையே, (சோமசுந்தரக்கடவுள் தமக்குரிமையாகக்) கொள் வதும் கடம்பவனத்தையே. எ - று. திருமால் பிரமதேவரா தியர் எலும்பும் தலையும் பிறவும் அணியாகத்தரித்ததும் வாம னவதாரத்தில் தோலைச் சட்டையாகத்தரித்து உடல்முழுவெ லும்பைச் சூலத்திலேற்றதும் வராகாவதாரத்தில் தந்தத்தைமு றித்துமார்பிலணிந்ததும் கூர்மாவதாரத்தில் அதனோட்டைப் பெயர்த்து மார்பிலணிந்ததும் கந்தபுராணமுதலியவற்றுட் காண்க. முனிவர்கள் பன்னசாலையில்வசிப்பவராகலின் பன் னகரெனப்பட்டனர்; பன்னகம் என்பதில். க, பிரத்தியயம்; பாடகசாலை என்பதிற்போல. அல்லது, பல்நகர் அந்தணர் என்க. ஐயர் தேவருமாம். பவனம் - உலகம். மடக்குகடோ றும் ஏகாரங்களையும் உம்மைகளையும் ஏற்றபெற்றி கொள்க.

உஎ. நீராற் கரையைக்கரைக்கின்ற வைகையினது பெரிய கரையிலே மதசலமுழக்கம்பெற்ற மலைபோலும் யானைமேல் நிலைபெற்றவராகிய நீர்தாமே பெருந்தகைமையுடைய நுமது தோள்கள் என்னுடன் கூடுதலை நல்காதுவிடின் மன்மதன் தனதுவளைந்தவில்லில் வைத்துத்தொடுக்கும் தாமரைமலரா

ஒய அம்பே எனக்கு இயமனும். எ - று. விகாரசிந்தனையையே யன்றி மரணவஸ்தையை உண்டுபண்ணமாட்டாத தாமரையே அதை யுண்டுபண்ணுமாயின் உண்டுபண்ணவல்ல ஏனைய அம்புகளால் விளையுமிடுக்கண் இயம்பலாவதோவென்பாள் அம்புயமே நமனென்றாள். பெருமான் யானைமேலெழுந்தருளக்கண்டு காதல்கொண்ட ஒருதலைவிகூற்று. வைகைக்கரையில் மலைபோலெழுந்தருளியுள்ளவரென்னலும் உண்டு. என்னியல்பறிந்துள்ள நீரேவந்துகூடியருளாவிடின் இறந்துபடுவேனல்லது பிறிதென்செய்யவல்லேனென்பது. நீர்தாமோஎன்பதும் பாடம்.

உஅ. நம்பன் - உயிர்கண்மாட்டு விருப்புடையவன். காலநஞ்சு - காளகூடமென்னும் நஞ்சு. நஞ்சுண்டுபாலித்தவென இயையும், பித்துண்டு-மயக்கத்தைக்கொண்டு எனக. காதோலைபாலித்தவென்பது மங்கலசூத்திரம் பாலித்தவென்பதை உள்ளுறையாகக் கொண்டிருப்பதுமன்றிக் காதோலையும் மங்கலசூத்திரம்போல்வதென்பதையும் விளக்கிநின்றது. இவ்விரண்டும் கணவரபிவிர்த்திக்குரியவென்பார் சௌந்தரியலகரியாரும் "நாதர்பொன்றில ரேதுன்மங்கல நாணுறுந்திறம்" என்றும், "சிவனூண்விடம்வாழ்வன் மாதிருபெருங்குழை யிட்டபொன்னோலையின் வாசியே" என்றும் கூறியருளினார். ஒருத்தியைப்பாதியுடம்பிற்கொண்டு மார்புக்தோளும் வடுப்பட்டும் எமது பெண்ணைவேட்டு நலிவிப்பதென்னே! இதனால் இவர்க்கென்பயனும்? நலியாதிருக்க வண்டூர் நவிற்றுவீராக. எ - று. ஒருத்திகாரணமாகச் செவ்வியதிருவுருவில் கருமையும்வடுவுங் கலந்ததுகண்டும் இங்ஙனம்புரிகின்றார் இவர்க்கு இன்னும் ஏதுவிளையுமோ அறியகிலேனென நிந்தாஸ்துதிபோன்றுநிற்பதும் ஓர்க. இது செவிலிக்கூற்று. வடுப்பட்டதுகண்டுமென உம்மைபிரித்துக்கூட்டுக. பாவையென்பவற்றுள் முந்தியது கருவிழிப்பாவைபோல்வாளெனவும் பிந்தியது சித்திரப்பாவையெனவும் பொருள்பட்டுநின்றன.

உகூ. சீர்தூக்கின் மதவேளின் ஆவமுதலியவற்றிற்கே சமனும் சமனன்றெனில் அவற்றையுடைய மதவேளுக்குச் சமனுவதெங்ஙனம்? எ - று. மதவேள் ஆவமுதலியன தூக்கிவரின் சமனும் ஒப்பன்றெனலும் ஒன்று. ஏகாரங்கள் எண்ணிடைச்சொற்கள். பிறர்பழிக்கஞ்சிய சொக்கருக்கு இஃதொருபழியெய்திற்றென்பது. இவளுயிரைவிற்றுப் பெண்பழியை ஈடாக வாங்குங்கருத்தோ இவர்கருத்தெனலுமாம். பாவம் - கருத்து.

௩உ. பிச்சராகிய சிவபிரான் போன்று தவவேடமும் புண்டரமணிந்த முண்டமும் கான்மாறியாடலும் கடைப்பிச்சைக்கிச்சைபேசலும் கடைக்கணோக்கத்தையும் புன்மூரலையும் உயிர்கவரவிடுத்தலும் கபாலமுஞ்சூலமும் கைவிடாமையும் நீவிரும் உடைமையானே பிச்சியாரெனும்பேர் உமக்கிட்டதெனற்பாலது செய்யுட்கிணங்க முடிபுகூறப்பட்டது. சிவசின்னம்பூண்டு பிச்சைக்கெய்திய மகளிரைநோக்கி மையல்கொண்ட வொருதலைமகன் கூற்றாக வுரைத்தது.

௩௩. தலைமகனும் தலைமகளும் களவிற்புணர்ந்து பிரிந்தவழி ஒருவரையொருவர் அடையவிரும்பின் தலைமகன் தலைமகளுருவையும் தன்பெயரையும் ஒருபடத்திற் றீட்டிக் கைக்கொண்டு பனைமடலாற்சமைத்த குதிரையிவர்ந்து தனதுபிரிவாற்றுமையைப் புலப்படுத்த மன்றேறுதலும், அங்ஙனமே தலைமகள் தலைமகனுருவும் தன்பெயருந் தீட்டியபடங்கொண்டு மடலேற்றமின்றி மன்றேறுதலும் இயல்பு; ஆகலின், இத்தலைமகளும் தனதுளத்தே சுந்தரேசுரர் திருவுருப் பதியப்பெற்றிருத்தலின் அப்படங்கொண்டு மன்றேறத் துணிந்தாளென்பது. விகாரமிக்கவழி மடலேற்றமும் மகளிர்க்குண்டென்பர். இன்றுநாளை - இற்றைநாளை. இன்று அல்லது நாளையெனக்கொள்ளின், ஆற்றுமை மிக்கிருந்தும் இங்ஙனம் தாமதித்தெய்தக்கருதினமை தலைவர் இரண்டொருநாளிலேனும் வாராதிரா ரென்னும் நிச்சயம்

பற்றியும் நாணிழப்பிற்கஞ்சியுமென்க. தாள்பெயர்த்தல் - தாள் மாற்றல்.

நஅ. சோமசுந்தரக் கடவுளுக்கு நடிக்குமிடமும் வெள்ளியம்பலமே, வசிக்குந்தானம் பிறபற்றை யிகழ்ந்தோர்களுடைய இதயமே, மார்பிலணியப்படும் பல ஆபரணம் எலும்பும் பாம்பும் ஆமையோடுமே, உண்மை ஞானத்தை யடையாமைக்குக் காரணமும் (அக்கடவுளை) யான்வழிபடாமையே, விரும்பப்படும் பாடலும் பெருமைபெற்ற கவிகளிடத்துள்ள அன்பே, வீற்றிருக்கும் விமானமும் (இந்திரனால்) விண்ணினின்றும் வருவித்த விமானமே, திருந்தியமூலட்டானம் பெரியமதிலையுடைய மதுரையே, வெள்ளியங்கிரியிற் றங்குவது செயற்கையே. எ - று. ஆலயம் உறைவிடம். அருந்தவரிதயத்தை உறைவிடமாகவும் திருக்கோயிலை வெளிப்பட்டு விளங்குமிடமாகவும் கூறுவது நூற்றுணிபாகலின் அங்கமென்பது ஈண்டு இதயத்தின்மேற்று. "நண்ணு மாலய மாதவ ரங்கமே" என்றார் காசிக்கலம்பகத்தினும். அங்கமென்பதற்கு அழகியதலையெனக்கொண்டு தலையென்பதற்கு பிரமரந்திரமென்றேனும் துவாதசாந்த மென்றேனும் கொள்வதும், விரும்பியபாடலும் பெருமைபெற்ற சிறந்த கவிகளேயெனக் கொள்வதும் உண்டு. மூலலிங்க மூர்த்திக்குரியதாகலின் கூடலே இயற்கைத்தான மென்றும் இம்மூலலிங்கத் திற்கிளைத்தெழுந்த மூர்த்திகட்குரியவாகலின் கயிலையாதியன செயற்கைத் தானமென்றும் கூறியவாறு. பிந்தியது செயற்கை யெனவே முந்தியது இயற்கை யென்பது பெற்றாம். இதை "முளைத்தானை யெல்லார்க்கு முன்னேதோன்றி" என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானும், "பன்னருந் தலங்க டம்மிற் பராபர விலிங்கந் தோன்று, முன்னரிக் கடம்பின் மாடே முளைத்ததிச் சைவ லிங்கம். அப்பதி யிலிங்க மெல்லா மருட்குறி யிதனிற் பின்பு, கப்புவிட் டெழுந்த" என்னும் திருவிளையாடற்புராணத்தானும் அறிக.

ருகூ. ஐயர் - முன்னிலைப்படர்க்கை. நாடு ஆள வைத்தவள்- தடாதகைப் பிராட்டியார். விரோதித்த அசுரரையும் காதலித்த மகளையும் ஒற்றுமைப்பட இளமூரலாலுயிரழிப்பது பெரிய தோரநீதியாமாகலின் இனியேனும் இம்மகட்கு இனியதாம்படி நகையாடுக. எ-று. இனிப்போது நகையாடலே என்னும் பாடங்கொள்ளின், இளமூரலித்தன்மைத்தாயின் குன்றுதசெங்கோல் வளர்ப்பீர்போலக் கன்னிநாட்டை யாளுதற்கு நீர்கொண்டுள்ள நகையாதோ? அறியகில்லேம்; இனி நகையாடலமையும் ஆடற்க. என்க.

சுக. காரம்வைத்துழிப் புண் ஆறுதல் உலகியல்பு. நீர் நிலவாகிய காரத்தைவைத்தும் ஆறுமற் பசும்புண்ணேயாகிமிகுவது என்னை? எ - று. இது தலைவிகூற்று. காரம்வைத்தென் என்பதும் பாடம்.

சுஉ. இந்திரனுக்கு நேர்ந்த பிரமகத்தியினும் இந்த ஸ்திரிகத்தி பெரும்பாதகத்ததாகலின் இது நீங்காதென்றபடி. அடைந்தேம்விட-அடைந்த எங்களுக்குத்தவிர என்க. விடவென்பது உரிமைகுறித்து நிற்பதோர் மொழி.

சுச. நெஞ்சே! கூந்தலையுடையாட்குக் கண்கள் நிலைபெறுமலைமோதும் கடலையொக்கின்றனவாகலின் அடிமை செய்யார் போல் அஞ்சேல். எ - று. சோலையிற் காணப்பட்ட இவர்கண்களிமைத்தலான் மானுடமாதே ஆகலின் நம்மாலெய்தக்கூடுமென நெஞ்சிற் கறிவுறுத்தது. கடல் கண்ணுக்கும் அலை இமைக்கும் ஒப்பு.

ருச. சோமசுந்தரக்கடவுள் பவனிபோதுதற்பொருட்டுச் சந்நிதிவாயிலைக் கடக்கும்போதே எதிர்ப்பட்டவொருபெண் உமாதேவியார் இடப்பாகத்தமர் தலைக்கண்ணுற்று அப்பேற்றைத் தானும்பெறவேட்டு அயராநிற்க; அதுகண்ட மற்றொருத்தி அந்தோ இவளெண்ண முற்றுதாயின் உயிர்வாழாள் போலும்.

பெண்பழியஞ்சிய இவ்விறைவர்க்கு அவமே ஒரு பெண்பழிவந்தது. இதை என்னென்று விதப்பேன். கொடியிடமாகப்போந்ததோஷம் ஐயர்க்கு அடியிடுமுன்னரே அடுத்தவாறு நன்று என்று பரிந்துரைத்தபடி. கொடியிடமாகப்போதருதல் என்று மிவர்க்கியல்பாக அன்றெல்லாம்விளையாதபழி இன்றுவிளைந்தது அதிகவியப்பென்பது. இது காக்கையிடமாதல் அபசகுனமென்பதையும் உள்ளுறையாகக்கொண்டது. கொடி—காக்கை.

ருரு. எமது தலைவராகியமதுரேசர் இவ்வரையையகன்று சென்ற இக்காலமானது வெள்ளியமுல்லையின் சிற்றரும்புகள் எங்கும் மணம்வீசத்தொடங்குங்காலமும், எம்மவர்கள் வீதிதொறும் எம்மைச்சினந்திகழுங்காலமும், அநங்கனுகியமன்மதனும் வரிந்தவில்கொண்டு உருவொடு வெளிப்படுங்காலமும், இளஞ்சந்திரன் நம்முடைய பேரறிவினுவகையை அழிக்குங்காலமும், மெல்லிய இளந்தென்றலும் எமதுயிரழியச் சஞ்சரிக்குங்காலமும், மனமானது கற்போடும் நாணோடும் மாறுபடுங்காலமும் (ஆகுமேல் எங்ஙனமுய்வது?) எ-று. அளவின்மணம்-அளவில்லாதமணமுமாம். எமது சுற்றத்தாராதியர் என்னைச்சினந்து அலர்தூற்றுங் காலமெனலும் ஒன்று. மனம் மாறுபடுதல் - நிறையும் நாணுமிழத்தல்.

ருஎ. செங்கல் - சிவந்தகல், சிவந்தமலையாகியமேரு; வீடு - கிருகம், முத்தித்தானம்; வறும்பாழது - நுகரப்படும்பொருள் ஒன்றுமில்லாதது, சிதாகாயமாயது; எருத்துக்கொட்டிலும் பொன்வேய்ந்திடச்செய்தல் - எருதுபிணிக்குங் கொட்டகையும் பொன்னாற் கூரைமூடச்செய்தல், அவரெருதாகிய திருமாலுக்கு ஒட்டாகிய இல்லும் பொன்னென்னும் பெயர்பெறச்செய்தல். இல்—அமருந்தானமுமாம். ஒட்டு - கலப்பு. இல் - இலக்குமி, உறைவிடம். அருந்தனம் நமக்கு ஓதனமே - ஓகோ! நமக்கு இவ்வுலகின்செல்வம் ஒரு அருந்தனமாகுமோ? நமக்கு அரிய செல்வம் சோறேயாம்; ஆடகம் - பொன், நடிக்குமிடம் எனச்

சிலேஷைப் பொருள்கொள்க. அப்பாவென்பது சித்தராதியர் வழங்கும் சொல்விழுக்காடு. மேய்ந்திடவெனப்போலியாகவும் பாடமுண்டு. சித்து - இரசவாதம்.

ருஅ. சோமசுந்தரக்கடவுளுக்கு ஆதனங்கள்பதித்த ஆபரணம் எலும்பின்மாலையே, அன்பமைய அங்கீகரிப்பது என்னுடையதொண்டே, திருமேனியிலணியுஞ்சந்தனமும் வெள்ளிய விபூதியே, ஏற்கவிரும்புவதும் எளியபிச்சையே, (திரிபுரத்திலே) அம்பைவிடுத்தற்குத்தாங்கியது ஒருசிவந்தபொன்மலையே, (காதலோடு) தாங்கியணைப்பது முருகக்கடவுளென்னும் ஒருபுதல்வரையே, (அத்தகையர்) உலகங்களை யீன்ற உமாதேவியாரது அழகியமணாளரே, அவர்வாழ்வது கூடலென்னுந் திவ்விய தலமே. எ-று. முதிர்வில்லது வெண்மையெனப்படுதல்போலச் சிறுபலி வெண்பலியெனப்பட்டது. எண்பலியெனப்பிரிப்பதில் மோனைநயமின்மைதேர்க. ஏந்தியணைப்பதும்பாடம்.

சூஉ. காமர்மெய்கறுத்தமை தேவியை யிடப்பாகத்திலுடைமையால். கறுத்தல் - மன்மதனுருடலைச் சினந்தெரித்தமையுமாம். என்றன்பாலிங்குத்தோயீரென்பது-என்பாற்கலக்கிலீரென்றும், என்பாலைத் தோயுமென்றும்; அகத்தில் மத்திட்டு மதிக்கின்றீரென்பது - என்மனத்தில் மயக்கத்தைச்செய்து கலக்குகின்றீரென்றும், தயிரில்லாமல் வாளா என்வீட்டில் மத்திட்டுக் கடைகின்றீரென்றும் இரட்டுறமொழிதலாய் நிற்பதோர்க.

சூரு. குளிர்ந்த சந்திரனிடத்தும் சிறியதென்றலிடத்தும் (தமதுசெங்கோன்மையைச் செலுத்துதல்) இல்லாமல் (மலரம்புகளை) எய்கின்ற மன்மதனது கரேமான கருப்புவில்லும் கொடிய அம்புமே கொடுங்கோன்மை முழுமையுந் திரும்படி மதித்துச்செலுத்திய செங்கோன்மை யானது, சிலதேவர்கள் மனந்தளர்ச்சி யடையக்கண்டு அவர்கடைந்த பாற்கடலிற் றோன்றிய விடத்தையுட்கொண்டு அவரைக்காத்த சொக்கநாதருக்கு யாது

சிறப்பாம். எ - று. முந்திய நான்கனுருபிரண்டையும் ஏழனுருபாகக்கொள்க. கோரமது அது பகுதிப்பொருள்விகுதி. ஏ-பிரிநிலை. மன்மதனுக்குரிய குடையுந்தேருமாய்நிலவி என்னைவருத்தும் சந்திரனையும் தென்றலையும் அடக்காத இவர்க்கு அவனுடைய வில்லம்புகளின் கொடுமையை வென்றனரென்னும்புகழ் யாதுசிறப்பை விளைக்குமெனத் தலைவியிரங்கியவாறு. சந்திரனுக்கும் தென்றலுக்கும் இன்று அம்பெய்யும் மன்மதனது கொடும்புத்திக்கும் (எப்பொழுதும்) கொடுங்கோன்மையே யுள்ளது ஆயின் மற்றெங்கும் கொடுங்கோன்மை தீரமதிக்குஞ் செங்கோன்மையென்னும் என்னலும் ஒன்று.

கூச. கரியகண்டங்கரந்த சோமசுந்தரபாண்டியனது கூடலிற் பற்றுடையீர்! எனதுஉயிரினது வடிவமும் பெண்வடிவமாம்; அவ்வுயிரை அருவமென்பதென்னே. எ-று. தான்கலந்தபெண்ணையே தனதுயிராகக் கூறலின் இது நலம்பாராட்டற்றுறை. நெஞ்சிரேயெனத் தலைவியையேவிளித்து நலம்பாராட்டியபடி. நெஞ்சென்பது உயர்த்தற்கண் நெஞ்சாரென்றாகி விளியுருபேற்ற தெனலுமாம், நிருபர்வந்தனைதலிற் கருத்துடைய மங்கையர்களே! அவருருவமும் சத்தியினதுவடிவமாம்; அவர்க்கியற்கை வடிவம், அருவமென ஆய்ந்துரையாநின்றது என்னுயிர்; இவ்வாறாயின் அவர்வந்தனைவதெவ்வாறு? என அவ்விறைவரைக் காதலித்தமடந்தையருள் ஒருத்தி ஏனையர்க்குணர்த்தியதென்பதும் ஒன்று.

கூரு. இம்மதுரையில் கூன்பாண்டியர்க்கு ஆளுடையபிள்ளையாரணிந்த விபூதியையேயணிந்தும் அவருக்குநீங்கியதுபோல எனக்கு வெப்புநோய் நீங்கிலது; அத்தருணத்தே அவனுடைய தனுவின் கூனிமிர்ந்ததுபோல மன்மதனதுதனுவின் கூனிமிரவுமில்லை: இவ்விரண்டும் இங்குச்சித்தியாமையின் இது மதுரையென்னுந் தலமன்றோ? மொழிவாயாகவெனத் தலைவிவருந்தியவாறு. காம அனலம் - காமாக்கினி. ஆ ஆ என்னே வியப்பு.

கூஅ. ஒருமுறை பாலவிர்த்தகுமாரனானமைபற்றித் தேவரீரை வியக்கும் உலகர் பலமுறையும் பாலவிர்த்த குமாரனாகி வரும் என்னை வியவாமைக்குக் காரணம் என்னே? எனவிதப்பார் போன்று தம்பிறப்பிறப்புக்களின் இடர்ப்பாட்டை விண்ணப்பித்தபடி. கண்களாயமைந்த அக்கினி பானு சந்திரனென்னு மூவருள் இருவரைவிதந்தமையின் பரமனென்பது ஈண்டுச் சந்திரனையுணர்த்திநின்றது. சாம்பன் - உமையோடு கூடியவன்.

எரு. அறியாமையுடைய கிளியே! சக்கரப்படையை யுடைய திருமாலின் புதல்வனாகிய மன்மதன் அநங்கனாயிருந்துகொண்டே திரண்டதனங்களினும் மலர்க்கண்களினும் தொடுத்த அம்புகளின் கொடுமைகளைமாத்திரமா எனதுதாய்தொடுத்த வீண்சண்டையையும் மதுராபுரிக் கடவுளுக்கு ஓதினையில்லை: நீ வாழ்வாயாக. எ - று. வாழியென்பது ஈண்டு வருத்தமிகுதியால் வாழ்த்துவதுபோன்று வைதலின்மேற்று. "வாழ்ந்துபோதிரே" எனச் சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூர்த்தேவாரத்திலருளியவாற்றானும் உணர்க. ஊழிமுதல்வர்க்கு ஓதலையெனக் கூட்டுக. ஊழிமுதல்வர் - ஊழிக்காலத்தும் அழிவில்லாதுள்ள முதல்வர். அம்பு ஆகுபெயர். அம்போவென்புழி ஓ வினைப்பொருட்டு. வம்பும் என்னும் உம்மை தொக்கது. இளமையுடைய கிளியே! வாழ்வாயாக; ஊழிமுதல்வரால் உடலையிழந்திருந்து கொண்டே மதன்றொடுத்த அம்புகளோ திரண்டமுல்லைமலரும் தேனையுடையமற்றைமலர்களுமாம்; எனதுதாய் சற்பித்துச் சொன்ன பழிச்சொல்லோ அவற்றினுங் கொடியதாம் எனலும் ஒன்று. அம்மதனம்புகள் தாயலர்போலக் கடுந்துயர் விளையாமையின் சூடுமலரையொத்தனவெள்பாள் முல்லையும் ஏனைமலருமே யென்றாள். முல்லையை வேறுபிரித்தமை கற்பென்னும் பெயருடைமைபற்றி மகளிர் தங்கையால் நாளும்வளர்த்து விழைந்தணிவது குறித்தென்க. இதனை *"கற்புக்காட்டிய கைவளர்பூங்கொடிக் கமழ்ந்த, கற்புக்கூந்தலர்" எனவும், † "முல்லை

யக்தொடையருந்ததிமுத லெழுமுனிவர்துணைவியர்" எனவும் வருவனவற்றானும் அறிக. அளவுகடந்ததுன்பத்தைத் தலையளவா யிற்றென்றேனும் தலைக்குமிஞ்சியதென்றேனும் கூறுவதுமரபா கலால் அவ்வாறே, அம்பால்விளையும்வருத்தமோ திரண்முலையுங் கண்மலருமாகிய அளவில்நின்றன தாய்தொடுத்தவம்பின்வருத் தமோ தலையளவாயிற் றென்றும், சேய்தொடுத்த அம்பு திரண் முலையினும் கண்மலரினும் பாய்ந்துதொடுத்த வம்பென்றும் கொள்ளலுமாம். பிந்தியபொருட்கண் ஓ வியப்பு. வாழி அசை. தாய்த்தொடுத்தவெனற்பாலது எதுகைநயம்பற்றி வலிமிகாதா யிற்று என்க. உருவழிந்தேன் உருவழிந்தென்என்றும்பாடம்.

அக. இமைப்பினின் மறைத்தல் - நொடிப்பொழுதின் இல்ல தாக்கல், கண்ணிமைக்குங்கால் மறைவித்தல். விடுத்திடுதல் - மீண்டுங்காணவிடுத்தல், கண்விழிக்குங்கால் தெரியச் செய்தல். எட்டுவரையைக்கடலை முட்டியுளடக்கிடுதல் - அட்டகுல மலை களையும் கடலையும் கைப்பிடியுளொடுக்கல், எள்ளையும் துவரை யையும் கடலையையும் சிறுகலயத்து ளடங்கப்புரிதல். செப்பு- சிமிழ், சொல். ஒருசொல்லென்றது பஞ்சாக்ஷரம் அல்லது பிர ணவம். குணமெட்டு - தன்வயத்தனாதல்முதலியன. சம்பிர தம் - சாலவித்தை.

அரு. மன்மதனுக்கு உடலின்மை பிரசித்தியாகலின் உயி ரொன்றும் உளதோ இலதோவென்று உயிரளவில் சந்தேகித் தாள். முலையேயணிந்த முகிழ்நகை - முல்லையரும்புகளையொ த்த அரும்பியநகை. முல்லைமுகிழணிந்த நகையென மாற்றலும் ஒன்று. முகிழ் - அரும்பு. அணிந்த - உவமவாசகம்.

அஎ. குண்டுநீர்ப்பட்டத்து ஒண்டுறைச்சங்கம், முத்தைத் தன்னுள்ளே பயிலப்பெற்று, நீரைவிட்டுக் காவின்கண்ணே இயங்குதலற்று, சிறந்த இசைக் கூறுபாடுகளை ஆராய்ந்து ஒலித்

(எகு) * திருத்தணிகைப்புராணம். † பிரபுலிங்கலீலை.

தனவாகிச் சஞ்சரிக்குமெனவும்; வண்டமிழ்க்கடலின் தண்டுறைச்சங்கம் முத்தகச்செய்யுட்களிற்பழகி, காவியங்களைக்கற்று, சித்திரப்பாட்டிலக்கண நூல்களை ஆய்ந்தனவாகி ஒழுகுமெனவுங் கொள்க. கிடைத்ததெனவென்பது தொகுத்தலாயிற்று; கிடைத்தஇடம் இதுவென்று என்பதுபொருள். ஊற்றம்-பற்றுக்கோடு. சங்கம் - சங்கு, வித்துவசங்கம். இயங்கு - முதனிலைத் தொழிற்பெயர். முத்தகம் - தனித்தனி முற்றுப்பெறுஞ்செய்யுள். காவியம் - கவியினுற் செய்யப்பட்டது. சித்திரப்பாட்டியல் - அக்காலத்துவழங்கிய ஓர் இலக்கணப்பாட்டியலாகவு மிருக்கலாம்; பன்னிருபாட்டியல் வெண்பாப்பாட்டியல் என்பனபோல. சித்திரப்பாட்டியல்-நால்வகைக்கவிகளுள் சித்திரகவிகளின் இலக்கணமுமாம். வலியான் - கரிக்குருவி.

அகூ. மான்போலுங் கண்படைத்ததேவியை இடப்பாகத்திற்கொண்டவர், மானை இடக்கரத்திலேந்தியவர், நஞ்சுண்டு கண்டங்கறுத்துள்ளார், என்னெஞ்சத்திலார்ந்து களங்கத்தை அறுத்துள்ளார், கையிற்கொண்ட மேருவைத் தலைமைவில்லாக வளைத்தவர், மன்று ஆலயமாக அதிலே நடித்துள்ளார் என்பது. திளைத்திர்-திளைக்கின்றீர்; காலமயக்கம். பாராட்டுந்தாய் ஊட்டுந்தாய் கைத்தாய் முலைத்தாய் செவிலித்தாயென ஐவகைப்படுதலின் அன்னைமா ரென்றது. வாய்வெளுத்தலும் கண்சிவத்தலும் தலைவனைக் கூடியவர்க்கும் நீராடியவர்க்கும் உண்டாகலின் கூடுதலி னிகழ்ந்த குறியாகவுங் கொள்ளக் கூடுமென்பாள் சங்கையிற்படி லென்ருள். இது நீராடல்செய்யுமகளிரைநோக்கி ஒருதலைவிகூறியது. நதியாடிவந்தார்போன்று தலைவரைத்தலைக்கூடிவர்ந்த தலைவியரைநோக்கிச் சாற்றியதுமாம். இங்ஙனங்கொள்ளின், திளைத்திராலென்பது திளைத்தீரில்லையென்றும், பாவமேயென்பது பரிகரித்துவிடலாமென்பது உமது பாவனையே அது சித்தியாதென்றும் கொள்க. கொழிதரங்கமென்றும் சந்தயப்படிலென்றும் பாடம்.

கூகூ. திரு - திருவுடையவளை யுணர்த்தலின் பண்பாகு பெயர். திரு - அழகு. வேய் - ஒற்றர்; ஒற்றராவார்-ஆங்காங்கு நிகழும் இரகசியங்களைப் பிறரையுறாதபடிபுக்கு அறிந்துவந்துரைப்போர். உறவானவேய் வகைசொல்லுமென்பதற்கு, களவொழுக்கமாதியபற்றி என்மகட்குநேர்ந்தவகையையே யாண்டும் பரவியிருத்தலை உறவாயுள்ளவொற்றர் கூறுநிற்பரென்க. உறவானசனங்கள் வெறிதுகற்பித்துக்கொண்டவகைகளைச் சொல்லாநிற்கும் எனினும் அமையும். ஆன - வினையாலணையும்பெயர். வேய்வகை - வினைத்தொகை. கன்றி - கன்றவென்பதன்றிரிபு. கன்றுவித்துமாம். இரங்கும்-ஒலிக்கும். தீ-கொடுமை; பிரியாதார்க்கு இனிதாதலுமாம். மெல்ல - மந்தகதியாக; மென்றுதின்னவுமாம். மனம் இடைந்தது - மனம் தன்வசமிழந்தது.

நீதிநெறிவிளக்கம்.

கக. இனிய சொல்லையுடையவனும் தக்கார்க்கு அடங்கிய ஒழுக்கத்தை யுடையவனும் ஆயினும் பொருள் சிறிதும் இல்லானாயின் அவனை நோக்கி வன்சொற்சொல்லுதலில் ஞாலத்துள்ளார் வாய் திறப்பதல்லது இன்சொற் சொல்லுதலில் வாய் திறவார்; கடுமொழி கூறினும் பொருளுடையானது காலின் கீழே அடங்கி நடப்பார்கள்; ஆதலால் பைத்தியகுணத்தை யுடையவர்கள்; நற்குணங்களை யுடையோரல்லர். எ - று. வன் சொல்லின் அல்லாதது இன்சொல். என்-எவனென்னும் வினைப் பெயர். கைத்து - பொருள். ஞாலம் இடவாகு பெயராய் ஞாலத்தாரை யுணர்த்தலின் அவ்வெழுவாய்க்கியையக் கூறப்பட்டுள்ள வாய்திறவா ஒதுங்கும் பித்துடைய பிறவல்ல என்னுஞ்சொற்களைப் பொருட்கியையப் பலர்பான்முடிபாக்குக.

குள. சிநேகத்தில் வஞ்சம்வைத்துப் பிறரறிந்துகொள்ளக்கூடாத கரவுபுரிதலையே ஆராய்ந்துகொண்டு பகைவர்நிலைமை யுடையராய் இருந்தவர்க்கு விரைய உயிரிழக்கும்படி நேர்

தற்காரணம் அவர்வாழ்தற்குப் பலமாயிருந்த ஆயுண்முடிந்த தன்று; மற்றென்னெனின், இயமன் இடையேபுகுந்து அவருயிர்கவர்தலாகிய நடுநிலைமையின்மைச்செயல் தன்மாட்டுநிகழ்வதைக் கவனியாமல் சும்மா இருப்பன்போலும்: அதனாற்றான் அது நிகழாநின்றது. எ - று. இதன்கருத்து:—வஞ்சகமாகச் சிநேகித்து ஒருவர்க்குத் தீங்குசெய்யக்கருதுவோர் ஆயுண்முடியுமுன்னரே விரைந்தழியாநிற்பர்; இயமனோ நடுநிலைமையுடைமையால் நடுவனெனப்பெயர்பெற்றவனாகலின் இச்செயல்புரியத்துணியான் அங்ஙனமாகவும் இது நிகழாநிற்றலின் அவர் புரியும் அத்தீமைகாரணமாக அவன் மறந்துகிடக்க அதனால் நிகழ்கின்றதுபோலுமென ஓர்வகைச் சாதுரியம்படச் சாற்றியது.

எஎ. பரதாரகமனம் பராரிதமாதலால் அது அறமென்னும் இன்பநூலுடையானைநோக்கி அது அறமேயன்று; அறமாயினும் ஆக; அது ஒருகணப்பொழுதாயினும் நல்ல இன்பத்தையுடையதாயின் கொள்க; அக்காலத்திலனுபவிப்பது உடலநடுங்கும்படி மனநடுங்குகின்ற நடுக்கமன்றோ? இன்பமல்லவே: ஆகலின் அது ஒழிகவென்பது, பராரிதம்-பிறர்க்கு இன்பந் தருவது.

எகூ. பிறிதுமற்றென்செய்வாரென்பதும் பாடம். கொலையஞ்சாமைமுதலிய இவையேயல்லாமல் வேறு யாதுசெய்வாரென்பது பொருள். எனவே, இவற்றின் வேறாகிய எந்தநன்மையுஞ் செய்யவறியா ரென்றபடி.

கூக. சாதலில்லாமல் ஆயுள் எல்லையை யுடைத்தாயிருப்பதைக் காண்பரேல் யாம் இளமையம், முதுமையில் தவமாற்றுதுமென்று வருத்தமில்லாமல் கண்ணுறங்கிக் கிடப்பதும் முறைமையே; வாழ்நாள்வரம்பு காண்பாரும் தாழாமே தவநோற்கின்றார்; இதுகண்டுவைத்தும் அவ்வரம்பு காணுதார் உறங்கிக் கிடத்தல் புதுமை யென்றபடி. முதுவென்பது முதுமைப் பருவத்தின் மேற்று. நோற்றல் - பசிமுதலியன பொறுத்தல்.

திருவாரூர்நான்மணிமாலை.

எ. இலக்குமியொடுங்குந் திருமாலிருதயத்திற் பொலிந்த தியாகேசர் பூதேவியிருதயகமலமாகிய திருவாரூரினும் பொலிதலால் அத்திருமாலிருதயகமலம் போலவே இத்திருவாரூரும் கமலாலயப்பேர்வாய்த்தது. எ - று. கமலாலயமென்பது - கமலா லயப்பட்டதானம், கமல ஆலயம் என இரட்டுற மொழிதலாய் நின்றது. கமலா - இலக்குமி. மண்மக ளிதயகமலமாய்ச் சிவபெருமானுக்கு ஆலயமுமாதலால் ஆரூர் கமலாலயப் பேர்பெற்றதுமன்றிக் கமலையொடுங்கி வழிபட்டமையாலும் அப்பெயர்பெற்றமையை "மருக்கமழ் மலர்மென் பாவை மாதவம் புரித லாலே, திருக்கம லால யப்பேர் பெற்றதிச் செல்வமூதூர்" என்னும் அத்தலபுராணத்தானும், ஆரூர் பூதேவிக்கிருதயகமல மென்பதை "மேதினிக் காதன் மங்கை யிதய கமலமா, மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால்" என்னும் பெரியபுராணத்தானும் அறிக. அக்கமலமானவாய்த்ததுஎன இயையும்.

கO. தாமரைகளையுடையவாவிகள்சூழ்ந்த கமலைக்குத்தலைவரும் புள்வாய்கிழித்த திருமாலாகிய அம்பையுடையவரும் எவ்வுகங்களினும் அழிவில்லாதவருமாகிய தியாகேசப்பெருமான் றிருவடிகளையடைந்த எனதுயிர்ப்போரைவேட்டு ஆயிரமியமன் பகைத்தெதிர்க்கினும் யானஞ்சேன் ; நாவே ! நீயும் அக்கடவுள் நாமங்களையே இயம்புக ; நல்லமனமே ! நீயும் அவற்றின் பொருள்களை ஆய்ந்துணர்க. எ - று. ஓர் உக எனப்பிரித்து நாமங்களை ஓர்வாய், ஓர்ந்து உகப்பாயெனலும்; ஓருக - தியானிக்க எனலுமாம். திருமால் கிருஷ்ணவதாரத்தில் ஓரசுரன் கொக்கினுருவாயெய்திவிழுங்குதலும் விழுங்கும்வாயை உடன்கிழித்தனரென்பது புராணசித்தம். தூவியம்பு - இறகுபிணித்த அம்பு.

கச. பலிகாதலித்துச் சிரமேந்திய கரத்தையுடைய கமலேசர் வரதம்வைத்தாலென் ? வரதம் இடக்கரந்தர்தது, அது

இவர்கையன்றே, அங்ஙனமாக, நாமந்தியாகரென்பது தேவியார் அறம்வளர்த்துத் தந்தது கொல். எ-று. இடக்கரம் இவர் கையன்றென்றது இடப்பாகமுற்றும் தேவிபாகமாதல் குறித்தென்க. இவர்கையது சிரந்தந்தசெங்கையன்றே என்றியைத்தலுமாம். வரதம் - வரத்தைக்கொடுப்பது. அது பகுதிப்பொருள் விகுதி, ஆம் அசை. கொல் - ஐயம். ஆமென்பதனை முற்றுக்கிக் கொல்லென்பதனை அசையாக்கலும் ஒன்று.

கக. வெண்டாமரைமலரில்வதியும் கலைமகளிதயத்தில் வைகும்பொலிவாலும் இலக்குமிவழிபட அரியணைமேலமர்தலாலும் மறைமுதலாகிய பிரமதேவரும் நடுமுதலாகிய திருமாலுமாய்த் தாமமர்தலைத் தெரிவிப்பார்போலும். எ-று. கலைமகளிதயத்து வைகுதலாவது - அக்கலைமக ளுருவாகிய சகலசாத்திரங்களினும் உட்பொருளாயமர்தல். மும்மூர்த்திகளுள் இறுதியிலுள்ள உருத்திரமூர்த்தியாய்நிலவும்தாமே கலைமளிதயமும் மலர்மகள் வழிபாடுங் கொண்டமர்தலின் இது ஏனையிருமூர்த்திகளாயும் இருப்பதறிவித்ததொக்குமென்பது. முதலடியில் பூதேவியிதயத்துவைகுதலென்னும் பிறிதொரு பொருளும் தோன்றி நிற்பதறிக.

உ0. மிருகங்களினும் தேவதரு மிகச்சிறந்ததாயினும் விலங்கினுள் விண்ணவர்தரு மிக்கதென ஒருங்குவைத் தெண்ணுவது ஓர்முறை யன்றாகலின் ஒத்தசாதிப் பொருள்களுள் உயர்பும் இழிபும் பாராட்டி வழங்கின ரல்லாமல் வேற்றுச்சாதிப் பொருள்களை ஒருங்குவைத்து அவ்வாறு வழங்கிலர்; ஆகலின் எழுவகைப் பிறப்புள் முதன்மை பெற்ற தேவசாதியுள் தேவரீரே முதற்கடவுளெனச் சுருதியுத்தி யனுபவங்களாற் றேர்ந்து நும்மைப் பழிச்சுதும்; வேதங்களின்றுணிபுகொண்டு எளிதிற் றேர்துமெனப் பன்முறை யாராயினும் மெய்ம்மை தெளிவரிது; அதற்குக்காரணநாடின் பரிபாகிக ளல்லாதார் நும்மைத் தேவருளொருவ ரெனத் தேர்ந்து பரிபாகம் வரும்வரையும்

பிறதெய்வபத்தியி னெழுகுமாறு நீரே உமது உண்மைநிலைமை யை மறைத்துக் கூறிவைத் தருளியதாகும்; அற்றுகலினன்றே இவ்வியல் பறிந்தோர் மறையென அவ்வேதங்கட்குப் பெயரிட்டுவைத்தனர். எ - று. தெரிப்பு - ஆராய்வு. மறை - மறைக்கப்பட்டது; மறைபொருளையுடையது என்னும்பொருட்டு.

உக. கமலையிலமரும்முதல்வரே முதல்வரெனக்கற்றுணராது பிறதேவர்களை முதல்வரெனக்கொண்டு பிணங்குவோர் வினவும் வினாவிற்குத் தருமதேவதையாகிய விடையே விடையாக நிலவவும் உண்மை தெளியாராய் மயங்குமிது வென்னே! எ-று. கடாவாவன-திருமாலும் பிரமரும் மும்மூர்த்திகளு ளிருவரேயாக அவர் ஏன் கர்த்தாவாக மாட்டார் என்றற் றொடக்கத்தன. தருமதேவதைவிடையாதல் - சென்றதொருபிரளயத்திலே திருமால் பிரமராதியர் பொன்றல்கண்டு தனக்கும் அவ்வியல் பெயதுமே யென்றேங்கி விடையுருக்கொண் டெய்திச் சிவபிரானைப் பரிக்கப்பெற்று அழியாநிலைமை யெய்தியதை வடிவால் விளக்காநிற்றல். இனி, இலக்குமிகணவரே தலைவரெனக் கல்லாதார் வழங்குங் கடாவிற்கு அத்திருமாலுருவாகிய விடையே விடையாய் நிற்கவும் உண்மை யுணராது ஐயுற்று மயங்குமிது வென்னே எனலுமாம். இவ்விடையே விடைகூறலாவது - தன்னுலேந்தப்படுங்கடவுள் சிவபெருமானேயெனத் தன்வடிவா னுணர்த்தாநிற்றல். பிறரால் பேதிக்கப்படாததென்பார் வெல்லும் விடையென்றும், முன்னர் மயங்கிக் கடாவினும் பின்னர்த் தெளிவது ஒருதலை யென்பார் இடையே மயங்குமிது வென்னென்றும் கூறினர்.

உஎ. இது நாணிக்கண்புதைத்த லென்னுந்துறை. அஃதாவது - ஓர்தலைமகள் ஒருபொழிற்கண் தன்னைக்கண்ணுற்றுக் காதலித்த தலைமகனைத் தானுங்காதலித்தாளாயும் நாணமுண்மையைக் கண்பொத்துதலானும் காதலுண்மையைத் தனங்காட்டிமறைத்தலானும் புலப்படுத்தலையுணர்த்துவது. அவளுடலம்

மலர்புரையும் முகமாதிய உறுப்புக்களையுடைமையின் மலர்ப்பொழிலெனப்பட்டது. அவ்வுடலுறுப்பனைத்தும் முன்னர்த் தோன்ற நின்றமையின் மலர்ப்பொழில் குத்தகையாத் தந்தீரென்றும், காணப்பட்டிருந்தவற்றுள் கண்கள் பொத்தப்பட்டமையின் இருமாவடுக்களை முன்னர்க்கண்டு பின்னர்க்காணேனாயினேனென்றும், முதற்கண்டுழி மறைக்கப்பட்டிருந்த தனங்கள் பின்னர்க் காட்டிமறைக்கப்பட்டமையின் புதியவாகத் தோன்றிமறைந்தன வென்பதுதோன்ற இளநீரும் நிற்பக்காணேனென்றும் கூறியவாறு. குத்தகையாத்தருதல் - தமக்குரியபொருளைப் பிறர்க்கு அனுபவப்பொருளாக ஒப்புவித்தல்.

உ௮. விண்ணவர் குழாங்கள் வணங்கி அருக்கிய பாத்திய ஆசமனங்களால்வழிபடும்படி இத்தலத்தெய்தினோர் இனிப்பூதலத்துதியாரென்று அனலேந்திச்சாதிப்பார்போன்று மழுவேந்தியகையராகி மாந்தர்பொலியும் கமலையென்றது, அத்தலத்துள்ளார் இம்மையிலேயே சிவசாரூபம் பெற்றவராய் விளங்குகின்றனரென்னும் தலபுராணசரிதநோக்கியென்க. இதனைப் பெரியபுராணத்தும் நமிநந்தியடிகள் புராணத்தானும், தேவாசிரயமென்பது தேவர்க்கிடமாகியதொரு திருமண்டபமென்பதனை "பூவார் திசைமுகனிந்திரன் பூமிசை, மாவா ழகலத்து மான் முதல் வானவ, ரோவா தெங்கு நிறைந்துறைந் துள்ளது, தேவா சிரய னெனுந்திருக் காவணம்." என்னுந் திருக்கூட்டச் சிறப்பானும் அறிக. தேவ + ஆசிரயம் தேவாசிரயனென்றாயது போலி. எழுதாக்கிளவி - வேதம். இருடீர்காட்சிப்பொருள் - மயக்கத்தினீங்கிய பிரத்தியக்ஷப்பொருள். எய்யாமை— அறியாமை.

௩க. கமலேசர்திருவும் உமையாள்திருவுருவும் முருகக்கடவுள் திருவுருவுமாகிய மூன்றும் உலகிற்குக் காரணமான அருவம் உருவம் அருவுருவமாகிய இலய போக அதிகாரமென்னும்

முக்குண வடிவமாக இருத்தலினால் இவரை உலககாரணரென்று அறிஞர் கூறுகின்றனர். ஏ-று. அருவுருவென்பது அரு உரு அருவுருவெனப் பிரிக்கப்படும். அருவடிவாகியகுணங்கள் மூன்றின் உருவெனலுமாம். இவ்வாறன்றி, சத்துவம் வெண்ணிறத்ததாய் ஆன்மாக்கட்கு ஞானத்தையும் தாமதம் கருநிறத்ததாய்ப் போகத்தையும் இராசதம் செந்நிறத்ததாய் அவ்விரண்டன் பிரவர்த்தியையும் விளைவித்தலின் முக்குணங்களையும் மூவர்க்கும் உருவகித்ததுமாம். தியாகேப்பெருமான் சோமாஸ்கந்தமூர்த்தியாகலின் இவ்வாறு கூறினார். மூன்று நல்லுருவாதலின் என்பதும் பாடம். நவில்கின்றார் - நவிலப்படுகின்றார்.

ருரு. விரகமிக்க மகளிர்க்கு வெறுப்புகாரணமாக அமுதமும் விடமாகக் காணப்படுமாகலின் தேவாமுதத்தை யொத்த வுணவையும் விடமெனவே கொண்டு நம்முயிர்த் தோழியர் நமக்கு விடநல்குவரோ நல்காராகவும்நல்கலின் நந்தலைவர்க்குரியவுணவு விடமேயாகலின் அவருண்டெஞ்சிய உணவேபோலுமிதுவென்று உட்கொள்வள்; மீட்டும் நந்தலைவர் நமதுள்ளத்திலேயே அமர்கின்றாராகலின் அவர் என்மிச்சிலை ஒருக்காலுண்பரென உண்டவுணவை உட்செல்லாவண்ணந்தடுத்துப் புறத்தே உமிழுவள். ஏ - று. இத்தகையவியல்பு காதன்மிகுதியானிகழ்வதென்பதனைத் திருக்குறளில் காதற்சிறப்புரைத்தவதிகாரத்தானும் காண்க.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

செங்கீரைப்பருவம்.

உ. குடமுதலிய காரியங்கள் ஒரு கர்த்தாவை நிமித்தகாரணமாகக் கொண்டிருப்பதுபோலச் சிவஞ்சத்தியென்னும் தம்மை நிமித்தமாகக்கொண்ட சகலவண்டங்களுக்கும் தம்மிருவருடைய அம்சங்களும் கூடியிருக்கவும், தனக்கு அப்பொருள்களிட

த்துள்ளவுரிமை பாதியன்று முற்றுமேயென்பதைநாட்டுதற்கு ஒருசான்ருக "சர்வமும் சத்திமயம்" என்னும் சுருதியைபிறுவியும் அமையாது, அத்தம்பிரான் திருமேனியினும் நேர்பாதி கொண்ட தையனுயகியம்மையின் குமாரரே! செங்கீரையாடியருளுக. எ-று. உலகமுற்றும் தம்மயமெனக் கொண்டதுமன்றிச் சுருதியாதிகட்குத்திருவருள்பாலித்த அத்தம்பிரான்திருமேனியினும் பாதியைத் தம்மயமாகக் கொண்ட தையனுயகியெனத் தேவிவல்லபம் கூறியபடி. தமையென்றது சிவஞ்சத்திகளை. தானென்றது சத்தியை. சொம் - உரிமை. செத்துப்பிறக்கின்ற தெய்வங்களுக்கு அவையொழிந்த மங்கலசொரூபியாகிய இக்கடவுளே தலைவராகற்பாலரென்பார் செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள என்ருர்.

௬. மணிமார்பும் செந்நாத்தடமும் உள்ளத்தடமும் வேதச்சிரமும்போல வேளூரை உரிமையாகக்கொண்டமர்ந்தவ! கந்தவெற்பில் விளையாடுமாறுபோலவே கயிலைமலைச் சாரலினும் கனகாசலத்தினும் இமையாசலத்தினும் தெய்வதப்பிடியொடு விளையாடும் மழகளிறு! ஆடியருள் என்பது. மணிமார்புமுதலியன இலக்குமியாதியர்க்கு எப்படி முக்கியத்தானமோ அப்படி முருகக்கடவுள் வீற்றிருப்புக்கு வேளூர் முக்கியத்தானமென்பதூஉம் கந்தமாதனமாதியன விளையாட்டுக்குரியதான மென்பதூஉம் விளக்கியவாறு. ஈண்டு முருகக்கடவுளமர்தல்பற்றி இலக்குமியாதியரும் அகலாதமர்தலின் அவர்க்கு மணிமார்பு முதலியதானம்போல்வதாகும்படி பொலியும்வேளூர் என்னலும் ஒன்று.

அம்புலிப்பருவம்.

க. சந்திரனே! முருகக்கடவுள் உலகர்போற்றுந் தம்வடிவம் அழிவற்றதாகத் தாம் முற்றுணர்வுடையரென வருதல்போல நீயும் வட்டமாகக்கொண்டவடிவம் அமுதமயமாய்ப் பூரணசந்திரனெனவருதலானும், அவர் ஆகாயகங்கை முடியிற்கலக்கவோ

ங்கிய சிவமாகிய ஆனந்தக்கடலிற்றோன்றியமைபோல நீயும் மேலாகியநதிகள் தம்பாற் கூடுமாறுபெருகும் பெருமைபெற்ற சங்குகளையுடைய பெரியகடலிற்றோன்றுதலானும், அவர் வள்ளி நாச்சியாரது வாய்க்குமுதம்வசனிக்கக் கைகளை அஞ்சலிக்குமாறுபோல நீயும் குமுதங்கண்மலரத் தாமரைகளைக் குவிவித்தலானும், அவர் சகலவுலகத்திலுமுள்ள உயிர்கள்செழிக்கச் செவ்விய தண்ணிய கிருபைசுரக்குமாறுபோல நீயும் உயிருடைப் பயிர்களோங்க மிக்ககுளிர்ச்சியைக் கொண்டிருத்தலானும், அவர் இறைவர்கண்ணிற்றோன்றிய கனற்பொறிவடிவமாமாறுபோல நீயும் கண்ணிந்திரியமாதலானும், அவர் நின்னையொத்துளர், நினக்கும் அவர்போன்ற வொருதுணையில்லை ஆதலால் ஆடவா. எ - று.

உ. சந்திரனே! குமாரக்கடவுள் பலநூல்களையுமருளிய பெருமைபெற்ற சங்கப்புலவர்கள் கலைகளின் சுவைகளைக் கைக்கொள்ள அவர்க்குத்தலைவராய் அமர்ந்து உவந்தருளு மாறுபோல நீயும் கீர்த்திபெற்ற பெரிய தேவர்கள் உன்னுடைய கலைகளிற்பெருகும் அமுதத்தைநுகர விருந்துசெய்யும் உவகையை மேற்கொண்டாய், அவர் முன்னர் வெளிப்பட்டுச்சிறிக் கிரவுஞ்சமலையைப்போலவே சமுத்திரத்தையுந்தாக்கிய ஒளிபெற்ற அவ்வேற்படையை உயர்த்தியதுபோல நீயும் உதித்து நின்முன் பெருகி மலைபோல் அலைமோதும் அவ்வடவாமுகாக்கினிக்கிடமாயுள்ள கடலைவிரும்பினாய், அவர் குற்றமில்லாத தமதருட்குணங்களைத்தியானிக்கும் யாசகர்முகங்கள் மாறுபடாதபடி வேண்டியவற்றையளிக்குமாறுபோல நீயும் குற்றமில்லாத நிறமுதலியகுணங்களைக் கொண்டனவாய் இரவிலலரும் குமுதமுதலியமலர்கள் முகங்குவியாதபடி காக்கின்றாய், அவர் சூரியன்வரக்கூவிடும் கோழியைக் கொடியாகக் கொள்ளுதல்போல நீயும் அதைக் கொடியதாகக் கொண்டாய், அவர் அதரமென்னுங் குமுதம்விண்டு சொற்றேனொழுக ஒளி

பெற்றபுன்முறுவல் அரும்புதல்போல நீயும் குமுதங்களலர்ந்து தேன்சொரியச் சந்திரிகைபரப்புகின்றாய் (இவ்வேதுக்களால்) அவரை நீ ஒப்பாய்; உன்னையும் அவர் ஒவ்வாதிரார்: (ஆகலின்) ஆடவா. எ - று. சொல் - ஆகுபெயர். முதலடி அக்கடவுள் தோகைமேலிவர்தலையும் குறித்துநிற்பதோர்க. சந்திரனொளி மழுங்கச் சூரியனையழைத்தலால் குக்குடங் கொடியதாயிற்று.

௬. சம்பரனைப்பொருத சேவகனாகிய மன்மதன் தொன்று தொட்ட தனதுசண்டையை மேற்கோடற்பொருட்டு வந்தான் வந்தானென்று மயங்கித் தனமாதிய வுறுப்புக்களாகிய யானை முதலியவற்றைக் கொண்டணுகி யெதிர்ந்த வள்ளிநாச்சியார் பால் காதல்கொண்டு தேவரீர் சோர்வதுகண்டு இருவரையுங் கூட்டுவிப்பான்முற்போந்த விநாயகக்கடவுளின் சகோதர செங் கீரையாடுக. எ - று. முருகக்கடவுள் மானுடத்திருவுருவாயெ ழுந்தருளினமைபற்றித் தேவவுருவாயுள்ள மன்மதனைக் கூறாது மாநுடவடிவாயுற்ற பிரத்தியும்நனைச்சுட்டிச் சம்பரனைப்பொ ருசேவகனென்றும் இவ்வடிவத்தில் மங்கையரை வருத்துதற் சண்டை இன்மைபற்றி முற்சண்டை கொளற்கென வென்றும் கூறியபடி. ஏகுதல் - ஈண்டணுகுதல். சண்டை - மகளிரைமயக் கும்போர். பெண்ணுருவங் கொண்டணுகிச் சம்பரனைப்பொரு த சேவகனெனவும் கூறுவர். முன்னர் இரதியைக்கவர்ந்த சம் பராசுரன் தனக்குச்சத்துருவாய் மன்மதன் கிருஷ்ணமூர்த்தி தனயனாய் உருக்குமணிபாலுதித்தமையை நாரதமுனிவராலறி ந்து மாயையால் உருக்கரந்தெய்திக்கவர்ந்து கடலிலெறிந்தவழி அக்குழந்தையை ஓர்மீனுண்டதாக அதையோராது அம்மீனை ஓர்வலையனாற்பெற்றுச் சம்பரன் பாகசாலைக்கனுப்பினன். வகி ருங்கால் அதனகத்திருந்த குழந்தையை இரதிவளர்த்துவர நாரதமுனிவரணுகிப் பூர்வநிலைமையை அவட்குரைத்தகலலும் அவளால் அதனையுணர்ந்த பிரத்தியும்நன் அச்சம்பரனைத்தடிந்து இரதியோடு துவாரகையையடைந்தனன் என்றிங்ஙனம் கூர்ம

புராணம் பாகவதபுராணமுதலியவற்றுட் கூறப்படுகின்றதன்றிப் பெண்ணுருவிற்சென்றுவென்றனனெனக் கூறப்படவில்லை.

சிதம்பரமும்மணிக்கோவை.

காப்பு. மணிகோன் அஞ்சம் கரன் கற்பகத்தான் இறைஞ்சும் கஞ்சம் அஞ்சு கரம் எம் கற்பகம் - கௌஸ்த்துப மணியையுடையதிருமாலும் அன்னக்கொடியையுயர்த்திய கரத்தையுடைய பிரமதேவரும் கற்பகமாலையையுடைய இந்திரனும் வணங்குகின்ற தாமரைமலர்போலும் ஐந்துதிருக்கரங்களையுடைய எமது கற்பகவிநாயகக்கடவுள், — செம்மை மணி கோவை கதிர் சூழ் தில்லை சிற்றம்பலவன் மும்மணிக்கோவைக்கு உவந்து முன் நிற்கும் - செவ்விய அரதனக்கோவைகளின் கிரணங்கள் (எங்கும்) பரவுகின்ற தில்லையிலுள்ள சிற்றம்பலவரைச் சுட்டியியற்றும் மும்மணிக்கோவையென்னும் இப்பிரபந்தத்திற்கு மகிழ்ந்து முன்னின்றருளுவர். எ - று. சித் அம்பலம் சிற்றம்பலமெனத்திரிந்தது; ஞானசபையென்பது பொருள். கற்பகமென்னும் எழுவாய்க்கியைய நிற்குமெனப் பயனிலை அஃறிணைமுடிபாயிற்று. மணிக்கோன் அஞ்சக்கரன் கற்பகத்தான் என்னுந்தொடர் "உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே, பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்" என்பதனான் மணிக்கோவஞ்சக்கரக்கற்பகத்தார் என்றாயிற்று; சேரசோழபாண்டியரென்பதுபோல. எம்முன்னிற்குமெனக்கூட்டலும் உண்டு. எம்மணிக்கோ அஞ்சு அக்கரக்கு அற்பு அகத்தாரெனப் பிரித்து, எம்மணிகளினுஞ் சிறந்த உருத்திராக்கத்தினிடத்தும் பஞ்சாக்கரத்தினிடத்தும் அன்பை அகத்திலுள்ளவர் என்றுரைப்பதும் ஒன்று. இப்பொருட்கண் நான்கனுருபை ஏழனுருபாக்கி மணிக்கோ என்பதற்குங் கூட்டுக.

க. இது சிற்றம்பலத் திறைவரைச் சேவித்தவர்க்குத் திருவடிப் பேறுண்டென்பதைப் பிறர்பொருட் டனுமானத்தாற்

சாதித்தது. அடித்தொண்டு செய்யாவெனக்கும் சீருண்டென்பது பிரதிஞ்ஞை, காருண்ட கண்டனைக் கண்டனனாதலா லென்பது ஏது, கடலமுதம் ஆருண்டனர் அவரெவரேனும் அமரர்களே என்பது உதாரணம். இங்ஙனம் மூன்றுறுப்பான் முடித்தவாறு. அடித்தொண்டுசெய்யாதபிறர்க்கும் தரிசனமாத்திரத்தால் சீருண்டென்பதை எனக்குமென்ற உம்மையாற்றழீஇயினாராகலின் அடித்தொண்டு செய்யாதவர்க்குஞ் சீருண்டென்பது பிரதிஞ்ஞை, தரிசனமாத்திரத்தாலென்பது ஏது, கடலமுதமாருண்டனர் அவரெவரேனுமமரர்களே என்பது உதாரணம், யானுங்கண்டேன் என்பது உபநயம், ஆகலின் எனக்குஞ் சீருண்டு என்பது நிகமனமெனக்கொண்டு ஐந்துறுப்பானுமே சாதித்ததெனலுமாம். நீருண்டபுண்டரிகம் - நிறமுதலிய பண்பைக்கொண்ட தாமரை. சீர் - சிறப்பு; அது ஈண்டு வீடுபேறு; "சிறப்பீனும்" என்னும் திருக்குறளானும் அறிக. கண்டனனாதலாலென்பது கண்டனனெனக் குறைந்துநின்றது. அமுதருந்தினோர் அசுரரேயாயினும் அமரராதலின் எவரேனுமமரரென்றார்.

௧௧. சேடசயனத்தை யுடைய திருமால் மைத்துனராதல்பற்றி ஒக்கலென்றார். முன்னொருநாள் அவர் அயனொடுவாதிட்டுக் காணத்தொடங்கியவழி அடிகாணாதுமீண்டவராகலின் வலப்பாதந்தூக்கின், இறைவர்பதங்கண்டேனென் றிசைக்கநேருமாகலால் அதுதூக்காது தேவிக்குரிய இடப்பாதந்தூக்கினரென்பது. படப்பாயலான் - படப்பாயல்வடிவமைந்த ஆதிசேடன் எனக்கொண்டு, பதஞ்சலிமுனிவர்காண இடப்பாதந் தூக்கியவாறு தேவிதிருவடியையூன்றின் அது மெல்லியதாகலாற் பொறாதென உட்கொண்டோ எனலுமாம்.

௧௩. கலி - வலிமை, ஒலி. கால் - கட்டிலின்கால், காற்று. கால்+தேர். கால் - காற்று, உருள். தீப்பொறி - நெருப்புப் பொறி, தீயகண்ணி. மாதவர்-இலக்குமி நாயகர், மிக்கதவத்தர்.

சாபம் - வில், வேடனாகப்பிறந்துவழிபட்டு முத்திபெறக்கட வையென்று பெருமானிட்ட கட்டளை. நற்றவவேடக்கொற் றவர் - நற்றவத்தையுடைய வேடர்தலைவர், நல்ல தவவேடத் தையுடைய முதல்வர். நிறைய - நிரம்ப, எடுக்கக்குறையாது நிறைவுடைய என்றிங்ஙனம் சிலேஷைப்பொருள்கொள்க. பாற்கடல் சர்ப்பசயனத்திற்கு ஆதாரமாதலால் கட்டிலெனப் பட்டது. மாயோனென்பது கட்டிலோடும் பாயலோடும் செ ன்றியைதலின் தாப்பிசை. போற்றுப-போற்றுவர். அஞ்சுதல்- தரிசிக்கின் ஜனனம் அகன்றுவிடுங்கொலென்று பயப்படல். வேடனாகப்பிறந்துவழிபடக் கட்டளையிட்டமையைச் சேஷத் திப் புராணத்துட் காண்க.

கச. நட்டுவராய்நின்று நடிப்பிப்பவரின்றெனவே தன்வயத் தனாதலும், மன்றுளாடுமெனவே பேரருளுடைமையும் குறிப் பித்தவாறு. உண்ணுதல் - அவ்வானந்தத்தேனைப் பருகிக்களித் தல். ஆலையிலிட்டாட்டுவோரின்றித் தானேயாடுவதாய்த் தேன் காட்டு முக்கட்கரும்பு என்பதொருநயமும், கன்றீன்றபிடி நீனி மிகவுண்ணற்பாலதேயாகவும் ஒருகரும்பை நெடுநாளாகவுண் ணுமென்பதொரு நயமுங் காண்க. கண் - நேத்திரம், கணு.

உஉ. வேய்ச்சொற் றெக்கவென்னுந் தொடருக்கு, ஒற்றர் மொழிகளுள்மூன்று ஒற்றுமைப்படின் அவ்வாய்மைமொழியை த் துணிந்தொழுகல்போல ஒருதொழில்பற்றி யோசிக்குங்கால் பிறர்வாயிற்பிறந்த சொல்லினியல்பறிந்து அதனைநம்பி அத்தொ ழிற்கட்செல்வோர் பலர்எனக்கொள்க. மூவர்சொல் தேறப்படு தலை "ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர், சொற்றொக்க தேறப் படும்." என்னுந் திருக்குறளானுந்தெளிக. வாய் - வாய் மை. விரிச்சி - நற்சொல்; அவை இதுமுடியும் இதுமுடியாதெ ன்றற் றெடக்கத்தன. பயன்றூக்காமை - இத்தகையபொருட் பேறுகுறியாமை. குறியாதுவைத்தும் தாந்துணிந்தபொருளை

யுடைத்தெனக் கொண்டோராய் அத்தொழில்கொள்ளினும் குறைபாடுகண்டிலம் என்பது. கோளினுமென்பதுபாடமேல், கோள் - கொள்கை என்க. நகுவது - பெரும்புகழ்நவிற்றற்கு நீவல்லைகொல் என்று பழிப்பதாம். மனன் உணராதுபோலு மென இயையும். போலும் ஒப்பில்போலி.

உஅ. குடிலையிற்றோன்றியவை - சுத்தவித்தை ஈசுரம சாதாக்கியம் சத்தி சிவம்; இவ்வைந்தும் சிவதத்துவமெனப்படும். மோகினியிற் றோன்றியவை - காலம் நியதி கலை; கலையிற்றோன்றியவை - வித்தை அராகம் மான்; இவ்வாறோடு புருடதத்துவ மூன்கூட்டி வித்தியாதத்துவமெனப்படும். மானிற்றோன்றியவை - தன்மாத்திரையைந்து பூதமைந்து ஞானேந்திரியமைந்து கன்மேந்திரியமைந்து அந்தக்கரணநான்கு; இவ்விருபத்துநான்கும் ஆன்மதத்துவமெனப்படும். குடிலை - சுத்தமாயை. மோகினி - அசுத்தமாயை. மான் - பிரகிருதிமாயை.

சிதம்பரச்செய்யுட்கோவை.

௩௩. சிவபிரானுக்கு உமாதேவியார் "மனைவி தாய் தங்கை மகள்" என்பதற்கு, போகசத்தியாயிருத்தலின் மனைவியென்றும், சத்தி சிவத்தையுதிப்பித்தலின் தாயென்றும், சிவஞ்சத்தியென்னும் வேறுபாட்டில் முன்னர்ச்சிவமும் பின்னர்ச்சத்தியுமாயுதித்தலின் தங்கையென்றும், சிவத்தினின்றும் சத்தியுதித்தலின் மகளென்றும் வழங்குவர். இதுபற்றியன்றே திருவாசகத்திலும் "இமவான்மகட்குத் தன்னுடைக்கேள்வன் மகன்றகப்பன் றமைய னெம்மையன் றாள்கள்பாடி" என்று திருப்பொற்சுண்ணத்தில் அருளியதூஉமென்பது.

௪௬. சத்தமும் அச்சத்தாற்பெறும் பொருளும் ஒருங்குடைய ஐந்தெழுத்துருவாய் அமைந்திருத்தலின் பெருமானுருவங்காணவல்லன அனந்தன்கண்களே என்றது, அக்கண்கள் செவி

யுணர்ச்சியையு முடையனவாய்க் கேள்வியாற்சத்தமும் காட்சி யாற்பொருளும் கவர்தலினென்க. இதனைக் கட்செவியென் னும் பெயரீடானும், ஐந்தெழுத்துருவென்பதனை "ஆடும் படி கேணல் லம்பலத்தா னையனே, நாடுந் திருவடியி லேநகரங் - கூடு, மகர முதரம் வளர்தோள் சிகரம், பகருமுகம் வாமுடி யப் பார். சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர, மார்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக், கங்கி நகர மடிக்கீழ் முயலக னார், தங்கு மகரமது தான். ஓங்கார மேநற் றிருவாசி யுற்ற தனி, னீங்கா வெழுத்தே நிறைசுடரா - மாங்கார, மற்று ரறிவ ரணி யம்பலத்தா னுடலிது, பெற்றனர் பிறப்பற்றார் பின்" என் னும் உண்மை விளக்கத்தானும் அறிக.

அ௦. மேவரும் தில்லை சென்றும் - அடைதற்கரிய தில்லையை அடைந்தோம்,—பரலோகமே ஒன்றினம் - (ஆதலால்)சிவலோ கத்திலேயே ஒன்றுதலை அடைந்தேமாயினம்,— ஒன்றின் அம் பரலோகம் சென்றுமே வருந்து இல்லை - அதில் ஒன்றுதலை ய டைந்தால் விண்ணுலகங்களிற் சென்று வருந்துதலுமே யில்லை. எ - று. சென்றபிறவிகளிலேசெய்த சிவபுண்ணிய மேலீட் டால் தில்லையைத்தரிசிக்கப் பெற்றோர் அப்பிறவியிற்றானே சிவகதிபெறுவதுதிண்ணமாகலின் அத்துணிவுபற்றி ஒன்றின மென இறந்தகாலத்தாற்கூறினர். பரலோகமே என்பதி லுள்ள ஏகாரம் தேற்றம். சென்றுமென்னும் உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் பிரிநிலை. வருந்து முதனிலைத் தொழிற்பெயர். சென்றுவருந்துதலுமேயில்லையென உம்மைபிரித்துக்கூட்டுக. அம்பரலோகங்களினும் அசுரர்பகைமை நோயுடைமைமுதலி ய துன்பமுண்டாகலின் அவற்றிற்சென்றுவருந்துதலுமில்லை யென்றார். எனவே, அவற்றிற்றாழ்ந்தனவாய் இன்பமின்றித் துன்பமே மிக்குள்ள ஏனையுலகங்களிற்சென்று வருந்தலில்லை யென்பது வருக்கவேண்டாவாயிற்று. இதுபற்றியே கோயிற் புராணத்திலும் "மண்ணிலிரு வினைக்குடலாய் வானிரயத்

துயர்க்குடலா, யெண்ணிலுட லொழியமுய விருந்தவத்தா லெ ழிற்றில்லைப், புண்ணியமன் றினிலாடும் போதுசெய்யா நடங் காண, நண்ணுமுட லிதுவன்றோ நமக்குடலாய் நயந்தவுடல்” என விளக்கியிருப்பதோர்க. ஏனை ஏகாரமூன்றும் ஈற்றசை. இவ்வாறன்றி, மேவுதற்கரிய தில்லையிற்சென்று பரபோகவின் பத்தையே அடைந்தோமாயினம், அதையடைந்தோ மாதலால் (இனி) விண்ணுலகங்களிற்சென்று அநுபவிக்கும்போகாதிகள் நமக்கில்லை யெனினும் அமையும். இப்பொருட்கண் ஒன்றினெ ன்பது ஒன்றுதலாலென்னும் வினையெச்சத்திரிபு. மேவு-வினை த்தொகை. அருந்து முதனிலைத்தொழிற்பெயர்; அது, அருந் தப்படும் போகாதிகண்மேற்று. சிவபோகம் நுகரப்பெற்றோர் விண்ணுலகபோகம் விரும்பாரென்பது குறிப்பித்தது.

சிவகாமியம்மையிரட்டைமணிமாலை.

ரு. ஈரேழுலகமும் பூத்ததுவும் அவ்வுலகங் காத்ததுவும் எனதம்மையினது கருணையேயாக, (அத்தகைய) இவ்வுலகமொ டுங்க அவ்வெல்லையில் கூத்தர் ஆடுகின்ற ஏது அம்மே அவ ருளிய வேதமே கண்டறியா: ஆயின் உணர்த்தாவழி யாமோ கண்டறிய வல்லேமென்பது. ஏது-காரணம். அம்மே யென் பது இடைக்குறைந்தது.

கசு. தில்லைப்பிரான் எம்பிராட்டிதாளிற் பதித்த மதித்தழும் புக்கு அப்பிராட்டியார் அவர்தோளிற் பதித்த வளைத்தழும்பு ஈடே (ஆகலின் அதுபற்றிக் குறைகூறுதற்கிடனின்று;) பிரான் வாளின்வாய்போல நகக்குறியிடப்பட்டுள்ள தனங்களால் ஒவ் வொருதழும்பை அவர்மார்பினில் அந்நாளிற்பதித்ததொன்றே பிராட்டிக்கு நடுநிலைமை இன்மையாம். எ - று. இனி, அவர் வாளின்வாய்போற் பலதழும்பிட்டமுலைகொண்டு அவர்மார் பினில் ஒவ்வொருதழும்பிட்டதுதானோ நடுவின்மையாவது ?

இதுவும் நடுவின்மையன்று என்னலும் ஒன்று. இப்பொருட்கண் ஒன்றேயென்னும் ஏகாரம் தேற்றத்தோடு வினாப்பொருட்டு. அப்பிராட்டிக்கு நடு இன்மையுடையதென்பதொரு நயமும் நோக்குக. வாள் - ஆகுபெயர்.

பண்டாரமும்மணிக்கோவை.

கO. சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயையென்னும் மும்மாயையாகிய நாட்டில் பற்பல தத்துவபுவனப்பகுதிக்கியைய அண்டசமுதலிய நால்வகை யுற்பத்தித்தானத்தின்வழி தேவர்முதலிய எழுதரமாகவகுத்த எண்பத்துநான்குநூறுயிரயோனிபேதங்களாகிய செய்களில் என்க. முற்படுமாயை - சுத்தமாயை. தெய்விகமுதலியமூன்று - தெய்விகம் பௌதிகம் ஆன்மிகம். இவற்றுள், தெய்விகம் - தெய்வத்தால்வருவன. பௌதிகம் - பஞ்சபூதங்களால்வருவன. ஆன்மிகம் - தன்னாலும் பிறவான்மாக்களாலும் வருவன. தாகம் - அவா. மந்திரமுதலியவறுவகை - அத்துவாக்களாறும். இவற்றியல்பு கலிவெண்பாகுறிப்பிற் காண்க.

க௨. ஆன்மாவாகியதான் சிவனாகியதன்மைபெற்ற ஒரு சிவஞானியினடிகளை வணங்கப்பெற்றவன் தானும் சிவனாகிய தன்மையைப்பெற்று உய்வன்; அவ்வாறுவழிபட்டு அப்பேறெய்தாமல் தானேசிவனாகிய தன்மைபெற்றவெனக்கு உள்ளபடி அச்சிவனாகிய தன்மைபெற அருள்வீராக. எ-று. தானேசிவனாதலாவது-சிவனாந்தன்மை பெறுதுவைத்தும் பெற்றவன்போலுதல். தானவனாகியதன்மை - ஆன்மாவவனேயாகிய தன்மையுமாம். அஃதாவது - ஆன்மாவாகவே இருத்தற்றன்மை. சடையுற்றும் அத்தானத்திலே வலியநாகம் பெறுதவனென்றது, தாம் சிவபெருமானேயாயும் இங்ஙனம் திருவுருமாறிநிற்கின்றனரென்பது தேற்றுதற்கென்க. இதனை இந்நூல் (உகூ) வது செய்யு

ளினும் உணர்க. சடிலத்தானுயிருந்தும் அக்கடவுளது ஆகம் பெறுதவனெனலும், சடிலத்தான, சம்பந்த என இருமுடிபாக்கலும் ஒன்று.

கரு. தார் - கழுத்திலுள்ளவரை. தலைப்படுகலைமதி - முடியிற்பொருந்திய ஒருகலையையுடைய சந்திரன், முதன்மைபெற்றகலையுணர்வு; மானிடனுயவடிவு - மானைஇடப்பாகத்திலுடையவடிவம், மானுடவடிவம்; எற்பணி - எலும்பணி, எனது பணி; பாரிடம் - பூதகணம், பூமியிலுள்ளார் என்றிங்ஙனங்கொள்க. எதிர்நிறைகோள் - எதிர் - மாறு; நிறை - நிறுத்தப்படுவது; கோள் - கொள்கை; ஆகவே, மாறுகநிறுத்தப்படுங்கொள்கைகள் என்றவாறு. அவை:— மோக்ஷத்திற்குப் பந்தமும், ஞானத்திற்கு அஞ்ஞானமும், நித்தியத்திற்கு அநித்தியமும் போல்வன. வேற்றுமைப்பொருள்கோள் - ஒற்றுமைக்கு மறுதலையாகிய வேற்றுமைப் பொருட்கொள்கைகள்; அவை: — அடியவர்க்குரித்தாவன தீர்த்தம் பிரசாதம் திருநீறு பஞ்சாக்கரம் உருத்திராக்கம் குரு லிங்கம் சங்கமமென்னும் எட்டுமென்றவழி, உரித்தல்லாதன பெண் ஆடை ஆபரணம் சுகந்ததயிலம் தாம்பூலம் சுகபோஜனம் பஞ்சணை சந்தனம் என்னும் எட்டுமென்றும், அடியவரால் கொள்ளப்படுவன குருலிங்கசங்கமங்களென்றவழி தள்ளப்படுவன காமவெகுளி மயக்கங்களென்றும் இங்ஙனம் வேற்றுமைப்பட்டுநிற்பன. இவற்றுள், பந்தமுதலியவை மோக்ஷமுதலியவற்றிற்கு விரோதியாய்த் தனித்தனி நாட்டப்படுதலின் எதிர்நிறையென்றும், பெண்முதலியவை தீர்த்தமுதலியவற்றிற்கு வேற்றுமைப் பட்டனவாய்த் தொகைப்பட்டு நிற்றலின் தொகைப்பொருள்களுள் இவற்றை வேற்றுமைத் தொகைப்பொருளென்றும், முத்தியாதியவற்றில் விருப்பும் பந்தமாதியவற்றில் வெறுப்புங்கோடல் இகத்தின்கண்ணேயன்றிப் பரத்தின்கண்ணும் உண்டாகலின் இகபரமிரண்டினுமென்றும், இவ்வாறு விருப்புவெறுப்புளராயிருக்கவும்

விருப்பு வெறுப்பற்றிருப்பரென்றது "வீடும்வேண்டாவிறலின் விளங்கினர்" என்றபடி அற்றிருத்தலும் உண்டாகலினென்பார் அதனை உம்மையாற்றழீஇ விருப்புவெறுப்புளவாய கருத்தின ராகவுங்கண்டனமென்றுங் கூறினர். இனி எதிர்நிரைகோளி னுமென்பதற்கு, ஒன்றற்கொன்று நேர்நேராகநிறுத்தப்படும் நிரனிறைப்பொருள்கோளினு மென்றும், எதிர்மருவுநிரனிறை ப்பொருள்கோளினுமென்றும், வேற்றுமைத்தொகைப்பொரு ள்கோளென்பதற்கு, இரண்டாம்வேற்றுமைத்தொகைப்பொ ருள்கோளினுமென்றுங் கொண்டு, விருப்பற்றிருப்பரெனின் வெறுப்புற்றிருப்பரென்றும் வெறுப்பற்றிருப்பரெனில் விருப் புற்றிருப்பரென்றும் விருப்பையற்றிருப்பர் வெறுப்பையுற்றி ருப்பரென்றும் இவ்வண்ணம் சாதுரியப்பொருள்கூறுதலும் ஒன்று.

உசு. யாம் மாசிலாமணித்தேசிகரை வழிபடும் சித்தர் எமக் கென்று முன்னம் அன்னம்படைத்தவர் புவனமடங்கலும் பெற்றார். இன்னம் அமுதுபடைத்தவர் எப்பொருளெய்தார். எ-று. இதனுள்ளுறை:—எமக்குரித்தென்று அன்னத்தை வா கனமாகக் கொண்ட பிரமதேவர் புவன மடங்கலும் சிருட்டித் தார்; சிருட்டித்த அவர் இன்னம் தாம்பெறவேண்டிய முத்திக் குரிய ஏதுவைப் பெற்றிலர்; உலகடங்கப் படைத்த அவர்க்கும் எய்தற்கரிய அம்முத்தியேதுவை மாசிலாமணித்தேசிகரருளா ல் யாம் எளிதெய்தப்பெற்றேம் என்பது. இதில் அன்னம் படைத்தவர் புவனமடங்கலும்பெற்றார், பெற்றும் அமுதேது பெறாராயினர் என்பதொருநயமுங் காண்க.

௩0. பஞ்சதேவதருக்களையும் மணிகளுட்சிறந்த சிந்தாமணி யையும்நிகர்த்த ஞானசம்பந்தரும், தண்ணியகமலையிலமருங்கு ருவுமாகிய மணிபடைத்தகண்போன்ற மாசிலாமணியைக்கோ த்திடலால் இம்மும்மணிக்கோவை ஒருமணிக்கோவையேயாம்.

இதுபூண்டவர் அழகியசங்கையும் பதுமத்தையும் போன்றமணிகளாகிய சங்கநிதி பதுமநிதிகளையும் காமதேனுவையும் பொருளாகக்கொள்ளார். எ - று. தருமணிக்கோவைத்தருளென்னும் பாடங்கொள்ளின் எப்பொருளையுந்தரவல்ல மணிபடைத்தஇருபாநோக்கம்வைத்து யாவர்க்கும் அருள்பாலிக்கும் ஞானசம்பந்தன் கமலைக்குரு மணிகளுட்சிறந்த சிந்தாமணியொக்கும் மாசிலாமணி என்றிங்ஙனம் கொள்க. பூண்டவர் - பூணுந்தவத்தருமாம்.

காசிக்கலம்பகம்.

அ. வெள்ளிப்பொருப்பாளர் அவிமுத்தத்திருப்பார் - வெள்ளியங்கிரியையாள்பவராய் அவிமுத்தத்தின்கண்ணேவீற்றிருக்கும் விசுவநாதர்,— என்றும் ஆருயிர்களின்மேல் விருப்புவைத்து - எக்காலத்தும் அரியவுயிர்களிடத்துக் காதல்வைத்து, இப்புவனங்களை உரு பாதியில் படைத்து-இவ்வுலகங்களைத் (தமது திருமேனியின்) சத்திபாகத்தாற்சிருட்டித்து,— ஊழிதொறும் ஒருபாதியில் துடைத்து - முடிவுதோறும் தமதுபாகத்தாலழித்து,— தாம் செய்யும் வேலை கண்டே ஓடி திரிவது அல்லால் - தாமியற்றும் இத்தொழில்களைநோக்கிக்கொண்டு யாண்டுஞ்சென்று திரிவதன்றி,— எங்கே கண்மூடுவர் - அவர் எங்கே கண்களைமூடி இளைப்பாறுவர். எ-று. எனவே, தாம் விசுவநாதராகலின் ஆன்மாக்களின்புறம்பொருட்டு விசுவங்களை ஆக்கலுமழித்தலுமாகிய தொழில்களையியற்றுதற்கேயன்றி இளைப்பாறியிருப்பதற்குக் காலமின்றென்பது. தமதுசந்நிதிமாத்திரத்தால் இத்தொழில்களியங்கினும் அன்பர்பிரார்த்தித்தவழிப் பிரசன்னராகிக் காக்கவேண்டியிருத்தலின் ஓடித்திரிவதுமுடன்கூறினார். இறுதியேகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். திரிவதெல்லாமென்னும் பாடங்கொள்ளின் எல்லாமென்பதனைப் புவனங்களோடுகூட்டி ஆயினென்பதொருசொல் வருவித்துமுடிக்க.

கச. மன்மதனது அரசிருப்பிடமென்று உமதுகாசிநகரினும் அவனது புதுத்தோரணத்தையே (யாவரும் பயந்து) நிறுப்பரேல் (அவனாலிவட்குநேர்ந்த அலரை) அஞ்சாதணுகித் தேவரீருக்குக் கூறுபவர் யாவர்? எ-று. ஊர்க்கென்பது உருபுமயக்கம். மகரவடிவமைந்ததாகலின் அம்மகரக்கொடிக்குரிய மன்மதன் றோரணமாகக் கூறியபடி. கொடிகள்போலத் தோரணமும் இடபவடிவமைந்ததே இக்காசிநகர்க்குத் தொன்றுதொட்டதாகுமென்பாள் மகரவடிவமைந்ததைப் புதுத்தோரணமென்றாள். இனி, வேளரசிருப்பிடமென்று பிறரஞ்சாதபடி இதுகாறும் வழங்கிய மகரதோரணத்தைமாற்றி உமது புதுத்தோரண நாட்டிவிடின் அவன் தோல்வியுற்றானவன், ஆகலின் இவளைவருத்துதலும் அறவேயொழியும், ஒழியவே இவளைப்பற்றியமுறைப்பாடும் இன்றாமென்பாள் உமக்கிங்கிவள்பேச்சுரைப்பாரார் என்றாளெனினும் அமையும். இது செவிலிகூற்று.

கரு. ஆங்காங்குக் காணப்படும் நதிமுதலிய மூன்றும் கங்கைநதிமுதலிய மூன்றும் ஆகுமா? ஆகாவாதலால், உடல் விடும்போது மணிகர்ணிகைத்துறையை அடையுமாறுபூணும் ஆசையொன்றேபெறவேண்டும்; பின்னர்ப் பேயோடாடவிரும்பினும் அக்கங்கையின்மூழ்கிப்பெறுவேம். எ-று. ஏகாரங்களுள் முந்தியவைமூன்றும் வினாவின்கணின்ற எதிர்மறை; பிந்தியது பிரிநிலை. பூணுதல் - விரதமாகக்கொள்ளுதல். பேணுதல் - அதன்காரியமாகிய அடைதலையுமுணர்த்திற்று. ஆடினுமென்பதில் விரும்பலென்னுந்தொழிற்பெயர் எஞ்சிநின்றது; "நின்றனநின்றன" என்னும் நாலடியார்செய்யுளில் செயின் என்பதிற்போல. பேயொடாடவிரும்பல் - சிவசாரூபம்பெறுதல். இனி, (எவ்வெல்லையிலிருப்பினும்) உடல்விடும்போது மணிகர்ணிகைப்பூந்துறையைச் சிந்திக்குமாறுபெறவேண்டும்; பெற்றால் எந்நதியுங்கங்கையாம், எத்தெய்வமும் அகிலேசரேயாம், எத்தலமுங்காசியேயாமாகலின் பூணத்தக்க ஆசையி

தோன்றேயாம்; அப்புறம் பேயொடாடவிரும்பினும் அவற்றைப்புகழ்ந்து பெறுவோம் எனலுமாம். ஆடல் - புகழ்தல். மணிகர்ணிகை- கங்கையின் ஓர் சிறந்ததுறை.

கஎ. கற்றை வார்சடைக் காசிப்பதி யுள்ளீர்! உமது தொண்டர்க்குப் பெற்றமூர்தல் முதலியவற்றைச்செய்யும் சிவசாரூபம் பெறுத லரிதன்று; (பெற்றபின்) கற்பமுடிவுதோறும் எவ்வுலகத்தையும் அழித்துப் படைக்கவும் வேண்டுமா? வேண்டுவதில்லை: (அவர் வீடும்வேண்டாவிறலின் விளங்கினாராகலின்) தேவரீர்பதத்தைச் சிந்திப்பதுமில்லை. எ - று. இது "கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத், தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய், யேற்றினான் றில்லை யிடத்தினானென்னினியாம், போற்றினா னல்கும் பொருள்." என்னும் சிதம்பரச்செய்யுட்கோவைத்துதிபோன்று இகழ்ந்ததுபோலப் புகழ்ந்தது. செற்றுமீளப்படைக்கவும்வேண்டுமே யென்பது சிவசாரூபம்பெற்றார் பஞ்சகிர்த்தியமுடையராகாரென்பது குறித்துநின்றது. வேண்டுமேயென்னும் ஏகாரம் எதிர்மறை; வேண்டின் அவையும் எளியவேயென்றபடி: எனவே, தொண்டர்க்கு எவற்றாலும் குறைபாடின்றென்பது கருத்து. சிந்திப்பதுமென்னும் உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. இத்தகையபேறெல்லாம் எளிதாதலறிந்தும் சிலர் தேவரீர்பதஞ்சிந்திப்பதில்லை ஈதென்னேவியப்பு எனலுமாம்.

உஅ. தாம்விரும்புவது அன்பர்களுடையவுள்ளம் சுகித்தலையே, சட்டையாகத்தரிப்பது வெவ்வியயானைத்தோலையே, அக்கடவுளுக்குள்ளதொழில் எவற்றையும் தம்பாலொடுக்கிக்கொள்ளலே, வீற்றிருக்கும் அந்தரங்கஸ்தானம் சுத்தமாகிய முனிவருள்ளமே, அழகுசெறிந்த திருவாபரணம் எலும்பின் கோவையே, (என்னை) அடிமைகொள்ளுதற்பொருட்டு அங்கீகரிப்பது என்னுடையதொண்டே, (இத்தன்மையராகி) விநாயகக்கடவு

ளைப்பெற்ற உமாதேவிமணாளராகிய விசுவநாதர் வீற்றிருப்பது காசியென்னுந் திவ்வியதலமே. எ-று.

உகூ. அழகிய திருமேனி அரியபுவனங்களே, வசித்திருப்பது மணம்பெருகும் (ஆனந்த வனமுதலிய) வனங்களே, தங்கியிருக்கும் அந்தரங்கஸ்தானம் மாதவர்களுடைய இருதயமே, அவர் திருமேனியிற் கலந்திருப்பது உலகமேழும் பெற்ற உமாதேவியே, குளிர்ந்தமாலை வாசனைவீசும் கொன்றையே, அக்கடவுள் தருமங்களையுடையவர்க்குத் தருவது ஒன்றாகிய முத்தியையே, (இத்தன்மைய ராகிய விசுவநாதர்) நம்மனைக்குற்றங்க ளொழியு மேல் பிரசன்னராவர், அவர்க்கு ஒப்பற்ற திருக்கோயிலாக வுள்ளது காசியென்னுந் திருப்பதியே. எ-று.

ஙரு. தாமென்றது காசிவாசிகளை. அவர் பூசைசெய்திலராகவும் தமது புண்டரிகப்பதம் எதுகொண்டு கொடுக்கின்றார்; கருத்தறிகிலம்; இப்படிகொடுப்பரேல் நெடுங்காலந்தேடியும் காணுதலும்பெறாத திருமால்பிரமர்கட்கு நெஞ்சம் என்னபாடுபடமாட்டா. எ-று. (அப்படி ஏதுவின்றிக்கொடார்;) ஏதுகொண்டேகொடுப்பர்; கருத்து ஏது இன்னதென்றறிகிலம்; எனலும் ஒன்று. ஏது-அத்தலத்திறந்தார் யாவரேயாயினும் அவர்க்குச்சிவசாரூபமுண்டென்னும் நூற்றுணிபு. செய்திலமென்பதுபாடமேல், யாம் பூசைசெய்திலம், எதுகொண்டுபதங்கொடுப்பர், கொடார்: ஆனால், கவிதைகொண்டு ஆட்கொண்டவராயிருத்தலின் அவர்கருததென்னோ அறிகிலம் என்க. கொண்டுநான்கும் மூன்றாம்வேற்றுமைச் சொல்லுருபுகள்.

ஙகூ. தமது திருமேனிச்சோதியொன்றிலே ஒருபாதிசத்தியெனவும் ஒருபாதிபரமசிவமெனவும் கொண்டுவிளங்கும் விசுவநாதருடைய இரண்டுதிருவடிகளையும் பரவுங்களியரேம்; (யாவரும் வேதங்களை) ஓதியோதியுமேயிளைப்பர்; வேதமுணர்த்துகின்ற உண்மையும் உணர்கின்றாரில்லை (அத்தன்மையரும்பிற

ரும்) உணரும்படி அனுபவப்பட்டுள்ள ஒருண்மைவாக்கியம் (உண்டு: அதை) உணர்த்துவேம்; எதனாலே தருமங்கள்பலவற்றுள்ளும் பசுவையழித்து அக்கினிவளர்க்கும்யாகமே அதிகமென்பது? (இவ்விடயம்) அன்பருடைய இறைச்சியுச்சிட்டத்தின் கண்ணே இச்சையுடையவராகிய சிவபெருமானே அறிவர்: அது நிற்க; மதுவையுண்டால் அப்பொழுதிலேயே பெறுதற்கரியதாகிய ஒருபரமசுகம் உண்டாகின்றது; அம்மதுவைமறுத்தநூல் ஒன்றுமேயில்லை. எ-று. பசு-யாகத்திற்குரிய ஆடு குதிரை முதலியன. அன்பர் - கண்ணப்பநாயனார். மது - கள்ளும் தேனும். கள்ளையருந்த வொண்ணாதென மறுத்தநூல்களும் தேனைமறுக்கவில்லையாகலின் அவ்வொற்றுமைபற்றி அதுமறுத்த நூல்கள் இல்லையென்றதென்க. அதுமறுத்த இரவில்லையென்னும் பாடத்திற்கு, பகலிலே சிலவிடத்தில் அது உண்ணப்படுதலில்லாதிருப்பினும் இரவிலே பலவிடத்தும் உண்ணப்படுதலுண்டாகலின் அதுமறுத்த இரவில்லையென்றதெனக்கொள்க. ஊனருந்துதலால் மறுமைக்கண்ணே பெறுதற்கரியதோர்பரமசுகமுண்டென்பதை ஆகமவளவையாற் சாதித்தலைவிடுத்து, மதுவருந்தில் அப்பொழுதிலேயே அப்பரமசுகமுண்டென்பதைக் காட்சியளவையானே உணர்த்தத்தொடங்கலின் அஃதிடக்க வென்பது வினைமாற்றிடைச்சொற்பொருள்பட நின்றது. கட்குடியர்க்கு இறைச்சியுமதுவும் வேணும்யாகலின் இங்ஙனமிசைத்தார்.

சஅ. சிறுசெந்துக்கள் எந்தையும் ஆதிப்பிரானுமாகிய சிவபெருமானது அவிமுத்தத்திலே சிலவருடம்வசித்து, அப்புண்ணியத்தாற் சிவசாருபம்பெற்று, இப்பேறெய்தப்பெறுதவராய்ப் பலவருடங்களைக்கொண்டுள்ள அத்தேவரைநோக்கித் தோள்கொட்டிக்கொண்டு சிவலோகத்தையடையும். எ-று. பலநாளுந் தம்மைப்படைத்த பிரமரைநோக்கி யெனவுமாம். தோள்கொட்டுவது உம்மினும் சிறந்தோமென்னும் களிப்பாலென்க.

ருசு. எந்து இழையீரே-ஏந்திய ஆபரணங்களையுடையதோழியர்களே!—பரந்தாமத்தை பல் உயிர்கட்கும் பாலிப்பார்-முத்தியைப் பலவான்மாக்களுக்கும் தந்தளிக்கும்விசுவநாதர்,—வரம்தாமத்தை பின் தருவதை முன் வழங்காரேல் - மேன்மைபெற்ற கொன்றைமாலையை இறந்தபின் கொடுப்பதை இப்பொழுதுகொடாரேல்,—புரம் தாமத்தை பொருதரு காசிப்புரம் ஆனார்க்கு - மாளிகைகள் மலைகளையொக்கும் காசிப்பதியிலோங்கிய அக்கடவுளுக்கு,—மத்தை இரந்தாம் என புகலீர் - ஊமத்தமாலையையேனுந்தர யாசித்தோமெனக் கூறுவீராக. எ - று. அத்தலத்திலிறந்தோர்க்குச் சாரூபமளிப்பது திண்ணமாகலின் அத்துணிவுபற்றிப் பின்றருங்கொன்றைமாலை என்றாள். ஊமத்தை மத்தையென்றுயது தலைக்குறை. உயர்பொருள்நல்காவழிக் காதன்மிக்கோர் இழிபொருளைவேண்டலு மியல்பாகலின் இரந்தாமத்தையெனப் புகலீரென்றாள். இங்ஙனமன்றி, இதனினுமிழிந்த எருக்கையும் வேண்டுதலை "பொருளாக யானிரந்தாற் புல்லெருக்கின் போது, மருளான்மற் றல்லாதார் வேண்டிற் - றெருளாத, பான்மரு மான்மறிக்கைப் பைங்கட் பகடுரியான், றுன்மருன் பைங்கொன்றைத் தார்." என்னும் சிவபெருமான் திருமும்மணிக்கோவையானும் அறிக. தாமத்திற்பொலிதருகாசியென்பதும் பாடம்.

அக. முத்திக்குவிருப்புற்றவர் அரிதுபெற்ற தம்முடற்பொறையை முடைநாற்றம்பெற்றதலையுடன் எலும்பைச்சுமத்தற்கும் சாம்பலைப்பூசுதற்குமே ஓம்பினவராகின்றார்; இத்தலையும் எலும்பும் சாம்பலுமேயன்றிப் பின்னர்க்கிடைப்பது பிறிதில்லை போலும்; காசிச்சிவபெருமான்பத்திக்கு இக்கேவலப்பொருளே பலமாகப்பலித்தது வியப்பு. எ-று. இனி, சிவசாரூபம்பெற்றோர்க்குச் சிவனுக்குரியசின்னமாகிய தலையும் எலும்பும் திருநீறும் உண்டாமாகலின் பிரமவிஷ்ணுக்களாதியர் உறுப்பாகியும் இறைவர்க்கு அணியாகியுமுள்ள இவ்வரும்பொருளெய்தற்பொருட்

டே தம்முடற்பொறையைத் தரையில்வீழ்த்தாது தாங்கியிருந்தனரென்பார் ஓம்பினரென்றும், இவையன்றிப் பின்னர்ச்சித்திக்குமது இன்றேவெனின் முன்னர்ச்சித்திப்பதிதுவேயாயினும் பத்திக்குச் சாயுச்சியமுத்தியே இறுதிப்பயனெனன்பார் கேவலமே பலமாகப்பலித்ததுவென்றும் கூறினரென்பதே கருத்து. ஓம்புதல் - அப்பேறுசித்திக்கும்வரையும் அவ்வுடலைத் தொண்டின்வழியுய்த்துப்பேணுதல். அப்பாற்சித்திக்குமற்றதிலைபோலுமென்பது வினவகையதாய்நிலவி அவ்விறுதிப்பேறும் உண்டென்னும்விடையையும் தோற்றுவித்துநின்றது. கேவலம் - சிறுமை, முத்தி. பலம் - கனம், பயன். இச்செய்யுள் இவ்வாறு இருபொருள்பயந்து நிந்தாஸ்துதியாய் நிற்பதுணர்க.

அரு. தற்போதமுடையார்முன் ஒளித்தகன்று அப்போதமகன்றார்முன் வெளிப்பட்டுத்திகழும் காசிப்பிரானே! தம்முடல் என்புந்தசையுமாயுள்ளதென்று வெறுத்தகன்று உம்மைவழிபடுவோர் முத்தியின்பம்பெற்றுக்களிப்பார்; (உம்மைவழிபடுதலொழிந்து) அவ்வுடலையே தேன்போலப்பாராட்டிப் பேணுவார்க்குப் பின்னரனுபவிக்கவாய்ப்பது கொடியவிடம்போலும் நரகமே. எ - று. கிடைப்பது (மிலேச்சகண்டங்களாகிய) தீவு இடங்களேயெனலுமாம். இனி, காசிப்பிரான்றிருமேனியென்பது தேவர்களுடைய என்பும் ஊனுஞ்செறிந்துள்ளதென்று அணுகாதகல்வோர் போகிகளாய்க்களிப்பார்; அத்திருமேனி உவட்டாத இன்பத்தேனென்று அடைந்தவர்க்கு உண்ணக்கிடைப்பது கொடியவிடமேயென இகழ்வதுபோலப் புகழ்ந்ததென்றலும் ஒன்று. இப்பொருட்கண் களிப்பாரென்பது "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவல மிலர்" என்பதுபோல்வது. தீவிடமேயென்றது அப்பிரானது திருவுருவத்தேனைப்பருகியார்க்குத் தேவாமுதமும் விடம்போலவெறுக்கப்படுமாகலின் உண்ணக்கிடைப்பது எப்பொருளேயாயினும் அது விடம்போல்வதென்றவாறு. பிரான்விரும்பியுண்டது விடமே

யாகலின் அவருருப்பெற்றுருணவும் அதுவேயென உபசரிக்சப் படுமென்றுமொனினும் அமையும்.

கூ0. பணிக்கும் பணிதிக்கு மேக்கு என்று ஆர் என்பு அணிக்கும் பணி ஆய் இருந்தது ஓர் என் பணிக்கும் இன்பு ஆம் அகிலேசர்க்கு - அரவாபரணத்திற்கும், ஆபரணத்தினுஞ் சிறந்ததெனநிறைந்த எலும்பாபரணத்திற்கும், ஏவல்போன் றிருக்கின்றதாகிய எனது தொண்டிற்கும், விருப்பங்கொள்ளும் விசுவநாதருக்கு,—பணிக்கும் பணி என் என்று இரந்தபோது என்கடவுளைாயிடுந்தொண்டு யாதென்றுயாசித்தபொழுது (அக்கடவுளுக்குவேண்டுவதாக) யாதிருக்கின்றது? (யாதுமில்லை.) எ-று. எனவே, அக்கடவுள் வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவராகலின் அன்போடு யாவர் எத்தொண்டையியற்றினும் அங்கீகரித்து அவர்க்கியைந்தபலன்களை அளித்தருள்வரென்பது கருத்து. பணியாயிருந்ததென்பது உள்ளபடியமைந்ததொண்டன்று என்பதுதோன்றநின்றது. ஆய்-உவமவாசகம். என் இரண்டனுள்ளே முந்தியது வினாவையும் பிந்தியது யாதுமில்லையெனப்பொருள்படுங் குறிப்புவினையையும் உணர்த்தின. பணிதி - ஆபரணம். மேக்கு - உயர்ச்சி. என்று வினையெச்சத்திரிபு. இருந்தது நிகழ்காலங்குறித்துநின்ற முற்றெச்சம். ஓர் அசை. எண்ணின்கணின்ற உம்மைமூன்றும் இழிவுசிறப்பு, அகிலேசர்க்கு என்னும் நான்கனுருபு என்னென்னும் குறிப்புவினைகொண்டது.

கூக. (பலவித) சரக்குகளோடுசெல்லுந்தோணியே! கரத்தின்கணுள்ளவளைகளானவை சங்கணங்களோடும் கழலாநின்றன; தவழுகின்றமேகமே தீவாகிய இடங்களே! எமது தலைவிக்கு உரியவுணவே கொடியவிடம்போல்கின்றது; விசாலமாகிய சோலைகளாலேசிந்தப்படும் தேன்வெள்ளமே! கண்கள்சொரிவது அடங்காதநீர்ப்பெருக்கே; பிரம்புபோலும் திரண்டகழுத்தினை

யுடைய சங்குக்கூட்டமே! துயரின்கண் தங்குதலே அதிகரித்தோம்; கழைகளில்வந்திறங்கும் மரக்கலங்களே! நாவும்வாயும் கருகியுலர்ந்தன; கடலே கழியே கழுநீரே! (மூலைமுகட்டிலுள்ள பசப்பைக்) கழுவுகின்ற நீரையுடையனவாகிக் கண்கள் நித்திரைசெய்கின்றனவில்லை; (இரைவரவைநோக்கி) அன்னங்களோடு வாடிநிற்கின்ற நாரைகளே! எந்தலைவியாகிய இவள்பொருட்டு உருகுகின்றீரில்லை; (இவற்றையெல்லாம்நோக்கியும்) அருண்மயமாய்விளங்கும் ஆனந்தவனத்தையுடைய விசுவநாதரும் (இவற்றிற்கு உபசாந்தமாக) அழகியகொன்றைமாலையை அளிக்கின்றாரில்லை, (எவ்வாறு உய்வாள்.) எ-று. சரம் கோடு ஒழுகும் கரம் வளை - நாணற்புல்லுகளையுடையகழைகளிலே சஞ்சரிக்கும் ஒளிபெற்றசங்கம்; சூரல் கழுத்தின் நந்து இனம்-பிரம்புகளின் கழுத்திற்றங்கும் நத்தையினம்; நம் தினம் துயர் வதிதலே - நமதுநாளெல்லாம் துன்பத்தோடு உறைதலே; உருகீர் - உருகுவீராக; என்றிங்ஙனம் பொருள்கோடலுமாம். பொருண்மேற்பிரிந்த தலைமகன்வரவுநோக்கி நெய்தனிலத்திருந்து வருந்துதலால் இது அந்நிலப்பொருள்களையே முன்னிலையாக்கியவாறு.

திருச்சிற்றம்பலம்.

கோச்சகக்கலிப்பா.

சமரவெஞ்சூர் தடிந்தவிலோ தனமொடுவா கனமெனக்கொண்
டமரரிடர் கடிந்தகுக னருட்கடலுண் டருங்கவிதைத்
தமரமிகுத் தெழுந்துலகந் தழைத்திடப்பல் பனுவல்பொழி
குமரகுரு பரமுனிவன் குலவுமலர்ப் பதம்பணிவாம்.

குமரகுருபரசுவாமிகள்திருவடிவாழ்க.

சிவமயம்.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	உகூ	தீவிதரம்	தீவிரதரம்
௩	உஎ	யகல்பவர்	யற்றவர்
௬	உகூ	யகல்பவர்	யற்றவர்
கக	க௩	யிலுமழ	லுமழ
உ0	உஎ	வென்ளை	வெள்ளை
உஎ	உ	நழுரொடு	ழுநரொடு
௩க	உஅ	கோற்கை	கொற்கை
சச	உஎ	ஓட்டல்	ஒட்டல்
சஎ	௬	யவர்க்கெரு	யவர்க்கொரு
சகூ	உஎ	சுத்தரி	சுந்தரி
ருஉ	உ	கடவுளுரு	கடவுடீரு
௬உ	க0	மிங்கிப்படி	லிங்கிப்படி
௬ச	ச	மாடுவ	பாடுவ
எஉ	உஎ	டிஇடமுண்	டி. இடமுண்
எச	ச	மலத்தா	மலர்த்தா
எஅ	உச	வில்னுள்	வில்லினுள்
அச	௬	வடந்தேம்	வடைந்தேம்
கூச	ககூ	டுவன்மற்	டுவனேற்
கூரு	உ௩	விற்கிட்டு	விறகிட்டு
கூகூ	உகூ	கிடந்த	மலர்ந்தகிடந்த
க0க	க	கொளுத்	கொளுஉத்
கசக	உ௬	மருதது	மருந்து
கஉஉ	உ0	எனைச்	ஏனைச்
கசஎ	உச	கொதண்ட	கோதண்ட
க௬உ	உ	மணிமகர	வணிமகர
கஎச	உரு	இளம்	இளம்பி
கஅஅ	உ	ருண்ட	நீருண்ட
ககூ	கச	கருங்குழி	கருங்கழி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௧௯	௧௨	வாசிரி	வாசிரிய
௨௨௨	௨௭	- பயன்	பலம் - பயன்
௨௭௩	௨௩	யாரடித்	யாரடிக்
௨௮௬	௨௫	வளையா	வளைவா
௨௮௮	௨௭	திணைக்கப்	திளைக்கப்
௨௯௪	௧௩	ரெண்	ரொண்
௩0௧	௧௫	நுமது	துமது
௩	௨௧	சூர்ப்புயல்	சூற்புயல்
௫	௨௧	தடாதகை	௬. தடாதகை
௧௨	௧௭	வொருவள்	வொருவன்
௧௩	௨௧	கடவுணி	கடவுளி
௧௪	௧௧	விருப்பி	விரும்பி
௨0	௬	வெண்ளிய	வெள்ளிய
௨௧	௧௧	பாண்டியது	பாண்டியரது
௨௨	௨௫	வெள்பாள்	வென்பாள்
௨௫	௪	வகை	வசை
௨௯	௧௪	யதுமே	ய்துமே
௩௧	௮	தியாகே	தியாகேச
ஷை	௧௭	எண்மிச்சிலை	நம்மிச்சிலை
௩௫	௧௭	கற்ககத்	கற்பகத்
௩௭	௪	தைடைய	தையுடைய
௩௮	௪	பழிப்பதரம்	பழிப்பதாம்
ஷை	௬	ஈசரம	ஈசரம்
ஷை	௨௫	அச்சத்	அச்சத்தத்
௩௯	௧0	பெற்றனார்	பெற்றார்

நூல் (௩) ஆவது பக்கத்தில் விஞ்ஞானகலரென்பதே விஞ்ஞானகலரெனவருவது என்பதும், குறிப்பு (௧௯) ல், மணம்வீசத் தொடங்குங்காலமும் என்பதன்பின் இளமகளிர் கொழுநரொடுகலந்துவக்குங்காலமும் என்பதும், (௩௨) ல், (௩.௪) வதிலுள்ள ௬-வது இலக்கக்குறிப்பும் சேர்க்க.